இராஜீவி

அல்லது

காதலால் விளைந்த கஷ்டம்.

ஒரு இனிய நவீனம்.

"வஸந்த சமுத்திரம்," "மூன்று வார்த்தைகளின் இரகசியம்," "இரண்டு கதைகள்," "சிறு கதைகள்," "மகாத்மா காந்தி," "ரயில் திருடன்," முதலிய நூல்களின் ஆசிரியரான

ஸ்ரீமான். கோ. ஸ்ரீ. இராமன், B. A. (HONS)

எழுதியது.

பிரசுரித்தது,

C. B. ஸ்டோரி கம்பெனி,

நாவல் ஹவ்ஸ்,

6. புது அக்ரகாரம்,

கோயமுத்தூர்.

1930.

 [விலை ஒரு ரூபாய்.

கோயமுத்தூர்

கம்மவார் அச்சுக்கூடம் லிமிடெட்டில்,

பதிப்பிக்கப்பெற்றது.

முன்னுரை.

இராஜீவி அல்லது காதலால் விளைந்த கஷ்டம் எனும் இந்தப் புதுக்கதையை எனது நண்பரும் இதன் ஆசிரியருமான திரு. கோ. ஸ்ரீ. இராமன்., B. A., (HONS) அவர்கள் இதைப்பற்றி ஒரு முன்னுரை எழுதித்தரவேண்டுமென்றுகேட்டு என்னிடம் கொடுத்தார். நான் எழுதுவது முன்னுரையாக இருக்கவேண்டுமென்றும் வெறும் அபிப்பிராயம்மட்டில் அமைந்துவிடலாகாது என்றும் அவர் கருதினார். அபிப்பிராயம் எழுதுவதானால் புத்தகத்தை இங்குமங்கும் பார்த்துவிட்டுச் சுருக்கமாக இலகுவில் எழுதிவிடலாமென்றும் முன்னுரையானால் முழுதும் படித்து விரிவாக எழுதுதல்வேண்டும் என்பது அவர் கருத்து. அவர் ஆணையை மறுக்க முடியாதவனாய் ஒப்புக்கொண்டு, அவர் அன்புடன் தந்த மாதிரிப் பிரதிகளையும் பெற்றுக்கொண்டேன். அதன்பின் அவர் கேட்கிறபடி செய்வது என்னால் சரிவர இயலாதது என்று கண்டுகொண்டேன். புதுக்கதைகள் என்கிற "நாவல்"களை ஆங்கிலத்திலாயினும் சரி தமிழிலாயினும் சரி படிப்பது எனக்கு இலகுவாக காரியமாயிருக்கவில்லை. அவைகளைப்படிக்க இயற்கையாகவே எனக்கு விருப்பம் எழுகிறதில்லை. தமிழில் இரண்டு மூன்று புதுக்கதைகள் படித்து இப்போது 30 ஆண்டுகளாயின. ஆங்கிலத்திலும் அப்படியேதான். ஆயினும் என் நண்பர் ஆணைக்கு அஞ்சியவனாய் இந்தக்கதை முழுமையும் படித்தேன். நான் எழுதுவது முன்னுரையுமல்ல; அபிப்பிராயமுமல்ல. இரண்டிற்கும் இடைப்பட்டதாம்.

இந்தக்கதையில் பெயரால் விளங்குகிறபடி இராஜீவி என்னும் பெண்ணைத் தலைவியாகக்கொண்டு அவள் கதையாக இது எழுதப்பெற்றுள்ளது. Tolstoy என்ற பேரறிஞர் எழுதியுள்ள Anna Karenina என்ற புதுக்கதையின் போக்கை ஒட்டியும் தழுவியும் இது எழுதப்பெற்றதாகும். இந்தக்கதையின் போக்கும் நிகழ்ச்சிகளும் கற்பனைகளும்

உயர்ந்த நிலையுள்ளன என்று உலகத்தார்களாலே கொண்டாடப்பெற்ற உலகப்பெரிதுகளான சீமான் சீமாட்டிகளின் அந்தரங்க வாழ்க்கையையும் அதிலுட் காணப்படும் அலங்கோலங்களையும் தெளிவாய் விளக்க எழுந்தது இக்கதையாகும்.

இராஜீவி என்பவள் இராஜா சிம்ஹளநாதர் என்பவரின் மனைவி; அவள் உருவிலும் திருவிலும் பெண்ணலத்திலும் மிகமேம்பட்டவள். ஒருவகையாகப் பார்த்தால் உறுதியான குணமுடையவளாகவும் கதைப்போக்கிலே தெரிகிறோம். தன் அண்ணன் திவான்பகதூர் துரைசிங்கத்துக்கும் அவர் மனைவி கமலத்துக்கும் நேரிட்ட காதற்பூசலை வெகு இலேசாக இதோபதேசம் செய்து தீர்த்தனள். தமது கற்புடை மனைவியாய கமலம் நிற்க, வீட்டில் பிள்ளைகளுக்குப் பாடங் கற்பிக்கும் ஒரு காரிகையை திவான்பகதூர் துரைசிங்கம் காதலித்து அது முற்றிக் காதற் கடிதங்கள் எழுதிக்கொண்ட காரணத்தினாலே அந்தக் காதற்பூசல் கணவனுக்கும் மனைவிக்கும் நிகழ்ந்தது. ஆனால் இதைத் தனது அமுதமொழிகளாலும் புத்தியினால் தீர்த்துவைத்த இராஜீவி தீயவிதிவசப்பட்டு அன்றைக்கே தானும் தன் அண்ணனும் அவர்மனைவியும் சிநேகிதையாகிய கிருஷ்ணவேணியும் இராணுவத்தில் உயர்ந்த பதவிபெற்ற கமலசேகரப்பிரபுவும் சேர்ந்து ஒரு நாடகம் கண்டுகளிக்கச் சென்றாள் அன்றிரவே தான் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்ட மனைவி என்பதை மறந்து கற்புநெறி பிறழ்ந்து கமலசேகரனைக் காதலித்துவிட்டாள். அது முருகி முருகிவளர்ந்ததால் கடைசியாக அவள் கணவர் அறிந்தும் மறைந்து வாழமுடியாதவளாய் நாடு பழிக்கத்தனது சகல அந்தஸ்தும் இழந்து, தன் ஆசை நாயகனோடு ஊர்சுற்றியலைந்து, கடைசியில் ஓடும் இரயில் வண்டியின் அடியிற் பாய்ந்து, தற்கொலை செய்துகொண்டாள். அவளது ஆசைக்குட்பட்ட கள்ள நாயகனாகிய கமலசேகரப் பிரபுவும் கடைசியாகத் தன் உயர்ந்த உத்தியோகத்தையும் விட்டு, சொத்துக்களையும் பாழ்படுத்தி மனம் உடைந்து, கடைசியாகக் கலகக்காரர்களை அடக்கப் போர்வீரனாய்ப் போவதாகப் பேர் வைத்

துக்கொண்டுபோய் தன்னைத் தாக்கவந்த கலகக்காரனுக்கெதிர் தன்னை காத்துக்கொள்ள மனமில்லாதவனாய் அவனால் கொல்லப்பட்டான்.

இக்கதையிலே முக்கியமாய் மேனாட்டார் நாகரிகத்தை அதிகம் கையாண்டு ஆணும், பெண்ணும் கலந்தும் சாதிமத பேதமின்றிச் சேர்ந்து உறவாடியும் விவாகமாகாத பெண்களும் இவற்றுட் கலந்தும் உள்ள இலௌகிக உயர்நிலைக் காரர்களுக்குள்ளே இருக்கும் தாழ்வுகளும் கேடுகளும் மிகவும் வெளியாகின்றன. பெண்களின் சுதந்திரம் என்ற பெயரால் செய்யப்படும் மதியீனங்களால் குடும்பங்கள் சம்பந்தப்பட்ட எல்லாரும் பாழாகி கஷ்டத்திற்குள்ளாகும் வகை நன்றாகக்காட்டப்பட்டிருக்கின்றது இதுவே இக் கதையின் படிப்பினையாகும் என்று சொல்லக்கூடும்.

திவான்பகதூர் துரைசிங்கம் போலீஸில் மிகப்பெரிய உத்தியோகஸ்தர் : அவர்தம் சிறுவர்க்குக் கல்வி கற்பிக்கும் பணிப்பெண்ணைத் தகாதவழியில் காதலித்துக் குடும்பத்தில் கஷ்டத்தை விளைத்துக்கொண்டார். அவர் தங்கையும் இராஜாபட்டம் பெற்று சட்டசபை நிர்வாக மெம்பரான சிம்ஹளநாதர் மனைவியும் கதாநாயகியுமான இராஜீவி கமலசேகரப்பிரபு என்கிற உயர்ந்த இராணுவ அந்தஸ்துள்ள வாலிபனை நாடகசாலையில் கண்டு காதலித்து, அவனை கள்ளக் காதலனாகக் கொண்டு இருவரும் தீமரணமாக மடிந்தனர். ஜெமீன்தார் அழகேசரும் அவர் மனைவியும் தங்கள் அருமைக் குழந்தை கிருஷ்ணவேணிக்கு மேலேசண்ட கமலசேகரப்பிரபுவுக்கு மணஞ்செய்ய முற்பட்டனர். ஆனால் அது அவர் இடையில் நாடகசாலையில் இராஜீவி மேற்கொண்ட கள்ளக் காதலால் தடைபட்டது தெய்வாதீனமாயிற்று.

கிராம வாழ்க்கையின் இன்பமும் நலமும் உலக உபகாரமும் இதில் சுந்தராங்கனுடைய சரிதை மூலமாக விளக்கப்பெற்றுள்ளதாம். சுந்தராங்கனது தமையன் செய்யும் மதுவிலக்குப் பிரசாரம் மனதைக்கவரக்கூடியதாம்

மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம் என்று பாட்டியார் சொல்லிய நீதி பொதுவாயிருப்பினும் ஆண் பிள்ளைகளுக்கேயன்றிப் பெண்களுக்கு மிகமுக்கியமாக வேண்டப்படுவதாம். இவ்வாறு மனம் போனபடி போய்க் கற்பு நிலைதவறிக் கள்ளக்காதல் கொண்டொழுகிய இராஜீவியினால் இரண்டு மூன்று குடும்பங்கள் தங்கள் சித்தசமாதானமிழந்து பாழாயின. இழந்த பொருளை வாயினாலும் சொல்லாத உலகப்பெரியாராகிய திருவள்ளுவர்,

> "தலையினிழிந்த மயிர் அனையர்மாந்தர்
> நிலையினிழிந்தக் கடை."

என்று தம் வழக்கத்தையும் மீறிக்கடந்தும் கூடச்சொல்லி யருளினார். இப்புத்தகத்தின் முகப்பில் "இராஜீவி அல்லது காதலால் விளைந்த கஷ்டம்." என்று பெயர் பொறித்திருப் பது காணலாம். இதிற் குறித்த காதல் என்பது ஒத்த உருவும் திருவும் நலனும் உள்ள இருவரிடத்து நிகழும் குற்றமில்லாத காதல் அல்ல, இது பொருந்தாக்காமம். ஒழுக்கந்தவறிய பொருந்தாக்காமமாகிய குற்றமே இக்கதை யிற் போலக்கஷ்டத்தையும் பழியையும் விளைக்கக்காண்கின் றோம்.

குற்றத்திற்கு உதாரணங்காட்டக்கூடாது என்பது போதனமுறைக் கற்பனைகளில் ஒன்று. வழுவாக்கியங்களை எடுத்து உதாரணங்காட்டி விளக்குதல் சிறந்த முறையல்ல என்பது போதகாசிரியர் கருத்து. ஆயின் இராஜீவி என்ற கள்ளக்காதல் கொண்டொழுகும் பழிப்பொழுக்கமுள்ள பெண்கதையைக் கற்பனைக்காகக் காட்டலாமோ எனின் அப் படியல்ல. கள்ளுக்கடையின் முன் குடிவெறியினால் மயங்கி வீழ்ந்து பிணம் போலக்கிடக்கும் ஒருவனைக்காட்டி அத்த கைய உள்ள இயல்புடையவனைத் திருத்துவதும் ஒரு முறை யேயாகும். திருந்திய உள்ளுறையும் படிப்பினையில்லாமல் தீய ஒழுக்கங்களை நடித்துக்காட்டும் நாடகங்களுக்கும் ஆண்களும் பெண்களும் ஆலோசனையின்றிச் சென்று வரும் தற்காலத் தீய பழக்கமானது கேடு விளைக்கும் என்பது இராஜீவியின்

கள்ளக்காதல் அந்த இடத்தேதான் அத்தகைய உட்கருத் துடைய நாடகம் பார்த்தே கிளம்பியது என்றதனால் விளங்கு கிறது. தாழ்வானவற்றையும் பெரிய பொருள்களை விளக் கும் கருவிகளாகக்கொள்ளும் நமது பெரியார்கள் இவ்வாறு கொண்ட புருஷனையும் மக்களையும் குடும்பத்தையும் நட்டாற் றில் விட்டு மோசம் செய்த கள்ளக்காதலனிடம் அன்பு வைக்கும் நாரியர்களையும் ஒரு பெரிய பொருளுக்கு உதாரண மாக எடுத்துக்காட்டியிருக்கின்றார்கள். நமது சைவ சமய பரமாசாரியார் மாணிக்கவாசகர் அரசாங்கத்திலே மந்திரி யாக உத்தியோகத்திலே அமர்ந்து வேலைபார்த்து வந்த போது தமக்குள்ளேயே ஆத்தும விசாரணையிலே ஈடுபட்டார். வெளியிலே ஒருபுறம் உலகவிசாரணையிலே ஈடுபட்டார். வெளியே ஒருபுறம் உலகவிசாரணையும் உள்ளே மற்றொரு புறம் அந்தரங்கமான ஆன்மவிசாரணையும் நடத்திவந்தார்.

இந்த இடத்திலே திருவிளையாடற் புராணத்துப் பரஞ் சோதி முனிவர் பாட்டு நினைவுக்கு வருகிறது.

கள்ளக் காதலனிடத் தன்பு
கலந்துவைத் தொழுகும்
உள்ளக் காரிகை மடந்தைபோல்
உம்பரைக் காப்பான்
பிள்ளைக் காரியுண்ட வனிடத்து
ள்ளன்பு பதிந்து
கொள்ளக் காவலனிடைப்
புறத்தொழிலு முட் கொண்டார்.

இக்கதையின் உரைநடைப் போக்கானது செம்பாகமா வும் படிக்கப்படிக்க இடைவிடாத மன எழுச்சியையும் ஆவ லையும் உண்டாக்குவதாகவும் உள்ளது. நேராகப்பேசும் முன்னிலை மொழிக்கூற்றுக்கள் அழகாக அமைந்துள்ளன. சிற்சில இடங்களில் கதைப்போக்கினை வெளிப்படையாகக் கூறாது உய்த்துரை வைத்துள்ளதும் கதைப்போக்கின் அழ கினை அதிகப்படுத்துவதாகும். சுயமரியாதை என்ற பேரால் தன் மனம் போனபடி திரிவதே தன் மரியாதை என்றும்

விதிவிலக்குகள் இன்றி இருப்பதே மனித சமூகமென்றும் பேதித்துப் போதித்து உலகப் பெரிதுகளை நாடியலையும் ஒரு சார்மாக்களுக்கு இந்தக்கதையின் கற்பனைகளை இதன் ஆசிரியர் சமர்ப்பிப்பார் என்று நம்புகிறேன். அப்படிச் செய்தால் அவர்களுக்கு நேரமிருந்தால் அவற்றைச்சிந்திக்க நன்மையுண்டாகும்.

இந்தக் கதையைப்படிக்க ஒரு அவகாசம் அளித்த இதன் ஆசிரியருக்கு வந்தனம் செய்கின்றேன்.

கோவை சேக்கிழார் நிலையம், } **C. K. சுப்பிரமணியம், B. A.**
Member of Senate & of the
Academic Council of the
University of Madras.

FOOT-NOTE

அபிப்பிராயங்களை அன்போடு எழுதிய எனது நண்பர்களான ஸ்ரீமான் சுப்ரமணிய முதலியாரவர்களுக்கும் ஸ்ரீமான் சற்குணம் அவர்களுக்கும் எனதுமனமார்ந்த வந்தனங்களைச் செலுத்துகிறேன்.

ஆசிரியர்.

இராஜீவி
அல்லது
காதலால் விளைந்த கலகம்.

முதல் பாகம். அதிகார அட்டவணை.

இ ரா ஜீ வி

அல்லது

காதலால் விளைந்த கஷ்டம்.

நூலாசிரியரின் முன்னுரை.

அந்நிய பாஷைகளில் இருக்கும் புஸ்தகங்களை மொழி பெயர்ப்பதாவது தழுவி யெழுதுவதாவது எளிதான காரியம் அல்ல. நமது தமிழ் நாட்டில் வெளியாகும் மொழி பெயர்ப்புகளும் மூலத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு தழுவி யெழுதப்படும் நூல்களும் மேனாட்டார் முறையில் தமிழாசிரியர்களால் செய்யப் படுவதில்லை. உதாரணமாக மேனாட்டார் பிராஞ்சு பாஷையில் உள்ள அலக்ஸாண்ட்ரடூமாஸ் நவீனங்களையாவது ருஷிய பாஷையில் டால்ஸ்டாய் பிரபுவால் எழுதப்பட்ட உயர்தர நவீனங்களையாவது தமது பஷையில் எழுத விழைந்தால் மூலகிரந்தங்களை வித்தியாசமும் மாறுபாடும் சிறிதும் இலாது வரைகின்றனர். அங்ஙனம் வரைவதால் முதலாசிரியருடைய சொன்வன்மை, வருணனை சிறப்பு, உயிரின் தத்துவம் முதலான விஷயங்கள் சிறந்து விளங்கும். ஆனால் நமது தமிழ் நாட்டில் அத்தகைய பழக்கத்தை மேற் கொள்ளாமலிருப்பதற்கு காரணம் பல உள என்று நான் எண்ணவேண்டியிருக்கிறது. மேனாட்டாருடைய சம்பிரதாயங்களும் பழக்க வழக்கங்களும் நமது தமிழ் நாட்டாருக்குப் பிடிக்கவில்லை போலும். அதனால் மேனாட்டுக் கிரந்தங்கள் தமிழில் எழுதப்படும்பொழுது மிக்க வித்தியாச மாறுதல்களோடு வெளியாகின்றன. அங்ஙனம் வெளியாதலைப்பற்றி நான் குறைகூறவில்லை.

ஆகலால் மிகுந்த ஜாக்கிரதையோடு நாம் எழுதவேண்டியவர்களாக இருக்கிறோம். மூல ஆசிரியர் கூறும் விஷயத்துக்கு மாறாக மொழி பெயர்க்கும் ஆசிரியர் எதுவும் கூறலாகாது. "அன்னகரீனினா" எனும் டால்ஸ்டாய் பிரபுவின் நவீனத்தை நான் வரையுமுன்னர் சில கல்விமான்களுடன் கலந்து யோசனை செய்தேன். ருஷிய பாஷையில் இருப்பதைப் போலவே வித்தியாசம் சிறிதும் இல்லாமல் ருஷியப் பேர்களுடன் மூலத்திற்கு மாறன்றி எழுதலாம் என யோசித்தேன். ஆனால் ஆயிரம் பக்கங்கட்கு மேல் அந்நிய தேச பழக்க வழக்கங்கள் சில நம் நாட்டினருக்குப் பிடிக்குமோ பிடிக்காதோ என்று நான் பெரிதும் ஐயுறுகிறேன். ஆதலின், அந்நாவலைச் சுருக்கி எழுதத் துணிந்தேன். மூல புஸ்தகத்தை அநுசரித்து, வேண்டாத விஷயங்களை நீக்கியும் வாசகப்படி தழுவித்து, டால்ஸ்டாய் பிரபுவின் உயர் வாழ்க்கையின் சிறந்த தத்துவத்தை எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

இந்நூலை எழுதுவதில் பல கஷ்டங்கள் ஆசிரியருக்குத் தோன்றிட்டாலும், அவைகளை ஒருவாறு நீக்கி, ஆசிரியர் இதை வெளியிடுகிறார். இந்நூல் மிகவும் சிறந்த நடையில் எழுதப்படவில்லை என்றே நான் நினைக்கிறேன். இருந்தாலும் ருஷிய தத்துவஞானி டால்ஸ்டாயின் நவீனங்களை நான் வரைய எண்ணியதே எனக்கு மிக்க சந்தோஷத்தைக் கொடுக்கிறது.

இம் முன்னுரையை நான் முடிக்கு முன்னர் டால்ஸ்டாய் பிரபுவின் சரித்திரத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். பின்வரும் விஷயம் ப்ரொபசர் ஜென்கோ லாவ்ரின் அவர்களால் எழுதப்பட்டது.

"டால்ஸ்டாய் (1828—1910) நவீன இலக்கியத்தில் அபாரமான பெரியோர்களுள் ஒருவர். லக்ஷ்மி கடாக்ஷமுடைய வமிசத்திலே பிறந்தாலும் தமது பக்குவமான சிறுவயதில் தொழிலாளிகளிடம் இருந்து தெரிந்துகொண்டார். இறுதியில் பணத்தைக்கொண்டு சுகத்தை நாடுவதும் பெருமை

தில் அறுவினைப்போல் ஆனார். தமது சாமர்த்தியத்தால் ஒரு கலைஞன் ஆனார். ஆனால் கலையை அவர் பாய்ந்து தாக்கினார். கவிஞர்கள் பலர் அவரைப் புகழ்ந்து அவருடைய பெயரைப் பரவச்செய்கையில், டால்ஸ்டாய் எண்பத்திரெண்டாவது ஆண்டில் தமது சுக போக வாழ்க்கைத் துறந்து, தனிமையிலும் தரித்திரத்திலும் தம் வாழ்க்கை நடத்த முடிவு செய்து, அதன்படி நடந்தார். கடவுளின் சிருஷ்டியில் அவர் களிப்படைந்தாலும் வாழ்க்கையின் மாயத்தை அறிந்த பொழுது அவருக்கு மனம் சாந்திகொடுக்கவில்லை.”

டால்ஸ்டாய் டாம்பீகமற்ற சாதாரண வாழ்க்கையைக் கைக்கொள்ளும்படி சொல்கிறார். மஹாத்மா காந்தி அவர்கள் டால்ஸ்டாயை அநுசரித்து நடப்பது வியக்கத்தக்கதே. டால்ஸ்டாய் கிராமங்கட்குச்சென்று குடியானவர்களிடம் சிலநாள் தங்கியிருந்து, உழும்வகை முதலியவைகளைக் கற்றுணர்ந்தார். அவர்களைக் கல்வி கற்றுக்கொள்ளும்படி சில கிராம பாடசாலைகளை ஸ்தாபித்தார்.

வாழ்க்கையின் மாயா இன்பங்களை விடுத்து, இயற்கை அமைப்பின் அழகை மனோரம்மியத்துடன் ஆனந்திக்கும் உழுதுண்டு ஜீவிக்கும் குடியானவர்களிடம் மட்டற்ற அன்பைச் செலுத்தி, வாழ்க்கையின் தத்துவத்தை உணர்ந்தார். “கடவுளின் பொருட்டும் உண்மையின் பொருட்டும் மனிதர் தமது வாழ்க்கை நடத்தவேண்டும்,” எனும் தத்துவத் துறையில் இறங்கினார்.

டால்ஸ்டாய் பிரபு மத விஷயங்களைப்பற்றிப் பேசுகையில், மாதாக் கோயில்களிலாகிலும் அக்கோவில்களிலுள்ள பாதிரி குருமார்களிடத்திலாகிலும் நம்பிக்கை இல்லை என்பதாகக்கூறி, இனி உலகத்திற்குப் பொதுவான மதம் வேண்டுமென்றும், அது மன்பதைகட்கு அன்பையும் ஐக்கியத்தையும் போதிக்க வேண்டுமென்றும் சொல்கிறார்.

பொது ஜனங்கட்கு ஒருவன் உழைக்க முன்வந்தால் அவன் திரவியத்தையும் புகழையும் எதிர்பார்க்காமல், ஜனங்களின் நன்மைக்கே உழைக்கப்பாடுபடவேண்டும் என்கிருர். அறுசுவை யுண்டிகளையொழித்து, சாத்விக ஆகாரத்தை மனிதர் உட்கொள்ள வேண்டுமென்கிருர். ஆடை ஆபரணங்கள் குறைந்தவிலையில் இருக்கவேண்டும். நாகரீகம் எனும் பேயின் வலைக்குள் மனிதன் விழுந்தால் மதுபானம், வீண் விரயச்செலவு, சுருட்டுபிடித்தல், டாம்பீக வாழ்வு முதலியவைகட்கு இரையாவான். ஆதலின் மனிதன் நல்லன மேற்கொண்டு, காமம், குரோதம், லோபம், மோகம், முதலியவைகளைத்துறந்து, உழைப்பின் பயனுகவரும் ஊதியத்தைக் கொண்டு ஜீவிக்கவேண்டும். பயிரிடுந்தொழிலை மாந்தர் மேற்கொள்ளவேண்டும் என்கிருர்.

டால்ஸ்டாயைப்பற்றி இன்னும் சிறந்த விஷயங்கள் கூறலாம். ஆனல் இது தக்க இடமல்ல. அவரைப்பற்றிக் கூறும் வேறு நூல்களில் விஷயங்களைக் கண்டுகொள்க.

எனது நவீனங்களையும் கதைகளையும் வாசிக்கும் தமிழுலகம் "இராஜீவி அல்லது காதலால் விளைந்த கஷ்டம்" எனும் இதை அன்புடன் வாங்கிப்படித்து, குற்றங்களைந்து, குணத்தை மேற்கொள்ளுவார்கள் என்று நான் நினைக்கிறேன்.

நாவல் ஹவுஸ்,
கோயம்புத்தூர்,
1–5–1930.

கோ. ஸ்ரீ. இராமன்,
பி. ஏ. (ஆனர்ஸ்.)

இராஜீவி

அல்லது

காதலால் விளைந்த கஷ்டம்.

அதிகாரம் 1.

விபரீத காலமோ? விநாச நேரமோ?

திவான்பகதூர் துரைசிங்கம் சீமான் தமது சர்வகலாசாலை படிப்பு முடிந்த பிறகு தருமபுரி ஜெமீன்தார் அழகேசருடைய புதல்வியருள் மூத்தவளான கமலத்தைக் காதலித்து, அவளைத்தமது இல்லக்கிழத்தியாக ஏற்றுக்கொண்ட வருஷத்தின் இறுதியிலே சென்னைச்சட்ட சபைக்கு அபேக்ஷகராக நின்று, சபையின் அங்கத்தினருள் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று, இராஜதானியின் பலவிடங்களிலும் பேசும் சமர்த்தர் எனும் பெயரைப் புகழோடு ஏற்று, அரசாங்கத்தில் நல்ல கீர்த்தியையும் சீர்த்தியையும் அடைந்தார். சட்டசபையின் அங்கத்தினராக இருந்த துரைசிங்கப்பிரபுவை துரைத்தனத்தார் சடுதியிலேயே தமது இருப்பில் வைத்துக்கொள்ள எண்ணி, அவருக்கு முதலில் ஒரு நியாயாதிபதி பதவியை யளித்தனர். அப்பதவியில் சில வருஷகாலம் நன்கு காரியத்தை நடத்திய துரைசிங்கம் மேலும் துரைத்தனத்தார் தமக்கு அன்போடு அளித்த போலீஸ் கமிஷனர் வேலையை ஏற்றுக்கொண்டு, தமது உழுவலன்புடைய காதலியாம் கமலத்தோடு சந்தோஷத்துடன் இல்லறம் நடத்தி, நான்கு குழந்தைகளுக்குத் தந்தை

யாகி, அவைகளை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ண மும் சீராட்டிப் பாராட்டி, அவைகள் காலக்கிரமத்தில் தரை மிசைத் தவழ்ந்து வருவதைக்கண்டு, சொல்லொணாத இன்பத்தை யடைந்து வருநாளில், அரசாங்கத்தார் அவரது திறமையை மெச்சி, அவருக்கு மறுபடியும் அன்போடு கொடுத்த திவான்பகதூர் எனும் பட்டத்தைத் தரித்து, தமது காரியத்திலே கண்ணும் கருத்துமாக இருந்தார்.

ஆனால் அவருடைய துரதிருஷ்ட காலத்திற்குத் தக்கவாறு, அவர் தமது மாளிகையில் இருந்த அழகையே உருவாகக் கொண்ட கற்பலங்காரம் எனும் மடவாரைக் கண்டு மயங்கி, மோகவலையில் சிக்கி விழுந்து, புத்தி தடுமாறி, அப்பெண்மணியை எப்படியாவது கண்டு பேசினால் அதுவே போதும் எனும் எண்ணத்தோடு பல கடிதங்களை வரைந்தார். வரைந்தும் என்? அப்பெண்கள் நாயகம் அவர்மீது சிறிதும் கோபங்கொள்ளாது, அவரது எண்ணத்திற்கு விரோதம் காட்டாது, அன்போடு கடிதம் பல எழுதினாள். அன்னவள் எழுதிய கடிதங்களுள் ஒன்று எவ்வாறோ கமலத்திற்குக் கிடைத்தமையால் அது கமலத்திற்கு சொல்லொணாத துக்கத்தையும் கடுஞ்சினத்தையும் அளித்து, தம்பதிகளின் இல்வாழ்க்கையில் கலக்கத்தையும் குழப்பத்தையும் கொண்டு வந்து சேர்த்து, இல்வாழ்க்கையில் வெறுப்பையும் கொடுத்தது. என்செய்வாள் கமலம்? தமது ஆசை நாயகன் அங்ஙனம் செய்யக் காரணம் இல்லையே என்றெண்ணித் தனது கண்களை சில வினாடிகள் வரை நம்பவில்லை. ஆனால் காதற் கடிதம் திவான்பகதூர் துரைசிங்கத்திற்கு இருந்த உருக்கத்தோடும் அன்போடும் சேர்ந்த நெறியில் எழுதியிருக்கக் கண்டதை மறுமுறையும் படித்த கமலம் தனது கண்கள் மாயத்தோற்றத்தைக் கொடுக்கவில்லை யென்றும், உண்மையிலேயே தனது கணவர் மாளிகையில் உள்ள குழந்தைகளுக்குப் பாடம் கற்பிக்கும் கற்பலங்காரத்தின் மீது

காதல் கொண்டு கடிதப்போக்கு வரவு செய்துகொண்டிருப்பது மெய்யென்றும் கண்டு கொண்டாள். விபரீத காலமோ? விநாச நேரமோ? என்று சந்தேகமுற்றாள். விநாச காலமே எனத் தேர்ந்தாள். இப்படியும் நேருமோ? தெய்வத்திற்குத்தான் கண் இல்லையோ? என எண்ணினாள். பற்பல எண்ணங்கள் அவளது மனதில் அவ்வப்போது தோன்றிய வண்ணம் இருந்தபடியால் அம்மாது சிரோமணிக்கு அதிக கோபத்தையும் சந்தோஷமற்ற மனதையும் அவைகள் கொடுத்து, அவளது நித்திரையையும் பங்கப்படுத்தினவாதலின், மின்னல் இடையைக் கொண்டிருந்த கமலம் நோய் வாய்ப்பட்டவளாகவும் மலினமுற்றவள் போலவும் காணப்படுவதாயினள்.

கற்பலங்காரம் தனது கணவருக்கு எழுதிய காதற் கடிதத்தை வைத்துக்கொண்டிருந்த கமலம் ஸ்திரீகளுக்கு கணவனே தெய்வம் என்றும் அவனைத் துறந்தால் கதிவேறு இல்லை என்றும் எண்ணத்தைக் கொண்டிருந்தமையால், தனது புருஷன் நீதிநெறியில் நடக்கவில்லை என்று தெரிந்து கொண்ட நாளிலே, மிகவும் கோபத்தோடு தனது அறையில், கோபங்கொண்டிருந்த கைகேசியைப்போல் உட்கார்ந்திருந்தாள்.

அன்று இரவு எட்டு மணி சமயம் இருக்கும். திவான் பகதூர் துரைசிங்கம் தமது மனைவியின் மன நிலைமையை யறியாதவராய், மிகுந்த சந்தோஷ வதனத்தில் மிகுந்த சந்தோஷத்தைக்காட்டிய வண்ணம் அன்றுதான் சென்னைக்கு வந்த உயர்ந்த வைரங்களில் சிலவற்றை ஐம்பதினாயிரம் ரூபாய் கொடுத்து வாங்கி, அவைகளை அப்பொழுதே தக்க ஆசாரியிடம் கொடுத்து, இரண்டு பொன் மோதிரங்களில் பதிக்கச்செய்து, அவைகளை எடுத்துக்கொண்டு தமது மாளிகையை நோக்கி நடப்பதாயினர். ஆனல், கமலம் வீட்டில் சந்தோஷமிழந்து, தனது அறையில் கோபத்தோடு

நரசிங்க மூர்த்திபோல் இருப்பதை திவான்பகதூர் துரைசிங்கம் அறிந்தாரில்லை! எப்படி அறியக்கூடும்? மேலும் தாம் அந்தரங்கமாக கற்பலங்காரத்தை நேசித்ததையும் அடமாது அதற்கு மனப்பூர்வமாக உடன்பட்டதையும், பின்னர் கற்பலங்காரம் தமது மாளிகையை விடுத்து வேறிடம் போனமையும், தத்தம் காதற் கடிதங்களின் சிறப்பையும், அத்தகைய விஷயங்களின் இரகசியத்தையும் கமலம் போன்ற கமலம் அறியாள் என்றே உறுதி கொண்டிருந்த துரைசிங்கம் தாம் முப்பத்தைந்து பிராயங்கடந்த கமலத்திற்கு ஒரு வைர மோதிரத்தைப் பரிசு கொடுக்கவேண்டும் எனும் எண்ணத்தால் மிகவும் சந்தோஷமெய்தி, விரைவாக நடந்தார். எப்பொழுதும் ஆனந்தமே குடிகொண்டிருந்த மனதைக் கொண்டிருந்த திவான்பகதூர் துரைசிங்கம் தாம் மனைவிக்குச் சிறிது விரோதமாக நடந்த விஷயத்தில் கருத்தை வைக்கவில்லை. ஸ்திரீ புருஷர்கள் தத்தம் மனப்போக்கின்படி காரியங்களைச் செய்யவேண்டியது முக்கியம் எனும் கொள்கையைக் கொண்டிருந்தமையால், காதல் வெறியால் மோகலாகிரி அமோகமாகப் பெருகி கற்பலங்காரத்தை அன்போடு நேசித்தது தமது குற்றமல்ல. மேலும் அது மானிடப்பிறவி எடுத்தவர்களுக்கு உரித்தானது. மனிதன் தன் மனவிருப்பப்படி சிறிது காலம் மனைவிக்குத் துரோகம் செய்யலாம் எனும் எண்ணத்தைக் கொண்டிருந்தபடியால், துரைசிங்கம் தாம் செய்த காரியத்திற்கு அணுவளவேனும் முதலில் வருத்தப்படவில்லை.

மைலாப்பூரில் உள்ள தமது பெரிய மாளிகையை யடைந்ததும், துரைசிங்கத்தின் வேலையாட்கள் மிக்க மரியாதையாக எழுந்து நின்று, தமது எஜமானருக்கு வணக்கம் செய்தனர். அவர்களுடைய வணக்கத்தை ஏற்றுக்கொண்ட துரைசிங்கம் நேராகத் தமது அறைக்குச் செல்லுகையில், அங்கு அன்பே சதா உருக்கொண்டு வந்ததீதா என்று

எண்ணவேண்டியபடி பூங்கொடி போல் நின்று கொண்டு, தனது புருஷனின் வரவை எதிர்நோக்கி நிற்கும் வழக்கத்தைப் பழக்கமாக்கிக் கொண்டிருந்த கமலம் அங்கு இல்லாத காரணத்தை சிறிதும் அறியாது, "கமலம் நீ எங்கே இருக்கிறாய்?" என்று வாய்விட்டுக் கேட்டார். கமலம் இருந்தால் அன்றோ தனது பவளம் போன்ற வாயைத் திறந்து, முத்து போன்ற தந்த பந்திகளைக் காட்டி, இனிய குரலில் பேசுவாள்?

அச்சமயம் மாதவன் எனும் பிரதம வேலைக்காரன் உட்புகுந்து, "அம்மா அவர்கள் தமது அறையில் கோபமாக இருக்கிறார்கள்," என்ன, துரைசிங்கம் எனும் போலீஸ் கமிஷனருக்குச் சொல்லொணாத ஆச்சரியம் உண்டாகி, "என் கோபம்?" என்று வினவ, "அதன் காரணம் எனக்குத்தெரியாது," என்று மாதவன் விடை யிறுத்தனன்.

மாதவன், காரணத்தை யறிந்திருந்தால் சொல்லியிருப்பான் எனும் எண்ணத்தைக்கொண்ட திவான்பகதூர் துரைசிங்கம் திடும்பிரவேசமாக அவ்வறையை விடுத்து, தமது இல்லக்கிழத்தியின் அறைக்கு இரண்டு நிமிஷங்களில் சென்று, கமலம் கோபமாகத் தனது சாய்மான நாற்காலியில் சாய்ந்திருப்பதையும், அவளது அழகிய முகம் கொவ்வைக் கனிபோல் கோபத்தால் சிவந்து இருப்பதையும், தனது வருகையை சிறிதும் சட்டை செய்யாமல் இருப்பதையும் கண்ட—அதிகாரம் மிகக் கொண்ட போலீஸ் கமிஷனர் துரையான திவான்பகதூர் அவளை நெருங்கியடைந்து, "கமலம், கோபம் என்? காரணம் என்ன?" என்று அன்போடு இனியகுரலில் கேட்க, மார்பகம் விம்ம விம்ம, கண்ணில் நீர் சொரிய, மனச் சிதைவோடு கமலம் ஒரு கடிதத்தை எடுத்து, துரைசிங்கம் நன்கு கேட்கும்படி வாசித்துக்காட்டி, இதென்ன! என்று கூறி முகத்தை திருப்பிக்கொண்டாள்.

கரதலாமலகம்போல் உண்மையை யறிந்து கொண்ட துரைசிங்கம் பேச நாவெழாமல், தமது மனைவியின் கோபத்தின் காரணத்தைத் தெரிந்துகொண்டு, முதலில் திக்பிரமையோடு நின்று கொண்டார். அவரது முகம் முதலில் சவம் போல் வெளுத்து, நிறத்தை யிழந்தது. ஆனால் கடைசியில் முகம் வழக்கம்போல் சந்தோஷங் கொண்டது. அதைக் காணவும், கமலத்திற்கு வெகுளி உண்டாயிற்று.

"இனி என்ன செய்வது?" என்று கமலத்தைப் பார்த்து துரைசிங்கம் கூறினார்.

"நான் தம்மை அன்போடு காதலிக்க, தாம் போயும் போயும் நமது பணத்தை வாங்கி யுண்ணும் கற்பலங்காரத்தை—," என்று கமலம் சொல்லியவண்ணம் வாக்கியத்தை முடிக்காதபடி கண்ணீர் சொரிய, முகம் மாறு பட்டாள்.

"சரி, நான் பிறகு வருகிறேன், கமலம்—உனக்குப் பரிசு ஒன்று கொண்டுவந்துள்ளேன்."

"ஓ வைரமோதிரமோ?—அதை நீர் அவளுக்குக் கொடுங்கள்; எனக்கு வேண்டாம்.—நீர் எனது அறையை விடுத்துச்செல்லும்."

"பிறகு விஷயங்கள் சரியாகத் திரும்பிவிடும்," எனும் எண்ணத்தைக் கொண்டவராய் திவான்பகதூர் துரைசிங்கம் அங்கு நின்றும் அகன்றார்.

ஒரு நாளாயிற்று: இரண்டு நாளாயிற்று: மூன்று தினங்களும் ஆயின. புவியில் மானிடராக அவதரித்தோர் தத்தம் வேலைகளையும் அலுவல்களையும் செய்ய, கமலம் மாத்திரம் மிகுந்த கோபங்கொண்டு, காரியம் ஒன்றும் செய்யாமல், மாளிகையிலிருந்த சமையற்காரர்களில் சிலரையும் வேலையாட்களில் சிலரையும் சம்பளங்கொடுத்து அனுப்பிவிட்டாள். ஏனைய சமையல்காரர்களைச் சில தினங் கழித்து வருமாறு ஏவினள். அம்மாளிகையின் தலைவி

(கமலம்) எல்லா விஷயங்களையும் தானே கவனித்து வந்த தால்,—அவளுடைய சொற்களை ஒருவரும் தட்டவில்லை. ஆனால் காரணத்தை மட்டும் அறியாதவர்களாய் சித்திரப் பதுமை போன்ற தம் எஜமானி ஏன் கோபம் கொண்டாள் என்று வேலையாட்களும் ஏனையோரும் பேசிக்கொண்டனர்.

"ஐயோ! கமலம்! நீ ஏன் கோபித்துக்கொண்டாய்? நான் கடிதத்தை தெரியாமல் கொடுத்தபடியினாலன்றோ இவ்வளவும்!—துரைசிங்கம் என்ன செய்திருந்தாலும் குற்ற மற்றவர்,—குழந்தைகள் நீ வந்தால்தான் சாப்பிடுவோம் என்று சொல்லுகின்றன," என்று மூதாட்டியும் அம்மாளி கையில் தலைவர் தலைவியருடன் மிகப் பழகியவளும் ஆன இரங்கம்மாள் அன்போடும் கருணையோடும் கூறினாள்.

"இரங்கம்! எனக்குச் சாப்பாடு வேண்டாம். குழந் தைகள் சாப்பிட்டாலென்ன? சாப்பிடாவிட்டாலென்ன?" என்று கமலம் சோர்வோடு இயம்பினாள்.

"நீதான் எல்லோரையும் போகும்படி கூறிவிட்டாய்! நான் வயசானாலும் உங்களுக்கெல்லாம் இரண்டு தினங்க ளாகச் சமைத்துவைக்கிறேன்.—ஏன் சாப்பிடக்கூடாது?— குழந்தை துளசியும் கோபாலனும் நீ வந்தால்தான் சாப் பிடும்—" என்று கூறுகையில் குழந்தைகளான துளசியும் கோபாலனும் வேறு அறையில் அழத்தொடங்கும் சத்தத் தைக்கேட்டு, கமலம் சகியாதவளாய், குழந்தைகள் இருந்த இடத்தை ஓடியடைந்து "முத்தே! கண்ணே!" என்று செல்லத்தோடு கூறி இரண்டையும் உச்சி மோந்து, சாப்பிடும் படி கூற, அவைகளும் சிரித்துக்கொண்டே பேசிய வண்ணம் உண்பதாயின.

"அம்மா! எனக்கு ஏன் அந்த பூதத்தின் கதையைச் சொல்லவில்லை?" என்று கோபாலன் எனும் நான்கு வயது கடந்த குழந்தைகேட்க, கமலம், "சொல்கிறேன்.—அன்று

நான் சொன்னேன் அப்புதம் குளத்தில் விழுந்தது என்று," என்று அக்கதையை மேலும் கூறத்தொடங்கவும், அவள் தனது விசனத்தையும் கோபத்தையும் மறந்தாள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு அக்குழந்தைகளைத் துயிலு மாறு செய்து, தானும் சிறிதுணவு உண்டாள்.

"சரி, நான் இரண்டு தினங்கழித்து என் தந்தைவீட்டிற்குப் போகிறேன். துரைசிங்கம் அவளை மணந்து சுகமாக வாழட்டும்" என்று எண்ணுகையில், கமலத்தின் கண்களில் நீர் ததும்பியது.

அப்பொழுது இரவு பத்து மணி இருக்கும். சகஜமாக யாவரும் பதினொரு மணிக்குத்தான் கண் வளரச் செல்வது வழக்கம்.

கமலம் இரண்டு நாளாக நித்திரை புரியவில்லை. அவள் தனது வாழ்வே போய்விட்டது என்று எண்ணி மிகுந்த கோபம் தன் புருஷன் மீது கொண்ட பொழுது, அவளுடைய அறையின் கதவு திறக்கப்பட்டதும், மாதவன் தைரியத்தோடு உள்ளே வந்து, நீல எழுத்துகள் கொண்ட தந்திக் கடிதமொன்றைக்கமலத்திடம் கொடுக்க, அவள் அதைப் படித்துவிட்டு, "நான் அவளை வரவேற்க வேண்டியதில்லை.—இராஜத்தை துரைசிங்கரே பார்த்துக்கொள்ளட்டும்.—நான் நாளையதினமோ அதற்கு அடுத்தநாளோ என் தந்தை இடத்திற்குச் செல்கிறேன்," என்று கூறிவிட்டு, அத்தந்தியை மாதவன் முன்வீசி யெறிந்தாள். மாதவன் அதை எடுத்துக் கொண்டு, கமலத்திற்கு வந்தனம் செய்துவிட்டு அங்கு நின்றும் அகன்று, தனது எஜமானர் துரைசிங்கத்தை யடைந்து, கமலம் தன்னிடம் கூறிய விஷயத்தைக் கூறினான்.

"சரி,—நீ மூன்று பெரிய அறைகளை நமது இராஜம் பாணுக்கு அலங்கரித்து வைக்கும்படி செய்யவேண்டியது.—நான் கமலத்தைக் காலையில் பார்த்துப் பேசவேண்டும்.—நான்

போகப்போக அவள் விஷயம் தெரியும் என்றிருந்தேன். சரி,—நாளை காலையில் வெளியில் போகுமுன் அவளைப் பார்க்கிறேன்," என்று திவான்பகதூர் துரைசிங்கம் கூறி விட்டு, மாதவனைத் துயிலச் செல்லுமாறு கூறினார்.

மாதவன் போனதும், துரைசிங்கம் பிரபு கமலத்தைப் பற்றி யோசித்தார். "ஏன் அவள் வருத்தப்படவேண்டும்? நான்தான் எல்லோரும் அவரவர் மனவிருப்பப்படி நடக்க வேண்டும் என்கிறேனே!—உலகில் மானிடராக அவதரித்தோர் தம் மனப்படி விஷயங்களைச் செய்யாவிட்டால், வேறு சுகம் ஏது?—நாம் ஒருவரையும் கஷ்டப்படுத்தலாகாது.—மேலும், நான் குற்றம் தான் செய்திருக்கிறதாக கமலம் நினைத்தாலும், என்னைவிட்டு ஏன் அவள் பிரிந்து போக வேண்டும்? இதென்ன! விபரீத காலமோ? விநாச நேரமோ? தெரியவில்லை.—சரி—எதற்கும் அவளுடன் நாளையதினம் காலையில் நான் பேசிப்பார்க்கவேண்டும்—பேசுவளோ என்னுடன்?" இத்தகைய எண்ணங்கள் அவருடைய மனதில் தோன்றவும், அவர் நித்திரை உடனே கொள்ளாது, மறு படியும் எண்ணமிட்டார். இரவு பனிரெண்டு மணியும் ஆயிற்று, அப்பொழுதுதான் துரைசிங்கம் கண்ணயர்ந்தார்.

மறுநாட்காலை சுமார் எட்டு மணிக்கு திவான்பகதூர் துரைசிங்கப்பிரபு தமது இல்லக்கிழத்தியின் அறைக்குச் சென்று, "கமலம், ஏன் இன்னும் கோபம்?—என் தங்கை இராஜம் இவ்விடம் வரப்போகிறாள். அவளை நீ சந்தோஷத் தோடு வரவேற்கவேண்டும்," என்று கூற, கோபமென்னும் பாபத்தை அப்பொழுதும் தன் மனவீட்டினின்றும் அகற்றாத —அன்பும் அழகும் திருந்தி யமைந்த—கமலம் தனது கரிய அழகிய நேத்திரங்களை திவான்பகதூர் மீது செலுத்தாமல், சுவற்றில் தொங்கவிட்டிருந்த உதகமண்டலத்தில் இருக்கும் கவர்னர் மாளிகையின் படத்தைப் பார்த்தவண்ணம், "ஐயா, நான் என் தாய்தந்தையர் வீட்டிற்குப்போக ஆயத்தம்

செய்யவேண்டும். தாங்களே தயது இராஜத்தை வரவேற்று, உபசரியுங்கள். நான் இனிமேல் தமக்கு அன்புகாட்ட முடியாது. இது சத்தியம்," என்று கண்களில் கோபப் பொறிகள் பறக்க, விரைவாக, காருண்யமின்றிக்கல்மனம் படைத்தவள்போல் கூறினாள்.

"ஐயோ! அப்படிக் கூறலாகாது.—நான் உன்னை அதிகமாக விரும்புகிறேன். அதைக்காண்பிக்கும் பொருட்டே வைர மோதிரங்கள் முதலியன கொணர்ந்தேன்.—ஏதோ தெரியாமல் குற்றம் செய்துவிட்டேன். அதை நீ மன்னிக்கலாகாதா? மேலும், மனிதராகப் பிறந்த நாம் எச்சமயத்திலாவது நம்மை அறியாமலே குற்றம் செய்கிறோம். இது மனிதரின் இயல்பு. நன்கு படித்த நீ இவ்வண்ணம் எனது குற்றத்தைப் பெரிதாக எடுத்துக்கொள்கின்றாயே! வேண்டாம். இராஜம் வருகிறாள். அவள் முன் நாம் இப்படியிருந்தால் என்ன நினைப்பாள்?" என்றார் திவான்பகதூர் துரைசிங்கம்.

"இராஜத்தை ஏன் நீர் வரச்சொன்னீர்? காரணம் நான் அறிவேன்."

"நம்மிருவருக்குமுள்ள ஒற்றுமையை மதிக்கும்படி அவள் முயலுவாள்"

"நெல்லின் உள்ளிருக்கும் அரிசியை எடுத்தபின், அரிசியை முன்போல் உள்ளே வைத்து மூடினால், அது நெல்லாகுமோ? தாங்கள்—பெரிய வேலையில் இருந்தும், எம். ஏ. படிப்பு படித்திருந்தும் இப்படிச் செய்தால் இல்லறம் எப்படி நடக்கும்? எனக்கு முன்பு மாதிரி அன்பு எங்ஙனம் காண்பிக்கமுடியும்?—சரி, நாம் இனிமேல் சேர்ந்து வாழமுடியாது. இது எனது எண்ணம்," என்று கண்ணீர் உகுத்துக்கொண்டே மெல்லிய குரலில் சிறிது கோபத்தைக் காட்டிய வண்ணம் கமலம் மொழிந்தாள்.

அப்பொழுது அவள் தன் நாயகனை மனது முழுவதிலும் இருத்திக்கொண்டு, அவரை முன்னைவிட மிகவும் அதிகமாக நேசிப்பதாக எண்ணினாள்.

"கமலம், நீ என்னை முன்போல் காதலிக்கவேண்டும். இல்லாவிட்டால் நான் உயிரோடு வாழ்வதில் பிரயோஜனம் இல்லை. ஆதலால் கண்ணே, நான் உன்னை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்," என்றார் துரைசிங்கம்.

"ஐயா, தமது நடிப்பு மிகவும் சாமர்த்தியமாக இருக்கிறதே! எனது பெற்றோர்கள் இவ்விஷயத்தைக் கேட்டால் என்ன சொல்வார்கள்?—தாங்கள் இவ்விடத்தை விட்டுப் போம்."

"கமலம், என்னை நீ புறக்கணிக்கலாகும்! நமது குழந்தைகளை—," என்று துரைசிங்கர் கூறுகையில், அன்னையின் யோக்கியதையைத் தெள்ளிதிலுணர்ந்த கமலம் குழந்தைகளைப்பற்றி எண்ணினாள். "என் குழந்தைகளை நான் பார்த்துக்கொள்கிறேன்," என்று கூறுகையில் மாதவன் உட்பிரவேசித்து, "தம்மை ஒருவர் பார்க்க விரும்பி இக்கடிதத்தைக் கொடுத்துவிட்டுப் போனார்," என்று கூறுமுன்னர் கடிதமொன்றை துரைசிங்கம் பிரபுவிடம் கொடுத்து, வெளிச் சென்றான்.

துரைசிங்கம் அக்கடிதத்தை உடைத்துப் படித்தார். அதில் அவருடைய ஸ்நேகிதர் புதல்வனும் சுந்தராங்கன் துரைசிங்கம் பிரபுவைப் பார்க்க விரும்பி வருவதாக எழுதப்பட்டிருந்தது. துரைசிங்கம் பிரபு அந்த யௌவன ஸ்நேகிதனை சமுத்திரக் கரையிலே வந்து பார்க்கும்படி அதில் எழுதியிருந்தது.

"நீர் போய்வாரும்," என்று கமலம் கடிதத்தைப்படித்த துரைசிங்கரிடம் கூறியதும், துரைசிங்கம் பிரபுவும் தமது வேலையை முடிக்குநிமித்தம் அங்கு நின்றும் அகன்றார்.

அவர் போனதும் கமலம் தனக்குள்ளாக, "ஐயோ! நான் இனி இத்தனை கோபத்தைக் காட்டினால் விபரீதமாக விநாசம் உண்டாகும். முன்போலவே வேலையாட்களை வரும்படி செய்யவேண்டும். ஆனால் நான் எப்படி அவரை மறுபடியும் அன்போடு நோக்கலாகும்? இருந்தாலும் அவரோடு நான் அதிகமாகப் பேசுதல் அழகல்ல. எதற்கும் இராஜம் வரட்டும்," என்று சொல்லிக்கொண்டாள்.

அதிகாரம் 2.

காதல் முட்டை.

திவான்பகதூர் துரைசிங்கம் பிரபு தமது ஆபீஸ் வேலையில் கவனத்தைச் செலுத்தியிருக்கும் பொழுது இடிதான் அவர் அருகே விழட்டுமே அதைப்பொருட்படுத்தமாட்டார். வேலை முடிந்ததும் அவர் தமது ஆபீஸை விடுத்து வெளிச்சென்று, மாலை உலா எடுத்துக்கொள்வது வழக்கம். சுந்தராங்கன் கடிதம் வந்த நாள் வெள்ளிக்கிழமை ஆதலின், அவர் தமது ஆபீஸ் அலுவல்களை வழக்கப்பிரகாரம் முடித்துக்கொண்டு, யாதொரு கவலையும் இல்லாதவராய், கடற்கரைக்குச் சென்றார். அங்கு சிறிது தூரத்தில் சர்வகலாசாலை கட்டிடத்திற்கு நேர் எதிரில் மணலின் மீது ராஜமார்க்கத்தைப் பார்த்துக்கொண்டிருந்த மனிதன் ஒருவனை திவான்பகதூர் துரைசிங்கம் பிரபு கண்டார். காணவும் மிகுந்த மனமகிழ்ச்சியோடு விரைவில் நடந்து, அம்மனிதனையடைந்து, "சுந்தரம், எப்பொழுது வந்தாய்?" என்று ஆர்வத்தோடும், அன்போடும் கேட்டார்.

சுந்தரம் என்று அழைக்கப்பட்ட அந்த யௌவன மனிதனும் சரேலென்றெழுந்து "நண்பரே! வாரும், வாரும்," என்று கூறி, திவான்பகதூர் துரைசிங்கத்தின் வலது கையைக்

குலுக்கி, நகை முகங்காட்டி, அவருடன் மணல்மீது உட்கார்ந்து பேசுவதாயினன்.

அன்புடன் சந்தித்த நண்பர் பேசுவதை வரையுமுன் சுந்தராங்கன் யார் என்பது வாசகர் அறியவேண்டியது அத்யாவஸ்யம்.

கோயமுத்தூர் ஜில்லாவிலே சூலூரிலே பெரிய மிராசுதார் ஒருவர் இருந்தார். அவர் அரசாங்கத்தாருக்கு மகாயுத்த சமயத்தில் மிகுந்த பணம் உதவினர். மேலும் பல தருமங்களையும் செய்தார். அவருக்கு மூன்று புத்திரர்கள் ஜனித்தனர். மூத்த புதல்வர் வட இந்தியாவில் பெரிய வேலையில் இருக்க, இரண்டாவது புத்திரன் தந்தை இறந்ததும் தனது பாகத்திற்கு வரவேண்டிய சொத்தை வாங்கிக்கொண்டு, அதைத் தாறுமாறுகக் கண்டபடி செலவழித்து, நமது கதை நடந்த பொழுது சென்னையிற்றன் ஏதோ ஒரு சிறு வேலையில் இருக்க, மூன்றுவது குமாரன் சுந்தராங்கன் என்பவன் தன் தந்தை மரித்தபொழுது சென்னையிலே பிரவிடென்ஸி காலேஜில் பி.ஏ. வகுப்பில் வாசித்து, பட்டப் பரீட்சையில் தேறினன்.

சுந்தராங்கன் சென்னையில் வசிக்கும் பொழுது திவான் பகதூர் துரைசிங்கம் பிரபுவின் வீட்டிற்குச் சென்று வருவான். அவனுடைய தந்தை திவான்பகதூருக்கு மிகவும் வேண்டியவராகையால், அவர் துரைசிங்கத்துக்கு கடிதமொன்றெழுதி, சுந்தராங்கனை கவனிக்கும்படி சொல்லியிருந்தார்.

தமது நண்பரின் வேண்டுகோளை மறக்கமாட்டாதவராய் அன்போடு கூடிய ஸ்நேகத்தைக் கொடுக்கக்கூடிய திவான் பகதூர் துரைசிங்கம் சுந்தராங்கனேடு ஸ்நேகபாவமாக இருப்பதாயினர். நாளாக நாளாக அவர்களுடைய நட்பு வளர்பிறைச் சந்திரன்போல விருத்தியாகிக்கொண்டே வளர்

வதாயது. அகஙகஙட்பு அதிகமானதால் அவ்விருவரும் பற்பல சமயங்களில் சேர்ந்து மாலை உலா எடுக்கச் செல்வதும், ஒருவரை ஒருவர் சந்திப்பதும் ஆக இருப்பதாயினர். அப்படி இருக்கும்பொழுது சுந்தராங்கனுடைய மனம் கிருஷ்ணவேணி எனும் மடவால்மீது நாடிச்சென்று, அல்லும் பகலும் அநவரதமும் அவளது அழகிய உருவத்தையே எண்ணுவவாயிற்று.

இவ்விஷயத்தை எவ்வாறோ அறிந்துகொண்ட கிருஷ்ணவேணி தான் சுந்தராங்கனைக் காதலிப்பது தகுதியோ எனச் சிந்தித்து, ஒரு முடிவுக்கும் வரமுடியாது தவித்தனள். சுந்தராங்கன் அவளைக் காதலிக்கும் பொழுது, அவள் சென்னையிலிருக்கும் இராணிமேரி காலேஜில் எப். ஏ. வகுப்பில் படித்துக்கொண்டிருந்தாள். சுந்தராங்கனும் கிருஷ்ணவேணியும் ஒருவரை யொருவர் அடிக்கடி சந்திப்பதாயினர். அச்சமயங்களில் அந்தயுவகன் காதலித்தோ கையோ கனகப் பாவையோ, தெய்வமாதோ என்று ஐயுறத்தக்க கிருஷ்ணவேணியைப் பார்த்துத் தனது தந்தை இறந்துபோனதால் தானே பெரிய மிராசுதாராகச் சூளூரில் இருப்பதைக் கூறித் தன்னைக்காதலிக்கும்படியாகக் கேட்க, கிருஷ்ணவேணி தான் யோசித்தே கூறவேண்டும் எனத் தெரிவித்தனள்.

கிருஷ்ணவேணியின் உறுதி மொழியைப் பெருத சுந்தராங்கன் மனக்கிலேசமடைந்து, சந்தோஷம் அற்ற வதனத்தோடு காணப்பட்டாலும் தனது பி. ஏ. படிப்பில் ஊக்கமாக கவனத்தைச்செலுத்தி அப்பரீட்சையில் தேறினன். தேறவும், அவன் சென்னையில் இருக்கப் பிரியப்படாமல் தனது கிராமமாகிய சூளூரை யடைந்து, அங்கே விவசாய விஷயங்களில் தனது கருத்தைச் செலுத்தி வந்தான்.

சூளூருக்கு வந்த ஒரு வருஷத்திற்கெல்லாம் அவன் கிராமத்து ஜனங்களால் தாலூகா போர்டுக்கு ஒரு அங்கத்

தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். ஆனால் அதில் விருப்பம் இல்லாதவனாகி அப்பதவியை ராஜீநாமா செய்துவிட்டு, தனது பசுக்களையும், எருமைகளையும், குடியானவர்களையும் முன்புபோல் கவனமாகப் பார்த்து வருங்காலை, ஒருநாள் கிருஷ்ணவேணியின் நினைவு அதிகமாக அவன் மனக் கண்ணில் தோன்ற, அவன் அதைப் புறக்கணிக்க எண்ணிப் பலவாறு யோசித்தும் முடியாது போனமை கண்டு, வருத்த முற்று, "ஐயோ! கிட்டி என்னைக் காதலிக்க மாட்டாளோ? அவள் தனது தீர்மானத்தை இன்னும் கூறவில்லையே. அவள் என்னை அன்போடும் ஆர்வத்தோடும் காதலிக்கிறாள். இதில் சந்தேகமில்லை.—எதற்கும் நான் சென்னை சென்று, தருமபுரி ஜெமீன்தார் அழகேசரையும் அவரது மனைவியையும் கண்டு, கிட்டி என்னைக்காதலிக்கும் விஷயத்தையும் அதனால் தான் நான் அவளை எனக்குப் பாணிக்கிரகணம் செய்து கொடுக்கும்படி கேட்கவந்த காரியத்தையும் கூறினால் அந்த மனிதர்கள் மறுக்க மாட்டார்கள்.—ஆனால் அழகேசர் என்னையே கிட்டி கலியாணம் செய்து கொண்டால் நலம் எனும் எண்ணத்தைக்கொண்டிருப்பதாகவும் கமலமும் அந்த விஷயத்தில் பாடுபடுவதாகவும் திவான்பகதூர் துரைசிங்கம் அன்று எழுதினார்," என்று எண்ணிக்கொண்டிருக்கையில், தபாற்காரன் ஒரு அழைப்புக் கடிதத்தைக் கொடுத்துவிட்டுப்போனதாகச் சொல்லிய அலமேலு எனும் வேலைக்காரி தான் கொணர்ந்த உறைக் கடிதத்தைக் கொடுத்தாள். உறையைக் கிழித்து, கடிதத்தைப்படித்த சுந்தராங்கன் "என்ன இது! பழம் நழுவிப் பாலில் விழுகிறது! நான் சென்னைக்கு எனது காதலை என் மூட்டையாகக் கட்டி எடுத்துச் செல்லலாகாது? அழகேசரும் அவரது மனைவியும் கிட்டியின் இருபதாவது வயது முடிவதையும் இருபத்தொன்றாவது ஆண்டு ஆரம்பிப்பதையும் கருதி சென்னையிலே நுங்கம்பாக்கத்திலுள்ள தமது பங்களாவிலே வெள்ளிக்கிழமை

இரவு ஒன்பது மணிக்கு விருந்து ஒன்றைக் கொடுப்பதாக வும் நான் வரவேண்டும் என்றும் வழக்கம்போல் எழுதியிருப்ப தால், நான் இச்சமயத்தை இழக்கலாகாது. இன்று வியாழக் கிழமை "நீலகிரி எக்ஸ்பிரஸ்" வண்டியில் போனல் நாளைக் கே சென்னையை யடையலாம். சென்னையை யடைந்ததும் துரைசிங்கத்தை நாளைச் சாயங்காலம் கடற்கரையிற் சந்திக் கும்படி கடிதம் எழுதவேண்டும்," என்று மறுபடியும் சந்தோஷத்தோடு சிந்தித்தவனாய், அன்று மாலையிலேயே போத்தனூர் ஜங்கிஷனை யடைந்து, தனக்கு மிகவும் பழக்க மான ஸ்டேஷன்மாஸ்டரிடம் பேசிவிட்டு, முதல் வகுப்புச் சீட்டை வாங்கிக்கொண்டு, "நீலகிரி எக்ஸ்பிரஸில்" ஏறிக் கொண்டு, மறுநாள் காலை சென்னை யடைந்தான்.

சென்னையிலே ஒரு உயர்தர ஹோட்டலில் சுந்தராங் கன் தங்குவது வழக்கமாதலின், அதன்படி அந்த ஹோட் டலிற்றங்கினன். அன்று காலையிலேயே துரைசிங்கம் மாளி கைக்குத் தனது வருகையைத் தெரிவித்து, அவர் தன்னைக் கடற்கரையில் சந்திக்குமாறு கேட்டான்.

துரைசிங்கம் சுந்தராங்கனை அவனது இஷ்டப்பிரகாரம் சந்தித்தார். இருவரும் அன்போடு அளவளாவியதை இனி நாம் வரைவேம்.

"சுந்தரம், உன்னை மறுபடியும் காண்பதால் நான் அதிக சந்தோஷமடைகிறேன்.—அழைப்புக் கடிதத்தால் சென்னைக்கு வந்தது எனக்குத் தெரியும். உனது காதல் மூட்டையையும் கொண்டுவந்திருக்கின்ருயோ?" என்று திவான்பகதூர் துரைசிங்கம் சிரித்துக்கொண்டே தனது யௌவன நண்பனும் இருபத்துமூன்று பிராயங்களைப் பார்த்தவனும் மன்மதனைப்போல் அழகு படைத்தவனும் ஆன சுந்தராங்கனை நோக்கி இயம்பினர்.

அவரது சிரிப்பையும் பேச்சின் நயத்தையும் அதன் வசீகரத்தன்மையையும் கண்ட சுந்தராங்கன் பதில் சிரிப்பு சிரித்து, தனக்கு அத்தகைய லட்சணங்கள் இல்லையே என்று விசனித்தமனதோடு, "காதல் மூட்டை பளுவாகத் தான் இருக்கிறது" என்றான்.

"எனக்குத் தெரியுமே.—இரவு ஒன்பது மணிக்கு அல்லவோ விருந்து—நானும் அங்கே போகவேண்டும்.—கமலத்திற்குச் சிறிது தலைவலி இருப்பதால் அவள் போக மாட்டாள் எனத் தெரிகிறது," என்றார் துரைசிங்கப்பிரபு.

"ஐயோ தலைவலியா?—ஆனால் வேண்டாம்.—கிட்டி இப்பொழுது ரூபலாவண்ய சௌந்தரியங்களோடு விளங்குகிறாள் எனக்கேள்விப்பட்டேன்."

"சௌந்தரகோகிலம்போல் இருக்கிறாள்—" என்று துரைசிங்கர் சொல்ல, "ஆம், ஆம், தாங்கள் இன்னம் தமது வேடிக்கையை விடவில்லையே," என்றான் சுந்தராங்கன்.

"சுந்தரம், கிட்டி தற்போது குயில்போன்ற குரலையும் மயில்போன்ற நடையையுங்கொண்டு அழகிய இராணிபோல் விளங்குகிறாள்.—அவள் உன்னைக்காதலிக்கிறாள் என்றே நான் நினைக்கின்றேன்."

"சந்தோஷம்.—நாளையதினம் நான் அவளிடம் முடிவான வார்த்தையைக் கேட்கிறேன்."

"அப்படியா?"

"ஆம்.—ஏன் கேட்கலாகாது?"

"கேட்பது நலமே."

"தாம் சொல்வதில் ஏதோ கருத்து இருக்கிறது என்று தெரிகிறது. தாம் ஏன் அப்படியா என்று கேட்கிறீர்?"

"கேட்டாலென்ன?"

"பிரபுவே! தாம் எனக்குச் சொல்லவேண்டும்."

"ஒன்றும் இல்லை.—உனக்கு கமலசேகரனைத் தெரியும் அல்லவா?"

"தெரியும்.—கர்னல் கமலசேகரப் பிரபுவினுடைய பேரன் கமலசேகரன்தானே! அவனுக்கு முப்பது ஆண்டுகள் இருக்கும். பார்ப்பதற்கு இன்னும் இருபத்திரெண்டு வயதுள்ளவனாகக் காணப்படுகிறான். அவன் சென்ற யுத்தத்தில் துரைத்தனத்தாருக்குப் போர் முனையில் நின்று சண்டை செய்து வெற்றியும் புகழும் பெற்றான். அழகில் மன்மதன்: நடவடிக்கையிலோ ஆங்கிலேய கனவான்களில் ஒருவரைப்போன்றவன். மிகுந்த செல்வத்தை உடையவன். அவன் தாயார் முதலாயினோர் உயிரோடு இருக்கின்றனர். அவனைத்தானே தாம் கூறுகின்றீர்?"

"ஆம்.—ஏது பரபரப்போடு பேசுகிறாய்!"

"இது கிடக்கட்டும்.—தாம் ஏன் கமலசேகரன் என்று கூறினீர்?"

"என்ன ஆத்திரம்?—கிராமவாஸி என்பதை நன்கு தெரிவிக்கிறாயே உன் பரபரப்பினால்! நாகரீகமாகவும் நாஜூக்காகவும் பேசவேண்டும்.—விஷயத்தைக் கூறுகிறேன். கமலசேகரப்பிரபு படிப்பில் எம். ஏ. படித்துள்ளான். அவன் சில மாதகாலமாக கிட்டியோடு ஸ்நேகபாவமாக இருக்கிறான். தற்காலம் அவன் உனக்குப் போட்டிக் காதலனாக இருக்கிறான் எனத் தெரிகிறது," என்று துரைசிங்கப்பிரபு கூறியதும், சுந்தராங்கனுக்கு மனத்தில் வியாகூலம் உண்டாகி, கற்சிலையே போல் வெளித்தோற்றத்தில் காணப்பட்டு, உள்ளே எண்ணமிடுவதாகக் காணப்பட்டான். அவனது அழகிய வதனம் அன்று அலர்ந்த பங்கயம் போல் முதலில்

காணப்பட்டு, ஒவ்வொரு விநாடிக்கொருதரம் சிவந்து சிவந்து காணப்பட்டது.

"தாம் ஏன் இவ்விஷயத்தை எனக்கு முன்பு தெரிவிக்க வில்லை?"

"சுந்தரம், தெரிவிக்க வில்லை என்பதற்குப் பல காரணம் உண்டு.—மேலும் கிட்டியின் மனது கமலசேகரன் மீது பூர்ணமாக இருக்கிறது என்று சொல்ல முடியாது. ஏன்? கமலசேகரனும் அவளைப் பன்முறை தனது காதலை ஏற்றுக் கொண்டு கலியாணம் செய்து கொள்ளும்படியாக வற்புறுத்தியும் கிட்டி பதிலே கொடுக்காதிருக்கிறாள். ஆதலின், அவள் இன்னும் யோசனையிலே ஆழ்ந்திருக்கிறாள். நீ கவலைப்படாதே. உன்னை எப்படியும் கிட்டி கலியாணம் செய்துகொள்வாள்.—இன்றிரவு நாம் இருவரும் விருந்திற்குச் செல்வோம்.—நாளையதினம் அவளை நீ தீர்மானம் சொல்லும்படி கேள்."

"எதற்கும் அவளைக்கேட்கிறேன்.—சம்மதி கொடுத்தால் நலம். இல்லாவிட்டால் கமலசேகரனையே விவாகம் செய்து கொள்ளட்டும். நான் மறுபடியும் கிராம வாழ்க்கையிலே என் நாட்களைக் கழிக்கிறேன்.—நாம் விருந்திற்குச் செல்லவேண்டும் அல்லவா?—உமது மோட்டார் ஏன் வரவில்லை?"

"சிறிது நேரத்திற்குள் வரும்.—இப்போது மணி எட்டேகால் ஆகிறது. நாம் உடை மாறிப் போவதற்குச் சரியாக நேரம் இருக்கும்.—நீயும் உடை மாறவேண்டும்."

"ஆம்."

அப்பொழுது நாகரீகமான உடையைத்தரித்த மனிதன் ஒருவன் அங்கே தோன்றி, மிகுந்த பணிவோடு மோட்டார்

கார் நின்றுகொண்டிருப்பதைத் தெரிவிக்க, நண்பர் இரு வரும் எழுந்திருந்து, மோட்டார் வண்டி ஓட்டுபவன்பின் சென்றனர். "சுந்தரம், நீ முதலில் உடையை மாற்றவேண் டும். நான் உன்னை உனது ஹோட்டலில் விட்டுவிட்டுப் போகிறேன். நீ தயாராக இரு. நானும் மாளிகை சென்று உடையை மாற்றிக்கொண்டு, மறுபடியும் உன் ஹோட்ட லுக்கு வந்து உன்னை விருந்திற்கு அழைத்துச் செல்கிறேன்," என்று திவான்பகதூர் துரைசிங்கம் கூறிக்கொண்டே இராஜ பாட்டையில் நின்றிருந்த மோட்டாரினுள் சுந்தராங்கனோடு ஏறிக்கொள்ள, அந்த மோட்டாரும் வேகமாகச் சென்றது.

* * * *

நுங்கம்பாக்கத்திலே ஜெமீன்தார் அழகேசருடைய பங்களாவிலே யாவரும் சந்தோஷமாகக் காணப்பட்டனர். அழைக்கப்பட்ட விருந்தினர் பலரும் வந்திருந்தனர். ஆனால் கமலம் மட்டும் தலைவலியால் வருந்திக்கொண்டிருப்பதைத் தெரிவித்து வராமலிருந்தது ஜெமீன்தாருக்கும் அவரது மனைவிக்கும் கிருஷ்ணவேணிக்கும் வருத்தத்தைக் கொடுத் தது.

எங்கு நோக்கினும் மின்சார விளக்குகள் தாரகைபோல் இடைவிட்டு மின்னாமல் ஒரே வெளிச்சத்தோடு பிரகாசித்துக் கொண்டிருந்த தோற்றம் பார்ப்பதற்கு மிகவும் மகோன்னத மாக இருந்தது. தற்கால சம்பிரதாயப்படி நூறு கனவான் களுக்கும் சீமாட்டிகளுக்கும் மேஜைகளின்மீது ஆகாராதிகள் தட்டிலும் கோப்பைகளிலும் வைக்கப்பட்டிருந்த காட்சி ரமணீகரத்தையும் அழகையும் அளித்தது. நீளமாக இருந்த மேஜைகளின் இருமருங்கிலும் அழகிய நாற்காலிகள் போ டப்பட்டிருந்த வரிசை விமரிசையாக விளங்கியது. அவை களின்மேல் ஜாதி மதம் முதலியவைகளைப் பாராட்டாத

வர்கள் சிரித்துக்கொண்டும் பேசிக்கொண்டும் கிருஷ்ண வேணியைப்பார்த்துக்கொண்டும் வேறு விநோதமான படங்களையும் விளக்குகளையும் நோக்கிக்கொண்டும் உட்கார்ந்து இருந்த விநோதகரமான கூட்டம் மிகுந்த சோபையோடு விளங்கி, யாவருக்கும் குதூகலத்தையும் உண்டாக்கியது.

அங்குக்குழுமியிருந்த விருந்தினருள் மத வித்தியாசம் சிறிதும் பாராட்டாத மௌலனுகுலாம் கான்பகதூர் எனும் சீமான் பிராமண ஸ்திரீயும் ஸர் பட்டம் பெற்ற சுந்தர சாஸ்திரியாருடைய பாரியையும் ஆன லேடி விசாலாட்சி அம்மாள் அருகே உட்கார்ந்துகொண்டு, சந்தோஷத்தோடு பேசிக்கொண்டே நகைத்துக்கொண்டிருந்த காட்சி இந்து முஸ்லீம் ஒற்றுமை இந்தியாவில் இருக்கிறது யென்பதைத் தெள்ளிதில் காண்பிப்பதுபோல இருந்தது. மற்றொரு புறத்தில் இந்திய சுயராஜ்ஜியத்திற்காக பாடுபடும் கிருஷ்ண சாமி செட்டியார் அவர்கள் கவுன்சில் மண்டபத்தில் தாம் கேட்கும் கேள்விகட்கும் தாம் கொண்டுவரும் மசோதாக்களுக்கும் சரியான பதிலும் அங்கீகாரமும் கொடுக்காமல், கல்மனமுடைய விரோதியைப்போல் காணப்படும் ஸர். ஸ்டோன் துரையோடு இன்பமாகப் பேசியவண்ணம், "ஸார், நாம் கவுன்சில் மண்டபத்தில் பேசும்பொழுது மாறுபட்ட மனத்தினராகக் காணப்பட்டாலும், இங்கே மாறுபடும் மனது நமக்கு இல்லையே. நான் கூறுவதை எல்லாம் சரியென ஆமோதிக்கும் தங்களுக்கு நான் நன்றியறிவுள்ளவனாக இருக்கிறேன்," என்ன, ஸர். ஸ்டோன், "சந்தோஷம்.— நமது ஜெமீன்தாருடைய அருஞ்செல்வக்குழந்தை கிருஷ்ண வேணியம்மாள் நீடூழிகாலம் வாழும்படி நாம் இருவரும் விரும்பிக் கடவுளைப் பிரார்த்திக்கிறோம்," என்று சொல்ல, செட்டியாரவர்களும் அதையே விழைந்து, கடவுளைப் பிரார்த்தித்தார். மற்றும் ஒரு புறத்தில் ஆசித்திராவிடர்

குலத்திலே உதித்த செல்வக்குமாரும் பி.ஏ., பி.எல். பட்டம் பெற்று, அட்வகேட் வேலையில் அபரிமிதமாய் திரவியம் சம்பாதிக்கும் ஆற்றலை உடையவரும் ஆன தெய்வசகாயம் என்பவர் மதவேற்றுமை பாராட்டாதவரும் சாஸ்திரங்களில் தேர்ச்சி பெற்றவருமான சங்கரய்யருடனும் அவரது சம்சாரத்துடனும் இனிதாகப் பேசியவண்ணம் ஆகாரம் வைக்கப் பட்டிருந்த தட்டுகளை எல்லாம் காலியாக்கிக்கொண்டிருந்தார். இன்னும் மற்றொரு புறத்தே இராஜாங்க விஷயங்களைப் பரிசோதித்துவரும்படி இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்ட கமிஷன் மெம்பர்களில் சிலர் தம்மோடு அரசாங்க அலுவல் களில் ஒத்துழையாத சில இந்தியர்களோடு பேசியிருந்த காட்சி யாவற்றினும் நன்கு பொருந்தி யிருந்தது.

தருமபுரி ஜெமீன்தார் மனைவி இரத்தினவளி தனது மாப்பிள்ளையான திவான்பகதூர் துரைசிங்கத்துக்கு அருகில் வைரநகைகள் காதுகளிலும், கைகளிலும், கழுத்திலும் ஓங்கி ஓங்கி அதிகமாகப் பிரகாசிக்கும்படி அணிந்து கொண்டு, பூக்கள் வேலைப்பாடமைந்த பனாரஸ் பட்டுப் புடவையும் பட்டு ஜாகெட்டையும் அணிந்துகொண்டு, சந்தோஷம், உருவம் எடுத்து வந்ததோ எனும்படி சிரித்த வண்ணம் உட்கார்ந்துகொண்டு, பேசியிருக்கையில், அவளுடைய நயனங்கள் அங்குக்குழுமியிருந்தோர் மாட்டு அடிக் கடி போய் வந்துகொண்டிருந்தன.

ஜெமீன்தார் அழகானந்தர் மிகுந்த வெண்மையான ஆடைகளை யணிந்துகொண்டு காதுகளில் வைரக்கடுக்கன் கள் மிக ஒளியோடு பிரகாசிக்க, சந்தோஷத்துடன் இராஜா வீரராகவ நாயுடுவிடம் பேசிக்கொண்டிருந்தார்.

இத்தகைய காட்சி பார்ப்பதற்கு மிகவும் ரமணீகரமாக யிருந்தது. கமலசேகரன், கிருஷ்ணவேணி, சுந்தராங்கன்

முதலாயினோர் தாம் இருப்பது தெய்வலோகமோ கந்தருவ ருலகமோ என்று சந்தேகித்தவர்களாக அதிகமாகப் புசிக்க வில்லை.

கிருஷ்ணவேணி எனும் அழகேசருடைய அருமைக் குமாரத்தி எப். ஏ. பரீட்சையில் தேறியவள். வயது தற் போது இருபது. பார்ப்பதற்கு மிக எழில் வழிந்த சரீரத் தையும் பாடுதற்கு குயில்போன்ற சாரீரத்தையும் கொண்ட வள்: அவளது சிறிய அழகிய தலையின் மீது இருந்த கேசம் வாசனை தைலத்தால் நறுமணம் எங்கும் வீசும்படி அலங்கரிக்கப்பட்டிருந்தது: புஷ்பம் சில அவளது கேசத் திற்கு அழகு செய்தன. அவளுடைய கலைமதியை நிகர்த்த வதனம் படிப்பின் பிரகாசத்தால் சோபையோடும் புத்தி கூர் மையோடும் அதிகமாகப் பிரகாசித்து, அங்கிருந்தோர் மன தைக் தன்கண் வந்து லயிக்குமாறு இழுத்தது என்றே சொல்லவேண்டும். அவளது காதுகளில் வைரக்கம்மல் ஒளிர்ந்தது. தற்காலத்தில் பணச்செருக்கினால் வயிரமாட் டல்களை அணிவதை அவள் மனவெறுப்புடன் நோக்கி வந்த மையால், வயிரமாட்டல்களை அவள் காதுகளில் அணிய வில்லை. அம்மாதின் பரந்த நெற்றியில் இலக்ஷ்மீகளை மிகுந்து காணப்பட்டு, அவளுடைய கெம்பீரமான நற்குணத் தை வுணர்த்தியது. அழகிய கரிய கண்கள் பார்ப்போருக்கு ஒரு வகையான நன்மதியைக் கொடுப்பது போல இருந்தன.

கொவ்வைக்கனியோ, மாதுளங்கனியோ, பவளமோ என்று ஐயுறத்தக்க அதரங்களையும் முத்துக்கள் போன்ற பற்களையும் கொண்டு காண்போர் மனதைக் கவரும் தன் மையைக் கொண்ட அக்காரிகையின் நாசியும் கழுத்தின் தோற்றமும் அவளைப் படைத்த பரமனின் சாமர்த்தியங் களைக்காட்டின. அவளுடைய கழுத்தில் வைரங்கள் கொண்ட அட்டிகை யொன்று அபரிமிதமாய் பளீர் பளீர் என எத்திசையிலும் ஒளிவீசி பல வருணங்களைக் காண்

பியாகின்றது. தான் உடுத்தியிருந்த சேலையின் மீது வைர வைடூரியங்கள் மிகுந்த சோபையைக் கொட்டுமாறு கட்டப் பட்ட பொன்மேகலையைப் போட்டிருந்தாள். கைவிரல்களில் சில மோதிரங்களையும், கைகளுக்கு பம்பாய் வளையல்களையும் அணிந்திருந்தாள். அவள் உடுத்தியிருந்த புடவை கராச்சி யில் நெசவு செய்யப்பட்டு அவளது வருஷ முடிவு கொண் டாட்டத்திற்கென்றே தயாரிக்கப்பட்டதால், அதன் உயர் வினைக்கவின் பொருந்திய கவிவாணர்களும் விவரிக்க ஒண்ணாது. ஆதலின் நாம் அதை விஸ்தரியாமல் நிறுத்துவோம்.

அவள் அத்தகைய ரூபலாவண்ய சௌந்தரியாய் விளங்க, அவள் அருகே இரண்டு புறங்களிலும் உட்கார்ந் திருந்த கமலசேகரனையும், சுந்தராங்கனையும் நோக்குவாம்.

கிருஷ்ணவேணியின் வலது பாரிசத்திலே அழகனே போல் உட்கார்ந்திருந்த கமலசேகரன் எனும் சீமானுக்கு முப்பதாண்டுகள் உண்மையில் நடந்துகொண்டிருந்தாலும், வசீகரமான பரந்த முகத்தையும் அழகிய சிறிய மீசை யையும் பெற்ற தோற்றம் அவனுக்கு இருபத்திமூன்றாண்டு களுக்கு மேலிராது என்று கூறத்தக்கதாகச் செய்தது. நறுமணம் எங்கும் பரவி அதனை முகர்ந்தோர் இதென்ன வாசனைத்தைலம் எனக் கேட்கத்தக்கபடி கமலசேகரன் தனது கிராப்பின் மீது கமினியா தைலத்தைப் போட்டுக் கொண்டு, கார் முகிலன்ன தனது கேசத்தை இரண்டு சம பகுதி செய்து, வாரிக்கொண்டிருந்த மாதிரி மிகவும் அழகாக இருந்தது. அங்கு வந்திருந்த விருந்தினருள் கிராப் உடைய வர்கள் கமலசேகரனது அழகிய கிராப்பின் நிலையை வியந்து வியந்து தமது மனத்தினுள் சந்தோஷித்து, அதேமாதிரி தாமும் மறுநாள் வாரிக்கொள்ள வேண்டுமென்று நினைத்தவர் களாய், அவனையே தமது அழகு தெய்வமான நாகரீகம் என்று சிந்தித்தனர். கமலசேகரனுடைய அன்பு ததும்பும்

கண்கள்மீது ஸெலுலாயடு ஷெல் போட்ட சட்டத்தைக் கொண்ட கண்ணாடி காணப்பட்டு, அவனது வதனத்திற்கு ஒரு வகையான காந்தியையும் புத்தி கூர்மையையும் கொடுத்து, மாரனோ குமாரனோ என்றெண்ணும்படி செய்தது. மூக்கண்ணாடி அணியாதவர்கள் கூட கமலசேகரனை அடிக்கடி சென்னையில் பார்த்த பொழுதெல்லாம் கண்ணாடி கமலசேகரனுக்காகச் செய்யப்பட்டதோ அல்லது கமலசேகரன் கண்ணாடிக்காக அவதரித்தனனோ எனும் விநோதமான எண்ணத்தைப் பெற்றவர்களாய், தமது பெற்றோர்களிடம் தமது கண்களில் குற்றம் ஏதும் இல்லாதிருந்தும் குற்றம் பல இருப்பதாக அறைந்து, டாக்டர்களிடம் சென்று, பணத்தை வாரியிறைத்து, கண்ணாடிகள் போட்டுக்கொண்டு, சிறிது தினங்களுக்குள்ளே தமது கண்களைப்பாழ்படுத்திக்கொண்டு, மூலையிலுட்கார்ந்து, முனகிக் கடைசியில் அவதிப்பட்டனர். கண்ணில் களங்கம் இருந்தாலொழிய கண்ணாடி போடுதல் பிசகு என்பதை அறியாத பேதைகள் கமலசேகரன் தனது பார்வையில் களங்கம் இருந்ததால் தான் கண்ணாடியைப் போட்டுக் கொண்டான் என்பதை அறிந்திலர் போலும்!— மூக்கண்ணாடி அப்படி இருக்க, அரும்பு மீசையும் வெண்ணிற தந்தபந்திகளும், பெருத்த சிவந்த கன்னங்களும் உடைய கமலசேகரன் மாரவேளின் மகனோ வேறு அதிசய சிருஷ்டியோ என யாவராலும் சந்தேகிக்கப்பட்டனன்.

சென்னை சர்வகலா சாலையில் பெறுதற்கரிய எம். ஏ., பட்டப் பரீட்சையில் தேறியவனாதலின், கமலசேகரன் அதன் பொருட்டு வீம்பு கொள்ளாமல், யாவரோடும் அன்பாகப் பேசிக்கொண்டிருந்த பொழுது, ஒரு தட்டிலிருந்த ஆகாரத்தையெடுக்க, அவ்வமயம் அவனது வலக்கை விரல்களில் போட்டிருந்த இரண்டு உயர்தர வைரமோதிரங்களும், மணிக்கட்டில் கட்டியிருந்த வெஸ்ட் எண்டு கம்பெனியாரின் உயர்தர கைகெடிகாரமும் பார்வைக்கு நன்கு விளங்கின. உடை

யைப்பற்றியோ வெளில் அதிகமாக உரைப்பது மிகையாகும். அவன் அழகிற்குத் தக்கபடி உடையணிந்திருந்தான்.

கிருஷ்ணவேணியுடன் அவன் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருக்கவும் உணவை உண்டபடியும் இருக்க, கிருஷ்ண வேணியின் இடது புறத்தே புறக்கணிக்கப்பட்டதே போல் காணப்பட்ட சுந்தராங்கன் கமலசேகரன் போல் எல்லா விஷயங்களிலும் ஏறத்தாழக்காணப்பட்டாலும், நகரவாஸிபோல் அதிகமாகக் காணப்படவில்லை. அவனது மனம் ஏதோ தத்துவத்தை நாடி, கிராமவாஸி என்பதை வெளிக்குக் காட்டியது.

அவனும் கிருஷ்ணவேணியுடனும் கமலசேகரனுடனும் ஆகாரத்தைத் தின்றுகொண்டே உரையாடினனுயினும் அவனது உள்ளத்தில் குதூகலம் அவ்வளவாகக் காணப்பட வில்லை. கிருஷ்ணவேணி அருகில் இருந்தபடியினால் அவன் சந்தோஷமடைந்தான். ஆனால் அது பகலவனைப் பார்த்த பனியன்ன கமலசேகரனோடு அம்மாது வார்த்தையாடிய விநாடியில் மறைந்து போயிற்று. கிருஷ்ணவேணி தன்னைக் காதலிப்பாளோ என்றையுற்று, அவள் தன்னை நோக்கி புன்னகை காட்டிய பொழுதெல்லாம், அந்த ஐயத்தை மறந்து, தன்னை எப்படியும் காதலோடு கலியாணம் செய்து கொள்ளுவாள் என்றெண்ணி மனம் பூரித்தான்.

விருந்து ஒரு முடிபுக்கு வரவே, கிருஷ்ணவேணியை விருந்தினர் யாவரும் ஆசீர்வதித்துக் கடைசியில் ஜெமீன் தாரிடத்தும் அவரது மனைவியிடத்தும் கிருஷ்ணவேணி யிடத்தும் செலவு பெற்றுக்கொண்டு, குதூகலம் உற்ற மனத்தினராய் தத்தம் மாளிகைகளுக்குச் சென்றனர்.

மறுநாட் காலை சுமார் ஒன்பது மணி சமயம் இருக்கும். சுந்தராங்கன் தான் வருவதாகச் சொல்லிய தன் காரணத்தை ஜெமீன்தாரும் அவரது மனைவியும் கிருஷ்ணவேணியும்

முன்பே அறிந்தவர்களாய்த் தத்தம் அறைகளில் உட்கார்ந்த வண்ணம் சிந்தித்துக்கொண்டிருந்தனர்.

ஜெமீன்தாரிணி இரத்தினவளி ஆதிமுதல் குக்கிராமத்திலே மிகுந்த திரவியத்தோடு வஸித்து வந்த சுந்தராங்கனைத் தனது அருஞ்செல்லப்புதல்வி கிருஷ்ணவேணி கலியாணம் செய்துகொண்டு, சூலூரில் வாழ இஷ்டப்படாதவளாய், சுந்தராங்கனை வெறுத்து வந்தனள். அவன் தனது படிப்பை முடித்துக்கொண்டு கிராமத்திற்குச் சென்றபொழுதிலிருந்து அவள் அவனை அறவே மறந்தாள். எம். ஏ. படித்தவனும் திரண்ட செல்வவந்தனும் ஆகிய கமலசேகரனைக் கலியாணம் செய்து கொள்ளுதல் நலம் என்று அடிக்கடி கிருஷ்ணவேணியிடம் போதனை செய்வாள். அப்பூங்கோதையும் அங்கிலேயர் நடை உடை பாவனைகளை மிகவும் எளிதிலுணர்ந்த கமலசேகரனையே காதலிப்பதாயினள். ஆனால் கமலசேகரன் தன்னிடம் கலியாண விஷயத்தைக் கூறிய பொழுது, அவளுக்கு உள்ளத்தில் அவனது காதலில் சந்தேகம் வந்துதித்தல் சகஜமாயிற்று. இருந்தாலும் அவளது மனம் அவனையே நாடியது. அதை எல்லாம் நன்குணர்ந்த இரத்தினவளி சந்தோஷங்கொண்டிருந்தாள். ஆனால் சுந்தராங்கன் அன்றைய காலையில் கிருஷ்ணவேணியிடம் வந்து கலியாணம் செய்து கொள்வதாகிய பெரிய விஷயத்திற்குத் தனது புதல்வி என்ன கூறுவாளோ என்று பயந்து சிறிது நேரம் ஏதும் தெரியாமல் உட்கார்ந்திருந்தாள். கமலசேகரனும் அன்று காலையில் வருவதாகக் கூறியிருந்தமையால் பெரிதும் வருத்தமுற்றவளாகக் காணப்பட்டாள்.

இரத்தினவளியின் மனது அவ்வண்ணம் இருக்க, ஜெமீன்தார் அழகேசர் சுந்தராங்கனைத் தமது மகள் வரித்துக் கொண்டால் மிகவும் நலமாக இருக்குமே என்றெண்ணினர். ஆனால் ஸ்திரீ புருஷர்கள் காதல் விஷயங்களில் தாம் தலை

யிடுவது சரியல்ல என்றெண்ணிச் சும்மா இருந்தாலும் அவர் சுந்தராங்கனை அதிகமாக விழைவதாயினர். அவருக்கு கமலசேகரன்மீது வெறுப்பு ஏதும் இல்லாதிருந்தாலும், சுந்தராங்கனுக்குப் போட்டியாக அவன் வந்ததைக்கண்டு அவனை ஒரு மாதிரியாக வெறுத்தார். சுந்தராங்கன் அன்றையகாலை வந்துழி தாம் அன்போடு பேசவேண்டிய முகாந்திரம் இருக்கிறதை உன்னி, தமது உடையை மாற்றிக் கொண்டார்.

சுந்தராங்கன் தன்னுடைய தீர்மானத்தைக் கேட்கப் போவதை யறிந்திருந்த கிருஷ்ணவேணி அப்போட்டிக் காதலர்களுடைய காதல் மூட்டையை அப்பொழுது தன்முன் அவிழ்த்து வைத்துக் கொண்டவளாய், அவ்விருவருள் எவருடைய காதற் சரக்கு தனக்குச் சிறந்தது என்று ஆராய்ந்து பார்க்க, இருவர் சரக்குகளும் ஓரே மாதிரி இருக்கக்கண்டு மயங்கினுள் ; எதை விழைந்தெடுப்பது எனத் தியங்கினுள் : மனம் வருந்தினுள் : திரிசங்கு சொர்க்கத்தில் இருப்பதாக எண்ணினுள் : விதியாரை விட்டது என்று உன்னினுள் : வசலாடினுள் : ஐயகோவென்று அழுதாள் : அரற்றினுள் : தனக்கு யாரை வரிப்பது யாரைத் தவிர்வது என்பது தெரியவில்லையே என்று மனம் வருந்தி தன்னை நொந்துகொண்டாள். கடைசியில் மறுபடியும் அப்போட்டிக் காதலர்களுடைய காதல் மூட்டையை ஆராய்ந்தாள் : தான் ஒரு முடிபுக்கு வரவேண்டியது உண்மை யென்றும் அது தான் தனது வாழ்வுக்கு ஆதாரம் என்றும் எண்ணியவளாகத் தனது மாதா கூறிய சொற்களை மனத்திலெண்ணி, கமலசேகரனையே என் தேர்ந்தெடுக்கலாகாது எனவினவினுள். அது வேண்டாம் என்றுல் சரியல்ல என நினைத்தாள்.—கமலசேகரன் பார்ப்பதற்கு மாரவேளினை நிகர்த்திருப்பதையும் மிகுந்த சாமர்த்தியத்தைக் கொண்டிருப்பதையும், முன்பு தானும் அவனும் சேர்ந்து நந்தன வனங்களில் மாலை உலா எடுத்துச் சென்ற

தையும், தீங்கனியான மதுரம் மிக்க மாங்கனியைத் தின்றாற்போல் உருசி கொடுக்கத்தக்க பேச்சு சாமார்த்தியம் உடைய கமலசேகரனுடைய காதற் பேச்சுகளை தான் செவியுற்றபோது கொண்ட ஆனந்தத்தையும் எண்ணினாள். இருந்தாலும் அவன் பலவான். ஏன் அவனைக் கணவனாக வரிக்கலாகாது: ஆனால் சுந்தராங்கன் கமலசேகரனைவிடத் தாழ்ந்தவனா? இல்லையே! என்று மறுபடியும் அவளது இருதயம் சொல்லியதும் மிகவும் துக்கமடைந்து அவர்கள் இருவருடைய காதல் முட்டையை அசட்டை செய்தாள்: மறுபடியும் ஏதாவது பதில் சொல்ல வேண்டுமே என்றாலோசித்துக் கடைசியில் சுந்தராங்கனை மணாளனாக எடுக்கக்கூடாது என்றாலோசித்திருந்த சமயத்தில், கிருஷ்ணவேணியின் அறையிலிருந்த கெடிகாரம் பத்து அடிக்கவும், கிருஷ்ணவேணி மிகவும் பரபரப்பாகத் தான் உட்கார்ந்திருந்த சோபாவை விடுத்து, நேராக ஹாலினுள் செல்ல, அங்கு சுந்தராங்கன் வருவதைக் கண்டு, வருக என்று கூறினாள். கவலைகொண்ட உள்ளத்தோடு கிருஷ்ணவேணியைக் கண்ட சுந்தராங்கன் அன்று அலர்ந்த அல்லியைப் போன்றிருந்த தனது எழில் வழிந்த காதலி வருக என்று கூறியதைக் கேட்டு, உடல் புளகாங்கிதமெய்தி, அவளது ரூபலாவண்யத்தைக் கண் எனும் வாயினால் பருகுவதாயினன்.

அச்சமயத்தில் கிருஷ்ணவேணியின் மனத்தில், "ஐயோ! நான் எப்படி இவரை வேண்டாம் எனக்கூறுவது! எனக்கு தைரியம் இல்லையே! ஐயோ! நான் இவரைக் காதலிக்கவில்லை என்றால் என்ன சொல்லுவார்? ஈசா! கமலசேகரரைக் காதலிப்பதாக இவர் முன் கூறுவதா?" என்று எண்ணமிட்டவளாகச் சோர்வடைந்து, சோபாவிலே சாய்ந்து, சுந்தராங்கனையும் தன் அருகே உட்காருமாறு கூறினாள்.

"கிட்டி! உன்னை நான் ஒன்று கேட்கிறேன். நீ என்னை மணம் புரிவையா? "என்று சுந்தராங்கன் நடுக்கத்தோடும்

யத்தோடும் கேட்கத்தகாத கேள்வியைக் கேட்டுவிட்டோமே என்று எண்ணிய உள்ளமுடையவளாக விளங்க, திருக்கணவேலியின் முகம் சவம்போல் ஆகி, ஒளியில்லாமல், பேசாதொழியாமல் தவிக்கிறாள். கடைசியில் ஒரேமனதுடன் தைரியத்தை எப்படியோ வரும்படி சமாளித்துக் கொண்டு "முடியாது" என்று கூறவும், அவளுடைய தொண்டையடைத்துக் கொண்டது; கண் சுந்தராங்கனைக் காண நாணியது; முகம் கோணியது; சவம்போலாயது. என் செய்வாள் அவள்! அந்தோ பரிதாபம்! பரிதாபம்!!

'முடியாது' எனும் வார்த்தை சுந்தராங்கன் எதிர்பார்த்திருந்தான். ஆனாலும் ஒரே கல்மனதுடன் முடியாது என்று கூறியது அவனுக்கு வெறுப்பைக் கொடுத்தது. தைரியத்துடன் அங்கு நின்றும் போய்விடலாம் எனும் எண்ணத்தோடு எழில் சொரியும் கட்டழகியான திருக்கணவேலியிடம் போய்வருவதாகக்கூறி, அச்சோபாவைவிட்டு எழுந்திருந்ததும், இரத்தினவேணி அவன் வரக்கண்டதும் மரியாதையாக வந்தனம் கொடுக்க, பதில் வந்தனம் அளித்த இரத்தினவேணியும், அவர்கள் இருவருடைய வதனங்களால் நடந்த வகை சுந்தராங்கனை மறந்துவிட்டதாகச் சந்தேகித்து, "சுந்தராங்கரே! தாம் ஏது அதற்குள் போக எண்ணுகிறீர்?—தாம் மறுபடியும் உட்கார்ந்து கொள்ளும். ஜெமீன்தாரும் வருவார்," என்ன, சுமுக வழக்கப்படியே சுந்தராங்கன் ஓர் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டான்.

ஜெமீன்தாரிணி இரத்தினவேணி சுந்தராங்கன் கிராமத்தின் வளப்பங்களைக் கேட்க, குழப்பங்களைக் கொண்டு குழ கலக்கத்தை யடைந்திருந்த உள்ளத்தை அப்பொழுது கொண்டிருந்த சுந்தராங்கன் தப்பிப்போனால் போதுமென்ற கருத்தைக் கொண்டு ஒரு யந்திரம் வேலையை எப்படிச் செய்கிறதோ அப்படி ஜெமீன்தாரிணியின் கேள்விகளுக்கு விடைகொடுத்து, சித்திரப்பதுமை போல உட்கார்ந்திருந்தான்.

அப்பொழுது, கமலசேகரன் வருவதையும் தனக்கும் ஏனையோர்க்கும் காலை வந்தனம் அவன் கொடுப்பதையும் கண்ட சுந்தராங்கன் பதில் வந்தனம் அளித்துவிட்டு, எதிரே உட்கார்ந்திருந்த கிருஷ்ணவேணியின் முகத்தை நோக்கினன் அவளுடைய முகம் தனது காதலன் வருகையினால் களை பெற்று, கண் பிரகாசம் உற்று அவனைப் பார்ப்பதைக் கண்ட சுந்தராங்கன், "ஐயோ! உன்னையும் என்னையும் நான் மனதார வெறுக்கிறேன். எனக்கு இனிமேல் பூலோகத்தில் இருக்கப் பிரியமே இல்லை," என்று எண்ணினன். அக்காதலர் மீது அழுக்காறு கொண்டான்.

எனினும் கமலசேகரனோடு சில வார்த்தைகள் மரியாதையாகப் பேசினன்.

அவ்வமயம் ஜெமீன்தார் அழகேசர் அங்கே வருவதைக் கண்டு கமலசேகரனும் சுந்தராங்கனும் வந்தனம் செய்தார்கள். சிறிது நேரம் ஜெமீன்தார் அன்போடு சுந்தராங்கனிடம் அவனது விவசாய விஷயங்களைப்பற்றிப் பேசியிருந்து விட்டு அங்கு நின்றும் அகன்றார்.

சிறிது நேரத்தில் கமலசேகரனும் வேறிடம் செல்ல, கிருஷ்ணவேணிதான் சுந்தராங்கனிடம் கூறிய விஷயங்களைக் கூற, இரத்தினவளி மிகவும் அகமகிழ்வோடு "கடவுளை நான் வாழ்த்துகிறேன், எனது மகள் கூறிய தக்க பதிலுக்காக," என்று தன்னுள் சொல்லிக் கொண்டு, தனதருஞ்சுதை கூறியது மெச்சத்தக்கது என்று வெளியில் வாய்விட்டுக் கூறினாள்.

அன்றிரவு கிருஷ்ணவேணி சயனவறைக்குச் சென்றுழி தான் அன்று காலையில் கூறிய வார்த்தையை மறுபடியும் சிந்தித்து, தான் ஏதோ பெரிய குற்றம் செய்து விட்டதாக எண்ணி, மனம் நொந்து, நித்திரை வராமல் துடித்தாள். துடித்தென்ன செய்வது? "ஐயோ! தெய்வமே! என்னை ஏனோ இவ்வவனியில் வனிதையாகப் படைத்தாய்! பழிக்கு

ஆளாகும்படி செய்து விட்டாயே! அம்மணிதனுடைய இனிய வாழ்க்கைக்கு இடையூருக நின்று பரிபவம் இழைத்தேனே! ஐயோ! நான் என்ன செய்வேன்? எனக்கு ஏன் இத்தகைய ஜன்மத்தை யளித்தாய்?—கமலசேகரர் அவரைவிட எப்படி மேம்பட்டவர்? ஐயோ? தெரியாத்தனத்தால் அபராதமிழைத்து விட்டேனே! கடவுளே! நான் செய்த குற்றத்திற்கு மனமிரங்குவாய்! மனமிரங்குவாய்! மனமிரங்குவாய்" என்று பரிதாபப்பட்டுக் கொண்டே துயிலுவதில் தன்னை மறந்தாள்.

கிருஷ்ணவேணி அங்கு அத்தகைய நிலையிலிருக்க, கணவனிடம் இராத்திரி வந்தனம் செய்துவிட்டுத் தன் அறைக்குச் செல்லும் வழக்கத்தைக் கொண்ட இரத்தினவளி மிகுந்த சந்தோஷத்தோடு ஜெமீன்தார் வாசகசாலையில் உட்கார்ந்திருப்பதைக்கண்டு, அங்கே சென்று, "போய் வருகிறேன், பிராணநாதரே!" என்ருள்.

எனவும் ஜெமீன்தார் அழகேசர் மிகுந்த அதிகாரத்தோடு, "அன்பே! நீ நமது புதல்வியின் காதல் விஷயத்தில் பாரபட்சமாக நடந்து வருவதைக்காண எனக்கு வருத்தம் உண்டாகிறது," என்ருர்.

"எனக்குத் தாம் கூறுவது விளங்கவில்லையே?" எனக் கேட்டாள் இரத்தினவளி.

"விளங்கவில்லையா?"

"இல்லை!"

"நீ ஏன் நமது சுதை கமலசேகரனைக் காதலிக்குமாறு செய்கிருய்?—நாம் வாளா இருக்கவேண்டும் இவ்விஷயத்தில்."

"கிட்டி சுந்தராங்கனைக் காதலிக்கவில்லை என்பதைத் தெரிந்து கொண்டுதான், கமலசேகரனைக் காதலிக்குமாறு செய்தேன். இதில் தவறு என்ன இருக்கிறது?"

"கமலசேகரனைத் தான் காதலிக்கிறேன் என்று நாம் உறுதியாகக் கூற வொண்ணாது. ஆதலின் நாம் சும்மா இருக்கவேண்டும்.—சுந்தராங்கனையே கிட்டி எப்படியும் கலியாணம் செய்து கொள்ளுவாள் என்றெண்ணுகிறேன். ஆதலின் நாம் ஒன்றையும் கிட்டியிடம் கூறாமல் அவளிஷ்டப்படி நாம் நடக்கவேண்டும். தெரிந்ததா? நீ போய் நன்றாகத் தூங்கு!"

இரத்தினவளியும் தன்னறைக்குச் சென்று, நித்திரை வராமல், தான் செய்தது பிழையோ வென்றய்யுற்று, "கடவுளே! நான் செய்த குற்றத்திற்கு மனமிரங்குவாய்; மனமிரங்குவாய்! மனமிரங்குவாய்," என்று சொல்லிக் கொண்டே கண் வளர்ந்தாள்.

அதிகாரம் 3.

மண்மாதோ விண்மாதோ ?

சுந்தராங்கனை மணாளனைத் தேர்ந்தடுக்கப் பிரியப்படாது, முடியாது என்ற வார்த்தையைக் கூறிய ஏந்தெழிலாள் கிருஷ்ணவேணியின் காதலன் கமலசேகரப் பிரபு தனது மாளிகையை யடைந்தபோது, சேவகன் ஒருவன் உள்ளே வந்து மிகுந்த அடக்கத்தோடும் ஒடுக்கத்தோடும் அன்றையதினம் தபாலில் வந்த உறைக் கடிதமொன்றை மிகப்பணிவாகக் கொடுக்க, கமலசேகரன் அதை வாங்கி உடைத்துப் பிரித்துப்படித்தான். அதில் தன் தாயார் உதகமண்டலத்திலிருந்து அன்றிரவு நீலகிரி எக்ஸ்பிரஸில் புறப்பட்டு, மறுநாள் காலை சென்னைக்கு வருவதாக எழுதியிருந்தது. ஆதலின் அவன் அவளை மறுநாட் காலையில் ஸென்ட்ரல் ஸ்டேஷனில் வரவேற்க வேண்டும் என்று முடிவு

செய்து, தனது ஆகாரத்தை உட்கொண்டு, இரவு பத்து மணிக்கு உறங்குவதன் பொருட்டுத் தனது அழகிய சயன வறைக்குச் சென்று, கண்களை மூடினான். மூடினால் மனது மூட மறுத்தது.

அவனுடைய அஞ்சாநெஞ்சு துயில் வராமையினால் பட்பட் என்று அடித்துக்கொண்டிருந்தது. மனது பலவாறு எண்ணமிடத்தொடங்கியது.

கமலசேகரன் உண்மையில் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்றிருந்த கிருஷ்ணவேணியை நினைத்துக்கொண்டானதலால், அவனுடைய மனதானது நித்திரை எனும் விரோதி அந்த யௌவனப் புருஷனான கமலசேகரனை நெருங்கி அண்டாத வண்ணம், அவ்விரோதியை வெருட்டி, மிரட்டி ஒட்டியதல்லாமல் தனது மனக்கோட்டை எனும் இராஜ்ஜியத்தில் அழகு மிக்க கிருஷணவேணியைச் சிறைப் பிடித்து வைத்து, அம்மடமகளின் எழில் வழியும் திருமேனியைப்பார்த்து ஆனந்தித்து, கமலசேகரனுடைய உடலுக்கு புளகாங்கிதம் உண்டாகுமாறு செய்து, மறுமுறையும் அப் பெண்மணியை நாடிச் சென்றது. கிருஷ்ணவேணியின் வடிவம் கமலசேகரனது அகக்கண்ணில் சந்திர பிம்பம் போல் விளங்கி நின்றது, கமலசேகரனுக்கு வரைய ஒண்ணாத ஆனந்தத்தையும் குதூகலத்தையும் வாரி வாரிக் கொடுப்பது போல் இருந்தது. தான் அவளைச் சடுதியில் மனைவியாகப் பெறுதற்கரிய பேரின்ப சுகத்தைப் பெறப் போவதால் அதிக உல்லாஸமான தன்மையைக் கொண்ட மாரவேளைப் பழித்த அழகினைத் தன்னிடத்தே கொண்ட கமலசேகரன் அவள் மிகவும் சிலாக்கியமான புனிதவதி என எண்ணினான்.

அவளை மணந்து இல்வாழ்க்கைச் சுகத்தை அநுபவிக்க ஆரம்பிக்கும் பொழுது அதைப் பார்ப்போர் ஆச்சரியமும் மாச்சரியமும் கொள்ளலாகும் என்பதைச் சிந்தித்தவுடனே

அவனுக்கே ஒரு வகையான விறைப்பும் இறுமாப்பும் அப்பொழுதே தோன்றி கார் முகில் நடுவில் தோன்றி மறையும் மின்னலே போல் மறைந்தன. தனது தாயார் தான் காதலிக்க ஆரம்பித்த காதலித்தோகையை அன்போடு ஏற்றுக்கொள்வார்கள் என்று உறுதியாக நினைத்தான்.

இங்ஙனம் நினைத்து நினைத்து சந்தோஷ பரவசமெய்திய கமலசேகரன் சித்திராதேவியினது பாதார விந்தங்களைப் பணிவோடு வருடுவதாயினன்.

மறுநாட் காலை அங்கிலேயர் போல் உடை தரித்துக் கொண்டு, முகத்தில் ஜ்வலிப்பும் தீட்சண்ய புத்தியும் ஒலிக்க ஸெண்ட்ரல் ஸ்டேஷனை யடைந்து, தனது மோட்டாரை ஒரு புறம் நிறுத்தும்படி டிரைவருக்கு உத்திரவு கொடுத்துவிட்டு நேராக ஸ்டேஷனுள் சென்றான். அங்கே பல கனவான்களும் ஸ்திரீகளும் காலை வந்தனம் கமலசேகரனுக் களித்து, அவனது சித்திராலங்கார தோற்றத்தைச் சிறிது நேரம் நோக்கி வியந்தனர்.

கமலசேகரனும் ஒவ்வொருவருக்கும் பதில் வந்தனம் கொடுத்து விட்டு, நீலகிரி எக்ஸ்பிரஸ் வந்து நிற்கும் பிளாட்பாரத்திற்குச் சென்று ரயில் வருவதை எதிர்பார்த்துக் கொண்டு அங்கும் இங்கும் உலாவிக்கொண்டிருக்க, அங்கே ஒரு புறத்தில் திவான் பகதூர் துரைசிங்கம் பிரபு உட்கார்ந்திருப்பதைக்கண்டு சந்தோஷமடைந்து, வந்தனம் கொடுத்து, அவரையடைந்து "பிரபுவே! தாம் இங்கு யாரை வரவேற்கப் போகிறீர்கள்?" என்று அன்போடும் ஆசையோடும் கேட்டான்.

திவான் பகதூர் துரைசிங்கம் மிக்க உவகையோடு அந்த யௌவன சுந்தராங்க மன்மதனைப் பார்த்து, "கமலசேகரரே! தாம் யாரை நாடி வந்தீர் என்பதைக்கேட்க விரும்புகிறேன்,?" என்றார்.

"எனதன்னை உதகமண்டலத்திலிருந்து வருகிறார்கள். அவரை அழைத்துப்போகும் பொருட்டே வந்திருக்கிறேன்," என்றான் கமலசேகரன்.

"தமது விஷயத்தைப் போலவே எனது விஷயமும். என் தங்கை இராஜம் இன்று உதகமண்டலத்திலிருந்து வருகிறாள்," என்றார் துரைசிங்கம்.

"இராஜமா?" என்றதிசயித்தான் கமலசேகரன்.

"உமக்குத் தெரிந்திருக்க வேண்டுமே!—இராஜம் மிக்க அழகுடையவள். அவளுடைய புருஷர் இராஜா ஸிம்ஹள நாதர் துரைத்தனத்தில் மிகவும் கீர்த்தி பெற்றவர். அவர் இப்போது உதகமண்டலத்தில் கவர்னர் சபையில் ஒரு நிர்வாக மெம்பராக இருக்கிறார்," என்று திவான் பகதூர் துரைசிங்கம் கூறும்பொழுது, அவர் பேசுவதைத் தடுத்து, "நான் அவரைப் பார்த்திருக்கிறேன். பேசினதில்லை. நீர் கூறும் இராஜம்மாளையும் பார்த்திருந்தாலும், பேசினதாக ஞாபகமில்லை. ஸிம்ஹளநாதர் நான்கு தினங்களுக்கு முன்புதான் சட்ட மெம்பராக நியமிக்கப்பட்டார், அல்லவா? என்றான் கமலசேகரன்.

"ஆம்—ஆனால் முன்பு இருந்த லா மெம்பர் ஐரோப்பா அமெரிக்கா முதலிய கண்டங்களுக்குச் சென்றிருந்தபொழுது இராஜா ஸிம்ஹள நாதர் தான் அவருக்கு பதில் வேலை செய்து வந்தார். அதைக்கொண்டுதான் அரசாங்கத்தார் ஸிம்ஹள நாதருக்கு இத்தகைய மேம்பட்ட சட்ட மந்திரி வேலையை கொடுத்தார்கள். மேலும் இராஜவிஸ்வாஸம் அவரிடம் அதிகமாக காணப்படுகிறது," என்று எல்லோரும் கூறுவதை திவான் பகதூர் துரைசிங்கமும் கூறினார்.

"ஆமாம் சாமர்த்தியம் இல்லாவிட்டால் கொடுப்பார்களா? அதிலும் இராஜ விஸ்வாஸமும் மிகுதியாக உடையவர்," என்று கமலசேகரன் கூறினான்.

"கமலசேகரரே! நான் தம்மை ஒரு கேள்விகேட்க விரும்புகிறேன்.—தாம் கிருஷ்ணவேணியைக் காதலிப்பதாக அறிந்தேன்."

"யார் தமக்குச் சொன்னார்கள்.?"

"என் மனைவியும் சுந்தராங்கனும் கூறினர்.?"

"ஓ"

"சுந்தராங்கன் கிட்டியை முதலில் காதலித்துக்கொண்டிருந்தான். ஆனால் கிட்டி அவனது காதலை ஏற்றுக்கொள்ளவில்லை. தம்மை மணம் புரிவாள் என்றே நினைக்கிறேன்."

"கிட்டி அவருடைய காதலை மறுத்து விட்டாளா?" என்று ஜ்வலிப்பும் சந்தோஷமும் கொண்ட முகத்தினனாக கமலசேகரன் கிருஷ்ணவேணி தன்னை மணாளனாகத் தேர்ந்தெடுக்க விரும்பியதை எண்ணி எண்ணி அதனால் கொண்ட இன்பவெள்ளத்தைச் சிரிப்பு மூலமாக ஓட விடுவதாயினன்.

அப்பொழுது கமலசேகரனுடைய கை கெடிகாரம் எட்டே கால் மணியைக் காட்டியதை யறிந்த திவான் பகதூர் துரைசிங்கம் எனும் போலீஸ் கமிஷனர் சிறிது தூரத்தில் மிகுந்த விசையோடும் ஆர்ப்பாட்டத்தோடும் அப்பொழுது தான் ஊதும் சப்தத்துடனும் வந்து கொண்டிருந்த நீலகிரி எக்ஸ்பிரஸைப் பார்த்து, கமலசேகரனிடம் சொல்ல, இருவரும் முதல் வகுப்பு வண்டிகள் நிற்கும் இடத்தில் போய் நின்று கொண்டவர்களாய் தத்தம் மனிதர்கள் வருகையை ஆவலோடு நோக்கியவர்களாய் புது மாதிரியான எஸ். பி. இன்ஜினோடு வந்து கொண்டிருந்த நீலகிரி இருப்பு வண்டியை மறுபடியும் பார்த்தனர்.

புகைப் போக்கியின் வழியாக குப்குப் எனும் சப்தத்தோடு புகையை வாரி இறைத்துக்கொண்டு அப்பொழுது தான் ஸ்டேஷனை நோக்கி வந்துகொண்டிருந்த நீலகிரி எக்ஸ்

பிரஸுும் வந்து சேர்ந்தது. பிரயாணிகள் எல்லோரும் வந்த அலுப்பில் சென்னை வந்து சேர்ந்தால் போதும் என்றெண் ணியிருந்தார்களாதலின், ஊர் வந்தது கண்டு மிக்க சந்தோ ஷத்தோடு போர்டர்களுடைய உதவியினாலும் உதவி இல்லா மலும் வண்டிகளை விட்டு இறங்கிக்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் அவ்வண்ணம் இறங்கிக் கொண்டிருக்க, திவான் பகதூர் துரை சிங்கமும் கமலசேகரனும் முதல் வகுப்பு வண்டியிலிருந்து தமக்கு முன் இறங்கிய இராஜீவி யையும் வயது முதிராத சீமாட்டியையும் கண்டு சந்தோஷ மெய்திவர்களாய் வருகவென்று கூறினர். கமலசேகரன் தனது தாயார் ஷண்பகவல்லிச் சீமாட்டியை அன்போடு நோக்கினான். அச்சீமாட்டியும் ஆருயிர் போன்ற தனது புதல்வனைக் கண்டு சந்தோஷமடைந்து, கீழே துரை சிங்கத் திற்கு அருகில் நின்று கொண்டிருந்த இராஜீவிக்கு அவனை அறிமுகம் செய்வித்தாள். கமலசேகரனும் இராஜீவியுடன் அன்புடனும் ஆர்வத்துடனும் பிரயாணத்தைப் பற்றி பேசிக், கொண்டிருக்க, இராஜீவியின் வேலைக்காரன் அவளுடைய சாமான்களை எல்லாம் கீழே இறக்கி, ஷண்பகவல்லிச் சீமாட் டியின் சமான்களையும் இறக்கினான். இதற்கிடையில் அந் நால்வரும் பேசுவதாயினர். அவர்கள் பேசிக்கொண்டிருக் கட்டும், நாம் இராணி இராஜீவி அல்லது இராஜம் எனும் இராஜா ஸிம்ஹள நாதருடைய அழகிய மோகனாங்கியின் திரு உருவத்தையும் ஏனைய விஷயங்களையும் சற்றுச் சொல் லுவோம்.

மெயிலிலிருந்து அப்பொழுதுதான் இறங்கிய இராஜீவி எனும் விநோதப் பெயரைக்கொண்டவளும் மெலிந்த தே கத்தை உடையவளும் ஆன அம்மின்னாள் கலையோ பிணையோ கவினார்மட மயிலோ என்று சந்தேகிக்கத் தக்கபடியாய் அந்த முதல் வகுப்பு வண்டிக் கெதிரில் கெம்பீரமாக நின்றி ருந்த காட்சியானது பார்ப்போர் மனதைக்கவர்ந்து, அவர்கள்

உள்ளத்தில் மட்டுக்கடங்காத அன்பையும் ஆசையையும் அதி கரிக்கச் செய்தது; பத்தரைமாற்றுப் பொன்னை உருக்கி விட்டால் எவ்வளவு பிரகாசம் உண்டாகுமோ அவ்வளவு அழகிய தேக காந்தியைப் பெற்றிருந்த அம்மின்னர்க் கொடியாளின் சிரத்திலுள்ள கேசம் மிகுந்தகருப்பாகத் தோன்றியது. அதை அம்மடமங்கை வாசனைத்தைலத்தால் சொகுஸாகவும் ஈாஜோகாவும் வாரிப் பின்னலிட்டுக் கொண்டிருந்தது சிறந்திருந்தது. கார்மேகத்தை மானும் அப்பைங் தொடியாளின் அளகபாரத்தின் பின்பக்கம் சில நறுமணங்கமழும் ரோஜபுஷ்பங்கள் அவளது கரிய கூந்தலுககு அழகு செய்தன. அம்மடமங்கை தாமரையில்வஸிக்கும் இலக்ஷ்மி என்று சொல்லத்தக்க படியாக தனதுஎழில் வழியும் பரந்த நெற்றிக்குமேல் இருந்ததும் இரண்டு கமான்களைப் போல் நடுவில் வகிரோடு விளங்கியதும் ஆன தலைமயிரை அப்போது காற்றடித்ததால் கலைந்து விலகிப்போகா காதவாறு தனது எழிற்கரத்தால் தனது கேசத்தை தொட்டது மிகுந்த ரமணீகரத்தைக் கொடுத்தது. தந்தத்தை நிகர்த்த அவளது பரந்தகவின் கசிந்த நெற்றி சாமுத்திரிகா லட்சணப்படி இருந்தது. அவள் அங்கிலேய ஸ்திரீகளைப் போல் நடக்க விழைந்து அன்னோருடைய பழக்க வழக்கங்களைச் சிலவற்றில் மாத்திரம் கையாடி வந்தமையினுல் நெற்றியில் குங்குமப் பொட்டு இட்டுக்கொள்ள வில்லை. அவள் குங்குமப் பொட்டு இந்திய சம்பிரதாயப்படி இட்டுக்கொள்ளாதிருந்தாலும் அது அவளது அழகுக்கு குறை செய்யவில்லை. வில்லைப்போன்ற புருவங்களையும் (கயல்) மீன்போன்ற கண்களையும் கொண்டிருந்த அம்மனே ரஞ்சனியின் மாட்சிமை மிகுந்த காட்சி பூலோக மனிதர்களுடைய கண்களைக் கவர்ந்து, கந்தருவமாதோ அற்புத சிருஷ்டியோ என்று ஐயுறும்வண்ணம் சந்தோஷத்தையும் இன்பப் பெருக்கையும் கொடுத்தது. தற்காலத்தில் மை தீட்டிக்கொள்ளும் வழக்கம் அவளிடம் காணப்படாதொழிந்தது. அவளுடைய திரண்டுருண்ட கன்னங்களுக்கும் பவளம்

போன்ற அதரங்களுக்கும் நடுவில் உள்ள வாய்க்கும் மேற் காணப்பட்ட நாசியானது தக்கபடி யமைந்து, மெல்லிய சுவாஸத்தை உள்ளும் வெளியும் போய் வந்து கொண்டிருக்கும் படி தனக்கிட்ட தொழிலை ஒரு இயந்திரம் போல் யாருமறியாத வண்ணம் நடத்திக்கொண்டிருந்தது. அவளது சிவந்த வாய்க்கு மேலும் கீழும் இருந்த அதரங்கள் கொவ்வைக்கனி அன்ன சிறந்து விளங்கின. அவளது அதரக்கோட்டைகளுக்கு மையத்தில் மாதுளங்கனி பிளவுபட்டதுபோல் வாய் சிவந்திருந்தது. அவள் இன்னிசையோடு பேசியபொழுதெல்லாம் அவளுடைய தந்த வரிசைகள் முத்துக்கள் போல மிக்வும் வெண்ணிறத்துடன் விளங்கின அல்லாமல் அவைகளைப் பார்த்தோர் தாமும் அத்தகைய துல்லியமான வெண்மைப் பற்களைப் பெறவேண்டும் எனும் எண்ணத்தால் தூண்டப்பட்டனர். அதில் சிலர் பல்டாக்டர்களிடம் சென்று தமது பற்களை முத்தே போல் செய்யுமாறு பணத்தை வாரி இறைக்க, அந்தப்பல் உத்தியோகஸ்தர்களும் அவர்களுடைய பற்களுக்கு வெண்ணிறம் வரும்படியாகச் செய்தனர். பற்களின் அழகு ஒருபுறமிருக்க, அவளுடைய எழில் வழிந்த வதனம் பொதுவாகச் சொல்லுமிடத்து புத்தி கூர்மையையும் வசிகரத்தையும் மிருதுத்தன்மையையும் அன்பையும் கொடுத்து கவரத்தக்க பொலிவோடு துலங்கியது. அவ்வணங்கின் கழுத்து மணிப்புறாவின் வருணத்தைப் பெற்றிருந்தது. அக்கழுத்தின் மீது ஆயிரக்கணக்கில் ரூபாய் மதிப்பிடத்தக் வைர அட்டிகை யொன்று இரவிலும் பகலிலும் வெளிச்சத்திலும் டால்வீசிப் பலவகையான வருணங்களைக் காட்டிக்கொண்டிருந்தது.

அவள் கழுத்தில் வேறு எத்தகைய கர்நாடகமான நகைகள் காணப்படவில்லை. மண்மகளோ விண்மகளோ அணங்கோ ஆய்மயிலோ எல்றெண்ணத் தக்க அந்த சிருங்கார மங்களகரான அழகுத் தெய்வம் போல் இருந்த அவ்வூர்

வசி தெய்வலோகத்து ரம்பையர் போல் மின்னலைப் போன்ற இடையைக் கொண்டிருந்தாள். அவளது கைகால்களும் சாமுத்திரிகா லக்ஷணப்பிரகாரம் பொலிவுடன் விளங்கின.

அந்த பூலோக ரம்பையின் அழகு மிக்க திரேகம் காராச்சிப் பட்டுச்சேலையால் மறைக்கப்பட்டிருந்தது. அச்சேலையில் பூக்கள் வேலைப்பாடு சிறந்து காணப்பட்டதால் அச்சேலை பார்வைக்கு மிகுந்த சோபையோடு பிரகாசித்தது. இடையில் தங்க ஒட்டியாணம் இருந்தது. பட்டு நூலால் ஆன ஜாகெட்டை அவள் போட்டிருந்தாள். கைகளில் அவள் எஸ்வளையல்களை அணிந்திருந்தாள். அவைகளில் வைரங்கள் காணப்பட்டன. மணி காட்டும் பொன் கடியாரம் ஒன்று அவளுடைய இடது மணிக்கட்டில் இலங்கியது. காலில் வெல்வெட் ஸ்லிப்பர்களை போட்டிருந்தாள்.

அத்தகைய கலியாண வைபவங்களோடு கூடிய அம் மோகனாங்கி பளிச்சென்று பிரகாசிக்கும் நட்சத்திரச் சுடரோ வைரியமோ நாகலோக நங்கையோ பூலோகப் பூங்கொடியோ என்று சந்தேகிக்கும் வண்ணம் சென்னை ஸென்ட்ரல் ஸ்டேஷனில் பேசிக்கொண்டு நின்றிருந்த திருக்கோலம் இலக்ஷ்மியே மோகினி அவதாரம் செய்தது போல் காணப்பட்டது. அத்தகைய தேனினும் இனிய மானினியான அம் மோகனாங்கி சருக்கரைப் பந்தரில் தேன்மாரி பொழிவது போல் இன்னிசைத் தொனியில் பேசிக்கொண்டிருந்ததை இனி கவனிப்போம்.

இராஜீவி தனது சகோதரனை நோக்கி "அண்ணா, தாங்கள் ஏன் உதகமண்டலத்திற்கு வரும்படி வரைந்தும் வரவில்லை?" என்று கேட்க, "இராஜம், உத்தியோக அலுவல் இருந்தபடியால் வர முடியவில்லை," என்றார் துரைசிங்கம்.

"இராணி இராஜம்மாள் என்னோடு பிரயாணம் செய்தது எனக்குப் பெருத்த பேரின்பத்தைக் கொடுத்தது. இவர்களுடைய ஸ்நேகம் பரஸ்பரம் இருக்குமென்று நினைக்கி

றேன்," என்று ஷண்பகவல்லிச் சீமாட்டி கூற, "நானும் உமது நட்பை நெடுநாள் வைத்துக்கொள்ள விரும்புகி றேன்," என்று இராஜீவி பதில் கொடுத்து விட்டு, சுந்தர புருஷனான கமலசேகரனைப் பார்த்து மனம் பூத்தாள்.

கமலசேகரனும் தனது காதற்கினிய கிருஷ்ணவேணி யை அப்பொழுதிலிருந்தே அறவே மறந்து, கலைமகளின் கடாக்ஷத்தைப் பெற்றவளும் திருமகளின் திரிகரண சுத் தியை உற்றவளும் ஆன அம்மோகனாங்கியான இராஜீவியைத் தன் இருதய கமலத்தில் பூசை செய்வதற்குத் தேவதையாக வைத்துக் கொண்டானாதலின், அவனது முகத்திலும் கண் ணிலும் ஜ்வலிப்பும் வசீகரமும் உண்டாகி, கற்கண்டைப் போலிருந்த திவான் பகதூருடைய சகோதரியை மறுமுறை யும் கண்ணால் கண்டான்.

இதற்கிடையில் அவ்விரண்டு சீமாட்டிகளின் சாமான் களும் மோட்டார்களில் வைக்கப்பட்டதால் அவைகளில் சென்று ஏறிக்கொள்ள எண்ணியவர்களாய் அந் நால்வரும் வேலைக்காரரோடு ஸ்டேஷனை விடுத்து வெளியே வருகையில், நீலகிரி எக்பிரஸ் வேறு தனியானவிடத்திற்குப் போக வேண்டி பின்னே செலுத்தப்பட்டது. அப்போது ரயில் வருவதை யறியாத வேலையாள் ஒருவன் வண்டியினால் மோ தப்பட்டு, அத்தருணத்திலே சக்கரங்கள் ஏறி, எமனுலகு சென்றான். அவ்விஷயத்தைக் கேட்ட இராஜீவி பதை பதைத்து, மனம் துடித்து, ஆவிசோர்ந்து, கண்ணீர் விட்டு, "ஐயோ! நான் வந்த ரயில் மோதப்பட்டு அம்மனிதன் இறக்க வேண்டுமா? ஏதோ சகுனத்தடை போல் காண்கி றதே!" என்று வருந்தியவளாய்த் தனது மோட்டாரை யடைந்தாள். அங்கு கமலசேகரனிடமும் ஷண்முகவல்லிச் சீமாட்டியிடமும் விடை பெற்றுக் கொண்டு, இராஜீவி தனது வேலைக்காரனுடனும் சகோதரருடனும் பேசிக்கொண்டே மோட்டாரில் ஏறினாள்.

அதிகாரம் 4.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக !

இராஜா ஸிம்ஹள நாதருடைய அருமை மனைவியாகிய அழகு சுந்தரி இராஜீவி உதகமண்டலத்திலிருந்து தமது குடும்பக்கவலைகளையும் வித்தியாசங்களையும் அகற்றி, முன் போல் மங்களகரம் இல்வாழ்வில் இருக்கும்படி செய்ய வேண்டும் எனும் எண்ணத்துடன், திவான் பகதூர் துரைசிங்கப் பிரபுவினுடைய விருப்பப்படி வருவதை யறிந்த கமலம், இராஜீவியின் வருகையைப் பற்றித் தனக்கு அக்கரை இல்லையென்று கூறினாலும் வாத்ஸல்யமும் மட்டற்ற மகிழ்ச்சியும் அடைந்து, தான் அடைந்த இன்பவெள்ளத்தைப் பெருக்கி, இராஜீவி வந்து தங்கும்படி அலங்கரிக்கப்பட்டிருந்த இரண்டு பெரிய அறைகளைக்கண்டு, மனமுவந்து, அவளது வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கையில், அவளுடைய அகக்கண்ணில் பல எண்ணங்கள் சமுத்திர அலைகளைப்போல் தோன்றின. "இராஜம் வருவது எனக்கு உவகையைத் தான் அளிக்கிறது.

"ஆனால் அவள் நமது குடும்ப விஷயங்களில் ஏன் தலையிடவேண்டும்? அவள் எப்படியும் தனது சகோதரன் பக்கமாக நின்று பேசுவாள்!—மேலும் நான் என் கணவனுடைய குற்றத்தை மன்னித்து விட்டாலும், அவரைப்பார்க்கும் பொழுதெல்லாம் ஓர் வகையான அருவருப்பு தோன்றுவதால், அவரை வெறுக்கும்படியான எண்ணம் உதிக்கிறது.—மேலும் ஸ்திரீபுருஷர்கள் வித்தியாஸம் இன்றி சமத்துவமாக இருக்கவேண்டும் எனும் இக்காலத்தில் எனக்கும் எத்தனையோ வழிகள் இருக்க, நான் ஏன் அவைகளில் ஒன்றை அநுஷ்டிக்கலாகாது? கலியாண விடுதலை, தூரவிருத்தல், புறக்கணித்தல் முதலியன இருக்கும் பொழுது நான் ஏன்

கோபம் கொள்ளவேண்டும்!—மேனாட்டார் ஆசாரங்களுள் சிறந்தவற்றை எல்லாம் நாம் அநுஷ்டித்து வந்தாலும் பிரயோஜனம் என்ன? டைவோர்ஸ் (Divorce) அல்லது கலியாண விடுதலை எனும் சம்பிரதாயம் நமது இந்திய ஸ்திரீகளுக்குத் தகாதது. இதர தேயங்களில் இத்தகைய கொடிய சம்பிரதாயம் இல்லறம் எனும் வாழ்வையே கெடுத்துவிட்டது. புருஷனை நாம் என்று வரித்துக்கொள்ளுகிறோமோ அன்று முதல் அவனை நாம் தெய்வம் எனக்கருதாவிட்டாலும் அவனை நமக்குச் சமானமான இல்லறத்துணைவன் என்பதாகக் கொண்டு, அன்போடு ஏகோபித்து நடக்கவேண்டும். இல்லாவிடின் நமது இந்திய சமூகவாழ்வே பாழடைந்து போகும். அன்றையதினம் அகில இந்திய ஸ்திரீ சங்கத்தார் கலியாண விடுதலை வேண்டும் என்று கொண்டுவந்த தீர்மானத்தை இராஜம் வேண்டாம் என்று கூறி அந்த தீர்மானத்திற்குத்தனது வோட்டைக்கொடுக்கவில்லை. ஆனால் சிலர் அவளுடைய வார்த்தையைக் கேட்கவில்லை. நானும் முதலில் இராஜம் செய்தது தவறென்று நினைத்தேன். உண்மையில் யோசிக்குமிடத்து நமக்கு கலியாண விடுதலை எனும் மேனாட்டார் சம்பிரதாயம் கூடாது என்றே கொண்டேன்.—இராஜம் இப்பொழுது வரும் சமயமாயிற்று. நான் அவளுடைய வார்த்தையைக் கேட்க வேண்டும். மேலும் அவளுடைய புருஷருக்கு இராஜா எனும் பட்டமும் சில வருஷங்களுக்குமுன் கிடைத்ததால், இராஜீவிக்கும் இராணி எனும் கௌரவப் பெயர் உண்டு," என்று பலவகையாக எண்ணினாள்.

அப்பொழுது கமலத்தின் வேலைக்காரியருள் ஒருவள் துளஸியையும் கோபாலனையும் அவ்விடம் அழைத்துக்கொண்டு வந்து விடுத்து "குழந்தைகள் தம்மிடம் வரவேண்டும் என்று ரகளை செய்தன. ஆதலால் இவர்களை இங்கே அழைத்து வந்தேன்," என்று கூற, கமலம் அவர்களை அன்

போடு தன்னருகில் இருத்திக்கொண்டு, துளஸி எனும் பெண்ணின் தலைமயிரை முகத்திலே விழாதபடி ஒருபுறம் ஒதுக்கினவளாய், "எண்டி சாரங்கனும் நவனீதனும் எங்கே?" என்று கேட்டாள்.

"அவர்களுடைய அத்தை இராணி இராஜம்மாள் அவர்கள் வருவதையறிந்து, வாசலில் எதிர்பார்த்து நின்றுகொண்டிருக்கிறார்கள். புதிதாக அவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் உபாத்தியாயரை இன்று காலையில் வரவேண்டாமென்று நேற்றுக்கேட்டார்கள். வாத்தியாரும் சரியெனச் சொல்லி வரவில்லை," என்று அந்த வேலைக்காரி சொல்ல, கமலமும் சரி என்றாள்.

அப்பொழுது வீதியில் மோட்டார் வண்டி வந்து நின்றதையறிந்த கமலம் இராஜீவியை எதிர் பார்ப்பதாயினாள். இராஜீவி சகோதரர் முன்வர நவனீதன் சாரங்கன் எனும் சிறு பையன்கள் இராஜீவி கொடுத்த பொம்மைகளையும் பிஸ்கோத்துகளையும் எடுத்துக்கொண்டு அவளருகே வர, உள்ளே பிரவேசித்தாள். துளஸி, கோபாலன் எனும் குழந்தைகள் தமது அத்தையிடம் ஓடிச்சென்று, அவளிடமிருந்து தாமும் பொம்மைகளையும் பிஸ்கோத்துகளையும் பெற்றுக்கொண்டு, அவளைக்கவனிக்கலாயினர்.

"கமலம் நீ சௌக்கியமா? உன்னைக்கண்டு நான் சந்தோஷம் அடைகிறேன்," என்றாள் இராஜீவி.

"இராஜம்! உன்னைக்காண எனக்கு மிகுந்த சந்தோஷமுண்டாகிறது. உன் புருஷருக்குப் பெருத்த உத்தியோகம் ஆயிற்று. அதைப்பற்றி நான் முன்பே கடிதம் எழுதிவிட்டேன் அல்லவா?" என்று கமலம் நின்றுகொண்டே கூறினாள். பிறகு திவான் பகதூர் துரைசிங்கம் தமக்கு அலுவல் இருப்பதாகக் கூறிப் போனதால், ஏனையோர் ஆசனங்களில் உட்கார்ந்துகொண்டார்கள்.

"துளஸிக்கு நான்காவது வயதா நடக்கிறது?" என்று இராஜீவி கேட்டுக்கொண்டே துளஸி எனும் அப்பெண் குழந்தைக்கு அன்போடு கன்னங்களில் முத்தம் கொடுத்தாள். பிறகு மற்ற குழந்தைகளுக்கும் அதே மாதிரி முத்தங்கள் அளிக்க, அவைகள் சந்தோஷமாகச் சிறிது நேரம் அங்கே இருந்து விட்டு வெளியே துளஸியையும் கோபாலனையும் அழைத்துக் கொண்டு விளையாடச்சென்றன.

குழந்தைகள் சென்றதும் இராஜீவியும் கமலமும் சிற்றுண்டியும் காப்பியும் மேஜைமீது சூடாக வைக்கப்பட்டிருந்த வேறு ஒரு அறைக்குட்சென்று, அவைகளை உட்கொண்டனர். உண்ட இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம், கமலம் அவளை அழைத்துக்கொண்டு அலங்கரிக்கப்பட்டிருந்த அறைகளுக்குச் சென்று, சோபா ஒன்றின் மீது உட்கார்ந்து கொண்டாள். இராஜீவியும் நாற்காலி ஒன்றின்மீது அமர்ந்து, "கமலம் நான் வந்த காரியம் மிகவும் கடினமானது. அண்ணா எல்லா விஷயங்களையும் சொன்னார். நான் அவருக்குப் பரிந்து பேச முன்வரவில்லை. அவர் தெரியாத்தனத்தினால் குற்றம் செய்து விட்டார். காரில் வந்துகொண்டிருந்தபோது தான் செய்த காரியத்திற்கு வருத்தப்படுவதாகக் கூறினார். கமலா! மனித சுபாவமே நிலையற்றது. அழகிய வஸ்துவைக்கண்டால் காதல் கொள்ளுவது இயல்பு. குடும்ப வாழ்க்கை இனிது பெற நடக்க விரும்பினால் கணவனும் மனைவியும் தீயவழிகளில் யாராவதொருவர் நடந்து போயினும் இல்லறத்தை விட்டுவிடலாகாது. ஆதலால், அவருடைய குற்றத்தை மறந்துவிடு," என்று இன்னிசைக் குரலில் குயில்போல் இனிமையாகவும் மதுவைப் போலும் மெல்லிய வார்த்தைகளைக் கழன்றாள். அவைகளின் குணம் உடனே வசிய மருந்துபோல் இருந்தது.

கமலம் தனது கணவரை மன்னித்து விட்டதாகவும் அதற்குக்காரணம் இராஜீவியின் அமுதம் போன்ற வசனமே

என்றும் திவான்பகதூர் துரைசிங்கத்திடம் அன்று சாயுங் காலம் கூறியபொழுது, இராஜீவியும், துரைசிங்கமும் அடைந்த சந்தோஷத்தை யாரே அளவிடவல்லார்!

அன்றிரவு ஏழுமணிக்கு இராஜீவியின் வருகையை எவ்வாறோ உணர்ந்து, அவளைக் காணும் நிமித்தம் கிருஷ்ண வேணி அங்கே வந்தாள். இராஜீவியும் ஏனையோரும் அவளுடன் அன்போடு பேசிக்கொண்டே பொழுதைப் போக்கிவிட்டு, ஒன்பது மணி சமயத்தில் ஆகாரத்தை உட்கொண்டார்கள்.

அப்பொழுது இராஜீவி, "எனக்கு சிறு மைந்தன் சித்திராங்கனைப் பிரிந்து வந்ததைப்பற்றி மிகவும் வருத்த முண்டாயிற்று. என்ன செய்கிறது?" என்றாள்.

"செல்வக் குழந்தை!" என்று கமலம் கூறினாள்.

"பெற்றவர்களுக்கு அன்றோ தெரியும் அதன் அருமை!" என்றார் திவான்பகதூர் துரைசிங்கம்.

"பிராணநாதர் கூறுவதே சரி," என்றாள் கமலம்.

"இன்றிரவு பத்தரை மணிக்கு விக்டோரியா பப்ளிக் ஹாலில் சிறந்த நாடகம் ஒன்று நடக்கிறது. முதல் வகுப்பு சீட்டுகள் நான்கைந்திற்கு மேல் வந்துள" என்றார் துரை சிங்கம்.

"எனக்குச்சதா நாடகப் பைத்தியம் உண்டு. நாம் ஏன் போகக்கூடாது?" என்று கமலம் கேட்க, இராஜீவியும் போகலாமென்றாள்.

"கிட்டி! நீ ஏன் நம்முடன் வரக்கூடாது?" என்று திவான்பகதூர் துரைசிங்கம் கேட்க, கிருஷ்ணவேணி முடியாது என்று சொல்லி மறுத்தாள். ஆனால் யாவரும் கடைசியில் போவதற்கு தீர்மானம் செய்தவர்களாய், மோட்டாரை ஆயத்தப்படுத்தும்படி டிரைவரைக்கூப்பிட்டுச் சொல்லினர்.

“என்ன நாடகம்?” என்று கேட்டாள் கிருஷ்ணவேணி.

“இரண்டு காதல்” என்பது நாடகத்தின் பெயர். நாடகம் மிகவும் தத்துவமுள்ளதாக இருக்கிறது. அந்நாடகத் தலைவி ஒரு குழந்தைக்குத் தாயாராக இருந்தும் கணவன் மீது முன்பு கொண்டிருந்த காதற்கடலை அதிசுந்தர மனிதனுக்களித்தால் உண்டான கஷ்டங்களையும், கடைசியில் அந்தப் பெண்ஜாதியை அப்புறப் படுத்தினால் சமூகத்தில் உள்ள மாந்தர் தன்னைக் கேலி செய்வார்களென்று பயந்து மிகவும் உதாரகுணத்தோடு அச்சோர நாயகனையே வைத்துக்கொள்ளலாம் எனக் கூறியவராக இருப்பதும் தத்ரூபமான காட்சியாக இருக்கும்,” என்றார் துரைசிங்கம்.

“ஐயோ! எத்தகைய கொடிய காட்சி!” என்று இராஜீவி எதையோ நினைத்துக்கொண்டு மனம் திடுக்கிட்டுக் கூறினாள்.

“நாம் கதையை மேலாக எண்ணக்கூடாது. அக்கதையில் பெரிய தத்துவம் இருக்கிறது. இவ்வுலகில் மானிடராகப் பிறந்தோர் நல்ல நெறியினின்றும் பிறழ்ந்து தவறு செய்வது இயல்பானது. அதனால் கடவுளின் குழந்தைகளாகிய மாந்தர்களை நாம் அற்பமாக எண்ணலாகாது; எனும் பெரிய அரிய பெருந்தன்மையான குணத்தை மேலாகக் கொண்ட அந்நாடகத்தலைவியின் கணவன் தமது மனைவிக்கு முதலில் குற்றங்களை எடுத்துக்கூறி அதனால் உலகப் பழிப்புக்கிடம் ஆகும் என்று கூறியும் பயன் இல்லாமற் போனதால் மனவருத்தப்பட்டு அவளிஷ்டத்திற்கு விரோதமாக நடக்க இஷ்டப்படாதவராகச் சிறிது காலம் சும்மா இருந்தார். கடைசியில் கடவுளின் குழந்தையான அவர் தமது மனைவி விரும்பிய பிரகாரம் ஒன்றும் செய்வதில்லை. கடைசி

யில் அந்நாடகத்தலைவி அநியாயமாகத் தனது காதலுக்கு நொந்து ரயில் வண்டியின்கீழ் வீழ்ந்து பிராணனை விட்டு விடுகிறாள்," என்று கிருஷ்ணவேணியைப் பார்த்துக்கொண்டே திவான்பகதூர் துரைசிங்கம் சொன்னார்.

"இந்நாடகத்தைப் பார்க்கவேண்டும்," என்று கமலம் உரைத்தாள்.

"நானும் வரவேண்டுமோ?" என்று மறுபடியும் பிடிவாதம் செய்து கூறினாள் கிருஷ்ணவேணி.

"முதலில் வருவதாகக்கூறி இப்போது மாட்டேன் என்று ஏன் கூறுகிறாய்?" என்று கேட்டாள் இராஜீவி.

"கமலசேகரப் பிரபு அங்கு போவதினாலேயோ?" என்று திவான்பகதூர் துரைசிங்கம் கேட்க, அதற்குத் தலையைத் தாழ்த்திக்கொண்டாள் கிருஷ்ணவேணி.

அப்போது பத்தேகால் மணி கெடியாரம் அடித்தது.

"நாம் புறப்படலாம்," என்று துரைசிங்கர் கூற, எல்லோரும் எழுந்தனர்.

துரைசிங்கருடைய மோட்டார் வண்டியில் மூன்று ஸ்திரீகளும் கமிஷனரும் ஏறிக்கொண்டதும், கார் வேகமாகச் செல்வதாயிற்று.

விக்டோரியா பப்ளிக் ஹாலை யடைந்ததும் அவர்கள் மோட்டாரை விட்டிறங்கி உள்ளே செல்லுகையில் கமலசேகரப்பிரபுவைக் கண்டனர். கமலசேகரனும் ஆர்வத்தோடு தான் பேசிக்கொண்டிருந்த மனிதரிடம் விடைபெற்று திவான்பகதூர் துரைசிங்கத்தை யடைந்து, அந்த மூன்று ஸ்திரீகளுக்கும் அன்போடு வந்தனமளித்தான். அவர்களும் பதில் வந்தனமளித்துவிட்டு, மதுரை ஒரிஜினல் பாலகர் திறமையோடு நடத்தும் நாடகத்தைப் பார்ப்பதற்கென்றே ஆயிரக்கணக்கில் ஆங்கு குழுமியிருந்த மக்களைப் பார்த்துக்

கொண்டே நடந்து தங்களுக்காக முதலிலே காலி செய்து விடப்பட்டிருந்த இடங்களை யடைந்து உட்கார்ந்து கொண்டனர். கமலசேகரனுக்கும் துரைசிங்கருக்கும் மத்தியில் இராஜீவி இராஜஹம்ஸப்பேடுபோல உட்கார்ந்து கொண்டாள்: கமலசேகரனுக்கருகில் கிருஷ்ணவேணியும், துரைசிங்கருக்கருகில் கமலமும் உட்கார்ந்து கொண்டு, சிறிது நேரம் வரையில் சம்பாஷணை நிகழ்த்தினர். நாடகம் ஆரம்பிக்கத் துவக்கியதும் அவர்கள் ஏனையோரைப்போல் காட்சிகளைக்கண்டு ஆனந்திப்பதாயினர். ஆனால் ஒரு மணி நேரத்திற்குப் பின்னர் கிருஷ்ணவேணி இராஜீவியும் கமலசேகரனும் ஒன்றுசேர இருப்பதைக்கண்டு மனம் வாடினாள். அவள் மனதில் பல்வேறு வகையான எண்ணங்கள் மின்னல் தோன்றி மறைவதே போல் தோன்றி மறைந்தன. இராஜீவியும் கமலசேகரனும் சேர்ந்து மெல்லச் சம்பாஷித்த போது அவளது உள்ளம் உருகத்தொடங்கியது. மட்டற்ற துன்பவெள்ளத்தில் வீழ்ந்தவள் போலவும் அதினின்றும் தப்புவிக்க நீந்துதலைத் தெரியாதவள் போலவும் அவளது உள்ளம் தத்தளிக்க, தான் நாடகத்திற்கு வந்ததற்கு தன்னை நொந்து கொண்டாள். அவர்களுடைய கருவிழிகள் களங்கத்தோடு சந்திக்கின்றனவே என்று மாசுமறுவற்ற பத்தரைமாற்றுத் தங்கத்தால் சமைக்கப்பட்டவளோ என்று ஐயுறத்தக்கவளும் பூர்ண சந்திரோதயம் நடு ஆகாயத்திலிருக்கும் போது கொண்டுள்ள வனப்பையும் குளிர்ச்சியினையும் கொண்ட முகத்தினளையும் உடைய கிருஷ்ணவேணி சந்தேகித்தாள். தான் அப்படி சந்தேகங் கொள்வது சரியல்லவென்று நினைத்து அவ்வெண்ணப் பிசாசை வெருட்டி ஓட்ட முயன்றாள் அப்பெண்கள் நாயகம்: முடியவில்லை. தன்னுடன் தனது காதலன் பேசாதிருக்கிறதையும் இராஜீவியோடு பேசிக்கொண்டிருக்கிறதையும் அவ்வரிவையர் திலகம் மறுபடியும் கண்டு விசனமுற்றாள். வயதிற் சிறிய—ஏறக்குறைய

இருபத்தைந்து ஆண்டுகளைக் கடாத்திய—இராஜீவி பெரிய கவர்னர் சபையில் நிர்வாக மெம்பரின் நித்தியானந்த பத்தினியாதலின் மிகவும் தாராளமாகவும் ஜ்வலிப்பு மிகுந்த வதனத்தில் சந்தோஷம் தாண்டவம் செய்து கொண்டிருக்க அன்பாகவும் பேசுவதினால் தான் அவர்களிருவரையும் காதலர்களென்று கொள்வது தனது மௌட்டீகத்தை பறையறைவித்து விளக்குவது போலாகும் என்று அவ்வேங்கெழில் வனிதை மறுபடியும் நினைத்துக்கொண்டாள்.

கிருஷ்ணவேணியினுடைய துன்பவெள்ளப் பெருக்கினை முகத்தால் அறிந்துகொண்ட இராஜீவியும் அவளைப் பார்க்காததுபோல் இருந்தாள்.

அந்த இனிய நாடகம் முடிவுக்கு வரப் பதினைந்து நிமிஷங்கள் இருக்கும்போது திவான்பகதூர் துரைசிங்கம் முதலாயினோர் தமது ஆசனங்களை விடுத்து வெளியே சென்று, மோட்டாரில் ஏறிக்கொண்டனர். கமலசேகரன் அந்த ஸ்திரீகளிடத்தும் போலீஸ் கமிஷனரிடத்தும் விடைபெற்றுக்கொண்டு தனது மாளிகைக்குச் சென்றனன்.

கமலசேகரன் சென்றதும் திவான்பகதூர் துரைசிங்கம் முதலாயினோர் மைலாப்பூரை யடைந்து நித்திரை புரிய ஆரம்பித்தனர். இராஜீவியும் கிருஷ்ணவேணியும் சிறிது நேரம் எண்ணத்தால் தாக்கப்பெற்றார்களாதலின் நித்திரை புரிய ஆரம்பிக்கவில்லை.

இரண்டு தினங்களுக்குப் பிறகு இராஜீவி உதகமண்டலத்திற்குப் புறப்பட்டுப் போவதாகச் சொல்லவும் கமலத்திற்கு மிகுந்த விசனம் உண்டாயிற்று. அவளை விட்டுப் பிரிந்திருக்கவேண்டுமே என்று நினைத்ததே அவளுக்குத் துயரம் உண்டாயிற்று.

திவான்பகதூர் துரைசிங்கம் தமது சகோதரியை ஸென்ட்ரல் ஸ்டேஷனில் பார்ப்பதாகக் கூறிவிட்டுத் தமது போலீஸ் அலுவல்களைக் கவனிக்கும் வண்ணம் ஆபீஸ்

சென்றுவிட்டார். அன்று சாயங்காலம் இராஜீவி தனது அழகிய சாமான்களைப் பெட்டியில் வைத்துக்கொண்டிருக்கையில் அவளுடைய கண்களினின்றும் நீர் முத்துபோல உதிர்ந்தது. அதைக் கண்ட கமலம் சகியாதவளாகி காரணத்தைக்கேட்க, இராஜீவி சென்னையை விட்டுப் புறப்பட்டுப் போகவேண்டியிருக்கிறதே என்று வருத்தங் கொண்டதால் கண்ணீர் வந்தது என்று மெய்யைக் கூறியொழிந்தாள்.

“ஐயோ! உதகமண்டலத்தை விடுத்தபோது நான் கணவனை விட்டும் பிரிந்திருக்கவேண்டுமே என்றெண்ணினேன். இப்போது சென்னைக்குப்போகவேண்டு மென்றிருக்கிறதே!!” என்று இராஜீவி தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

பிறகு கமலமும் இராஜீவியும் சாப்பிட்டனர், சாப்பிட்ட பிற்பாடு இராஜீவி கமலத்தை நோக்கி கமலம்! நான் கிருஷ்ணவேணிக்குக் கோபத்தைக் கொடுத்துவிட்டேன்! அவள் என்னை வேறு விதமாக எண்ணுகிறாள்!” என்றாள்.

“என் புருஷரும் உன்னைப்போலவே கிட்டியைப்பற்றிக் கூறினார்.”

“அவள் என்னை விரோதியாகவே நினைக்கிறாள். அதனால் என் உதகமண்டலம் போவதை மறந்தும் இங்கு வரவில்லை.”

“ஏன் உன்னை விரோதியாகக் கொள்ளவேண்டும்? உன்னாலன்றோ எனக்கும் என்புருஷருக்கும் ஏற்பட்ட துன்பம் வெயிலின் போயிற்று. பொங்கும் மங்களத்தை இன்றும் தங்கும்படியாகச் செய்து, எமது இல்லற வாழ்விற்கு ஊன்றுகோலாக நீ நின்றாய்!—மேலும் கிட்டி உலகத்தை அறியாதவள்.” என்று கமலம் கூறினாள்.

அச்சமயத்தில் சேவகன் ஒருவன் உட்பிரவேசித்து ஒரு உறைக் கடிதத்தை இராஜீவியிடம் பயபக்தி வினயத்

தோடு கொடுத்துவிட்டுச் செல்ல, இராஜீவி உறையைக் கிழித்து, கடிதத்தை எடுத்துப் படிக்க அவளுடைய முகம் சந்தோஷத்தினால் மாறியது.

"கமலம், இது கமலசேகரரால் எழுதப்பட்டிருக்கிறது. அவர் தாம் ஸ்டேஷனுக்கு வரமுடியாதென்றும் அதற்கு மன்னிக்கவேண்டுமென்றும் எழுதியுள்ளார்," என்றாள்.

"அப்படியா! அவர் கிட்டியைக் காதலிக்காமல் வேறு எவரையாவது மணம் புரிந்து கொள்ளட்டும்," என்றாள் கமலம்.

அவர்களுடைய சம்பாஷணை ஒன்பதேகால் மணிக்கு ஒரு முடிவுக்கு வந்தது. இராஜீவியின் வேலைக்காரன் சாமான்களை மோட்டாரில் தயாராக வைத்து இருந்தான். இராஜீவி கமலத்திடத்தும் குழந்தைகளிடத்தும் உத்திரவு பெற்றுக்கொண்டு, மோட்டாரில் ஏறிக்கொண்டு ஸ்டேஷனை யடைந்தாள்.

அங்கு தனது தமையனார் திவான்பகதூர் துரைசிங்கம் பிரபு சில செந்தலைப்பூச்சிகளோடும் தனது வரவை எதிர் நோக்கிக்கொண்டிருப்பதைக்கண்டு, சந்தோஷமடைந்தாள். அவள் தமையனுடன் பேசிக்கொண்டிருக்கையில் இராஜீவி யின் வேலைக்காரன் சாமான்களை முதல் வகுப்பு வண்டியில் ஏற்றிவிட்டுச் சிறிது தூரத்திற்கு அப்பால் இருந்த மூன்றா வது வண்டியில் தனது பெட்டியை வைத்துவிட்டு வெளியே வந்து நின்றான்.

முதல் மணியும் இரண்டாவது மணியும் ஒன்பதரை மணிக்கு அடிக்கப்பட்டன. இராஜீவியும் தனித்திருந்த நீலகிரி எக்ஸ்பிரஸ் முதல் வகுப்பில் ஏறிக்கொண்டாள். மூன்றாவது மணியும் அடித்தது. தனது சகோதரருடைய வலது கையை வாங்கி அன்போடு குலுக்கிவிட்டுப் போய் வருகிறேன் என்று சொல்லவும், ரயிலும் விசையுடன்

நாற்பது மைல்கள் ஒரு மணியில் போகத்தக்கதாகப் புறப்பட்டது. இராஜீவியின் வேலைக்காரனும் வண்டியில் ஏறிக்கொண்டான்.

இராஜீவி இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம் ஜன்னல் மூலமாகப் பார்த்தபொழுது விசிறிகளுடனும் மின்சார தீபங்களுடனும் ஜனங்களுடனும் திவ்விய தேஜோமயமாகக் காணப்பட்ட ஸென்ட்ரல் ஸ்டேஷனின் காட்சி மின்னல் போல் மறைந்ததைக்கண்டு மனம் வாடினாள். சிறிது நேரத்திற்கெல்லாம் அன்று வெளியான ஹிந்து ஆங்கிலேய தினசரியை வாசிப்பதாயினாள்.

அதிகாரம் 5.

கிராம வாழ்க்கையின் சிறப்பு.

தருமபுரி ஜெமீன்தாருடைய அருந்தவச்செல்வி தன்னை மணாளனாகத் தேர்ந்தெடுக்க முடியாது என்றதைக் கேட்ட சுந்தராங்கன் கிருஷ்ணவேணியின் மாளிகையை விடுத்து நேராகத் தனது ஹோட்டலுக்குச் சென்று தன்னைப் பற்றி எண்ணமிட்டனன். கமலசேகரனை கிருஷ்ணவேணி ஏன் மணம்புரிய விரும்பவேண்டும்? தன்னை ஏன் மணம் புரியக்கூடாது? எனும் வினாக்கள் அவனது அகக்கண்ணில் முளைத்தெழுந்தன. நாஜோகாகவும் நவீனமாகவும் அநங்கன் பொலிவுபெற்ற கமலசேகரன் அவளுடைய கண்ணுக்குப்பரமனுடைய திவ்விய தேஜோமயமான நிகரற்ற சிருஷ்டியாகக் காணப்படுவதால் கிருஷ்ணவேணி அவனையே தனது மணாளனாக வரித்துக் கொள்ளவேண்டும் என்றெண்ணினள் போலும் என உன்னினான். மேலும் கல்வி கேள்வியிற் சிறந்து, அளவற்ற ஐஸ்வரியத்தில் சூழ்ந்து, ராணுவப் பயிற்சியில் கீர்த்தியடைந்து போர் முனையில் தன் திறமையை

யாவரும் கண்டு மெச்சும்படி செய்து விளங்கும் கமலசேக ரனை எப்பெண்பால் தான் விரும்பாதொழிவள்! தான் அவர் களிருவரையும் நொந்து கொள்வதில் பயனில்லை என்றும், எல்லாம் வல்ல கடவுளின் ஆஞ்ஞைப்படி சுழலும் காலசக்க ரத்தின்படி விஷயங்கள் இப்புவியில் நடக்கின்றன: மனிதன் அவைகளில் தலையிட்டு அவைகளை மாற்ற முடியாது என நினைத்தான். கடவுள் விருப்பம் என்பது மறுக்க முடியாது எங்கணும் மறைந்தும் மறையாமலும் காணப்படுகிறது, கிருஷ்ணவேணியும் தானும் மணம் புரிந்து கொண்டு சுகமா கச் சதிபதிகளாக இக்குவலயத்தில் இருக்கக் கடவுள் விருப் பம் அற்றவராகஇருக்கிறார் என்று எண்ணினான். ஆனால் எவ்வுயிரையும் காப்பாற்றும் ஆற்றலைக் கொண்டிருக்கும் அந்த மகாசக்திக்குத் தன்மீது ஏன் அத்தனை ரௌத்திரா காரம் என்று நினைத்த சுந்தராங்கன் கடவுள்மீது கோபங் கொண்டான். கடவுள் உண்டு இல்லை என்பதை ஆலோசிக்கு மிடத்து இல்லை என்றே கூறலாம் என எண்ண, அவன் மனது கடவுள் உண்டு எனும் உறுதியைக் கொடுத்தது. போர் முனையில் தலைவனில்லாத சேனையும், தலைவன் இல் லாத அரசாங்கமும் எவ்வண்ணம் பாழடைந்து நாசமாகச் சீர் குலைந்து விடுமோ அவ்வண்ணம் சகல ஜீவராசிகளையும் செடி கொடி விருக்ஷங்களையும் படைத்துக் காக்கும் சர்வே சுவரன் ஒருவன் இல்லாமற் போனால் பூலோகமே நரகமாக மாறி எங்கும் துஷ்கிருத்தியமும் துன்பமும் சதா நாசமும் உண்டாகி அழிந்து போகும். ஆதலின் அண்ட சராசரங் களைப் படைத்த எம்பெருமான் எங்கும் வியாபித்திருக்கி றது சரதம். மாந்தர் பலவாறு பலநாமங்களிட்டு வணங்கு கிறார்கள். தெய்வாம்சம் என்பது எங்கு சக்தி இருக்கி றதோ அங்கே காணப்படும். அத்தெய்வாம்சம் தான் மனித னையும் ஸ்திரீயையும் படைக்கப்பட்ட ஜீவராசிகளையும்விட மேம்பட்டதாக இருக்கிறது. அத்தெய்வத்தின் அமிருதம்

போன்ற அமிசத்துளியின் காரணமாக மானிடப் பிறவியெடுத்தவர்கள் இந்த சமுத்திரம் சூழ்ந்த அவனியின்கண் பல அரிய காரியங்களையும் செய்கைகளையும் செய்கின்றனர். மின்சாரசக்தி, கம்பியில்லாதத்தந்தி யந்திரம், காற்றினும் கடிது செல்லும் ககனக் கப்பல் முதலிய விஷயங்களை யோசிக்குமிடத்து மனிதனுக்கு அக்கருணை வெள்ளத்தின் தெய்வாம்சம் ஜீவாத்மாவில் காணப்படுகிறது. தெய்வாம்சமும் ஜீவாத்மாவும் ஒரே கருத்தைக் கொடுக்கும் வார்த்தைகள் என்று கொள்வதில் பெருத்த வித்தியாசம் ஏற்பட்டுவிடாது. தெய்வாம்சத்தின் தூண்டுதலால் தான் இவ்வுலகில் சிறப்பையடைகிறான். அதனால் மாந்தராகப் பிறந்தோருக்குப் பிறவியிலிருந்து சில கடமைகளையும் சுதந்திரங்களையும் கடவுள் உண்டாக்கி இருக்கிறார் என்று எட்மண்ட் பர்க் எனும் அங்கிலேய மேதாவியும் கூறியிருக்கிறார். அவைகளை எப்படியும் மனிதன் கையாடியே தீரவேண்டும் என்பது அவருடைய கொள்கை. அவைகளிலிருந்து தான் சட்டங்கள் பிறக்கின்றன என்று சுந்தராங்கன் எண்ணினான். ஆதலின் மனிதனாகப் பிறந்தோன் தனது கூட இருப்பவர்களுக்கும் தனது நாட்டிற்கும் தன்னாலேன்ற வரையில் உதவி செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அவனுக்கு இப்புவியில் வேலையில்லை. அவன் பிறவாதிருத்தலே நலம். தாமஸ் க்ரீன் எனும் பெரிய தத்துவஞானி மிகுந்த அழகாக மனிதனிடைய செய்கைகளில் தெய்வாம்சம் கலந்து நிற்பதால் அவன் தனது கடமைகளையும் ஏனைய விஷயங்களையும் நன்குணர்கிறான். என்கிறார் அல்லவா?—இவைகளை எல்லாம் யோசிக்குமிடத்தில் கடவுளுடைய குழந்தைகளான நாம் தக்க நெறியில் கடவுளை மட்டும் மறவாமல், ஏனைய மதத்தினரோடு சண்டை சச்சரவு இல்லாமல் சுகமாக வாழ்ந்து, நமக்குக் கடவுள் செய்யவேண்டிய விஷயங்களை நன்கு செய்து பூலோகத்தில் நல்ல பெயர் வாங்கவேண்டும். ஒருவரை ஒருவர்

பகைத்துக்கொள்வதாவது எனவாக ஒருவருடைய திறமையை அறியாமல் மட்டித்தனமாக நடிப்பதாவது மிகவும் கெடுதலானது. ஆதலின் தான் கிருஷ்ணவேணியினுடைய மனமற்ற செய்கையை உள்ளன்போடு ஏற்றுக்கொண்டு, அவள் கடவுள் விருப்பத்தின்படி தன்னைக் கணவனாக ஏற்றுக்கொள்ள மறுத்ததை விரோதமாக எண்ணலாகாது: அவள் தன் மனப்போக்கின்படி கமலசேகரனை மணந்துகொண்டால் தான் உல்லாசமும் சந்தோஷமும் கொள்ளலாகும் என்றெண்ணினான். ஆயின் தான் காதலித்தது பயமானது என்று எண்ணினான். அவளைச் சிறிது காலம் நினையாமல் வேறு விஷயங்களைக் கவனித்தல் சிலாக்கியமானது என்று முடிவு செய்தான்.

இத்தகைய எண்ணங்கள் எழுந்து அவனுடைய உள்ளத்தைப் பிரகாசிக்கச் செய்தன: ஆதலின் அவன் சூலூர் சென்று கிராமவாழ்வில் இருந்த சிரத்தையைக் காண்பிக்க வேண்டும் என்று தீர்மானித்தான். அப்பொழுது அவனுடைய மனதில் தனது கெட்டுப் போன சகோதரன் மதனரங்கன் சென்னையிலேயே சீர்குலைந்து அவதிப்படுவதையும் அவனுக்குத் தான் இனிமேல் பொருள் சகாயம் செய்து காப்பாற்ற வேண்டும் எனும் எண்ணம் எழுந்தபடியினாலும், அவன் அன்று சாயங்காலம் ஐந்து மணி சமயத்திற்கு தான் தங்கியிருந்த ஹோட்டலில் விருந்தினருக்கென்று இருந்த பிரத்தியேகமான மோட்டார் ஒன்றில் ஏறிக்கொண்டு, வண்ணாரப்பேட்டையில் ஒரு சிறிய அழகற்ற வீட்டில் குடியிருக்கும் மதனரங்கனைக் காணவெண்ணிச் சென்றான்.

சுந்தராங்கன் தனது சகோதரர்களுக்கு அடிக்கடி கடிதம் வரைந்துவரும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தாலும், சென்னையில் துன்மார்க்க நெறியில் தனது சொத்தினை விரயம் செய்து, பஞ்சத்தாண்டியோ பரம்பரை ஆண்டியோ

என்று சந்தேகிக்கத் தக்கமதனரங்கனைத் தனது சகோதரன் என்று அன்போடு காணும் வழக்கத்தைக் கொண்டிருக்க வில்லை.

நாகரீகம் என்று சொல்லப்படும் வார்த்தையே மதன ரங்கனையும் சுந்தராங்கனையும் பிரித்திருந்தது. சென்னைக் குச் சென்றபொழுதெல்லாம் மதனரங்கனைக்காணும் வழக் கத்தை அவன் கொண்டிருக்கவில்லை. மதனரங்கனை ஒரு குஷ்டரோகி என்று உதாசீனம் செய்து, வாத்ஸல்யத்தோடு இருக்கவில்லை. கிருஷ்ணவேணியின் காதலையும் பெரிய கன தனவான்களுடைய ஸ்நேகத்தையும் பெற்றிருந்த சுந்தராங் கன் தனது சகோதரன்மீது அன்பையும் ஆசையையும் வைக்கவில்லை. ஆனால் கிருணஷ்வேணி அவனது காதலையும் செல்வத்தையும் மறுத்துவிட்ட அன்று காலையில் அவனது மனம் பட்ட பாட்டை யாரே அளவிட வல்லார்! அப்பொ ழுது தான் சுந்தராங்கனுக்குத் தனது சகோதரனைச் சந்திக்க வேண்டும் எனும் எண்ணம் உதித்தது. என்றுமே உதிக்காத அவ்வெண்ணம் முளைத்தெழுந்ததும் அவன் தனது சகோ தரனைச் சந்தித்துப் பேசவேண்டுமென்று ஆவல்கொண்டு, சாயுங்காலம் ஐந்துமணி எப்பொழுது அடிக்குமோ என்று துடிதுடித்துக் கொண்டிருந்தான். ஐந்து மணியடித்ததும் புறப்பட்டுவிட்டனன்.

வண்ணாரப்பேட்டையை யடைந்ததும், அவன் மதன ரங்கனுடைய விலாசத்தை யறிந்தபடியால் காரை அங்கே போகச் செய்து, ஒரு சிறிய வீட்டின் முன் சென்று, கத வைத் தட்டினன்.

"யார் அது?" என்று உள்ளேயிருந்து முரட்டுத்தன மான குரலில் யாரோ கேட்க, சுந்தராங்கன், "நான்தான் சுந்தரன்," என்று கூறினன்.

உடனே கதவு திறக்கப்பட்டது. சுந்தராங்களை உள்ளே போகும்படியாக கதவைத் திறந்த, வேலைக்காரனைப் போல் காணப்பட்ட மனிதன் சொல்ல, சுந்தராங்கனும் வீட்டினுட் சென்று, அவ்வேலைக்காரனைப் பார்த்து "மதனர் எங்கே?" என்றான்.

"ஓகோ! அண்ணாவாகிய என்னை இன்னும் தெரிந்து கொள்ள வில்லையா?—நான் தான் மதனரங்கன்," என்று அவ்வேலைக்காரனைப் போல் உடையணிந்திருந்த மனிதன் அதிசயத்தோடு கூறினான்.

சுந்தராங்கனுக்குச் சொல்ல ஒண்ணாத வியப்பும் பிரமிப்பும் உண்டாகித் தான் காண்பது கனவோ நனவோ என்றய்யுற்று, மதனரங்கன் மதுபானத்தாலும் வேறு தீய வழிகளினாலும் உடல் குலைந்து இருப்பதைக் கண்டு, மனம் சோர்ந்து. கண்களில் நீர்ததும்ப, "மதனா! இது நீயா? உன்னை அறிந்து கொள்ளவே முடியவில்லை," என்று சொல்லிக்கொண்டே ஒரு விசிப்பலகையின் மீது உட்கார்ந்து கொண்டு, தனது வெண்ணிறக் "கர்ச்சீப்பினால்" கண்ணீரைத் துடைத்தனன்.

எதிர் பாராத சந்திப்பினைக் கண்ட மதனரங்கனும் திடுக்கிட்டானாயினும் தைரியத்தோடு முரட்டுத்தனமான குரலில், "எப்பொழுதும் அன்பே காட்டாத நீ என்னை இந்த வறுமைத்தனத்தில் எவ்வாறு கண்டு கொள்ளலாகும்?—நீயோ பெருத்த குபேரன். பணக்காரனுக்கும் பிணக்காரனுக்கும் எப்படிக் கண் தெரியும்?" என்று கூறிக்கொண்டே நகைத்தான்.

"மதனா! நான் நாகரீகமான சங்கத்தில் இருப்பதாக நினைத்து உன்னைப் பராமுகம் செய்து விட்டேன். மன்னித்துக்கொள்ள வேண்டும். மனிதனுக்கு ஆங்காரமும் ஆணவமும் கூடாத விரோதிகள் என்பதை இன்றுதான் உணர்ந்

தேன்.—சரி.—உன்னைக் கண்டுபோகலாமென்று வந்தேன். நீ இப்போது என்ன செய்கிறாய்?" என்று சுந்தராங்கன் கேட்டான்.

"சகோதரா! சந்தோஷம்! எல்லாம் வல்ல கடவுள் நம்மை மறுபடியும் சேர்த்தி வைப்பது நலமே!—உனக்குத் தான் தெரியுமே எனது பங்கிற்கு வந்த பத்து லக்ஷம் ரூபாய் களையும் வீணாக அநியாய வழிகளில் செலவு செய்து நாசப் படுத்தி விட்டேன் என்பது! இப்போது நான் மிகுதியாக இருக்கும் ஆயிரம் ரூபாயை வைத்துக்கொண்டு சௌக்கிய மாக இருக்கிறேன். தொழிலாளர் சங்கத்தில் நானும் ஒரு மெம்பராக இருப்பதினால், விவசாயத்தொழிலாளிகளும் மில் களில் கூலிவேலை செய்யும் மனிதர்களும் என்னை தற்காலம் உதவி அக்கிராசனாதிபதியாக நியமித்திருக்கின்றனர். நான் அடிக்கடி இந்த சென்னைக்கு அருகிலுள்ள கிராமங்களுக் குச் சென்று விவசாய விஷயங்களைப் பற்றியும் மதுபான விலக்கு என்பதைப் பற்றியும் பிரசங்கம் செய்கிறேன். இப் போது நான் மதுபானம் முதலியவைகளை அறவே நிறுத்தி விட்டேன். நான் மதுபான விலக்கைப் பற்றிப் புரியும் பிர சங்கத்திற்கு சென்னையில் இருக்கும் மதுபான விலக்குச் சங்கத்தார் முப்பது ரூபாய் மாசமொன்றுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்," என்றான் மதனரங்கன்.

"அதன் பொருட்டா இந்த எழ்மை உடை?" என்று கேட்டான் சுந்தராங்கன்.

"ஆம். இல்லாவிட்டால் அம்மனிதர்கள் எனது பிரசங் கத்தில் நம்பிக்கை வைக்கமாட்டார்கள். நான் முன்பு கொண்டிருந்த தீய ஒழுக்கங்களெல்லாம் பறந்துபோய் விட் டதைக் கண்டு சங்கத்தலைவரும் சந்தோஷமடைகிறார்."

"சந்தோஷம். நீ அடிக்கடி கிராமங்களுக்குச் சென்று மதுபானம் கூடாது என்று பிரசங்கிப்பது நல்ல சேதியே.—

தொழிலாளர் சங்கத்தார் உன்னை உப அக்கிராசனாதிபதியாக தேர்ந்தெடுத்தது மிகவும் சிறந்தது.—எனக்கு இவைகளைப் பற்றி எல்லாம் தெரியாது இருந்தமையால், நான் உன்னைக் கவனிக்காதிருந்தேன்.”

“இப்பொழுதாவது உனக்கு புத்தி வந்ததைக் கண்டு சந்தோஷம்! நீயும் சூலூரில் என் கிராம வாழ்க்கையைப் பற்றி அக்கறை எடுத்துக்கொள்ளக் கூடாது? கிராம வாழ்க்கையைவிடச் சிறந்தது ஏதுவுமில்லை. கிராம வாழ்க்கை தற்கால நாகரீகத்தின் படியே இருப்பதில் பிசகில்லை. மின்சார விளக்குகளும், தண்ணீர்க் குழாயும் ஒவ்வொரு கிராமத்தில் இருக்கலாகும். விவசாய விஷயத்தில் நாம் அங்கிலத்தில் கோவாபரேஷன் என்று கூறும் கூட்டுறவு சம்பிரதாயத்தைக் கைப்பற்றி அதன் உதவியால் விவசாய பாங்குகளையும் விவசாய விஷயங்களுக்குத் தேவையான உழும் சாமான்களையும் யந்திரங்களையும் ஏற்படுத்தலாம்.”

“நீ கூறுவது நல்லது தான்.—நீ ஏன் என்னோடு சூலூருக்கு வரலாகாது?”

“ஐயோ! நான் அங்கு ஒருகாலும் போகலாகாது. முதலில் தீய வழிகளில் இறங்கியிருந்த ஒரு மனிதன் பின்னர் நல்வழிப்பட்டு கௌரவமான தொழிலைச் செய்து கொண்டிருந்தாலும் உலகம் சிலநாள் பழித்துக்கொண்டே இருக்கும். ஆதலில் நான் பந்துக்களும் மித்திரர்களும் செறிந்திருக்கும் சூலூருக்கு வர இயலாது. நீ சூலூருக்குப் போய் வா. உனக்கு விவசாய விஷயங்களைப் பற்றியும் வேறு விஷயங்களைப் பற்றியும் நான் அடிக்கடி கடிதவாயில் தெரிவிக்கிறேன்.—நான் இன்னும் சிறிது நேரத்தில் ஒரு கிராமத்திற்குச் செல்லவேண்டும். நான் உன்னை பிறகு பார்க்கிறேன்”

"சரி.—நான் இன்றிரவு நீலகிரி மெயிலில் போத்தனூர் சென்று, பிறகு கூனூர் போவேன்.—நான் உன்னை மறுபடியும் சந்திக்கிறேன்," என்று சுந்தராங்கன் சொல்லிக்கொண்டே தங்களுடைய சௌக்கரியத்துக்காக பாடுபடும் மதனாங்களிடம் விடை பெற்றுக்கொண்டு, வெளியிலிருந்த மோட்டாரில் ஏறிக்கொண்டு தனது ஹோட்டலை யடைந்து, பிரயாணத்திற்கு மூட்டையைக்கட்டி வைத்துவிட்டு, சிறிதளவு உண்டு, ஏழு முக்கால் மணிக்குப் புறப்படும் நீலகிரி மெயிலில் ஏறி கூனூர்போக வேண்டிய ஸ்டேஷனை யடைந்து இரண்டாவது வகுப்புச் சீட்டொன்று வாங்கிக்கொண்டு ரயிலில் ஏறினான். எட்டுமணிக்குச் சரியாய் மெயில் ஸ்டேஷனை விட்டுப் புறப்பட்டது.

மறுநாள் காலையில் கூனூரை யடைந்த சுந்தராங்கன் தனது மோட்டாரில் மாளிகைக்குப் போய்க்கொண்டிருக்கும் போது வழியில் இருபுறத்திலுமிருந்த வயல்களில் அப்பொழுது தான் பச்சைப் பசேலென்று செழுமையாக வளர்ந்திருந்த பயிர்களைப் பார்த்து, அந்த மனோகரமான காட்சியே எங்கும் காணக்கிடைக்காத காட்சி என்று எண்ணி மனதில் சந்தோஷங் கொண்டான். வழியின் இருமருங்கிலும் பெரிய பெரிய விருக்ஷங்கள் வானளாவி நின்று கொண்டு காற்றில் கிர் கிர் என்னும் சப்தத்தை கிளைகள் உராய்வதால் செய்து கொண்டு இருந்த நிலை பார்ப்பதற்கு குதூகலத்தையும் ஆனந்தத்தையும் கொடுத்தது. அங்கும் இங்கும் பனிகள் குளிர் காற்று வீச நின்றுகொண்டு பயிர்களுக்கு நல்ல போஷணையைச் சரிப்படுத்திக் கொண்டிருந்தன. அத்தகைய சிருங்காரமான மனோகர காட்சியைப் பார்த்துக் கொண்டே சுந்தராங்கன் தனது முன்னோர்களால் விசித்திர வேலைப்பாடுகளோடு கட்டப்பெற்றதும் தனக்குரியதுமானதுமான மாளிகையை யடைந்து, மோட்டாரை விட்டிறங்கி, நேராகத்

தனது அறைக்குச் சென்றான். அங்கே அவனுடைய எவலாட்களும் குடியானவர்களும் சில வயதான மூதாட்டிகளும் வந்து அவனைக்கண்டு மரியாதையாகப் பேசிநின்றனர்.

அப்பொழுது சுந்தரங்கனுடைய லேவாதேவி விஷயங்களையும் ஏனைய விவசாய விஷயங்களைப் பார்த்து வருபவனான இரங்கநாதன் பரபரப்போடும் வந்து வீட்டு விஷயங்களையும் சில விவசாய விஷயங்களைப் பற்றி பேசினார். சுந்தரங்கன் பட்டணத்திற்குப் போயிருந்த பொழுது அபரிமிதமாக விளைந்து விற்பனைக்குத் தயாராக இருந்த புகையிலை மூட்டைகள் நாலாயிரத்தையும் ஏராளமான லாபத்திற்கு விற்றதாகத் தெரிவித்த போது சுந்தரங்கன் கண்கள் ஜ்வலிப்பை யடைந்தன.

“சந்தோஷம்,” என்று சுந்தரங்கன் கூறினான். அப்பொழுது தான் எங்கேயோ போயிருந்த ‘பச்சை’ எனும் அவனுடைய கரிய கோம்பை நாய் அன்போடும் விரைவோடும் ஓடிச்சென்று அவனது கால்களை நக்கி வாலை ஆட்டியது. சுந்தரங்கன் அதன் கழுத்தைத் தடவிக் கொடுக்க அது தனது அரிய சந்தோஷத்தை பலத்த வாலாட்டுதலினால் தெரிவித்தது.

சிறிது நேரத்திற்குப் பிறகு மற்ற மனிதர்கள் எல்லோரும் தத்தம் வேலையைக் கவனிக்கப் புறப்பட்டுப் போனதும் சுந்தரங்கன் வெந்நீரிற் குளித்து விட்டு, ஆகாரம் உட்கொண்டு, துயிலச் சென்றான்.

அன்றிரவு அவன் மிகுந்த பணத்தைக் கொடுத்து வாங்கின உயர்தர பசுவானது ஈன்றது கண்டு அதனைப் போய்ப் பார்த்துச் சந்தோஷம் அடைந்தான்.

அன்றிரவே அவன் மின்சார விசிறிகளும் தீபங்களும் கொண்ட தனது பெரிய வாசக அறைக்குச் சென்று டால்ஸ்டாய் பிரபு எழுதிய நாவல்களில் ஒன்றை எடுத்துப் படித்துக்கொண்டே பொழுதைப் போக்கினான். இரவு பதினொறு மணிக்குத் தனது சயனவறைக்குச் சென்று கண் வளர்ந்தான்.

முதல் பாகம் முற்றிற்று.

கோயமுத்தூர் தேசபந்து அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

இராஜீவி

அல்லது

காதலால் விளைந்த கஷ்டம்.

இரண்டாம் பாகம்.

அதிகாரம் 6.

மோகப் பித்து.

சென்ட்ரல் ஸ்டேஷனைவிட்டு நாற்பது நாற்பத்தைந்து மைல் வேகம் மணிக்குச் செல்லக்கூடிய நீலகிரி எக்ஸ்பிரஸ் வண்டி வாயுவேகமோ மனோவேகமோ என்னும்படி காற்றினுங் கடிதாகப் புகையைக் கக்கிக்கொண்டு பறந்துபோயிற்று. எழில் பொழியும் மனோரஞ்சனியாம் இராஜீவி முதல்வகுப்பு வண்டியில் தனியாக உட்கார்ந்திருப்பதைக்கண்டு அவளோடு பேசவேண்டும் எனும் எண்ணத்தோடு அவ்வண்டியினுள் விரைவாக ஓடிப்போ என்று சொல்லும்படி காற்று விர்விர் என்று வண்டிபோகும் விசையினால் வீசிக்கொண்டிருந்தது. இராஜீவியும் அதைக்கண்டு இடைஞ்சலை அடியோடு அகற்ற எண்ணிக்கொண்டு, சாளரங்களை மூடிவிட்டு, ஹிந்து பத்திரிகையை மறுபடியும் ஊக்கத்தோடு படிப்பதாயினள்.

நீலகிரி எக்ஸ்பிரஸும் ஒரு மணி நேரத்திற்கு முன்பே அரக்கோணத்தையடைந்து, பத்து நிமிஷநேரம் நின்றிருந்தது. பிறகு புறப்பட்டது. அது புறப்பட்ட அரைமணி நேரத்திற்கெல்லாம் புயற்காற்றைப்போல் ஒரு பெரியகாற்று வீசி, ஆகாயத்தில் சிதறிக்கிடந்த மேகங்களை ஓரிடத்தில்

சேர்த்துவைத்ததால் பெரிய மழையும் பொழிய வாரம்பித்தது: மின்னலும் இடியும் மாறிமாறி உண்டாகி பிரயாணிகளுடைய மனத்தை அச்சுறுத்தின.

ஓடும் ரயிலில் நித்திரைபுரியும் வழக்கத்தை அபூர்வமாகக் கொண்டிருந்த மின்னற்கொடியான இராஜீவி ஒரு இராஜாத்திபோல் உட்கார்ந்துகொண்டு ஹிந்து தினசரியைப் படித்து முடித்துவிட்டாளாயினும் நித்திரை செய்ய மனமில்லாமல் தனது மனக்கோட்டையில் பல எண்ணங்களுக்கு இடம் கொடுத்து இருந்தாளாகையினல் அப்பேரணங்கு ஜோலார்பேட்டையை வண்டியடைந்தபொழுதும் உட்கார்ந்திருந்தாள்.

அவள், ஜோலார்பேட்டை வந்ததையறிந்து கதவைத் திறந்துகொண்டு, கீழே இறங்கிநின்று, குளிர்ந்தமாருதத்தை ஆசையோடும் உட்கொண்டாள். பல பிளாட்பாரங்களின் மீதும் நட்சத்திரச்சுடரேபோல் பிரகாசிக்கும் மின்சாரதீபங்களைக்கண்டு சிறிதுநேரம் அவைகளின்மீது தனது கவனத்தைச் செலுத்தினள். அப்பொழுது, அவள் பிரயாணம் செய்துகொண்டிருந்த வண்டியின் இஞ்சின் முதல் இரண்டாவது வகுப்புகளை மாத்திரம் கொண்டதும் பெங்களூர் ரயிலில் வந்ததும் ஆன ஒரு வண்டியைத்தனது வண்டியில் மாட்டிக்கொண்டு உதகமண்டலம் செல்லவேண்டியிருப்பதை அறிந்ததுபோல் அவ்வண்டி இருந்த தண்டவாளத்திற்குத் தனியாகச் சென்றதனைக் கொணர்ந்து ஏனைய வண்டிகளோடு சேர்த்துநின்றது.

இத்தகைய சம்பவங்களை எல்லாம் தன் வண்டிக்கெதிரில் பார்த்து நின்றிருந்த அப்பெண்கள் நாயகம் தன்னை

நோக்கி வந்துகொண்டிருந்த ஒரு கனவானைக் கண்டு உற்று நோக்கினாள். உற்று நோக்கலும் அவளது கண்கள் ஒரு விதமான நிலையடைந்தன. முகம் அச்சத்தைக்கொண்டது.

அன்றிரவு, காற்றுடன் குளிரும் சேர்ந்து இருந்தபடியினால் வண்டியைவிட்டு ஒருவரும் கீழே இறங்கவில்லை. ஆனால் காற்றை உட்கொள்ளும்பொருட்டு இராஜீவி கீழே இறங்கிநின்றதை அவளை நோக்கி வந்த கனவான் கமலசேகரன் கண்டு அவளையடைந்து பேசாமல் நின்றான்.

இன்பமே உருவெடுத்து வந்ததோ என்று எண்ணத்தக்க அரசிபோல் விளங்கிய அந்த இராஜீவியாதொன்றும் பேச நாவெழாதவளாய், செந்தாமரையன்ன முகத்தினளாய் சித்திரப்பதுமைபோல் அசைவற்று நின்ற காட்சி மகோன்னதமாக இருந்தது. மாதுரியமானசொற்களை நயத்தோடும் வினயத்தோடும் தேன்போல் உபயோகிக்கும் அப்பெருஞ்செல்வி தாமரையில் நிற்கும் இலட்சுமிபோல் காணப்பட்டதைக்கண்டு வார்த்தைகளை உரையாடமுயன்றும் முடியாதது கண்ட கமலசேகரனும் இராஜீவியின் சுந்தரத்தேனை ஆர்வத்தோடும் மந்தஹாஸத்தோடும் மௌனமாகப் பருகலாயினன்.

கமலசேகரன் ஜோலார்பேட்டையின் பிளாட்பாரத்தில் விண்மீன்கள் அன்ன பிரகாசிக்கும் மின்சார தீபவெள்ளத்தில் அநங்கன்போல் இராஜீவிக்குக்காணப்பட்டான். அப்பூங்கோதையும் சிறிதுநேரம் வாளாவிருந்து, கமலசேகரனுடைய அழகுவெள்ளத்தில் விழுந்துவிட்டதை நினைத்து, தான் எப்படியாகிலும் அதிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று நினைத்தும் முடியாமற்போனமையைக் கண்டு மயங்கித்தியங்கித் தயங்கினாள். கடைசியில் தைரியங்

நரசிங்க மூர்த்திபோல் இருப்பதை திவான்பகதூர் துரைசிங்கம் அறிந்தாரில்லை! எப்படி அறியக்கூடும்? மேலும் தாம் அந்தரங்கமாக கற்பலங்காரத்தை நேசித்ததையும் அடமாது அதற்கு மனப்பூர்வமாக உடன்பட்டதையும், பின்னர் கற்பலங்காரம் தமது மாளிகையை விடுத்து வேறிடம் போனமையும், தத்தம் காதற் கடிதங்களின் சிறப்பையும், அத்தகைய விஷயங்களின் இரகசியத்தையும் கமலம் போன்ற கமலம் அறியாள் என்றே உறுதி கொண்டிருந்த துரைசிங்கம் தாம் முப்பத்தைந்து பிராயங்கடந்த கமலத்திற்கு ஒரு வைர மோதிரத்தைப் பரிசு கொடுக்கவேண்டும் எனும் எண்ணத்தால் மிகவும் சந்தோஷ மெய்தி, விரைவாக நடந்தார். எப்பொழுதும் ஆனந்தமே குடிகொண்டிருந்த மனதைக் கொண்டிருந்த திவான்பகதூர் துரைசிங்கம் தாம் மனைவிக்குச் சிறிது விரோதமாக நடந்த விஷயத்தில் கருத்தை வைக்கவில்லை. ஸ்திரீ புருஷர்கள் தத்தம் மனப்போக்கின்படி காரியங்களைச் செய்யவேண்டியது முக்கியம் எனும் கொள்கையைக் கொண்டிருந்தமையால், காதல் வெறியால் மோகலாகிரி அமோகமாகப் பெருகி கற்பலங்காரத்தை அன்போடு நேசித்தது தமது குற்றமல்ல. மேலும் அது மானிடப்பிறவி எடுத்தவர்களுக்கு உரித்தானது. மனிதன் தன் மனவிருப்பப்படி சிறிது காலம் மனைவிக்குத் துரோகம் செய்யலாம் எனும் எண்ணத்தைக் கொண்டிருந்தபடியால், துரைசிங்கம் தாம் செய்த காரியத்திற்கு அணுவளவேனும் முதலில் வருத்தப்படவில்லை.

மைலாப்பூரில் உள்ள தமது பெரிய மாளிகையையடைந்ததும், துரைசிங்கத்தின் வேலையாட்கள் மிக்க மரியாதையாக எழுந்து நின்று, தமது எஜமானருக்கு வணக்கம் செய்தனர். அவர்களுடைய வணக்கத்தை ஏற்றுக்கொண்ட துரைசிங்கம் நேராகத் தமது அறைக்குச் செல்லுகையில், அங்கு அன்பே சதா உருக்கொண்டு வந்ததோ என்று

எண்ணவேண்டியபடி பூங்கொடி போல் நின்று கொண்டு, தனது புருஷனின் வரவை எதிர்நோக்கி நிற்கும் வழக்கத்தைப் பழக்கமாக்கிக் கொண்டிருந்த கமலம் அங்கு இல்லாத காரணத்தை சிறிதும் அறியாது, "கமலம் நீ எங்கே இருக்கிறாய்?" என்று வாய்விட்டுக் கேட்டார். கமலம் இருந்தால் அன்றோ தனது பவளம் போன்ற வாயை திறந்து, முத்து போன்ற தந்தபந்திகளைக் காட்டி, இனிய குரலில் பேசுவாள்?

அச்சமயம் மாதவன் எனும் பிரதம வேலைக்காரன் உட்புகுந்து, "அம்மா அவர்கள் தமது அறையில் கோபமாக இருக்கிறார்கள்," என்ன, துரைசிங்கம் எனும் போலீஸ் கமிஷனருக்குச் சொல்லொணாத ஆச்சரியம் உண்டாகி, "என் கோபம்?" என்று வினவ, "அதன் காரணம் எனக்குத்தெரியாது," என்று மாதவன் விடை யிறுத்தனன்.

மாதவன், காரணத்தை யறிந்திருந்தால் சொல்லியிருப்பான் எனும் எண்ணத்தைக்கொண்ட திவான்பகதூர் துரைசிங்கம் திடும்பிரவேசமாக அவ்வறையை விடுத்து, தமது இல்லக்கிழத்தியின் அறைக்கு இரண்டு நிமிஷங்களில் சென்று, கமலம் கோபமாகத் தனது சாய்மான நாற்காலியில் சாய்ந்திருப்பதையும், அவளது அழகிய முகம் கொவ்வைக் கனிபோல் கோபத்தால் சிவந்து இருப்பதையும், தனது வருகையை சிறிதும் சட்டை செய்யாமல் இருப்பதையும் கண்ட—அதிகாரம் மிகக் கொண்ட போலீஸ் கமிஷனர் துரையான திவான்பகதூர் அவளை நெருங்கியடைந்து, "கமலம், கோபம் என்? காரணம் என்ன?" என்று அன்போடு இனியகுரலில் கேட்க, மார்பகம் விம்ம விம்ம, கண்ணில் நீர் சொரிய, மனச் சிணுங்கலோடு கமலம் ஒரு கடிதத்தை எடுத்து, துரைசிங்கம் நன்கு கேட்கும்படி வாசித்துக்காட்டி, இதென்ன! என்று கூறி முகத்தை திருப்பிக்கொண்டாள்.

கரதலாமரகம்போல் உண்மையை யறிந்து கொண்ட துரைசிங்கம் பேச நாவெழாமல், தமது மனைவியின் கோபத்தின் காரணத்தைத் தெரிந்துகொண்டு, முதலில் திக்பிரமையோடு நின்று கொண்டார். அவரது முகம் முதலில் சவம்போல் வெளுத்து, நிறத்தை யிழந்தது. ஆனால் கடைசியில் முகம் வழக்கம்போல் சந்தோஷங் கொண்டது. அதைக் காணவும், கமலத்திற்கு வெகுளி உண்டாயிற்று.

"இனி என்ன செய்வது?" என்று கமலத்தைப் பார்த்து துரைசிங்கம் கூறினர்.

"நான் தம்மை அன்போடு காதலிக்க, தாம் போயும் போயும் நமது பணத்தை வாங்கி யுண்ணும் கற்பலங்காரத்தை—," என்று கமலம் சொல்லியவண்ணம் வாக்கியத்தை முடிக்காதபடி கண்ணீர் சொரிய, முகம் மாறு பட்டாள்.

"சரி, நான் பிறகு வருகிறேன், கமலம்—உனக்குப் பரிசு ஒன்று கொண்டுவந்துள்ளேன்."

"ஓ வைரமோதிரமோ?—அதை நீர் அவளுக்குக் கொடுங்கள்; எனக்கு வேண்டாம்.—நீர் எனது அறையை விடுத்துச்செல்லும்."

"பிறகு விஷயங்கள் சரியாகத் திரும்பிவிடும்," எனும் எண்ணத்தைக் கொண்டவராய் திவான்பகதூர் துரைசிங்கம் அங்கு நின்றும் அகன்றார்.

ஒரு நாளாயிற்று: இரண்டு நாளாயிற்று: மூன்று தினங்களும் ஆயின. புவியில் மானிடராக அவதரித்தோர் தத்தம் வேலைகளையும் அலுவல்களையும் செய்ய, கமலம் மாத்திரம் மிகுந்த கோபங்கொண்டு, காரியம் ஒன்றும் செய்யாமல், மாளிகையிலிருந்த சமையற்காரர்களில் சிலரையும் வேலையாட்களில் சிலரையும் சம்பளங்கொடுத்து அனுப்பிவிட்டாள். ஏனைய சமையல்காரர்களைச் சில தினங் கழித்து வருமாறு ஏவினள். அம்மாளிகையின் தலைவி

(கமலம்) எல்லா விஷயங்களையும் தானே கவனித்து வந்ததால்,—அவளுடைய சொற்களை ஒருவரும் தட்டவில்லை. ஆனால் காரணத்தை மட்டும் அறியாதவர்களாய் சித்திரப் பதுமை போன்ற தம் எஜமானி ஏன் கோபம் கொண்டாள் என்று வேலையாட்களும் ஏனையோரும் பேசிக்கொண்டனர்.

"ஐயோ! கமலம்! நீ ஏன் கோபித்துக்கொண்டாய்? நான் கடிதத்தை தெரியாமல் கொடுத்தபடியினாலன்றோ இவ்வளவும்!—துரைசிங்கம் என்ன செய்திருந்தாலும் குற்றமற்றவர்,—குழந்தைகள் நீ வந்தால்தான் சாப்பிடுவோம் என்று சொல்லுகின்றன," என்று மூதாட்டியும் அம்மாளின் கையில் தலைவர் தலைவியருடன் மிகப் பழகியவளும் ஆன இரங்கம்மாள் அன்போடும் கருணையோடும் கூறினாள்.

"இரங்கம்! எனக்குச் சாப்பாடு வேண்டாம். குழந்தைகள் சாப்பிட்டாலென்ன? சாப்பிடாவிட்டாலென்ன?" என்று கமலம் சோர்வோடு இயம்பினாள்.

"நீதான் எல்லோரையும் போகும்படி கூறிவிட்டாய்! நான் வயசானாலும் உங்களுக்கெல்லாம் இரண்டு தினங்களாகச் சமைத்துவைக்கிறேன்.—ஏன் சாப்பிடக்கூடாது?—குழந்தை துளசியும் கோபாலனும் நீ வந்தால்தான் சாப்பிடும்—" என்று கூறுகையில் குழந்தைகளான துளசியும் கோபாலனும் வேறு அறையில் அழத்தொடங்கும் சத்தத்தைக்கேட்டு, கமலம் சகியாதவளாய், குழந்தைகள் இருந்த இடத்தை ஓடியடைந்து "முத்தே! கண்ணே!" என்று செல்லத்தோடு கூறி இரண்டையும் உச்சிமோந்து, சாப்பிடும்படி கூற, அவைகளும் சிரித்துக்கொண்டே பேசிய வண்ணம் உண்பதாயின.

"அம்மா! எனக்கு ஏன் அந்த பூதத்தின் கதையைச் சொல்லவில்லை?" என்று கோபாலன் எனும் நான்கு வயது கடந்த குழந்தை கேட்க, கமலம், "சொல்கிறேன்.—அன்று

நான் சொன்னேன் அப்புதம் குளத்தில் விழுந்தது என்று," என்று அக்கதையை மேலும் கூறத்தொடங்கவும், அவள் தனது விசனத்தையும் கோபத்தையும் மறந்தாள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு அக்குழந்தைகளைத் துயிலுமாறு செய்து, தானும் சிறிதுணவு உண்டாள்.

"சரி, நான் இரண்டு தினங்கழித்து என் தந்தைவீட்டிற்குப் போகிறேன். துரைசிங்கம் அவளை மணந்து சுகமாக வாழட்டும்" என்று எண்ணுகையில், கமலத்தின் கண்களில் நீர் ததும்பியது.

அப்பொழுது இரவு பத்து மணி இருக்கும். சகஜமாக யாவரும் பதினொரு மணிக்குத்தான் கண் வளரச் செல்வது வழக்கம்.

கமலம் இரண்டு நாளாக நித்திரை புரியவில்லை. அவள் தனது வாழ்வே போய்விட்டது என்று எண்ணி மிகுந்த கோபம் தன் புருஷன் மீது கொண்ட பொழுது, அவளுடைய அறையின் கதவு திறக்கப்பட்டதும், மாதவன் தைரியத்தோடு உள்ளே வந்து, நீல எழுத்துகள் கொண்ட தந்திக் கடிதமொன்றைக்கமலத்திடம் கொடுக்க, அவள் அதைப் படித்துவிட்டு, "நான் அவளை வரவேற்க வேண்டியதில்லை.—இராஜத்தை துரைசிங்கரே பார்த்துக்கொள்ளட்டும்.—நான் நாளையதினமோ அதற்கு அடுத்தநாளோ என் தந்தை இடத்திற்குச் செல்கிறேன்," என்று கூறிவிட்டு, அத்தந்தியை மாதவன் முன்வீசி எறிந்தாள். மாதவன் அதை எடுத்துக் கொண்டு, கமலத்திற்கு வந்தனம் செய்துவிட்டு அங்கு நின்றும் அகன்று, தனது எஜமானர் துரைசிங்கத்தை யடைந்து, கமலம் தன்னிடம் கூறிய விஷயத்தைக் கூறினான்.

"சரி,—நீ மூன்று பெரிய அறைகளை நமது இராஜம் பாளுக்கு அலங்கரித்து வைக்கும்படி செய்யவேண்டியது.—நான் கமலத்தைக் காலையில் பார்த்துப் பேசவேண்டும்.—நான்

ணர். சிருங்காரம் கொடுத்த விருந்து ஒரு முடிவுக்கு வந்தது. விருந்தினர் எல்லோரும் உல்லாசமாகப் பேசியிருந்தனர். அப்பொழுது இராஜா ஸிம்ஹனாதருடைய பத்னி இராத்ரியும் கமலசேகரனும் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்த ஸிம்ஹனாதருக்கு மனதிலே ஒரு வகையான பொறாமையும் துன்பமும் ஏற்பட்டதனால் அவர் வெளிக்கு ஏதோ துன்பம் கொண்டவர்போல் காணப்பட்டார். தமது அருமை பத்னி இராத்ரி கமலசேகரனுடன் பேசுவதை அவர் சிறிதும் விரும்பவில்லை. எப்பொழுதும் கொண்டிராத சந்தேகம் அப்பொழுது ஏன் உண்டாயிற்று என்று அவர் வருத்தப்பட்டார். அரசாங்கபதவியில் உள்ளவர்கள் ஜனசமூகங்களில் தற்கால மேனாட்டு ஆசாரப்படி நடப்பதை நல்லெனக் கருதிய தாமே இராஜ்ஞியின்மீது அப்படி சந்தேகம் கொள்வது மரியாதைக்குறைவு எனத் தேர்ந்தார். தாம் விருந்து சாப்பாடு உட்கொண்டிருக்கையில் ஒரு ஐரோப்பிய மாதுடன் பேசிக்கொண்டிருந்ததை யோசித்து, மனசு சிறிதும் இல்லாது பத்நிவிசுவாசத்தோடு காணப்படும் இராஜ்ஞியிடத்தில் சந்தேகம் இருப்பதாக எண்ணுவது பெரிய பாதகமான செய்கை என்று கொண்டார். ஆனால் அவருடைய அகக்கண்ணில் கமலசேகரன்மீது நல்ல அபிப்பிராயம் இல்லை. மாரனாகிய (மன்மதனாகிய) கமலசேகரனுடன் தம் பத்னி பேசுதல் தவறு என்று முடிவு செய்தார். மாளிகைக்குச் சென்றதும் தாம் இராஜ்ஞிக்கு சில விஷயங்களைச் சொல்லவேண்டும் என்றெண்ணினார்.

ஸர் சிருங்காரத்தின் விருந்தினர் யாவரும் தத்தம் வீடுகளுக்குச் செல்வதாயினர். இராஜா ஸிம்ஹனாதர் எல்லோரிடத்திலும் விடை பெற்றுக்கொண்டு தமது பத்னி

யோடு மோட்டாரில் ஏறிக்கொண்டு "இராஜவிலாஸ்" எனும் பெயரைக் கொண்டிருந்த தமது பெரிய மாளிகைக்குச் சென்றார்.

தமது மாளிகையை யடைந்ததும், இராஜா ஸிம்ஹள நாதர் தமது மனைவியிடத்தில் கமலசேகரன் ஸ்நேகத்தை அவள் அறவே விடுத்தொழியவேண்டும் என்று கூற வாயெடுத்தார். ஆனால் நேராகச் சொல்லாமல் வேறுவகை யில் இராஜீவியிடம் கலியாணச் சிறப்பைக்கூறி சதிபதிக ளின் இல்வாழ்க்கையின் மேம்பாட்டை யெடுத்துரைத்தார். குழந்தை சித்ராங்கதனுடைய வருங்வாழ்வு நன்கு இருக்க வேண்டுமானால் இராஜீவி கமலசேகரனுடைய ஸ்நேகிதையாக இருப்பது சரியல்ல என்று முடிவில் கூறினார்.

"இராஜம்! நான் உனக்குக் கூறிய விஷயங்கள் உனது நல்வாழ்வைக் கருதியேயாகும்.—நீ கமலசேகரனுடன் களித்துப்பேசியிருக்கலாகாது" என்றார் ஸிம்ஹளநாதர். "பிராண நாதா! உமக்கு சதா இக்கவலை ஏன்?—நான் சமூக ஆசாரப் படி கமலசேகருடன் பேசியதில் தவறென்ன?— தாம் இன்று அந்த ஐரோப்பிய மாதுடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கவில்லையா?—என்மீது ஏன் சந்தேகம்!—நான் அவரோடு பேசியது தமக்குப்பிடிக்கவில்லையா?" என்று இராஜீவி தனது கரிய நயனங்களைச் சுழற்றிய வண்ணம் கேட்டாள்.

இராஜா ஸிம்ஹளநாதர் தாம் கூறியவிஷயம் அவ்வமயம் இராஜீவியிடம் தெரிவித்தது சரியல்ல என்று நினைத்த தும் பயந்தார். மேனாட்டு ஆசாரத்தைக் கையாடி வரும் தாம் தமது அருமை மனையாட்டி இராஜீவிமீது

இல்லாத பொல்லாத சந்தேகங்களைக் கொண்டது சரி யல்ல என்றெண்ணினர்: அச்சந்தேகங்களை மறக்க எண் ணித் தமது மீசையைத் தடவிக்கொண்டார். ஆனால் அவ ருக்கு மறுபடியும் சந்தேக முதித்தது. அதை மறுபடியும் சொல்லக் கூடாதென்றெண்ணியவராய் அவளுக்கு மனக் கலக்கத்தோடு வந்தனமளித்துவிட்டு நித்திரை புரியச் சென்றார்.

சென்றதே, இராஜீவி தனது அறைக்குச் சென்று, கமலசேகரனுடைய அரிய திரு உருவத்தைத் தனது மனத் தில் இருத்திக்கொண்டு, அதை பூஜிப்பதாயினள். சிறிது நேரங்கழித்து அவள் தனது சயனவறைக்குச் சென்று, நித்திரை செய்கையில் கனவொன்றைக் கண்டாள். அது அவளுக்கு அச்சத்தை அளித்தது: சந்தோஷத்தையும் தந்தது. தான் கமலசேகரனோடும் ஸிம்ஹளநாதரோடும் அன்பு கொண்டிருப்பதாகவும் தான் அவ்விருவரையும் பணையாளர்களாக வைத்துக்கொண்டிருப்பதாகவும் கனவு கண் டாள்.

அந்தக்கனவு கண்டதும், கண்களைத்திறந்து பார்த்தாள். தான் கண்டது கனவு என்று தெளிந்தாள். ஆயினும் கமல சேகரனைக் காதலிப்பது காரிகை தனக்கு கௌரவமானது என்று அவள் உன்னினள்.

அங்ஙனம் அவள் கனவு பல பல தினங்கள் கண்டு கொண்டிருக்க, கமலசேகரனை அந்தரங்கமாகச் சந்தித்து வந்தாள். அப்பொழுது அவள் அடைந்த மனமகிழ்ச்சியை யாரே அளவிடவல்லார்!

அதிகாரம் 7.

குதிரைப் பந்தயம்.

முன் அதிகாரத்தில் கூறிய சம்பவங்கள் நிகழ்ந்து பனிரெண்டு மாதங்கள் இருக்கும்.

கமலசேகரன் இராஜீவியை அடிக்கடி சந்திப்பதில்தனது காலத்தைச் செலவழித்து, அம்மின்னற்கொடியின் சகவாசத்தில் சதா காலமும் அன்புடன் தனது மனதைச் செலுத்தியிருந்தபடியினால், துரைத்தனத்தார் அவனை ஒரு பெரிய போலீஸ்வேலையில் கமிஷனராகநியமித்தும் அவன் இராஜீவியின் மோகப்பித்தில் பைத்தியங்கொண்டிருந்தமையினால், அப்போலீஸ் உத்தியோகம் தன்னையும் இராஜீவியையும் பிரித்துவிடும் என்றெண்ணி அதை மறுத்துவிட்டான். அவன் அந்த உயர்ந்த வேலையை மறுத்துவிட்டதையறிந்து செண்பகவல்லிச்சீமாட்டியும் ஏனையோரும் கமலசேகரன்மீது கடுங்கோபங் கொண்டனர். துரைத்தன உத்தியோகத்தை கமலசேகரன் வேண்டாமென்று மறுத்தது அவனுடைய அகண்டைப்பிரியமோ என்று அவனுடைய நண்பர்கள், எண்ணினர். ஆனால் அவர்கள் இராஜீவியின் காதல் ஒரு முக்கிய காரணமாக நிற்பதை அறிந்தார்களில்லை.

இராஜீவியின் காதலின் வெள்ளத்தைக்கண்ட கமலசேகரனுக்கு குதிரைப் பந்தயங்களில் மிகவும் பைத்தியம் உண்டு. சென்னையில் அடுத்த டிஸம்பர் மாதம் வரும் குதிரைப் பந்தயத்திற்குத் தானும் பிரவேசித்து மைசூர் சேடயத்தைப் பெற எண்ணினான். அதன்பொருட்டு, அதிக விலை கொடுத்து, உயர்ந்த குதிரையொன்றை வாங்கினான்.

கிண்டி குதிரைப் பந்தயங்கள் டிசம்பர் மாதத்தில் ஆரம்பமானபடியினால் கமலசேகரன் சில சமயங்களில் இராஜீவியை சந்திக்க முடியவில்லை. குதிரைப் பந்தயதினம் வரும்பொழுது இராஜீவி தவறாமல் வந்து அவனைக்காணுவதாகச் சொல்லியிருந்ததையினால் கமலசேகரன் அவள் வருவதை எண்ணி உட்கார்ந்திருந்தான்.

அன்று மத்தியானம் அவன் அபரிமிதமான பணம் கொடுத்து வாங்கிய குதிரையைப் பார்க்கும் நிமித்தம் கிண்டி குதிரைப் பந்தயங்கள் நடக்கும் இடத்திற்கு அருகில் உள்ள லாயத்திற்குச் சென்றான். தான் அதுவரையில் அக் குதிரையின்மீது ஏறவில்லையென்பதை யுணர்ந்தான். அக் குதிரையைப் பழக்கியவன்தான் அதன்மீது அதுவரையில் சவாரி செய்ததை கமலசேகரன் அறிவானாதலால், தனது குதிரை எப்படிப்போகுமோ என்று பார்க்க எண்ணங் கொண்டிருந்தான். கமலசேகரன் அக்குதிரையிருந்த லாயத் தையடைந்ததும், அக்குதிரையை அதுவரையிலும் பழக்கி வந்த மனிதன் அக்குதிரையின் சொந்தக்காரனுக்கு வந்தன மளித்தான்.

“நீலமேகம் (குதிரையின்பெயர்) எப்படி இருக்கிறது?” என்று கமலசேகரன் கேட்டான்.

“சரியாகத்தானிருக்கிறது. எதற்கும் தாங்கள் லாயத் துள் போகவேண்டாம். நீலமேகத்திற்கு வாய்ப்பூட்டு ஒன்று போட்டிருக்கிறேன். அதனால் அது பயந்து காணப் படுகிறது,” என்றான் அம்மனிதன்.

“வாய்கட்டு இருந்தாலும் பரவாயில்லை, அதை நான் எப்படியும் பார்க்கவேண்டும்,” என்றான் கமலசேகரன்.

"சரி பாருங்கள்," என்றான் அம்மனிதன்.

கமலசேகரன் அவனைத்தொடர்ந்து சென்று லாயத்தில் தன் குதிரைக்குச் சிறிது தூரத்தில் சில குதிரைகள் இருப் பதைக் கண்டான். அங்கு 'கவர்னர்' எனும் பெயரைக் கொண்ட பெரிய புரவி ஒன்று அழகாக இருப்பதைக்கண்டு, நீலமேகம் எனும் தனது பரிமாவைப்பாராமல் தனக்குப் போட்டியாக நிற்கும் இரங்கபாஷியத்தின் கவர்னரைப் பார்த்து அதிசயங்கொண்டனன்.

"கவர்னர் எனும் பெயரைக்கொண்டிருக்கும் இக்குதி ரை இரங்கபாஷியருடையது," என்றான் குதிரைகளைப் பந்தய ஓட்டத்திற்குப் பழக்குவோன்.

"இரங்கபாஷியம் எனக்குப் போட்டியாக இருப்ப வன்," என்று கமலசேகரன் நினைத்துக்கொண்டான்.

"தாங்கள் கவர்னர்மீது சவாரி செய்யமுடியாது," என் றான் குதிரைகளைப் பார்த்துக்கொள்வோன்.

"படல் பந்தய ஓட்டத்தில், ஜயிப்பு, குதிரையைப் பொறுத்து இருக்கிறதல்லவா?" என்று கேட்டான் கமல சேகரன்.

"ஆம். அதிர்ஷ்டமும் வேண்டும்."

"துலிகாரமும் மனோதைரியமும் வேண்டும் என்று கூறினால் நலம்," என்றான் கமலசேகரன்.

பிறகு, அவன் நீலமேகத்தைப் பார்த்தான். கவர்ன ரைப்போல் அது இல்லாதிருப்பதைக்கண்டு மனஞ்சோர்ந் தான். ஆயினும் நல்ல இங்கிலீஷ் குதிரையானதால் அது

ஓட்டத்தில் கவர்னரை ஜெயித்தாலும் ஜெயிக்கும் என் றெண்ணினன். நீலமேகத்தை நெருங்கியவண்ணம் அவன் அதனுடைய தலையைத் தட்டிக்கொடுத்தான். அப்போது அக்குதிரை அஞ்சவில்லை. அதைக் கண்டு அவன் மிகவும் சந்தோஷித்தான்.

குதிரை லாயத்தைவிட்டு வெளியே வந்து "நீ குதிரை யை சரியாக நான்கு மணிக்குப் பந்தய இடத்தில் கொண்டு வந்து நிறுத்து. நீலமேகம் ஜெயித்தால் உனக்கு நல்லபரிசு கொடுக்கிறேன்," என்று கமலசேகரன் அக்குதிரை ஓட்டி யிடத்தில் கூறிவிட்டுத் தனது மாளிகைக்குச் சென்றான்.

அப்பொழுது மத்தியானம் இரண்டு மணி இருக்கும். உக்கிரமமான வெயில் இல்லாதிருந்தாலும் மப்புமந்தாரத் தோடிருந்த ஆகாயத்தில் கரிய மேகங்கள் காணப்பட்டு சிறிது நேரத்திற்கெல்லாம் மழையும் பொழியவாரம்பித்தது.

"ஐயோ! இதென்ன மழை வருகிறதே!" என்று கமல சேகரன் தன் மனதில் சொல்லிக்கொண்டே நடந்தான்.

மாளிகையை யடைந்ததும் கமலசேகரன் உதகமண்ட லத்திலிருந்து தனது தாயார் எழுதிய கடிதத்தைப் படித் தான். அதில் கிருஷ்ணவேணியைக் கலியாணம் செய்து கொள்ளும்படி ஷண்பகவல்லிச் சீமாட்டி வரைந்திருந்தாள். ஐயோ! நான் கிட்டியைக் காதலிக்கவில்லையே! மேலும் நான் இராஜீவியைக் காதலிப்பதை அவள் எப்படியோ தெரிந்துகொண்டிருக்கிறாள்.—கிட்டி இப்போது கொடைக் கானல்மலைக்குச் சென்றிருப்பதாக திவான்பகதூர் துரை சிங்கம் நேற்று சொன்னார்.—அவளுக்கு மனோவியாதி ஏற் பட்டிருப்பதாக டாக்டர்கள் கூறினார்களாம். அதனால் கிட்டி

யுடன் ஜெமீன்தாரும் ஜெமீன்தாரிணியும் போயிருக்கிறார்களாம்," என்று கமலசேகரன் தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டான்.

"ஐயோ! நான் ஒரு அழகிய ஸ்திரீயைக் கலியாணம் செய்துகொண்டால் நலம் என்று என் சுற்றத்தார் கூறுகின்றனர். அவர்களுக்கு இராஜீவியின் காதலைப்பற்றி ஒன்றும் தெரியாது போலும். இருந்தாலும் என்ன? நானும் இராஜீவியும் ஒருவரை ஒருவர் அன்போடு நேசிக்கிறோம். ஆதலின் அவளே எனக்கு ஒரு வாணநிதி: அவளைத்தான் நான் சிலமாதம் கழிந்து கலியாணம் செய்துகொள்ளவேண்டும்," என்று மறுபடியும் இராஜ ஹம்ஸப்பேடு அன்ன இராஜீவியை அவன் நினைத்துக்கொண்டு, மனச்சாந்தி பெற்றான்.

இராஜீவியின் காதல் மிக்க பரிசுத்தமானதென்றும் அதன்மீது யாரும் குறைசொல்லொண்ணாதென்றும் கமலசேகரன் நினைத்தான். ஆனால் அவன் மனது மாத்திரம் வேறு விதமாக எண்ணிக்கொண்டிருந்தது. இந்திய சமுதாயம் அவனை மிகவும் துன்மார்க்கன் என்று எடுத்துக்காட்டுவதன்றி அவனையும் இராஜீவியையும் பகிஷ்காரம் செய்பவராகும் என்பதையும் அவனுடைய மனது எண்ணியது.

இவ்வண்ணம் அவன் எண்ணிக்கொண்டிருக்கையில் பெய்துகொண்டிருந்த மழையும் நின்றது. மத்தியானம் மூன்று மணி சமயமும் ஆகிவிட்டதால் கமலசேகரன் தான் ஏன் இராஜீவியைப் பார்த்துவிட்டுப் போகலாகாது என்று எண்ணியவனாய்த் தக்க உடையணிந்துகொண்டு, சைதாப்பேட்டையில் வசிக்கும் இராஜீவியைக் காணும் நிமித்தம் மோட்டாரில் ஏறிச்சென்றான்.

மோட்டார் வண்டி சைதாப்பேட்டையில் இருக்கும் இராஜீவியின் பிரம்மாண்டமான தனி மாளிகையை யடைந்தது. கமலசேகரன் வண்டியை விட்டுக்கீழிறங்கி, மாளிகையின் தலைமண்டபத்தையடைந்து, அங்கிருந்த வேலைக்காரன் ஒருவனைவிளித்து, "எஜமானர் இன்னும் வெளியிலிருந்து வரவில்லையா?" என்று கேட்க அம்மனிதன் இல்லை என்றான்.

அதைக் கேட்டதும் சந்தோஷங் கொண்ட கமலசேகரன் துரிதமாக இராஜீவி இருக்கும் அறைக்குள் சென்று மாலை வந்தனம் கொடுக்க, பதில் வந்தனம் கொடுத்தபடி குழந்தை சித்ராங்கதனுடன் விளையாடிக்கொண்டிருந்த பேரணங்கு இராஜீவி புன்முறுவலோடும் இன்பத்தோடும் தனது காதலனை வருக என்று கூறி உபசரித்து உட்காரும்படி கூறினாள்.

கமலசேகரனும் இராஜீவியும் சில சமயங்களில் சந்தித்துப்பேச நேர்ந்தபொழுதெல்லாம் சித்திராங்கதன் எனும் அச்சிறிய மகன் இடையூறாக இருப்பது அவ்விருவருடைய மனதிற்கும் கலக்கத்தைக் கொடுத்து, இருவரும் சுயேச்சையாகக் காதற் பேச்சுகளைப் பேசவொட்டாதபடி செய்தமையால், என்ன செய்வது என்ன பேசுகிறது என்பது தெரியாமல் தமது நிலைமை மிகவும் கஷ்டமாக இருப்பதை அறிந்தார்கள். அக்குழந்தை தமது இரகசியத்தை அறியக்கூடாதென்றெண்ணி இராஜீவி கமலசேகரனை நண்பரே என்று கூறுவது வழக்கம். சித்திராங்கதனுடைய ஊடுருவிப்பாயும் விழிகள் சதா தன்மீது செலுத்தப்படுவதைக் கண்ட கமலசேகரன் மிகவும் துன்பகரமான இன்பத்தையடைந்தான்.

என்ன செய்யக்கூடும்? தனக்கும் இராஜீவிக்கும் உள்ள காதலை அக்குழந்தை எவ்வாறோ அறிந்துகொண்டு, தன்னை யும் தனது அன்னையையும் உற்று நோக்குவதை கமல சேகரன் சிறிதும் விரும்பாதவனாய், சாளரத்தின் வழியாகத் தோன்றும் பெரிய தோட்டத்தைப் பார்த்தனன்.—சித்தி ராங்கதனும் கமலசேகரன் முன்பு தான் எப்படி நடந்து கொள்கிறது என்பதை அறியாது திகைத்துக் கல்லாய்ச் சமைத்துவைத்த உருவம்போல் தனது விழிகளால் காதல ரிருவரையும் பார்ப்பதை வழக்கமாகக்கொண்டனன். நான்கு வயது கடந்த குழந்தை அன்றோ சித்திராங்கதன்? "இதென்ன? இவன் யார்? நான் இவனை அன்புடன் நேசிக் கலாகுமோ! என் தாயார் ஏன் இவனை நண்பர் என்கிறாள்? எனும் கேள்விகள் அச்சிறு பையன் மனதில் எழும். அவை களுக்கு ஒருவாறு சமாதானம் சொல்லிக்கொள்ளும் இயல் பையுடைய சித்திராங்கதன் அவ்விருகாதலர்களுக்கும் சமுத் திரத்தில் திசை தெரியாது தவிக்கும் மாலுமிகளுக்கு ஒரு திசைக்கருவிபோல் இருந்தான். இராஜீவி குடும்ப ஸ்திரீ யாதலால் அவள் தனது குடும்ப நெறியைக் கடந்து தீயவழி யிற் செல்லுதல் கூடாது என்பதாகவும் கமலசேகரன் அவ ளைக் காதலிக்கலாகாது என்பதாகவும் எண்ணத்தகுந்த திசைக்கருவியைப்போல் சித்திராங்கதன் இருந்தான்.

கமலசேகரன் இராஜீவியை யடைந்தபொழுது, தோழி களுள் ஒருத்தி சித்திராங்கதனை வேறிடத்திற்கு அழைத்துச் செல்வதைக்கண்ட கமலசேகரனுடைய ஹ்ருதயம் மிக்க சந் தோஷத்தையடைந்து, அல்லியைப்போன்ற வதனத்தைக் கொண்ட இராஜீவியை நாடிநின்றது. ஆனால் அவளுடைய முகம் விசனங்கொண்டிருப்பதை ஒரு விநாடியிலறிந்த கமல

சேகரன் அதன் காரணத்தை எளிதில் தெரிந்துகொண்டு, "இராஜம்! என் முகவாட்டம்?" என்றான்.

"ஒன்றுமில்லை," என்று இராஜீவி சொல்ல, கமல சேகரன், "கண்ணே! நீ என்னிடம் கூறலாகாதோ?" என்று கேட்க, இராஜீவி, "ஒன்றுமில்லை. எனக்கு தமது காதலால் இனி விளையும் கஷ்டங்களைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தேன். இவ்வுலகில் நாகரிகம் என்பது நமது சுயமான காதல் நெருப்புக்கு விரோதமாக இருக்கிறது. எல்லாம் வல்ல கடவுள் நம்மைப் படைத்தார். நாம் நமது மனப்போக்கின்படி நடக்கவேண்டுமென்று அவர் விரும்பி னாலும் மானிடராகப் பிறந்தோர் ஏதோ சில விதிகளை யநுட் டித்து வருகின்றனர். அச்சம்பிரதாயங்களுக்கு விரோத மாக நாம் நடந்தால் நம்மைத் தள்ளிவிடுவதன்றி நம்மையும் ஏசுகின்றனர். அதனால் நாம் நமதிஷ்டப்படி ஒன்றும் செய்வதற்கில்லை என்று எண்ணினேன். இத்தகைய விஷ யங்களை நினைத்தபடியினால் எனக்கு ஒரு மாதிரியான முக விகாரம் ஏற்பட்டது போலும்," என்று கூறினாள். ஆனால் அவளுடைய அகக்கண்ணில், "நான் இச்சந்தோஷ புருஷ னிடம் கூறலாகாதா அதை?" என்று ஒரு வினா எழுந்தது.

"கண்ணே, சந்தோஷம். உன் முகம் இல்லாத சிந்த னையில் இருப்பதுபற்றி எனக்கு ஆச்சரியம் உண்டாகிறது," என்று கமலசேகரன் சொல்ல, "சரி, உம்மிடம் ஒளிப்பதில் பயனில்லை. நான் வயிறு வாய்த்திருக்கிறேன். இதை ஒரு வரும் அறியாதபடி மிக ரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டும்." என்றாள் இராஜீவி.

கமலசேகரனுக்கு முகம் வெளுத்தது: கண்பிரகாசம் அற்றுப்போயது: உதடுகள் நடுங்கின, இருந்தாலும் ஒரு வாறு தன்னை தைரியப்படுத்திக்கொண்டு மிகவும் மெல்லிய குரலில், "இராஜம்! நமது காதல் நீர்க்குமிழிபோன்றதல்ல: மிகவும் தெய்வீகத்தன்மையுடைத்தானது: நாம் இருவரும் இத்தகைய அபாயகரமான நிலையிலிருந்து எப்படியாவது தப்பவேண்டும்," என்றான்.

"எப்படி, எப்படி? எனது புருஷனை?" என்று வாக்கியத்தை முடிக்காமல் பயமடைந்த முகத்தோடும் சோர் வடைந்த மனதோடும் கேட்டாள் இராஜீவி.

"நீ உன் புருஷனை விட்டுவிடவேண்டும். என்னுடன் வந்து இருக்கவேண்டும்," என்றான் கமலசேகரன்.

"நமது ஆத்மாக்கள் முன்பே கடவுள் திருவுளச்சம் மதப்படி ஒன்றாக ஆகிவிடவில்லையா?" என்று அம்மானினி கேட்க, "முழுதும் ஆகவில்லையே!" என்றான் கமலசேகரன்.

"சரி—எனது புருஷனுடைய மனைவி நானல்லவா?" என்று கேட்டாள் இராஜீவி.

"இராஜம்! நீ கஷ்டப்படுவது சரியல்ல. சமுதாயம், புருஷன், புதல்வன் என்பவைகளை நீ மறக்கவேண்டும். இல்லாவிட்டால் உனக்கு மனச்சாந்தி இல்லை," என்றான் கமலசேகரன்.

"ஐயோ! எனக்கு அவர் கணவன் இல்லை! நான் அவரை அன்புடன் நேசிப்பதே இல்லை! என்று இராஜம் சொல்லிக்கொண்டே கண்ணீர் உகுத்தாள்.

"அவரைப்பற்றி நீ எண்ணவேண்டாம்! அவரை மறந்துவிடு.—இராஜம்! இன்று நாம் ஒரு தீர்மானத்தோடு நடக்கவேண்டும்" என்றான் கமலசேகரன்.

"என்ன தீர்மானம்?"

"அவரிடம் எல்லாவற்றையும் கூறிவிடு: பிறகு என்னிடம் வந்துவிடு."

"நான் அவ்வண்ணம் உரைத்தால், அவர் என்ன செய்வார் தெரியுமா?"

"என்ன செய்வார்? கலியாண விடுதலைக்குத் தக்க வழிகளைத்தேடுவார்."

"ஐயோ! கலியாண விடுதலைக்கு நான் ஒப்பமாட்டேனே! சித்திராங்கதன் கதி என்னாகும்? அவர் என்னை என் மனப்போக்கின்படி நடக்குமாறு விடமாட்டார்! தமது உத்தியோகத்தை நடத்துவதுபோல் என்னையும் பாதுகாத்து சமுதாயம் சிரிக்காதபடி சித்திரவதை நான் அடையும்படி செய்வாரே!" என்றாள் இராஜீவி.

"நீ எல்லா விஷயங்களையும் உன்புருஷனிடம் கூறிவிடு. பிறகு நான் மேல்நடக்கவேண்டிய விஷயங்களை யோஜிக்கிறேன்" என்றான் கமலசேகரன்.

"ஐயோ! விஷயத்தைக்கூறி நான் உமது காதலை ஏற்றுக் கொண்டவள் என்றுகூறுவது! ஐயோ! நான் என்ன செய்வேன்?"

குழந்தையின்மீது அவள் பற்று மட்டற்று இருப்பதை யறிந்து கமலசேகரன் மிகவும் விசனம் அடைந்தான். எனினும் அதை மறைத்துக்கொண்டு, அவளுடைய சுந்தரவதனத்தைக் கூர்ந்து நோக்கினன்.

"நீர் இனிமேல் இம்மாதிரி நடக்கவேண்டாம். நானே என் விஷயத்தில் சர்வ ஜாக்கிரதையோடு நடக்கிறேன்," என்று பிரலாபத்துடன் இராஜீவி புகன்றாள்.

"ஐயோ! நீ மனவெழுச்சிகளால் கஷ்டப்படுவதைக் கண்டு கூறினேன்.—உன்னிஷ்டப்படியே நடந்துகொள்.—நான் உன் சந்தோஷ இருதயத்தைக் கெடுத்ததற்காக மிகவும் பரிதாபப்படுகிறேன்," என்றான் கமலசேகரன்.

"ஐயோ! தாம் புகல்வது புதுமையாக இருக்கிறதே! நான் பசிபுள்ளவள்போல் இருந்தபொழுது காதல் உணவு எனக்களித்தீர்!" என்று இராஜீவி கூறிக்கொண்டே கமலசேகரனுடைய வலதுகரத்தை எடுத்து முத்தமிட்டாள்.

"எனது இன்பத்தேனே! நான் குதிரைப்பந்தய ஓட்டத்திற்குச் செல்லவேண்டும். நீலமேகம் எனும் என் குதிரையின்மீது நான் சவாரி செய்யப்போவதை நீ வந்து காணுவாய் என்றே எண்ணுகிறேன்," என்று கூறிக்கொண்டே ஆசனத்தை விட்டு எழுந்திருந்தான் கமலசேகரன்.

"நான் வருவதாக முன்பே சொல்லியிருந்தேன். லேடி சங்கநாயகம் என்னை அழைத்துக்கொண்டு போவதாக கூறினள். அவளும் வரும் நேரம் ஆகிறது"—"என்று இராஜீவி மொழிந்ததும், கமலசேகரன் அவளிடத்தில் விடைபெற்றுக்கொண்டு அங்கு நின்றும் அகன்றான்.

கமலசேகரன் கிண்டியையடைந்தபோது நான்கு மணி ஆயிற்று. பந்தயக் குதிரைகள் ஓட ஆரம்பிக்கும் இடத்தில் அலங்கரித்து நின்றுகொண்டிருப்பதைக் கமலசேகரன் கண்டு சந்தோஷமும் உற்சாகமும் கொண்டான். தனது குதிரை நீலமேகம் கவர்னருக்கு அருகில் கெம்பீரமாக நின்று கொண்டிருப்பதையும் குதிரையை ஓட்டத்திற்குப் பழக்கிய மனிதனையும் கண்டு முகம் மலர்ந்தான்.

"ஐயா! தமது குதிரைப் பந்தயம் இன்னும் சிறிது நேரமான பிறகு நடக்கும். எல்லாம் தயாராக இருக்கிறது" என்றான் குதிரைகளைப் பழக்குவோன்.

கமலசேகரன் நீலமேகத்தை மறு முறையும் பார்த்துவிட்டு, ஜனங்கள் குழுமியிருக்கும் இடத்தையடைந்தான். அங்கே ஜனங்கள் சமுத்திர அலைகளைப்போல் சந்தோஷத்தோடு சப்தம் செய்துகொண்டும் அப்பொழுது தான் பந்தய ஓட்டத்தில் ஜெயித்த ஒருவனைக்கண்டு ஆரவாரம் செய்துகொண்டும் இருப்பதைக்கண்டு மனமாரக் கடவுளைத் தொழுதான். அப்பொழுது நடந்த குதிரைப் பந்தய ஓட்டம் முடிவுக்கு வந்து விட்டது என்பதை அறிவிக்கும் மணி அடிக்கப்பட்டது. அச்சப்தத்தைக் கேட்ட கமலசேகரன் ஒருபுறத்தில் நாற்காலிகளில் உட்கார்ந்து கொண்டிருந்த கனவான்களைக்கண்டான். அங்கு மாதர்களும் இருப்பதைக்கண்டான். லேடி ரங்கநாயகம், இராஜீவி முதலாயினோர் தனது சுற்றத்தார்களிடம் பேசிக்கொண்டும் பந்தய ஓட்டத்தை நோக்கிக் கொண்டும் இருப்பதையறிந்து மனம்பூரித்தான்.

அச்சமயத்தில் திவான்பகதூர் துரைசிங்கம் தன்னை நோக்கி வருவதையறிந்து சந்தோஷமடைந்த கமலசேகரன் அவருக்கு வந்தனம் அளித்துவிட்டு, அவரை வேறிடத்தில் குதிரைப்பந்தய ஓட்டம் முடிந்தபிறகு பார்ப்பதாகக் கூறி விட்டு வேறிடம் சென்றான். அங்கு தனது பெரியதாயாருடைய புதல்வர் ஒருவரைக்கண்டு சிறிது நேரம் வார்த்தையாடினான்.

பிறகு குதிரைப்பந்தய ஓட்டம் ஆரம்பிக்கும் இடத்திற்குச் செல்லுகையில் இராஜா ஸிம்ஹளநாதர் தமது மனைவிக்குச் சிறிது தூரத்தில் நின்று கொண்டிருப்பதைக்கண்டு சென்றான். சிறிது தூரத்தில் கவர்னர், நீலமேகம் முதலிய குதிரைகள் ஏனைய குதிரை சிலவற்றோடு நின்றுகொண்டிருப்பதைக் கண்டான்.

படல் பந்தய ஓட்டத்தில் ஏழாவது நம்பர் கொடுக்கப்பட்ட கமலசேகரன் நீலமேகத்தையடைந்து அதற்கு முதுகு தட்டிக்கொடுத்தான். இரங்கபாஷியம் என்பவர் கவர்னர் அருகில் நின்றுகொண்டிருப்பதைக்கண்டு அவருக்கு வந்தனம் செய்தான். கவர்னர் எனும் பெயரைக்கொண்ட அக்குதிரைக்கு அருகில் வைஸிராய் எனும் குதிரை நின்றுகொண்டிருந்தது. கமலசேகரன் ஓட்டத்திற்கு வந்து நின்ற குதிரைகளையெல்லாம் பார்த்துவிட்டு ஜனங்கள் யாவரும் தன்னையே நோக்குவதைக்கண்டு மனம் பூரித்தான். அப்பொழுது வாத்திய கோஷம் உண்டாகி நின்றது. "ஏறுங்கள்," என்று குதிரைப்பந்தய ஓட்டத்திற்கு அதிபதியாக நியமிக்கப்பட்ட கனவான் கூறியதும் எட்டு குதிரை வீரர்களும் ஏறிக்கொண்டனர். கமலசேகரன் தைரியத்தோடும் மந்த

ஹாஸம் தவழ்ந்த முகத்தோடும் நீலமேகம் எனும் குதிரை யின்மீது ஏறிக்கொண்டான். ஏறலும், கமலசேகரன் தனது போட்டிப் பந்தயக்காரர்களை ஒரு தடவை பார்த்துவிட்டு, யார் அவர்களுள் ஜயம் பெறுவர் என்பதாக நினைத்தான்.

அப்பொழுது துப்பாக்கி வெடிக்கும் சப்தம் உண்டா யிற்று. எல்லா குதிரைகளும் ஓடவாரம்பித்தன. கமலசேக ரன் குதிரையும் ஓடலாயிற்று. கமலசேகரன் கவர்னர் குதி ரை எங்கே இருக்கிறது என்று பார்க்க, அது முதலில் செல் வதைக்கண்டான். காணலும், அது அவனுக்கு மிக்க ஆச்ச ரியத்தை கொடுத்தது. நீலமேகத்தைப் போகும்படி தட்ட வும் அது கவர்னரைத் துரத்திக்கொண்டே செல்வதாயிற்று.

குதிரைப் பந்தய ஓட்டத்திற்கென்று ஐந்து அடி உய ரத்திற்கு எழுப்பப்பட்ட ஒரு தடங்கலான மணற்குவியலும், வறண்ட நீண்ட சிறுபள்ளமும் நீர் உள்ளபள்ளமும் ஒரு செங்குத்தான பாரையும், படல்களும் ஆகியவைகள் வைக்கப் பட்டிருந்தன.

நீர் உள்ள பள்ளத்தைத் தாண்டவேண்டிய சந்தர்ப்ப வந்ததும் பந்தய ஓட்ட அதிபதி தாண்டும்படி சொல்லவும் குதிரைவீரர்கள் யாவரும் அதிபதியின் சொல்லுக்குக் கீழ்ப் படிந்தவர்களாய் தாண்டுவதாயினர்.

எல்லார் கண்களும் குதிரைகளின்மீது சென்றன.

“ஓ! அங்கே போகின்றனர்! ஹா! அங்கே திரும்பு கின்றனர்!” என்று கூட்டத்தில் இருந்தவர்களுள் சிலர்பேசி னர். சிலர் நீருள்ள பள்ளத்தருகே ஓடினர். பந்தயக் குதி ரை மனிதர்கள் ஒவ்வொருவராகத் தமது புரவிகளைச் செலு த்தினர்.

நீலமேகம் மிகவும் பயந்துபோனமையினால் ஏனைய குதிரைகள் அதற்கு முன் சென்றுவிடுவதாயின. ஆனால் கமலசேகரன் குதிரையைத் தட்டிக்கொடுத்ததால் அது பயம் நீங்கி எல்லா குதிரைகளையும் கடந்து, கவர்னருக்குப் பின்னால் இரண்டாவதாகச் சென்றது. வைஸிராய் எனும் நாமத்தைக்கொண்ட பரிமா மூன்றாவதாகச்சென்று கொண்டிருந்தது.

நீருள்ள பள்ளத்தை ஒரே பாய்ச்சலில் பாய்ந்து தாண்டிய கவர்னர் எனும் குதிரை சீக்கிரமாகவும் வேகமாகவும் சென்று கொண்டிருந்தது. இரண்டாவதாக வந்து கொண்டிருந்த நீலமேகம் வெகு நன்றாக அப்பள்ளத்தைத் தாண்டிச் சென்றதால், கமலசேகரனுக்கு அதிக ஆச்சரியமும் ஆனந்தமும் உண்டாயிற்று.

நீருள்ள பள்ளத்தைத் தாண்டிச் சென்ற பின்னர் படல் பந்தயம் வந்தது. கவர்னர் முதலிலும் நீலமேகம் அடுத்தபடியாகவும் சென்று கொண்டிருப்பதைக் கண்ட கமலசேகரன் குதிரைப்பந்தய ஓட்டத்தில் ஜயம் தனக்கே வாய்க்கும் என்ற பூரண நம்பிக்கையோடு சந்தோஷங் கொண்டான்.

படல் பந்தயம் பார்ப்பதற்கு மிகவும் சிறந்தது. படல்கள் ஒவ்வொன்றின்பின் அடுக்கப்பட்ட காட்சி நன்றாகயிருந்தது. கவர்னர் குதிரை படல்களையெல்லாம் தாண்டிச் சென்றுவிட்டது. கமலசேகரன் குதிரையும் அவ்வண்ணமே தாண்டிச்சென்றது. படல் பந்தயம் முடிவுக்கு வந்ததைக் கண்ட கமலசேகரன் மிகுந்த ஆனந்தமடைந்து ஏனைய பந்தயங்களையும் முடித்துக்கொண்டான். நீரற்ற பள்ளம்

ஒன்றைத் தாண்டவேண்டியது கடைசியாக வைக்கப்பட்டிருந்தது. அக்கடைசி பந்தயம் வருவதற்குள் நான்கு குதிரைகள் மட்டும் தேல்வியடைந்து போனமையினால் ஏனைய நான்கு குதிரை வீரர்களும் கடைசி பந்தயத்தில் முதல் இரண்டாவது மைசூர் பரிசுகளைப்பெற ஆசைகொண்டனர். கவர்னர், நீலமேகம், வைஸிராய், வெல்வெட் எனும் பரிமாக்கள் உற்சாகத்தோடும் வேகத்தோடும் நீர் இல்லாத பள்ளத்தை நோக்கிச்சென்று கொண்டிருந்தன. நல்ல வேளையாக நீலமேகம் கவர்னரையடைந்து முதலில் சென்று கொண்டிருந்ததைக் கண்ட ஜனங்கள் கரகோஷம் செய்தனர்.

கமலசேகரன் மைசூர் கேடயத்தை எப்படியாவது பெறவேண்டும் எனும் எண்ணத்தைக் கொண்டிருந்தமையால் நீலமேகத்தை மிகுந்த வேகத்துடன் பறக்கும்படி செய்தான். ஆனால் கவர்னரை அது முந்தியதிலிருந்து அதற்கு களைப்பு மிகவும் மேலிட்டதால், அது தள்ளாடிய வண்ணம் ஓடிக்கொண்டிருந்தது. ஆனால் அலுப்பும் களைப்பும் மேலிட்டதால் அது கீழே விழுந்துவிட்டது.

நீலமேகம் ஓடிக்கொண்டு நீரற்ற பள்ளத்தைத் தாண்டுகையில் களைப்பால் அலுத்துக் கீழே விழுந்துவிட்டதையும் கவர்னர் குதிரை ஒரே தாவாகத்தாவி முதலில் சென்று விட்டதையும் வைஸிராய் இரண்டாவதாகப் போய்ச் சேர்ந்ததையும் கண்ட ஜனங்களுள் இராஜீவி மாத்திரம் மிகுந்த திகிலேயும் அச்சத்தையும் அடைந்தாள். அவளுக்கு அருகில் இராஜா ஸிம்ஹளநாதர் தமது மனைவியைக் கவனித்த வண்ணம் சிலருடன் பேசிக்கொண்டிருந்தார். கமலசேகரன் கவர்னர் குதிரையை இரண்டாவதாக வரச்செய்தது இராஜீவிக்கு

மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது. ஆனால் நீலமேகம் தனது எஜமானருடன் கீழே விழுந்ததும் உண்டான ஆரவாரத்தைக்கேட்ட யாவரும் திகிலடைந்தனர். கமலசேகரனுக்குக் காயம் உண்டாயிற்று என்பதைக் கேட்டதும் இராஜீவியின் வதனம் களேபரம்போல் வெளுத்துவிட்டது. தான் இருக்கும் இடத்தை விடுத்துச் செல்வதே சரியென்று அவளுக்குத் தோன்றியது. அதைக்கண்ட அவளுடைய புருஷர் ஸிம்ஹாஸநாதர் மெல்லிய குரலில் அவளுடைய தேக அசௌகரியத்தை விசாரித்தார். ஆனால் ஒன்றுமில்லை என்று இராஜீவி மொழிந்துவிட்டுக் கூட்டத்தை நோக்கினாள்.

இதற்கிடையில் நீலமேகம் கீழே விழுந்தமையினால் திணறிக்கொண்டே மூச்சுவிட்டுக் கொண்டிருந்தது. கமலசேகரன் குதிரைக்கு அப்பால் விழுந்துகிடந்தான். டாக்டர் ஒருவர் மிகவும் வேகமாக அவ்விடத்தையடைந்து குதிரையையும் கமலசேகரனையும் பார்த்துவிட்டு, நீலமேகம் அலுப்போடு வேகமாக விழுந்துவிட்டதனால் விலாவெலும்பு முறிந்து போயிற்றென்றும் அதனால் அது அட்சணமே மரிக்கும் என்றும் சொல்ல, கீழே விழுந்துகிடந்த கமலசேகரனுக்கு மிகுந்த விசனம் உண்டாயிற்று. மிகவும் தைரியத்தோடு கீழே விழுந்துகிடந்த கமலசேகரன் எழுந்திருந்து தனது புரவியையடைந்து அதனுடைய முடிவு நெருங்குவதைக்கண்டு கண்ணீர் சொரிந்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் நல்ல வேளையாகக் காயம் சிறிதும் படாத அந்த சுந்தர புருஷன் நீலமேகம் உயிர் நீத்ததையறிந்து துக்கத்துடன் நேராகச் சென்று தனது மோட்டாரில் ஏறிக்கொண்டு மாளிகைக்குச் சென்றான்.

கமலசேகரன் மாளிகைக்குப் போனதை யறியாத இராஜீவி மிகுந்த மனக்கலக்கத்துடன் பதுமைபோல் காணப்பட்டாள். அவள் அத்தகைய கலக்கத்துடன் இருக்கும் பொழுது கூட்டத்தில் ஒரு கனவான் "கமலசேகரனுக்குக் காயம் எதுவும் உண்டாகவில்லை. ஆனால் அவருடைய குதிரை மட்டும் இறந்து போயிற்று," என்று மற்றொருவரிடம் சொல்வதைக் கேட்டு இராஜீவி பெரிதும் மனம் ஆறுதல் அடைந்தாள். அதை இராஜா ஸிம்ஹளநாதர் கண்டு மனம் புழுங்கினார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் இராஜீவி தனது ஸ்நேகிதர்களுடன் உத்திரவு பெற்றுக்கொண்டு தனது கணவரோடு வண்டியில் மாளிகைக்குச் சென்றாள்.

குதிரை வண்டி மெதுவாகப் போய்க்கொண்டிருக்கையில் ஸிம்ஹளநாதர் தமது மனைவியைப்பார்த்து ஏதோபேச வாய்திறக்க, அது முடியாதது கண்டு தத்தளித்தார். ஆனால் இராஜீவி தமது அருமை மனையாட்டியாதலின் அவளுக்கு புத்திசொல்ல வேண்டுமென்றெண்ணி, "நாம் பார்க்கத்தகாத சம்பவங்களைக் காண்பது நலமல்ல," எனலும் "தாம் கூறுவதன் கருத்தை யான் அறிந்துகொள்ளவில்லையே," என்றாள் இராஜீவி.

ஸிம்ஹளநாதருக்கு சிறிது சினம் உண்டாயிற்று என்றாலும் அதை ஒருவாறு அடக்கிக்கொண்டு, "நான் உனக்கு சொல்லியே தீரவேண்டும்," என்றார்.

இராஜீவிக்குப் பயம் உண்டாயிற்று.

"இன்று உனது நடத்தை மிகவும் வெறுப்பைக்கொடுத்தது," என்றார் ஸிம்ஹளநாதர்.

"எப்படி?" என்று கோபத்தோடு கேட்டாள்! இராஜீவி. அப்பொழுது தைரியம் அவளிடம் இருந்தது.

"ஜாக்கிரதையாக நீ இருக்கவேண்டும்.—குதிரைப் பந்தய ஓட்டத்தில் ஒருவன் குதிரையோடு கீழே விழுந்தபோது உன்முகம் ஏன்வாட்டமடைந்தது?" என்று கூறிக்கொண்டே ஸிம்ஹளநாதர் தமது மனைவியின் முகத்தைக்கூர்ந்து நோக்கினார். அவள் பதில் ஒன்றும் கொடுக்கவில்லை.

"நான் தான் முதலில் உனக்குவேண்டிய நற்புத்திகளைக் கூறியிருக்கிறேன்! ஜன சமூகத்தில் உன் பெயரைக் கெடுத்துக் கொள்வது சரியல்ல. உலைவாயை மூடலாம். ஊர் வாயை மூடமுயற்சிப்பது மிகையாம். முன்பு ஒரு தடவை உனது உள்ளத்தின் எண்ணங்களைப்பற்றிக் கூறியிருக்கிறேன். இப்போது உனது வெளியில் காணப்படும் தோற்றங்களைக் கூறுகிறேன். இப்படி நீ இனிமேல் நடக்கக்கூடாது," என்றார் ஸிம்ஹளநாதர்.

அவள் அவருடைய சொற்களை ஏற்றுக்கொள்ளவில்லை. பயம் அவளை அழுத்தியது. கமலசேகரன் ஒருவனையே அவள் நினைத்தாள். ஸிம்ஹளநாதரை உற்று நோக்கினாள். அவர், தாம் அவளை அவ்விதம் நினைத்தது தவறு, என்று எண்ணி வருத்தத்துடன் இருப்பதை இராஜீவி கண்டாள். தைரியத்துடன் மெல்லிய குரலில் "நீர் நினைத்தது உண்மையே! எனக்கு வருத்தம் கலக்கம் உண்டானபடியால் தான் அவ்விதம் நடந்தேன். ஓ! அவரையே நான் நினைக்

கிறேன். அவரையே நான் காதலிக்கிறேன். உமக்குத் துரோகம் செய்துவிட்டேன். உம்மைப் புருஷனாக இனிமேல் கொண்டிருக்க முடியாது! உம்மை வெறுக்கிறேன்! நீர் என்னை என்ன செய்தாலும் செய்யும்!" என்று கூறிக்கொண்டே தனது கைகளால் முகத்தை மூடிக்கொண்டு கண்ணீரும் கம்பலையுமாக இருந்தாள்.

இராஜா ஸிம்ஹளநாதர் ஒன்றும் பேசாமல் சும்மா இருந்தார். அவரது முகம் மாறுபடவில்லை. சிறுது நேரங் கழித்து, "இராஜம்! மாளிகையில் யாவர் முன்னும் முன் மாதிரியே இருப்போம். நான் என்ன செய்வேன் என்பதை உனக்குச் சடுதியில் தெரிவிப்பேன்," என்றார்.

அதிகாரம்—8.

மதுபான விலக்கு.

சூலூர் கிராமத்திலே தனது காலத்தைக் கழித்துக் கொண்டிருந்த சுந்தரராங்கனுக்கு நாளாக நாளாக கிருஷ்ண வேணியின் நினைவு மறைந்துபோகும் ஸ்திதிக்கு வந்ததும், அவன் தன் கவனத்தையெல்லாம் விவசாய விஷயங்களில் செலுத்தத் தலைப்பட்டதினால், அவ்வருஷ முடிவில் மிகுந்த லாபம் கிடைக்குமென்று சந்தோஷமடைந்தான். அதிகாலையில் எழுந்திருந்ததும் அவன் காலைக்கடன்களை முடித்துக் கொண்டு, சிற்றுண்டியருந்திவிட்டுத் தனது காரியதரிசியான இரங்கனுதருடன் வியாபார சாபார விஷயங்களைப் பற்றிப் பேசிவிட்டு, வயல்களுக்குச் சென்று குடியானவர்கள் தன் பொருட்டு உழுது பயிரிட்டு வருவதைப் பார்ப்பது

வழக்கம். அங்கு அவன் பயிரிடுவோர்களிடம் அன்பாகப் பேசி, சிறிது நேரம் கழிப்பான். அவர்களுடைய கஷ்டங்களையெல்லாம் தெரிந்துகொண்டு சில சமயங்களில் சில கஷ்டங்களை நீக்குவதன் பொருட்டு பணவுதவி செய்வான். இத்தகைய செய்கைகளைச் செய்து வந்தாலும் சுந்தராங்கன் தனது பெருத்த தனத்தில் ஒரு பாகத்தை ஆஸ்பத்திரி ஒன்றுக்கும், பள்ளிக்கூடம் ஒன்றுக்கும் கொடுக்காமையினால் அவைகள் சீர்குலைந்து நாசமுறும் நிலையில் இருந்தன. சுந்தராங்கன் அவைகளைப்பற்றிச் சிந்திப்பதற்கும் அவகாசத்தைக் கொண்டிலன்.

மத்தியான நேரத்தைச் சுந்தராங்கன் தினசரிகள், புஸ்தகங்கள் முதலியவைகளைப் படிப்பதில் செலவழிப்பது வாடிக்கை. சாயங்காலம் தனியாக எங்கேயாவது செல்லுவான். அங்ஙனம் அவன் தன் காலத்தைக் கழித்துவந்தான்.

ஒரு நாள் திவான்பகதூர் துரைசிங்கத்திடமிருந்து அவனுக்கு நிருபம் ஒன்று வந்தது. அதில் அவர் கிருஷ்ணவேணி கோடைக்கானல் மலையில் தனது பெற்றோர்களுடன் சௌக்கியமாக இருப்பதாகவும் பிப்ரவரி மாதக் கடைசியில் மலையை விடுத்து உதகமண்டலம் போவதாகவும், தமது மனைவி கமலம் கோவைக்குப்போய் ஒரு பிரசங்கம் செய்யப் போவதாகவும், அப்பொழுது அவளாவது சுந்தராங்கனைக் கோவையிலோ அல்லது சூலூரிலோ சந்திக்கவேண்டுமென்பதாகவும், தாம் ஸர்க்கார் விடுமுறை நாட்களில் சூலூரில் இரண்டு தினங்களைக் கழிக்கப்போவதாகவும் எழுதியிருந்ததைக்கண்ட சுந்தராங்கன் தனது காதலை ஏற்றுக்கொள்ள மறுத்த கிருஷ்ணவேணியின் நினைவு மனதிற்கு வரும்படி செய்தவனைப் யோசித்தான்.

"கிட்டிக்கு என்ன உடம்பு? அவள் ஏன் கோடைக் கானல் மலைக்குச் சென்றாள்? கமலசேகரனை அவள் கலியாணம் செய்துகொண்டிருப்பாள் என்று நான் முதலில் எண்ணியிருந்தேனே! அவனுடைய காதலையும் மறுத்துவிட்டாளோ? அல்லது எனக்கு முடியாது என்று கூறிய விடைக்காக மனோவியாதி கொண்டனளோ? என்னைக் காதலிக்கிறாளோ? இல்லா விட்டால் மனோவியாதி ஏன்?—அவள் என்னைக் காதலித்துக் கலியாணம் செய்துகொண்டால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்? தெய்வம் என்று கூறப்படும் சர்வ சக்தியுள்ளவர் என்னை ஏனோ படைத்தார்? நான் இப்புவியில் ஏன் பிறந்தேன்? இதன் தத்துவத்தை நான் இன்னும் சரியாக உணரவில்லையே? ஒருதடவை ஒரு மாதிரி நினைக்கிறேன்! பின்னொருதடவை பின்னொருமாதிரி நினைக்கிறேன்!—சரி இப்பொழுது இத்தத்துவத்தைப்பற்றி எனக்கென்ன யோசனை? பிறகு பார்த்துக்கொள்வோம்"—என்று சுந்தராங்கன் யோசித்துக் கொண்டிருக்கையில் சேவகன் ஒருவன் தந்தி ஒன்றைக் கொடுத்துவிட்டுச் சென்றான். தந்தியைப் படித்த அச் சுந்தராங்க புருஷன் சந்தோஷத்தினால் முகம் மலரப்பெற்றவனாய், "ஹா! என் மூத்த தமையன் விட்டல் ரங்கர் மதனரங்கனோடு என்னைக்காணும் நிமித்தம் வரப்போகிறார்? நாளை காலையில் வருகிறார் அல்லவா?—அவர் வட இந்தியாவில் துரைத்தன கலாசாலையின் பிரின்சிபல் ஆக அன்றோ இருக்கிறார்? அவரை நான் பார்த்து அதிக மாதங்கள் ஆகியிருந்தாலும் கெட்டுப்போன தொன்றுமில்லை. நாளைகாலை நானே போத்தனூருக்குச் சென்று அவர்களிருவரையும் அழைத்து விடுகிறேன்," என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

மறுநாள் காலை சுமார் ஒன்பது மணிக்கு சுந்தராங்களு டைய மாளிகையில் மூன்று சகோதரர்களும் சேர்ந்துகாணப் பட்டனர்.

பிரின்சிபல் விட்டல் ரங்கர் என்பவருக்கு நாற்பது வயது இருக்கலாகும். பார்ப்பதற்கு மிகுந்த அழகைக் கொண்டிருந்தார். அவருக்கு வட இந்தியாவில் துரைத்தன காலேஜிகளுள் ஒன்றில் பிரின்சிபல் வேலை இருந்தது. தர்க்க சாஸ்திரத்திலும் செல்வவிருத்தி சாஸ்திரத்திலும் (Economics) அவரை எவரும் வெல்ல முடியாது. பெருத்த சம்பளத்தை மாதா மாதம் வாங்கிக்கொண்டிருந்த அச்சீமானுக்கு மனைவியாவது புத்திரப்பேறாவது இல்லாதிருந்தது, அவருக்கேக விசனத்தைக் கொடுத்தது. அவர் துரைத்தன வேலையில் தமது கவனத்தையும் நேரத்தையும் செலுத்தியிருந்தமையினால் வருஷத்திற்கொருதடவை தமது சகோதரர்களுக்கு கடிதம் வரைவது வழக்கமாகயிருந்தது. மதனரங்கன் நல்வழியில் இருந்து வருவதையுணர்ந்ததும் அவருக்குச் சொல்லொணாத சந்தோஷம் உண்டாகியது. அவனையும் சுந்தராங்கனையும் குலாரிலே சேர்த்து வைத்துவிட்டால் மிகவும் நலமென்றும் தமது அளவற்ற செல்வத்தை மதனரங்கனுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்றும் அவர் எண்ணியிருந்தார். மேலும் சகோதரர்களுடைய மத்தியில் நாட்டு வளப்பங்களைக் கவனித்துக்கொண்டே தமது ரஜா நாட்கள் முப்பதையும் செலவழிக்க எண்ணியிருந்தது அவருடைய சகோதர வாத்ஸல்யத்தைக் காட்டி நின்றது.

குலாரையடைந்ததும் விட்டல் ரங்கர் எனும் மகா நிபுணர் தமது வட இந்திய நாட்டு உடுப்பைக் களைந்துவிட்டு,

தென்னாட்டு முறைமைப்படி ஷர்ட்டும் வேஷ்டியும் போட்டுக் கொண்டார். அதேமாதிரி சுந்தரரங்கனும் மதனரங்கனும் உடைதரித்திருந்தனர்.

அந்த மூன்று சோதரர்களும் சிற்றுண்டி அருந்திய பின்னர் பொதுவாக இந்தியாவின் ராஜ்ய விஷயங்களைப் பற்றிப் பேசியிருந்தனர்.

இவ்வண்ணம் நான்கு தினங்கள் சென்றன.

ஒரு நாள் அம்மூன்று சகோதரர்களும் சேர்ந்து உட்கார்ந்திருந்தபொழுது கிராம வாழ்க்கைக்கு முக்கியமான சில விஷயங்களைப்பற்றி சம்பாஷணை ஏற்பட்டது. அதை இங்கே வரைவது முக்கியம்.

“நம் நாடு செழித்துச் சிறப்போடு இருக்கவேண்டுமானால் மதுஸாரம் முதலிய பேய்கள் ஒழிந்திடவேண்டும்,” என்றான் மதனரங்கன்.

“மதுபானங்களை இருக்கலாகாது. அவைகளினாலே தான் ஜனங்கள் சீரழிந்து தெருவில் நிற்கிறார்கள் என்று மகாத்மா காந்தியடிகள் சொல்லுகின்றனர்,” என்றார் பிரின்சிபல் விட்டல் ரங்கர்.

“நமது ஊரில் ஜனங்கள் கள் குடிப்பது சொல்லி முடியாது. பத்தொன்பது லட்ச ரூபாய்க்குக் குறையாமல் கோயமுத்தூர் ஜில்லாவில் கள் விற்பனையாகிறதென்று விமோசனம் எனும் பத்திரிகை கூறுகிறது,” என்றான் சுந்தரரங்கன்.

"ஆம், நமது இந்திய கவர்மெண்டாருக்கு இருபத்து நான்கு கோடி ரூபாய் கலால் வரி வருமானம் வருஷமொன்றுக்கு வருகிறது என்று பொக்கிஷ மந்திரியே கூறுகிறார்.

இந்த இருபத்திநான்கு கோடி ரூபாய் துரைத்தனத்தார் அடைய வேண்டுமாயின் ஜனங்கள் மொத்தத்தில் நூறு கோடி ரூபாய் நஷ்டமடைய வேண்டியிருக்கிறது. இது பண நஷ்ட மாத்திரம் இல்லை. தேக நஷ்டமும் மான நஷ்டமும் கள் குடிப்பதால் உண்டாகின்றன. இவ் விஷயங்களை யெல்லாம் விமோசனம் எனும் பத்திரிகை வாயிலாக நான் அறிந்தேன்," என்றான் மதனரங்கன்.

"நாம் இப்போது பேசும் மதுபான விலக்கு எனும் விஷயம் விமோசனத்திலிருந்து கையாளப்படுகிறது என்றால் அப்பத்திரிகையின் புகழ் எப்படி சிறந்து விளங்குகிறது பார்த்தீர்களா?—இச் சென்னை ராஜதானியில் கள்ளுக்கும் சாராயத்திற்கும் கொடுக்கும் ரூபாய் 20,00,000க்கு குறைவில்லை. விமோசனம் பத்திராசிரியர் சொல்லுகிறபடி. அப் பணத்திற்கு நல்ல அரிசி வாங்கினால் தினம் ஒன்றுக்கு ஒவ்வொரு ஜில்லாவில் 1,000 மூட்டை வாங்கலாம். 40 லக்ஷம் பேருக்குப் பசிதீரச் சோறுபோடலாம். ஏழைகள் மதுபானங்களில் போடும் பணத்தை நல்வழியில் உபயோகித்தால் இந்திய தேசமானது ஐக்கிய நாட்டு அமெரிக்காவைப்போல் ஆகும். அங்கே ஜனங்கள் மதுபானங்களையே தொடுவதில்லை. சட்டப்படி அங்கே மதுபானம் பகிஷ்காரம் செய்யப்பட்டிருக்கிறது. பூரண மதுவிலக்குச் சட்டம் அமெரிக்கா தேசமெங்கும் ஏற்பட்டு ஒன்பது வருஷம் ஆகிறது. இந்த ஒன்பது வருஷங்களில் அந்நாடு அடைந்திருக்கும்

மேம்பாட்டை அந்நாட்டு வியாபார மந்திரியின் வருமாறு சொல்லுகிறார். (சான்று விட்டல் ரங்கர் விமோசனத்திலிருந்தும் படிக்கிறார்.) தேசத்தின் மொத்த வருமானம் மூன்று நூறு கோடி டாலர் அதாவது நூற்றுக்கு நாற்பத்தைந்து விதம் அதிகமாயிருக்கிறது. சாமான் உற்பத்தியும் உபயோகமும் நூற்றுக்கு இருபத்தைந்து விதம் அதிகமாயின. முப்பத்தைந்து லட்சம் புதிய வீடுகள் கட்டப்பட்டன. ஒரு கோடி நாற்பது லட்சம் மோட்டார் வண்டிகள் இக்காலத்தில் செய்து விற்கப்பட்டன. தொழிலாளிகளின் வேலை நேரம் குறைந்திருக்கிறது. சம்பளம் அதிகமாயிருக்கிறது. ஹைஸ்கூல் மாணாக்கர்கள் நூற்றுக்கு அறுபத்தியாறு விதமும் காலேஜ் மாணாக்கர்கள் நூற்றுக்கு எழுபத்தைந்து விதமும் அதிகமாயிருக்கிறார்கள்— இவைகள் எல்லாம் பூரணமது பான விலக்குச் சட்டத்தினால் ஏற்பட்டன," என்றார் விட்டல் ரங்கர்.

"ஏன் நம்ம நாட்டிலும் அத்தகைய சட்டம் ஏற்படுத்தக்கூடாது?" என்று சுந்தராங்கன் கேட்டான்.

"துரைத்தனத்தாரும் ஜனங்களும் சேர்ந்து விலக்குச் சட்டத்தைக் கொண்டுவரலாம். பூரண மதுவிலக்குச் சட்டம் செய்துவிட்டால் திருட்டு வியாபாரம் நடக்கும் என்று ஒரு பயம் காட்டிவருகிறார்கள் துரைத்தனத்தார். ஆனால் இது பொய் வாதம். கொலை, களவு, மோசடி இவைகளை விலக்கச் சட்டம் செய்திருக்கவில்லையா? ஆனாலும் அவை சில சமயங்களில் நடக்கவில்லையா? அதற்காக சட்டத்தை ரத்துசெய்ய முடியுமா? எது எப்படிப்போனாலும் கவர்ன்மெண்டார் மதுவிலக்குச் மசோதா ஒன்றை சட்ட சபையில்

கொண்டுவந்து அதை ஒரு சட்டமாக்கவேண்டும்,” என்றான் மதன ரங்கன்.

“ நமது நாட்டில் கள் இறக்குவது பெருத்த விபரீதமாக இருக்கிறது. மற்ற தேசங்களில் சாராயம் காய்ச்சவும் பீர் முதலிய மதுபானம் செய்யவும் உணவுப் பொருள்களைப் பாழாக்குகிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டில் உணவுப் பொருள்களைப் பாழாக்குவதோடு அப்பொருள்களைத்தரும் மூலாதாரமான நல்ல மரங்களையே பாழாக்குகிறோம். ஒயின் செய்ய திராட்சைப் பழங்களைக் கசக்கிச் சாறு எடுக்கிறார்கள். செடியைப் பாழாக்குவதில்லை. ஆனால் கள்ளின் பொருட்டு தென்னை மரங்களையே நாசப்படுத்திவிடுகிறோம். கள்ளெடுப்பதால் மரம் சாகாது என்று சிலர் சொல்லலாம். ஆனால் கள்ளெடுக்க விடப்பட்ட மரத்தின் பலம் குறைந்து போகும். வளர்ச்சி குறைந்துபோகும். ஆயுள் குறைந்து போகும். இவை எவனுக்கும் தெரியும். மரத்தின் ஜீவரஸம் தான் காயாகிறது. எந்த அளவுக்கு வேண்டுமோ அந்த அளவுக்கு மரம் தன் இரத்தத்தைக்கொண்டு கருத்தரித்து உண்டான சிசுவுக்கு உணவு ஊட்டி வளர்த்துவரும். கள்ளிறக்குவதோ அப்படியல்ல. மரத்தின் ஈரம் வற்றும் வரையில் குடத்தில் வடியவேண்டியது. அதன் கஷ்டம் நமக்குத் தெரியாது வாயில்லாதபடியால் கொஞ்ச நாள் வரையில் பொறுத்துக்கொண்டிருந்து பிறகு உயிரைவிட்டு விடுதலையடைகிறது,” என்றார் விட்டல் ரங்கர்.

“ அண்ணா! நாம் கூறியதிலிருந்து நான் சில விஷயங்களைத் தெரிந்துகொண்டேன். மதன ரங்கனும் முன்பே மதுவிலக்கைப்பற்றி எனக்கு கூறியிருக்கிறான். நாம் இவ்

ஊரில் மதுவிலக்குப் பிரசாரம் செய்யவேண்டும். அதன் பொருட்டு சில மெட்ரிகுலேஷன் படித்த மனிதர்களைக் கொண்டு மதுபானத்தின் தீங்குகளை ஜனங்களுக்குச் சொல்ல வேண்டும்," என்றான் சுந்தரரங்கன்.

"தம்பீ! நீயும் மதனனும் சேர்ந்து இவ் விஷயத்தில் உழைத்தால் மிகுந்த நலமானது. பெரிய பெரிய மகான்களுடைய அபிப்பிராயங்களையும் தெரிவிக்கவேண்டும். மகாத்மா காந்தியடிகள்," கள்ளுக்குடியை துன்மார்க்கப்பழக்கம் என்று சொல்லுவதைக் காட்டிலும் அதை ஒரு வியாதி என்று சொல்லுதலே அதிக பொருத்தமாயிருக்கும். நோயாளிகளுக்குச் கட்டாயப்படுத்தி மருந்து கொடுப்பதுபோல் குடிகாரர்களுக்கும் பலவந்தமாக நோய்தீர உதவி செய்யவேண்டும்," என்று சொல்லுகிறார்கள். ஆங்கில ஆசிரியரும் உலகப் பிரசித்தம் பெற்றவரும் ஆனபேர்னார்டுஷா மதுபானத்தைப் பற்றிச் சொல்கிறதாவது:— "ஆறுதுளி மதுசாரம் ஒருவன் வயிற்றில்போனால் அவனுடைய பகுத்தறிவு பத்தில் ஒரு பங்கு குறைந்துவிடுகிறது. உடம்பு ஏதோ நல்ல நிலைமையிலிருப்பதுபோல் அவனுக்குத் தோன்றும். ஆனால் அவனுடைய அறிவானது மழுங்கி எவ்வித யோசனைக்கும் தகுதியற்றதாகும். உலகில் மக்கள் மிகவும் கேடான சமூக நிலைமைகளைச் சகித்துக்கொண்டு முன்னேற்றமடையப் பெருமுயற்சி எதுவும் செய்யாதிருப்பதற்குக் காரணம் கோடிக் கணக்கானபேர் மதுபானத்தால் மூளைமழுங்கி, மந்தமடைந்துவிட்டிருப்பதேயாகும்," என்றார் விட்டல் ரங்கர்.

"அண்ணா! தாம் கூறியவாறே மதுபானத்தினால் அபரிமிதமாக உண்டாகும் மரணங்களைப் பற்றியும் கூறலாகும் உதாரணமாக இங்கிலாந்து அரசாங்கத்தின் ஸ்தல சுயாட்சி

கமிட்டி சுகாதார விஷயங்களில் யோசனை சொல்லப் பிரதம வைத்தியர்களை நியமிப்பதுண்டு. சில காலத்துக்கு முன் இந்த உத்தியோகம் வகித்த ஸர். ஆர்தர் நியூஷோம் என்பவர்," "சுகாதார வைத்தியர்கள் தேசத்தின் பல பாகங்களிலும் மரண விகிதத்தைக் குறிப்பிடும் தேச படம் ஒன்று தயாரித்தார்கள். அதை ஆராய்ந்து பார்த்ததில் எந்த விடங்களில் மதுபானக்கடைகள் அதிகமோ அங்கே தான் ஜனங்களின் வறுமை அதிகம். அங்கே தான் மரணவிகிதமும் அதிகம், என்றார்," என்றான் மதனரங்கன்.

"நாம் இதுமாதிரி பல அபிப்பிராயங்களை எடுத்துக் காட்டலாம். ஒரு கிராமம் தற்கால நாகரீகத்துடன் இருக்க விரும்பினால் முதலில் மதுபானத்தை விலக்கும் வழிகளைக் கையாடவேண்டுவது அவசியம்," என்று சுந்தராங்கன் கூறிக்கொண்டிருக்கையில், மதனரங்கன் தான் சில ஜனங்கள் குழுமியிருக்கும் ஓர் இடத்திற்குப்போய் மதுபான விலக்கு, கூட்டுறவு சங்கம் ஆகிய இரண்டு விஷயங்களைப் பற்றிப் பேசவேண்டும் என்பதாகத் தெரிவித்தான். ஏனைய இரு சகோதரர்களும் சந்தோஷத்துடன் போய்வருமாறு கூறினார்கள். கூறலும், மதனரங்கன் அங்கு நின்றும் அகன்றான்.

அன்று சாயுங்காலம் பிரின்ஸிபல் விட்டல் ரங்கரும் சுந்தராங்கனும் இரமணீகரமானதும் பச்சைப் பசேரென்றிருந்ததும் ஆன பயிர்பச்சைகளையும் பஞ்சவர்ணக்கிளிகளையும் கருங் காகங்களையும், ஆடுமாடுகளையும் பார்த்துக்கொண்டே அவைகளைப்பற்றி சம்பாஷித்தவண்ணம் குளிர்ந்த இனிய காற்றை உட்கொண்டே சிறிது தூரம் நடந்துசென்று ஒரு உயர்ந்த மணல்திட்டின்மீது உட்கார்ந்து கொண்டனர்.

"தம்பீ இன்று மத்தியானம் கீழே சருக்கிவிழுந்து தலையைக் காயப்படுத்திக்கொண்ட கந்தப்ப கவுண்டனுக்கு வைத்தியர் கோவையிலிருந்தன்றோ வர வேண்டியிருந்தது. ஒரு ஊரில் இரண்டு மூன்று டாக்டர்களாவது மருந்து கொடுக்குமிடங்களாவது இருக்கவேண்டும். ஒரு சிறந்த பாடசாலை இருக்கவேண்டும். இவ்வூரில் உள்ள மகா ஜனங்கள் எல்லாரும் சேர்ந்து தக்க தீபங்களையும் ரோடுகளையும் பார்த்துக் கொள்ளவேண்டும். நீ தாலூகா போர்டில் மெம்பராகவே இருக்கவேண்டும்," என்று பிரின்ஸிபல் விட்டல் ரங்கர் கூறினார்.

"தாம் கூறுவதை நான் யோசித்தே தீரவேண்டும்," என்றான் சுந்தரரங்கன்.

"நல்லது மதனரங்கனுக்கு இவ்வூரிலேயே இருந்து கிராம வாழ்க்கையைப்பற்றி சீர்திருத்தங்கள் கொண்டுவர எண்ணுகிறான். எனது ஆஸ்தியில் ஒரு பாதியான நான்கு லட்ச ரூபாயை அவன் பெயருக்குக் கொடுத்து விட்டேன். நீயும் அவனும் கிராமவாஸிகளுக்குகந்த சீர்திருத்தங்களைச் செய்து இந்த சூலூரை முன்னேற்றமடையுமாறு செய்ய வேண்டும். கூடிய சீக்கிரத்தில் கிட்டியை நீ கலியாணம் செய்துகொள்ள முயற்சிக்கவேண்டும். உனக்கு கடவுள் ஏன் மனிதனைப்படைத்தார் எனும் கேள்வி விசித்திரமாகக்காணப்படுகிறது. நான் எத்தனையோ கூறியும் நீ சந்தேகப்படுகிறாய்! சிறிது காலத்திற்குப் பிறகு அறிந்து கொள்ளுவாய்" என்றார் விட்டல் ரங்கர்.

அதிகாரம்—9.

ஸிம்ஹளநாதரும் இராஜீவியும்.

இராஜா ஸிம்ஹளநாதருக்கு எப்பொழுதும் பரிதாபம் என்பதே கிடையாது. கல் மனது கொண்டவர். யாராவது ஒருவர் தமது காரியம் சித்தியாகவேண்டுமானுல் அவரிடம் வருத்தமாகப்பேசினுல் அது பிசகு என்று ஸிம்ஹளநாதரால் கருதப்படும் என்று ஸிம்ஹளநாதருடைய நண்பர்கள் கூறுவார்கள். அதே மாதிரி இராஜீவி தான் தனது கணவனைக் காதலிக்கவில்லையென்று கூறிக்கண்ணீரும் கம்பலையுமாக உட்கார்ந்து கொண்டதைக்கண்ட ஸிம்ஹளநாதருக்கு அவள் மேல் வெறுப்பாவது பகைமையாவது முதலில் உண்டாகவில்லை.

தமது மாளிகையையடைந்ததும் அவர் இராஜீவியிடம் வழக்கம்போல் பேசிக்கொண்டிருந்து விட்டு மறுநாள் காலை அவளுக்குத் தமது தீர்மானத்தைக் கொடுப்பதாக சொல்லிச் சென்ருர்.

இராஜீவியின் வார்த்தைகள் புண்ணில் பல கத்திகள் எடுத்துக் குத்துவதைப்போல் அவருக்குக் காணப்பட்டன. ஆனுலும் தாம் முன்பு அவள்மீது கொண்டிருந்த சந்தேகம் உண்மையே என்று அறிந்ததும் அவருக்குச்சொல்லமுடியாத சந்தோஷம் உண்டாயிற்று. தாம் இனிமேல் சந்தோஷமாக கவலையில்லாமல் நிம்மதியுடன் வசிக்கலாம் என்றெண்ணினுர்.

" இராஜம் சீரழிந்துபோனாள்! மரியாதை, மதம், அன்பு முதலியவைகளை மறந்துபோனாள்! நான் அவள்மீது கொண்டிருந்த சந்தேகம் இப்போது உறுதிப்பட்டு உண்மையை வெளியாக்கியது. அவள் முன்பு பேசியதெல்லாம் வெளிப்பகட்டு போலும்! நான் அவளை இல்லக்கிழத்தியாக ஏற்றுக்கொண்டபொழுதே பெரிய முட்டாள்தனமான காரியத்தைச் செய்துவிட்டேன்! ஆனால் அவள்தான் குற்றவாளி: அவள் இனிமேல் எனக்கு மனைவியல்ல. அவளுடைய புத்திரனும் எனக்குப் புத்திரனல்லே. உலகம் என்னைப் பழிக்காதா? ஆனால் கொடிய பாபத்தை அவள் செய்தால் நான் ஏன் வருந்தவேண்டும்? நான் ஒரு வழியைக் கண்டுபிடித்து, அதிலிருந்தும் என்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். நான் ஏன் கமலசேகரனோடு விரோதம்கொள்ளலாகாது? நான்தான் அவனை மனதார வெறுக்கின்றேனே! நான் ஏன் டைவோர்ஸ் (Divorce) எனும் சட்டத்தை இப்பொழுது நாடலாகாது? ஐயோ? எனது மனைவிமீது நான் கலியாண விடுதலை வழக்கு கொண்டுவந்தால் உலகம் என்னைப் பார்த்து சிரிக்குமே! அது கூடாது. மேலும் கலியாண விடுதலை எனக்குக் கிடைத்தாலும் இராஜீவி கமலசேகரனையன்றோ மணந்துகொள்ளுவாள்? சண்டாளனாகிய அவனை இராஜம் மணாளனாக அடையலாகாது! நாம் ஏன் தனியாக வஸிக்கலாகாது? ஐயோ! அது முடியாது! எனக்கு சந்தோஷமே இல்லாமற்போகும்! அவள் நான் கொண்டுவரும் தீர்மானத்தில் கமலனுக்கு மனைவியாக ஆகக் கூடாது. அவளுடைய பாபங்களுக்குத் தக்கபடி அவள் மனோவேதனை அடையவேண்டும். அதுதான் தகுந்த தண்டனை.—சரி—நான் இராஜத்தை எனது பாதுகாப்பிலேயே வைத்திருக்கவேண்டும். உலகத்தார் இராஜீவியின் குற்றத்தையறியலாகாது! காதலனும் காதலியும் ஒருவரையொரு

வர் இனிமேல் சந்திக்காதபடி செய்யவேண்டும். நான் இம்மாதிரி நடந்தால் தான் கடவுளின் குழந்தையாகிய அவள் தன் குற்றத்தையுணர்ந்து நல்வழிப்படுவாள்! என் பெயரும் கெடாது!—ஆனால் சுயாதீனம் கொண்ட அவள் என் கட்டளைகளை நிறைவேற்றுவாளா? ஒரு கால் மாட்டேன் என்று சொன்னால் என்ன செய்வது?" என்று எண்ணினார்.

ஸிம்ஹளநாதர் அத்தகைய எண்ணங்களைக் கொண்டிருந்த அதே சமயத்தில் இராஜீவி தனது அறையில் உட்கார்ந்துகொண்டு யோசனையில் ஆழ்ந்திருந்தாள். தான் செய்தது தவறு என்று அவளுக்கு ஒரு முறை தோன்றிற்று. ஆனால் இனிமேல் தான் சந்தோஷத்துடனும் நிம்மதியுடனும் இருக்கலாகும். பொய் புனை சுருட்டு முதலியவைகளைக் கணவனுக்குக் கூறவேண்டியதில்லையென்று நினைத்தாள்.

மறுநாட்காலை இராஜீவி மறுபடியும் சிந்தனையில் ஆழ்ந்தாள்: மனம் பல எண்ணங்களை எண்ணியது. "நேற்றிரவு கமலசேகரன் மிகவும் ரகசியமாக என்னிடம் வந்தபொழுது நான் ஸிம்ஹளநாதரிடம் கூறியவற்றைக் கூறாமல் போனேனே! நான் என் சொல்லாமல் இருந்தேன்? சந்தேகமானதே! ஓ! அவமானம் எனக்கு உண்டாகும் என்றல்லவோ நான் சும்மா இருந்தது!—ஐயோ! என் புருஷன் என்னைப் புறக்கணித்தால் சமுதாயம் நகைக்காதோ? இதுவரையிலும் என்னுடன் ஸ்நேகமாக இருக்கும் ஸ்திரீபுருஷர்கள் எனது குற்றத்தை யுணர்ந்தால் என்னோடு ஒருவார்த்தையேனும் பேசுவார்களோ? ஏசுவார்களே! ஏளனமாக நிந்திப்பார்களே! இதை எல்லாம் ஆலோசியாது கமலசேகரனுடைய அன்பை அடைந்துவிட்டேனே!—இத்தனை வருஷகாலம் இம்மாதிரி

கைக்கு எஜமானியாக இருந்த என்னை நியாயசபையில் இழுத்துவிட்டால் நான் மானம் இழந்துபோய் கேவலமான ஸ்திதிக்குவந்து விடுவேனே! பிறகு நான் எங்கே போகக்கூடும்? இராணி எனும் கௌரதைப்பட்டம் போகுமே! உயர்ந்த அந்தஸ்தும் போய்விடுமே! என்ன செய்வேன்?— கமலசேகரன் எனது காதலை இனிமேலும் ஏற்றுக்கொள்வானா? அவனாலன்றோ எனக்கு இக்கதி உண்டாகிறது! புருஷனுடைய காதலை விடுத்து அவனை நான் மணாளனாகக் கொண்டால் எனது புதல்வன் சித்திராங்கதன் கதி என்னாகும்! அவனுடைய முகத்தை எப்படி நான் பார்க்க முடியும்? எனது தோழி பத்மாவின் முகத்தைப்பார்ப்பதற்கே எனக்கு வெட்கமாகிறதே," என்று சிந்தித்துக்கொண்டிருக்கையில் கண்ணிலிருந்தும் வந்த நீரைத்துடைத்துக்கொண்டனள்.

"கடவுளே! கடவுளே! நான் இனி என்னசெய்வேன்? என் புருஷன் ஸிம்ஹளர் இதையெல்லாம் எப்படிப்பொறுத்துக்கொண்டிருக்கலாகும்?" என்று இராஜீவி மறுபடியும் எண்ணுகையில் பத்மா எனும் தோழி உள்ளே வந்து காப்பியும் பலகாரமும் தயாராக இருப்பதாகவும் சித்திராங்கதன் அவள் வருகையை எதிர்நோக்குவதாகவும் சொன்னாள்.

"என் மகன் எங்கே?" என்று இராஜீவி கனவில் கேட்பதுபோல் கேட்டுவிட்டு, அந்த அறைக்குச்சென்று, அங்கு தனது பையனைக்கண்டாள். காணலும் திடும்பிரவேசமாக பல எண்ணங்கள் ஜனித்தன. தான் எந்த நிலைமையில் இருந்தபோதிலும் சித்திராங்கதனைவிட்டுத் தனித்திருக்க முடியாது என்று அவள் முடிவுசெய்தாள். பிறகு தனது புதல்வனோடு துன்பத்தோடு கூடிய இன்பத்துடன் விளை

யாடிக் கொண்டே பலகாரத்தைத்தின்று காப்பியைப் பருகிளுள்.

அச்சமயம் பத்மா செந்தலைப்பூச்சி ஒருவன் அப்பொழுது தான் கொண்டுவந்த ஒரு உறைக்கடிதத்தை வாங்கிக் கொண்டு அதை இராஜீவியிடம் கொடுத்தாள். இராஜீவி தனது குழந்தையின்முன் அதைப் படிக்கக்கூடாது என்றெண்ணித் தனியாகத்தனது அறையையடைந்து, உறையைக் கிழித்து கடிதத்தைப் பிரித்து வாசித்தாள். அது பின்வருமாறு இருந்தது:—

"எனது முடிவான தீர்மானத்தை உனக்கு அறிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். நான் நீரயோசித்தேன். இந்த தீர்மானத்திற்கு வந்தேன். நீ எத்தகைய பாபகரமான செய்கையைச் செய்திருந்தாலும் சர்வ வல்லமையுள்ள ஈசுவரன் ஒருவர் நம்மிருவரையும் சதிபதிகளாகச் செய்த நல்ல விவாக சடங்கிற்கு நான் விரோதமாக நடப்பதில்லை. குடும்பம் என்பது ஒரு ஸ்திரீயினுடைய பாபகரமான செயலுக்கு இரையாகலாகாது. நமது வாழ்க்கையில் ஒருகாலும் மாறுதல் ஏற்படலாகாது. காரணத்தை நீ அறிந்தேயிருப்பாய். சித்திராங்கதன் என்று கூறிஞல் உனக்கு உண்மை புலப்படும். நீ உனது செயலுக்கு எல்லாம்வல்ல இறைவனது மன்னிப்பைக் கேட்டிருப்பாய் என்று நினைக்கிறேன். நாம் இருவரும் முன் நடந்த விஷயங்களை அறவே மறந்துவிட வேண்டும். இல்லாவிட்டால் உனக்கும் உன் குழந்தைக்கும் என்ன கேடு நேரிடும் என்பதை நான் இப்போது கூறமாட்டேன்!—நான் இரண்டு மூன்று தினங்களுள் தஞ்சாவூர் போய் திரும்பி வரவேண்டியிருக்கிறது. உத்தியோக அலுவலில் போகிறேன். ஸிம்ஹளநாதன்."

அந்நிருபத்தை வாசித்ததும் இராஜீவிக்கு துக்கம் உண்டாயிற்று. "எனது புருஷன் சொல்வது உண்மையே. தெய்வபக்தி மிகுந்த அவர் நன்னடக்கையும் உத்தம குணமும் கொண்டவர்! ஆனால் உத்தியோக அலுவலில் அவர் என்னை அன்போடு நோக்குவதையே மறந்து விட்டார்! நான் ஒரு உயிருள்ள பிராணி என்பதையும் எனக்குக்காதல் அவசியமானது என்பதையும் அவர் ஏன் மறந்துபோனார்? கடவுள் என்னைப்படைத்ததன் காரணம் நான் சுகமாகவாழவும் ஒருவரை அன்போடு நேசிக்கவும் என்பதை அவர் ஏன் மறந்தார்? நான் என் செய்வது? அவர் என்னை என்ன செய்யக்கூடும்? சித்திராங்கதனைத் த ம் மி ட ம் வைத்துக்கொள்ளலாகும். ஆனால் நான் அவனைவிட்டுப் பிரிந்து எங்ஙனம் வாழலாகும்? அவன் எனது உயிர் அல்லவா? அவனில்லாமல் நான் கமலசேகரனைக் காதலிக்கமுடியாது!!—சரி என்ன வந்தாலும் வரட்டும். நான் பொய் சொல்லவேண்டிய காரணம் இல்லாமல் போயிற்றே! அதுவே போதுமானது. தெய்வமே! தெய்வமே!" என்று மறுமுறையும் உருக்கத்தோடு உன்னினாள்.

மறுநாள் சாயுங்காலம் இராஜீவி தனது காதலன் கமலசேகரனை மிகவும் ரகசியமாக சென்னையில் ஓரிடத்தில் சந்தித்து, தன் கணவனுடைய கடிதத்தை அவனிடம் அளித்து அவன் அதைப்படித்து முடிக்கும்வரை உன்னிப்பாக அவனையே நோக்கிக் கொண்டிருந்தாள்.

அக்கடிதத்தைப் படித்தும் கமலசேகரன் கண்ணில் ஒருவகையான பிரகாசம் உண்டாயிற்று. "கண்ணே! நான் விரும்பினது விரும்பியபடியே நடக்கிறது, அதுவே சந்தோ

ஷம். இனிமேல் உன்னை நான் மிகுந்த ஆசையோடு காதலிக்கலாம்," என்று அச்சுந்தரபுருஷன் தனது காதலியை நோக்கி உரைத்தான்.

"சந்தோஷம்!" என்றாள் உவகையுடன் இராஜீவி "ஸிம்ஹளநாதரிடம் நீ விஷயங்களை யுரைத்தும் அவர் உனக்கு இக்கடிதமெழுதியதும் நமது சந்தோஷத்தைக்கருதியேயாகும். உண்மையை நீ உரைத்தது சரியாயது," என்றான் கமலசேகரன்.

"சரி,— இக்கடிதத்தைக்கொண்டு எத்தகைய மனிதர் அவர் என்பது உமக்குத்தெரியலாகும்," என்றாள் இராஜீவி.

"நாளைக்கு நாம் தனியாகப் போய்விடலாமா?" என்று கமலசேகரன் ஆர்வத்தோடு கேட்க, இராஜீவி "எனது புதல்வன்? அவனை நான் பிரிந்துவரமுடியாது. அவர் அவனை இருத்திக்கொண்டால் என்ன செய்வது?" என்று துக்கத்துடன் மொழிந்தாள்.

"இராஜம்! எனது அன்புள்ள இராஜம்! உன் மகனைப் பிரிந்திருக்க முடியாதென்றால் என்னவாகும்? தற்போது இருக்கும் நிலைமையிலேதான் நீ இருக்க நேரிடும்," என்றான் கமலசேகரன்.

"நான் யோசித்துத்தான் எதையும் செய்ய இயலும்," என்று இராஜீவி கூறியதும் அவளது கண்ணில் நீர் வருவதாயிற்று.

சிறிது நேரமானதும் அவ்விரண்டு பேரும் பிரிந்து போயினர்.

உத்தியோக அலுவல்களை முடித்துக்கொண்டு தஞ்சையிலிருந்தும் திரும்பிவந்த இராஜா ஸிம்ஹளநாதர் சைதாப்பேட்டையிலிருக்கும் தமது மாளிகையை யடைந்ததும் சிற்றுண்டி யருந்திவிட்டு நேராக மாடியில் உள்ள அந்தரங்கமான பெரிய அறையையடைந்து, இராஜீவியை அங்கே வரும்படி செய்தி சொல்லியனுப்ப, பத்மாவும் அதைத்தனது எஜமானியிடம் தெரிவித்தாள். இராஜீவியும் மிகவும் நொந்துபோன மனதைக் கொண்டிருந்தாலும் கமலசேகரனுடைய காதலைக் கருதி எப்படியாவது புருஷனிடம் கடைசி முறையாகப் பேச நினைத்து, சிறிது தைரியத்துடன் ஸிம்ஹளநாதருடைய அந்தரங்கமான அறைக்குச் சென்றாள்.

அங்குச் சென்றதும் தனது புருஷர் நாணத்தினால் தமது தலையைத்திருப்பிக் கொள்வதைக்கண்ட இராஜீவிக்கு மிகுந்த வெட்கமுண்டாயிற்று. ஆனால் அவர் அதைவிடுத்து, அவளை உட்கார்ந்து கொள்ளும்படி கூறினார். அவர் பேச முயன்றபோது அது மிகுந்த கஷ்டத்தைக் கொடுத்தது.

"சித்ரன் (குழந்தை) சௌக்கியமா?" என்று ஸிம்ஹளநாதர் கேட்டார்.

"ஸிம்ஹளநாதரே! நான் குற்றம் செய்த ஸ்திரீ, மிகவும் கொடியவள்! ஆனால் எனது காதலை மாற்றமுடியாது," என்று இராஜீவி துணிகரத்துடன் ஸிம்ஹளநாதருடைய கேள்விக்கு விடைகூறாமல் புகன்றாள்.

"நான் இதையெல்லாம் கேட்கவில்லை. நீ காதலை மாற்றமாட்டாய் என்பதை நான் அறிவேன்.—இருந்தாலும் உன்னால் என்னுடைய பெயர் கெடலாகாது. நமது பழக்க

வழக்கங்கள் முன்போல் உலகத்தினருக்குக் காணப்படவேண்டும். அத்துமீறி நடப்பாயானல் நான் உன்னை தண்டிக்கலாகும்," என்று தமது கட்டை விரலை நோக்கிக்கொண்டே வந்த கோபத்தை வெளிவிடாமல், ஸிம்ஹள்நாதர் கூறினர்.

"ஐயோ! நாமிருவரும் சேர்ந்து முன்புபோல் ஒருமித்து வாழமுடியாதே!" என்று பிரலாபித்தாள் இராஜீவி.

"நான் உமது மனைவி அல்லவே," என்ன, ஸிம்ஹளநாதர் கொடியதும் கெட்டதுமான ஒரு சிரிப்பு சிரித்தார்.

"நீ செய்தது குற்றமாயினும் அதை நான் பொருட்படுத்தவில்லை," என்றார்.

"ஸிம்ஹளநாதரே! தாம் என்னை என்ன செய்யச் சொல்லுகின்றீர்?" என்றாள் இராஜீவி.

"நீ கமலசேகரனை இனிமேல் இங்கே சந்திக்கலாகாது. சந்தித்தால் கெட்ட பெயர் உண்டாகும். நீ அவனை எந்த இடத்திலும் கண்டு பேசலாகாது. நீ இவைகளுக்கு ஒப்புக்கொண்டால் காதலற்ற எனக்கு வெளிக்கு மாத்திரம் நீ மனைவியாக இருக்கலாம்.— நான் நாளையதினம் சில ஜில்லாக்களுக்கு உத்தியோக அலுவல்களின் பொருட்டு இவ்வூரை விட்டுப்போகவேண்டும்," என்றார்.

அதிகாரம்—10.

சுந்தராங்கன்–ஸிம்ஹளநாதர்

திவான்பகதூர் துரைசிங்கம் சுந்தராங்கனுக்குத் தமது மனைவி கோவைக்குச் சென்று பிரசங்கம் செய்யப்போவதாக

வும் அப்பொழுது அவளாவது சுந்தராங்கனாவது சந்திக்க லாகும் என்பதாகவும் கடிதம் எழுதியது வாசகருக்கு நினை வில் இருக்கும். அவருடைய கடிதம் கிடைத்த சில தினங் களானதும் சுந்தராங்கன் துரைசிங்கம் பிரபுவுக்கு தக்கபதில் எழுதியனுப்பிவிட்டு, கமலத்திற்கும் ஒரு கடிதம் எழுதினான். கமலம் பிப்ரவரி மாதக்கடைசியில் சூலூரில் ஒரு நாளாவது தங்கியிருந்து போகவேண்டுமென்று எழுதினான். கமலமும் அதற்கு உடன்பட்டாள்.

பிப்ரவரி மாதமும் முடிவுக்கு வந்து கொண்டிருந்தது. சுந்தராங்கனுடைய மூத்த சகோதரர் ரஜா முடிந்துபோன மையினால் சூலூரை விடுத்து வட இந்தியாவிற்குச் சென்று விட்டார். மதனாங்கன் சூலூரிலேயே தனது சகோதரன் மாளிகைக்குச் சிறிது தூரத்தில் ஒரு மாளிகை கட்டி அதில் வசித்துவரலானான். அவன் கிராம விஷயங்களில் தலையிட்டுக் கொண்டிருந்தானாதலின், ஜனங்கள் அவனை மிக வும் விரும்பலாயினர். சூலூர் தாலூகா போர்டுக்கு அவன் ஒரு மெம்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

இது நிற்க: பிப்ரவரி மாதம் முடிவுக்குவர இரண்டு தினங்கள் இருக்கும்பொழுது, கோவையில் ஸ்திரீ சங்கத் தின் முன்னிலையில் பிரசங்கம் செய்யும்பொருட்டு சென்னை யை விடுத்த திவான் பகதூருடைய பெண்ஜாதி கமலம் மறு நாள் சூலூரில் வந்து சுந்தராங்கனைக் கண்டு சந்தோஷமடைந் தாள். அன்று மத்தியானம் சுந்தராங்கனும் கமலமும் இனி யதான ஒரு சம்பாஷணையில் ஆழ்ந்து கிடந்தனர்.

"தமது புருஷர் ஏனோ வரவில்லை?" என்று சுந்தராங் கன் கேட்டான்.

“ரஜா கிடைக்கவில்லை,” என்றாள் கமலம்.

“தமது சகோதரி கிருஷ்ணவேணி சௌக்கியமடைந்து விட்டதாக எனது நண்பர் எழுதியிருந்தார்.”

“கிட்டி இப்போது உதகமண்டலத்தில் இருக்கிறாள். அவள் என்னையும் அங்கே வரும்படி கேட்டிருக்கிறாள்.”

“சந்தோஷம்.”

“உதகமண்டலத்தில் அவள் ஏகாந்தமான இடத்தில் இருக்கப் பிரியப்படுகிறாளாம்.”

“பூரணசுகம் அடைந்து விட்டாளா?”

“பூரணசுகத்துடன் இருக்கிறாள். நான் அவளுக்கு மைத்ரேயியாதி என்கிறண்ணாவேயில்லை.”

“சந்தோஷம்.”

“சரி—நான் உம்மை ஒரு கேள்வி கேட்கிறேன்.”

“கேளுங்கள்.”

“தாம் ஏன் கிட்டிமீது கோபங்கொண்டீர்?”

“நானா? நான் கோபங்கொள்ளவில்லையே?”

“இல்லை நீர் கோபங்கொண்டிருந்தீர். சென்ற தடவை தாம் சென்னைக்கு வந்தபோது நம்மையெல்லாம் வந்து ஏன் பார்க்கவில்லை!”

“அம்மா! தாம் எனது மனதை அறிந்து கொண்டே கேட்கிறீர்களா?”

"எனக்கு ஒன்றும் தெரியாது."

"நான் கிட்டியிடம் சென்றதும் அவள் என் காதலை மறுத்ததும்."—என்றதும் சுந்தராங்கனுடைய சுந்தர நயனங்களிலிருந்து நீர் முத்துப்போல் வடிந்தது.

"எனக்கு அவ்விஷயம் எப்படித் தெரியலாகும்?"

"திவான்பகதூர் சொல்லியிருப்பார் என்றெண்ணினேன்."

"சரி—அது கிடக்கட்டும்.—உமக்கு என் சகோதரி மீது பகை ஏதாவது உண்டா?"

"ஒன்றும் இல்லை."

"ஐயோ! அவள் மிகுந்த நல்லவள் ஆயிற்றே!—இப்போதுதான் எல்லாம் நன்றாகத் தெரிகிறது."

சுந்தராங்கன் திகைத்தான்.

"நீர் அவளைப்போய் கலியாணம் செய்துகொள் என்று கேட்டதினால் அவளுக்கு என்ன கூறுவது என்பது தெரியாமல் வாயில் வந்ததைக் கூறிவிட்டாள் போலும்!"

"என்னமோ?"

"உம்மைப்போன்ற ஆடவர்கள் முதலில் காதலிக்கிறார்கள். பின்பு கலியாணத்தைப்பற்றிக் கேட்கிறார்கள். சில பெண்கள் அத்தகைய கேள்விகளுக்கு முடியும் முடியாது என்று ஏதாவது சொல்லுவார்கள்"

"கமலசேகரனும் நானும் அவளைக் காதலித்தோம். காதல் என்பது பரிசுத்தமானது. தெய்வீகத் தன்மை உடையது. கடையில் விற்கும் சொக்காயைப் போன்றதல்ல.—சரி.—நான் இனிமேல் கலியாணத்தைப்பற்றி பேச்செடுப்பதில்லை."

"நீர் கிட்டியைக் கேட்டபோது அவளுக்கு என்ன சொல்வது என்பது விளங்கவில்லைபோலும். கமலசேகரனை எப்பொழுதும் பார்த்துக்கொண்டேயிருந்தாள். உம்மைக் காணுவது கஷ்டமாகயிருந்தது. அதனுல் தான் முடியாது என்று அர்த்தமில்லாமல் கூறினுள்"

"அம்மா! தமக்கு நான் வந்தனம் செய்கிறேன். நான் கிட்டியை மணந்து கொள்ளவேண்டுமென்பது தமக்கு எண்ணம் என்று தெரிகிறது."

"ஆம்—நீர் கிட்டியை உதகமண்டலத்தில் வந்து சந்திக்கவேண்டும். நான் அப்பொழுது அங்கே இருப்பேன்."

"அது முடியாது."

"நீர் அப்படிச் சொல்லக்கூடாது."

"கிட்டி விஷயத்தைப்பற்றி என்னிடம் நீர் பேசவேண்டாம்.—தாம் கோவையில் இன்றிரவு பேசும் விஷயத்தைப் பற்றியாவது பேசினுல் நலம்."

"நீர் என்னேடு வரப்போகிறீரே!—நாம் இவ்விடத்தை விடுத்து மோட்டாரில் போகவேண்டும்."

அன்று சாயுங்காலம் கமலம் மோட்டாரில் ஏறிக் கொண்டு சுந்தராங்கனுடன் கோயமுத்தூருக்குப் பிரசங்கம் செய்யும்பொருட்டு சென்றாள்.

ஒரே மாளிகையில் சதிபதிகளிருவரும் சேர்ந்து வஸித்துவந்தாலும் ஒருவருடைய செய்கை மற்றவர்களுக்குத் தெரியாதபடி இராஜீவி நடந்துகொண்டாள். கமலசேகரனை அவள் ஸிம்ஹளநாதருடைய மாளிகையில் ரகசியமாக வரச்செய்து பேசாவிட்டாலும் சில இரகசிய இடங்களில் அவனை அன்போடு சந்தித்துப்பேசி வரும் வழக்கத்தைக் கொண்டிருந்தாள். அவ்விஷயம் ஸிம்ஹளநாதருக்கு மட்டும்தெரியும்.

அம் மூன்று ஜீவன்களும் தத்தம் கஷ்டகாலம் நீடித்திராது என்று கொண்ட எண்ணமே அவர்களுக்கு அதிக வருத்தத்தைக் கொடுக்கவில்லை. தமது மானம் பங்கப்படலாகாது என்று ஸிம்ஹளநாதர் உறுதியாய் எண்ணியிருந்தார். எல்லாருடைய கஷ்டங்களுக்கும் காரணபூதமான கனகப்பாவை இராஜீவி கூடிய சீக்கிரத்தில் கஷ்டமுண்டாகும் என்றெண்ணியிருந்தாள். கமலசேகரனும் அதே எண்ணத்தைக் கொண்டிருந்தான்.

இப்படியிருக்கும்பொழுது கமலசேகரனுடைய நண்பன் ஒருவன் சென்னையை முதல் தடவை பார்க்கும்பொருட்டு ஜெர்மனியிலிருந்து வந்தான். அவன் இராஜவமிசத்தைச் சேர்ந்தவனாதலின், கமலசேகரன் அவனை மிகுந்த அன்போடும் ஆசையோடும் வரவேற்று நகரினையெல்லாம் காண்பித்தான்.

அந்த நண்பன் பம்பாயிக்குப் புறப்பட்டுப்போன மறுநாள் கமலசேகரனுக்கு இராஜீவியிடத்திலிருந்து ஒரு கடிதம்

வந்தது. "நான் இன்னும் சந்தோஷமற்ற நிலைமையில் இருக்கிறேன். நான் வெளியேபோக முடியவில்லை. உம்மைப் பார்க்காமல் நான் உயிரோடு இருக்கமுடியாது. இன்று சாயுங்காலம் வரவேண்டும். ஸிம்ஹளநாதர் இரவு ஏழு மணியிலிருந்து பத்து மணி வரையில் வெளியிலே இருப்பார்," என்று எழுதியிருந்தது. அக்கடிதத்தைக் கண்டதும் அவனுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. ஸிம்ஹளநாதருடைய கட்டளைக்கு விரோதமாக இராஜீவி நடக்க எத்தனிக்கிறாள் என்று கருதினான். இருந்தாலும் தான் இராஜீவியின், மாளிகைக்குச் செல்ல வேண்டுமென்று முடிவு செய்தான். முடிவு செய்ததும் மத்தியான காலமாதலால் வெயிலின் வெம்மைக்கு ஆற்றாது கண் வளர்ந்தான். கொடிய கனவொன்றைக்கண்டான். பயங்கொண்டான். யோசித்தான். "ஏது! அக்குடியானவன் ஏதோ கனவில் வார்த்தைகளைக் கூறினான் அன்றோ? கொடுமையான வார்த்தைகள்!" என்று தனக்குள் கூறிக்கொண்டான். மயிர்க்கூச்சம் உண்டாயிற்று.

கெடியாரத்தைப் பார்த்தான். அது எட்டு மணியைக் காட்டியது. வேகமாக உடை உடுத்திக்கொண்டு தனது மோட்டாரில் ஏறிக்கொண்டு இராஜீவியின் மாளிகைக்குச் சென்றான். அப்பொழுது கெடியாரத்தை மறுபடியும் நோக்க ஒன்பதடிக்க பத்து நிமிஷங்கள் இருப்பதையறிந்தான். தனது காதலியின் மாளிகை எதிரில் ஒரு மோட்டார் வண்டி நின்றிருத்தலைக்கண்டு, தான் வரத்தாமதித்தால் இராஜீவி தனது மாளிகைக்குப் புறப்பட ஆயத்தப்படுகிறாள் என்றெண்ணினான். "ஐயோ! இவ்வீட்டைக்கண்டால் வேப்பங்காய்போல் இருக்கிறதெனக்கு!"

அம்மாளிகையின் முன் இருந்த சிருங்கார மண்டபங் களையும் சிறு தோட்டத்தையும் கடந்து செல்லுகையில் ஸிம் ஹளநாதர் மாளிகையிலிருந்து வீதியில் இருக்கும் மோட்டா ருக்குச் செல்வதைக்கண்டு பயந்தான். அவரும் அவனைக் கண்டாராஞலும் பார்க்காதவர் போலக் காணப்பட்டார் என் றெண்ணினன். "இந்த சந்தர்ப்பத்திலா சந்திக்கவேண் டும்" என்று சொல்லிக்கொண்டே கமலசேகரன் இராஜீவி யிருக்கும் பிரத்தியேகமான அறைக்குச்செல்ல, சேவகனும் கதவைத் திறந்துவைத்தான். கமலசேகரன் உட்சென்றதும், கதவு மூடப்பட்டது.

அந்த அறைக்கு அடுத்தாற்போல் இருந்த வேறொரு அறையில் அணங்கு என்று கூறப்படும் இராஜீவி தன்னைவருக என்று கூப்பிடுவதைச் செவியுற்றுச் சந்தோஷமடைந்த கமல சேகரன் "இராஜம்!" என்ருன்.

"ஐயோ! நான் இரண்டு மணி காலமாக உம்மை எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன்," என்று இராஜீவி கூறிக் கொண்டே தான் உட்கார்ந்திருந்த சோபாவில் அமர்ந்தி ருந்த கமலசேகரனைத் தனது கூரிய கரிய விழிகளால் உற்று நோக்கினள்.

"நீர் அவரைச் சந்தித்தீரா?" என்று மறுவற்ற அம் மடந்தைகேட்க, "ஏன்? அவர் பத்து மணிக்கு மேல்தான் மாளிகைக்கு வருவதாக நீ எழுதியிருந்தாய்?" என்று கேட் டான் கமலசேகரன்.

"அவர்போனர். ஆனல் சீக்கிரம் திரும்பி வந்துவிட் டார்! தமது ஜெர்மனிய இளவரசர் பம்பாயிக்குப்போனது நலமாயிற்று."

"ஓ! போய்விட்டான்."

"காதலரே! நான் தம்மைக் காணும்பொழுது கொள்ளும் சந்தோஷம் தாம் போனபிறகு மறைந்துபோய், வருத்தத்தைக் கொடுக்கிறது," என்று இராஜீவி மனக்கிளர்ச்சியோடு கூறுகையில், கமலசேகரன் அவளுடைய அருகே சென்று அவளது கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்தான்.

"ஸிம்ஹளநாதர் இப்பொழுது சந்தோஷத்துடன் இருப்பதாகவே காணப்படுகிறார். ஆனால் அதன் கருத்து தெரியவில்லை," என்றாள் இராஜீவி.

"நீ அவருடைய கட்டளைப்படி நடக்கிறாய். இது வரையில் நடந்துவந்தாய்," என்றான் கமல சேகரன்.

"ஐயோ! அவர் என்னை ஏன் துன்புறுத்துகிறார்? குற்றமுள்ள என்னுடன் ஏன் சேர்ந்துவாழ்கிறார்? அவர் மனிதர் அல்ல. சூத்திரப்பாவைதான்!"

"இராஜம்! அவரைப்பற்றி நாம் ஏன் பேசவேண்டும்?"

"சரி."

"உன் உடம்பு எப்படியிருக்கிறது? டாக்டர் என்ன சொல்கிறார்?"

இராஜீவிக்கு மிகுந்த கலக்க முண்டாயிற்று.

"இராஜம்! நீ அசௌகரியமாக இருப்பதாக எனக்கு எழுதினாய்?"

“அது கிடக்கட்டும்.—நமது தற்கால நிலைமை சடுதியில் மாறும்.”

“இராஜம்! அதன் கருத்தென்ன?”

“நான் சீக்கிரத்தில் இறந்துபோவேன். அப்பொழுது உமக்கும் அவருக்கும் கஷ்டங்கள் உண்டாகா.”—என்று அம்மடமகள் உரைக்கையில் கண்களில் நீர்ததும்பியது.

“பைத்தியம்போல் கூறாதே.”

“இல்லை. நான் நேற்றிரவு சொப்பனங்கண்டேன். அதில் நான் மரிப்பேன் என்று தெரிகிறது. நான் கனவில் இவ்வறையில் இங்கும் அங்கும் ஓடிக்கொண்டிருந்தேன். அப்போது இவ்வறையின் மூலையில் ஏதோ இருப்பதைக் கண்டேன்,” என்று கூறுகையில், கமலசேகரன் இடைமறித்துப்பேச, இராஜீவி அதை அசட்டைசெய்து, ‘‘இல்லை, நான் சொல்வதைக்கேளும். நான் மூலையில் சென்றுபார்க்க அங்கே ஒரு குடியானவனைக்கண்டேன். நான் பயந்து ஓடிவிட எண்ணினேன். ஆனால் அவன் ஒரு பையிலிருந்து ஏதோ ஒரு சாமானை எடுப்பதாகக்கண்டேன்.—“ என்று கூறுகையில் அவளுடைய முகத்தில் பயக்குறிகள் காணப்படுவதைக்கண்ட கமலசேகரன் தான் கண்ட கனவை நினைத்துக் கொண்டு பயமடைந்தான்.

“அவன் ஏதோபேசினான். அப்பொழுது அவன் தனது பையில் எதையோ தேடுவதைப்போல் காணப்பட்டான். அவன் கூறிய வார்த்தைகள் எனக்கு மிகுந்த அச்சத்தையும் நடுக்கத்தையும் கொடுத்தன. சிறியதாயே! நீ சாகப்போகிறாய்! சாகப்போகிறாய்!! என்று அவன் சொல்லி விட்டு மறைந்துபோனான்” என்றாள் இராஜீவி.

"கனவில் நம்பிக்கை வைக்காதே!" என்றான் கமலசேகரன்.

"சரி—நாம் இருவரும் சிறிது ஆகாரத்தை எடுத்துக் கொள்வோம்," என்று சந்தோஷத்தோடு கூறினாள் இராஜீவி. அப்பொழுது இன்பகரமான ரோஜா மலர்போல் அவளுடைய வதனம் காணப்பட்டது.

இது நிற்க: பனிரெண்டு மணிக்கு இரவில் மாளிகைக்குத் திரும்பிவந்த இராஜா ஸிம்ஹளநாதர் துயிலமுயன்றும் துயிலமுடியாமல் கோபத்தோடு அதிகாலை மூன்று மணி வரையிலும் தமது அறையில் கோபங்கொண்ட சிங்கம்போல நடந்துகொண்டிருந்தார்.

தமது மனைவி கமலசேகரனைத் தமது மாளிகையில் வரச்செய்யலாகாது என்னும் நிபந்தனையை மீறி நடந்த தன் பொருட்டு இராஜீவியின்மீது அவருக்கு அளவிட அரிதான சினம் உண்டாயிற்று. ஆதலால் அவளைத் தண்டிக்கவேண்டும். கலியாண விடுதலைபெறவேண்டும், சித்திராங்கதனைத் தம்முடன் வைத்துக்கொண்டு அவளை வீட்டை விட்டுத் துரத்தவேண்டும் என்று எண்ணங்கள் அவரது அகக்கண்ணில் எழுந்தன. இதை எப்படிச்செய்வது? டைவோர்ஸ் எனும் கலியாண விடுதலையை அவர் எப்படியும் பெறயோசித்தார்.

துரதிருஷ்டங்கள் தனித்து வருவதில்லை. குடும்பவிஷயம் சீர்கெட்டிருக்க, அரசாங்கத்திலும் சில விஷயங்கள் ஸிம்ஹளநாதருக்கு கவலையைக் கொடுத்தமையினால் அவருக்கு அதிக கோபம் உண்டாயது.

அன்று காலை மிகுந்த கோபத்துடனே அவர் இராஜீவி யின் அறைக்குச்சென்று அவள் முன் நின்றார். அவளுக்கு அதிக பயம் உண்டாயிற்று. தனது புருஷன் அம்மாதிரி கோபத்துடன் காணப்படுவதைப் புதுமை என்றெண்ணி னாள்.

ஸிம்ஹளநாதர் அவளிடம் ஒன்றும் கூறாமல் அவளு டைய எழுதும் மேஜையருகே சென்று, மேஜையின் ட்ராயர் களை இழுத்தார்.

"உமக்கு என்னவேண்டும்?" என்று கேட்டாள் இரா ஜீவி.

"உனது காதலனுடைய கடிதங்கள்."

"அவைகள் இங்கு இல்லை," என்று இராஜீவிகூறி நெருங்கினாள். அப்பொழுது தோற்பையினுள் முக்கியமான கடிதங்கள் இருப்பதையறிந்த ஸிம்ஹளநாதர் அப்பையினை எடுத்துக்கொண்டார். இராஜீவி அதைத்தடுக்கும் பொருட்டு தனது கையை நீட்ட, ஸிம்ஹளநாதர் அதை ஒரு புறம் தள் ளினார்.

"நீ உட்கார்ந்துகொள். நான் உன்னுடன் பேசவேண் டும்," என்றார்.

இராஜீவி அதிசயித்து பயங்கொண்டாள். "எனது வீட்டில் உன் சோரநாயகனை நீ சந்திக்கலாகாது என்பது என் கட்டளை அன்றோ?"

"நான் அவரைப்பார்க்க வேண்டியிருந்தது."

"சோரம்போகும் ஸ்திரீ எனது மாளிகையில் தனது கள்ள நாயகனை சந்திக்கவேண்டிய பிரமேயமேயில்லை."

"எனக்கு இஷ்டம் இருந்தது. நீர் என் முன்பே புண்ணாகியிருக்கும் எனது மனதுக்கு வருத்தத்தைக் கொடுக்கிறீர்?"

"மாந்தருள் சிலர் நன்னடைக்கையுடைய ஸ்திரீயையாவது மனிதனையாவது வருத்த முறச்செய்யலாம். ஆனால் திருடனைத் திருடன் என்பதில் தவறில்லை."

"ஐயோ! உம்மை நான் இதுவரையில் வேறு விதமாக எண்ணியிருந்தேன்!"

"ஒ! உனது கணவன் முழுசுவாதீனம் கொடுத்திருப்பதால் அன்றோ எல்லாம் இப்படியானது."

"நான் போகிறேன்," என்று சொல்லிக்கொண்டே இராஜீவி தனது ஆசனத்தை விட்டெழுந்திருக்க, ஸிம்ஹள நாதர் தனதுகையால் அவளை முரட்டுத்தனமாக உட்காரச் செய்து,"

"புத்தி இல்லாத ஸ்திரீயே! உனது கணவனையும் குழந்தையையும் விட்டு விட்டு சோரத்தில் இறங்கிய பெண்ணே! உன்மனம் மிகவும் கொடியது. பாதகத்தை நினைக்கிறது. மேலும் உனது கணவனுடைய சோற்றைச் சாப்பிட்டுக் கொண்டு, அவனுக்கு இரண்டகம் நினைக்கிறாய்," என்றார்.

இராஜீவி தனது தலையைக் கீழே தொங்கவிட்டனள் அவளுடைய கரியகேசம் கீழே தொங்கியது. பார்ப்பதற்கு பரிதாபமாகக்காணப்பட்டாள். தனது கணவனுடைய சொற்கள் உண்மை கூறுவதை நினைத்தாள். வருத்தமுற்றாள்.

"எனது ஸ்திதியைக் குரூரமாக நான் தீர்மானித்திருப்பதைக் காட்டிலும் தாம் தீர்மானிக்க இயலாது," என்றாள்.

"சரி—நீ எனது கட்டளைப்படி நடக்கத்தவறியதால் நான் தக்க வழிகளை எடுத்துக்கொள்ளவேண்டும்," என்றார்.

"சீக்கிரத்திலேயே நடக்கும்," என்று தனக்குள் கணவைப்பற்றிச் சிந்தித்தாள்.

இரக்கம் என்பதை இல்லாமல் உன் கணவனுடைய சுகத்தைக் கருதாது சோரம் போனவளே! நான் எக்கேடு கெட்டுப்போனால் உனக்கென்ன?"

"இராஜீவிக்கு என்னதான் ஸிம்ஹளநாதர்மீது வெறுப்பிருந்தாலும் கணவன் எனும் சொல் அவளுக்கே இரக்கத்தைக் கொடுத்தது. விதியை வெல்லுவது அரிது என்று எண்ணி அதற்குத் தலை வணங்கிய இராஜீவி என்ன செய்வாள்? அந்தோ பரிதாபம்! பரிதாபம்!!

"சரி.—நான் உன்னிடம் ஏன் வந்தேன் தெரியுமா? நான் இனிமேல் இம்மாளிகையில் காலடியே எடுத்துவைக்கப் போவதில்லை. நான் உதகமண்டலம் செல்வேன். நான் உனது காதற் கடிதங்களையெல்லாம் பிரபல வக்கில் சிந்தாமணியிடம் கொடுத்துவிடுவேன். அவரிடம் இருந்து உனக்கு எனது எண்ணம் தெரியவரும். டைவோர்ஸ் செய்ய விரும்புகிறேன்.—சரி, என்னுடைய சித்திராங்கதன்— உனக்கு அவன் இனிமேல் சொந்தமில்லை! சித்திரனை நான் பார்த்துக் கொள்கிறேன். எனது தூரசொந்தமான சீமாட்டியும் உனக்கு இது வரையில் ஸ்நேகிதையுமான மதனகல்யாணியிடம் நான் வீட்டு விஷயங்களைப் பார்க்கும்படியாகச் சொல்லப் போகிறேன்!"

"ஐயோ! என்னுடைய மகன் சித்திராங்கதனை நீர் வைத்துக் கொள்ளப்போகிறீரோ! அவனை என்னிடம் விட்டு விடும்," என்று ஆவிசோர்ந்து, மனம் துடிக்கப்பதறிய வண்ணம் கழன்றாள் காரிகை.

"முடியாது! நான் போய்வருகிறேன்! கடவுள் குழந்தையாகிய நீ சுகமாக இரு," என்று சொல்லிவிட்டு அங்கு நின்றும் அகன்றார்.

ஸிம்ஹளநாதர் போனதும் இராஜீவி மனங்கலங்கி மூர்ச்சையடைந்து தான் உட்கார்ந்திருந்த ஸோபாவின் மீது சாய்ந்தனள்.

அத்தியாயம்—11.

பிரிந்தோர் சேருதல்.

சட்ட மெம்பரான இராஜா ஸிம்ஹளநாதர் மார்ச்சு மாதம் முடிந்ததும் உதகமண்டலத்திலே தமது வார்த்தையின்படி இராஜீவியைச் சென்னையிலேயே இருக்கும்படி செய்தார். தம்முடன் மதன கல்யாணி எனும் சீமாட்டி ஒருவனை வந்து குழந்தை சி த் தி ரா ங் க த னை ப் பார்த்துக் கொள்ளும்படி வேண்டிக்கொள்ள, தூரசொந்தமாகயிருந்தாலும் மிகுந்த சயபக்தியும் விசுவாஸமும் கொண்ட மதன கல்யாணி குழந்தையைத் தான் பார்த்துக்கொள்வதாகவும்

தான் ஸிம்ஹளநாதருடைய மாளிகையிலே வந்து வசிப்பதாக வும் உறுதிமொழி கொடுத்தாள். உதகமண்டலத்திற்கு ஸிம் ஹளநாதர் அரசாங்க அலுவல்களைக் கவனிக்கும் பொருட்டு வந்ததும் அம்மூதாட்டியான சீமாட்டியும் சித்திராங்கதனு டைய தந்தையின் மாளிகைக்கு வந்து எஜமானி அதிகாரம் குடும்ப விஷயங்களில் செலுத்துவதாயினள்.

ஸிம்ஹளநாதருடைய வேலையாட்களும் ஏவலாட்களும் பத்மாவும் இராஜீவி ஏன் சென்னையில் தனித்துவாழ முயன் ருள் என்னும் கேள்விக்கு தக்கவிடை கொடுக்கத் தெரியாத வர்களாய் விழித்தார்கள். கணவனுக்கும் மனைவிக்கும் ஏதோ பெரிய மனஸ்தாபம் ஏற்பட்டது என்று சிலர் சொல்லிக் கொண்டனர். உண்மையை ஒருவரும் அறியாதபடி ஸிம் ஹளநாதர் சூழ்ச்சி செய்வதாக வேறு சிலர் எண்ணினர். ஆனல் உண்மையை ஒருவரும் அறியவில்லை.

உதகமண்டலத்திற்கு ஸிம்ஹளநாதர் வந்து இரண்டு வாரங்கள் ஆனபிறகு ஒரு மாதம் ரஜா எடுத்துக்கொண்டி ருந்த திவான்பகதூர் துரைசிங்கம் பிரபு ஒரு நாள் தமது மைத்துனர் மாளிகையையடைந்து வாயிற் காப்போனை நோக்கி, "எஜமானர் இருக்கிருரா?" என்று கேட்க, அவன் இருக்கிருர் என்று மிகப் பரிவும் வணக்கமும் சேர்ந்த குர லில் கூறினன்.

உடனே துரைசிங்கம் உள்ளே சென்று ஆபீஸ் அறை யில் அரசாங்க விஷயங்கள் சிலவற்றைக் கொண்டிருந்த காகிதங்களை மேஜையின்மீது பரப்பி வைத்துக்கொண்டிருந்த ஸிம்ஹளநாதரைக்கண்டு சந்தோஷம் முகத்தில் தவழ காலை வந்தனம் செய்தார்.

எதிர்பாராத துரைசிங்கத்தைக் கண்டதும் சிறிது மன வெறுப்படைந்த ஸிம்ஹளநாதர் தமது ஆசனத்தைவிட்டெழுந்து தமது நண்பரும் சொந்தக்காரருமான துரைசிங்கம் பிரபுவுக்கு வந்தனம் செய்து தமது மேஜைக்கு எதிரில் இருந்த நாற்காலியில் உட்காரும்படி செய்து, தாமும் தமது ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டு யோக க்ஷேமங்களை முதலில் விசாரித்தார்.

"பிரபுவே! நாம் இப்பொழுது ஒரு மாதகம் லீவ் வாங்கிக்கொண்டு இருப்பதைக்கேட்டு சந்தோஷம்," என்றார் ஸிம்ஹளநாதர்

"எப்பொழுதும் உத்தியோகமே கண்ணாயிருந்தால் மனதுக்கு எப்பொழுது சிறிது ஓய்வு கொடுக்க முடியும்! அதனால்தான் ரஜா எடுத்துக்கொண்டேன்.— சரி—இராஜம் சென்னையிலேயே இருக்கிறாள் என்று கேள்விப்பட்டேன். சௌக்கியமாக இருக்கிறாள் என்றும் கேள்விப்பட்டேன்," என்று இராஜீவியின் புதிய காதலை அதுவரை தெரிந்து கொள்ளாத திவான்பகதூர் துரைசிங்கம் பிரபு சொன்னார்.

பல்லைக் கடித்துக்கொண்டே ஸிம்ஹளநாதர் இராஜீவி சுகமாக இருப்பதைத் தெரிவித்தார்.

"சந்தோஷம். தாங்கள் இன்றிரவு எனது மனைவி கொடுக்கும் விருந்திற்கு வரவேண்டும்," என்று துரை சிங்கம் கேட்டார்.

ஸிம்ஹளநாதருக்கு உதகமண்டலத்துக்கு வந்த நாள் முதல் விருந்துகளின் மேல் அதிக இச்சையில்லை. அதனால் அவர் போவதில்லை என்றார்.

"ஏன் போவதில்லை? காரணத்தை என்னிடம் கூறலாகாதா? தாம் முதலில் வருவதாகக் கூறியிருந்தீர்களே!" என்றார் துரைசிங்கர்.

"துரைசிங்கம் பிரபுவே! உண்மையைக் கூறுமிடத்து நான் வரமுடியாது. மேலும் நமது பந்துத்வம் இனிமேல் முறிந்துபோகவேண்டும்," என்றார் சட்ட மந்திரி.

"ஏன்" என்று சிரித்து முகத்தை மலரச்செய்விக்கும் தன்மையைக் கொண்டிருந்த துரைசிங்கம் குழப்பிய மனதோடு கேட்டார்.

"உம்மிடம் விஷயத்தைக்கூறினால் ரகசியமாக வைத்துக்கொள்ளுவீர்," என்று ஸிம்ஹளநாதர் கூறிக்கொண்டே சுருக்கமாக இராஜீவியின் கதையை எடுத்துச்சொன்னார். அதைக்கேட்டதும் ஆச்சரியமும் விசனமும் கொண்ட துரைசிங்கம் முதலில் வருத்தப்பட்டார். தாம் கற்பலங்காரம் எனும் பெண்மணியைக்காதலித்ததையும் காலத்தின் கோலத்தையும் நினைத்துக்கொண்டு, இராஜீவியின் விதிக்கு மனம் நொந்தார். விஷயம் விபரீதமாக இருப்பதைக்கண்டு மேல் நடக்கவேண்டியது என்னவென்று அறிய எண்ணி, "தாம் என்ன செய்யலாம் என்று யோசித்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"கலியாண விடுதலை சட்டத்தை எனது விஷயத்தில் உபயோகிக்கும்படி நியாய சபையை நாடவேண்டியதுதான். மைக்கேல் சிந்தாமணியிடம் கேஸ் விவரங்களைச் சொல்லியிருக்கிறேன்," என்றார் ஸிம்ஹளநாதர்.

"சரியான விசித்திரம்தான். எனக்குத் தெரிந்த மட்டில் இராஜம் மிக்க நல்லகுணம் உடையவள் ஆயிற்றே," என்றார் துரைசிங்கம்.

"என்ன செய்வது?" என்றார் விமலானந்தர்.

"நான் ஒன்று கேட்கிறேன். நான் பார்த்தமட்டில், தாம் சொல்வதும் காரியத்தை முடிக்கும் ஆற்றலுங்கொண்டவர்.—உமக்கும் இராஜத்திற்கும் ஏதோ மனஸ்தாபம் உண்டாயிருக்கிறது."

"மனஸ்தாபமாக இருந்தால் பரவாயில்லையே!"

"எதற்கும் நாம் தீர யோசித்துச் செய்யவேண்டும். ஆத்திரம் வேண்டாம்."

"எல்லாவற்றையும் நான் தீர ஆலோசித்தே தான் சொல்கிறேன். ஆனால் இவ் விஷயத்தில் நான் உம்முடைய விருப்பத்தின்படி நடக்கிறேன்."

"ஓகோ! தாங்கள் என் மனைவி காணக்கூடாது. வேறு வீட்டில் ஒரு நிமிஷத்திற்கு வரவேண்டும். சமையற்காரன் இராத்திரிச் சாப்பிடக் கூப்பிடுகிறார்கள். தாங்கள் காலத்திலே இதைப் பற்றிப் பேசவேண்டாம்," என்று திவான்பகதூர் துரைசிங்கம் கேட்டுக்கொண்டார்.

விமலானந்தர் சும்மாவிருந்தார்.

"நாம் காலைப் போஜனத்திற்குத் திரும்பி வரவேண்டும். அவ்விடம் நாம் இவ் விஷயத்தைப்பற்றிப் பேசலாம்," என்றார் துரைசிங்கம்.

"சரி, வருகிறேன்," என்று விப்புலாநாதர் கூறிவிட்டு, வேறு விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்.

சிறிது நேரம் ஆனதும் திவான்பகதூர் துரைசிங்கம் தமது நண்பரிடம் விடை பெற்றுச்சென்றார்.

திவான்பகதூர் துரைசிங்கம் பிரபுவின் பத்னி கமலம் கொடுக்கும் விருந்திற்கு கருப்பூர் ஜெமீன்தார், இரத்தினவேல், விப்புலாநாதர், பண்டிதர் ராமலிங்கம், கிருஷ்ணவேணி, துரைசிங்கம், சுந்தராங்கன் முதலானோர் வந்திருந்தனர். நமது கதைக்குச் சம்பந்தப்படாத சில பிரபுக்களும் சீமாட்டிகளும் வந்திருந்தனர்.

சுந்தராங்கனும் விப்புலாநாதரும் ஒருவரை யொருவர் அறிந்துகொள்ளுமாறு துரைசிங்கம் அறிமுகம் செய்வித்தார்.

கிருஷ்ணவேணியைக் கண்டதும் சுந்தராங்கனுக்கு ஒரு வகையான மனவெழுச்சி உண்டாயிற்று. அவனுக்கு என்ன செய்வது என்று முதலில் ஒன்றும் தோன்றவில்லை. அவனுடைய மனக் குழப்பத்தைக் கமலமும் துரைசிங்கமும் தெரிந்து கொண்டனர்.

எல்லோரிடமும் பேசிக்கொண்டிருந்த கிருஷ்ணவேணியை யடைந்த சுந்தராங்கன் அவள் நீட்டிய அழகிய கையைக் குலுக்கிவிட்டு "தேகம் சௌக்கியமானது கேட்டு மிகவும் சந்தோஷம்," என்றான். அவளும் அதற்குத் தக்க பதில் கொடுத்தாள்.

சிறிது நேரம் கழித்து எல்லாரும் விருந்து உணவை உட்கொண்டனர். அப்பொழுது யாவர் முகத்திலும் சந்தோஷமும் களிப்பும் காணப்பட்ட அக்காட்சி மிகவும் ரம்மியமாக இருந்தது.

விருந்து நடந்து கொண்டிருக்கையில் கிருஷ்ணவேணி, சுந்தராங்கன் ஆகிய இருவர்களைத்தவிர்த்து ஏனையோர் ஸ்திரீகளுக்குச் சமுதாயவாழ்வில் மனிதர் கொடுக்கவேண்டிய சுயாதீனங்களையும் கடமைகளையும் பற்றி ஒரு சம்பாஷணையை நடத்தினர்.

விருந்து முடிந்ததும் கதைக்குச் சம்பந்தப்படாதவர்களும் பண்டிதர். ராம்ரங்கரும் திவான்பகதூரிடத்திலும் கமலத்திடத்திலும் ஸிம்ஹளநாதரிடத்திலும் விடைபெற்றுச் சென்றனர்.

கிருஷ்ணவேணியும் சுந்தராங்கனும் ஜெமீன்தாரிடத்திலும் ஜெமீன்தாரிணியிடத்திலும் துரைசிங்கத்திடத்திலும் பேசிக்கொண்டிருக்க, கமலமும் ஸிம்ஹளநாதரும் ஒரு தனி அறையில் இராஜீவியைப் பற்றிப்பேசியிருந்தனர்.

“இராஜத்தின்மீது சுமத்தப்படும் அபாண்டத்தை நான் நம்பமுடியாது! அவள் பத்தரைமாற்றுத் தங்கம்போல் இருப்பவள் ஆயிற்றே!” என்றாள் கமலம்.

“ஆனால் அவளுடைய குற்றம் கொடிய பாபகரமான செய்கையாயிற்றே!” என்றார் ஸிம்ஹளநாதர்.

“அவள் அப்படிச் செய்திருப்பாள் என்று எண்ணவே இல்லை நான்,” என்றாள் கமலம்.

“கமலம், அவள் தனது நல்லநெறியிலிருந்து கீழே விழுந்துவிட்டது மன்றி, நான் தீர்மானித்த சில கட்டளைகளையும் மீறி நடந்தாள். அதனால் தான் எனக்கு அவள்மீது கு ரோ த ம் உண்டாயிற்று.. என்னை அவள் துரும்பென மதிக்கிறாள்,” என்றார் குழம்பிய மனதோடு.

"ஐயோ! அவள் தம்மை முதலில் காதலித்த காதலைப் பற்றியார் பழுதுரைப்பார்கள்? இப்போது தாமே இராஜத்தைப் பற்றிக்கூறுவது எனக்குச் சிறிதும் நம்பமுடியாததாக யிருக்கிறது," என்றாள் கமலம்.

"கமலம், இராஜமே என்னையாவது சித்திராங்கதனையாவது சட்டை பண்ணவேண்டுமே! அதொன்றுமில்லை. அவள் மறுபடியும் புதிதாக குடும்பவாழ்வு ஆரம்பிக்கவேண்டுமென்கிறாள்! இதற்கு என்னசெய்வது?" என்று சிறிது மெல்லிய குரலில் ஸிம்ஹளநாதர் கூறினார்.

"இராஜமும் குற்றமும்! இவ்விரண்டும் ஓரிடத்திலே சேர்ந்து காணப்படாததாயிற்றே!" என்றாள் கமலம்.

ஸிம்ஹளநாதருக்கு அவளுடைய ஆச்சரியம் மாச்சரியத்தைக் கொடுத்தது. "கமலம், உண்மையைத் தெரியாமல் நீ இப்படி உரைக்கிறாய்! ஆயினும் என்ன செய்கிறது? அவள் தன்வழியே சென்று எப்படியாவது போகட்டும்!— எனக்கு அவளைக் காணுவதே வெறுப்பைத் தருகின்றது," என்றார்.

ஸிம்ஹளநாதர் உண்மையைத் தான் பேசினார் என்று தெரிந்துகொண்ட கமலம் இராஜத்தின் கதிக்கு மனம் மிகவும் நொந்து, கண்ணீர் உகுத்தாள்.

"சரி, தாம் விவாக சம்பந்தமான விலக்கு சட்டத்தின்படி இராஜத்தை அப்புறப்படுத்த யோசித்து விட்டீர்களோ?" என்று கமலம் கேட்டாள்.

"ஆம் வக்கீலிடம் கேஸையும் கொடுத்துவிட்டேன்."

"ஐயோ! தாம் அவளைப் புறக்கணித்தால் அவளுடைய கதி என்னாகும்?"

"நான் எல்லாவற்றையும் தீரயோசித்தேன். அவள் தனது புதியமோகத்தை என்னிடம் கூறியதும் நான் பெரிய மனதோடு அதைப் பொருட்படுத்தவேண்டாம் என்றெண்ணி, கமலசேகரனை என் வீட்டில் அவள் சந்திக்கலாகாது என்றேன். ஆனால் என்ன செய்கிறது? நான் அந்த பெரிய பாபகரமான படுகுழியிலிருந்து அவளைக் காப்பாற்ற எண்ணினேன்! சில நிபந்தனைகளையும் கூறி அவைகளைமீறி நடக்கலாகாது என்று சொன்னேன்! அவள் என்ன செய்தாள், தெரியுமா? உலகம் நம்மைப் பார்த்துச் சிரிக்கலாகாதென்று கூறியும் அவள் என்னை அசட்டைசெய்தாள். கமலசேகரனை எனது மாளிகையில் எனக்கு மனம் புண்ணாகும்படி சந்தித்தாள். நாசமாக விரும்பாத ஒரு ஆத்மாவை நாம் காப்பாற்றலாம். ஆனால் நாசத்தையே பாசமாகக் கொண்ட ஒரு ஆத்மாவை எப்படிக் காப்பாற்றலாகும்?" என்றார்.

அப்பொழுது அவருடைய தொண்டையில் விசனம் அடைத்துக்கொண்டது. கண் நீர் விட்டது. முகம் பரிதாபத்தைக் காட்டியது. என் செய்வார் ஸிம்ஹளநாதர்?

"கலியாண விடுதலையைத் தவிர்த்து வேறு எதையாவது செய்யும்," என்று பிரார்த்தித்தாள் கமலம். பெண்ணென்றால் பேயுமிரங்கும் அல்லவா?

"கமலம், நான் இனி என் வீட்டிற்குச் செல்லவேண்டும்."

"ஒரு நிமிஷம் உட்கார்ந்திருங்கள். அவளைத்துரத்தி விடவேண்டாம். ஐயோ! சில சமயங்களில் என் அபிப்பிராயங்களைக் கேட்டுவரும் தாங்கள் என்பொருட்டு கலியாண விலக்கு என்பதை வேண்டாதீர்கள்! என்னை ஒரு தடவை எனது புருஷனே ஏமாற்றினர்! நானும் அவரை விடுத்துச் செல்லவேண்டும் என்றிருந்தேன்! ஆனல் என்னை இராஜம் வந்து தேவதைபோல் காப்பாற்றினள்! நான் என் புருஷனை ப்பிறகு மன்னித்துவிட்டேன்! அதே மாதிரி தாங்களும் அவளை மன்னித்துவிடவேண்டும்!"

அவளுடைய வார்த்தைகளையும் பரிதாபகரமான நிலைமையையும் முறையே செவியுற்றும் கண்டும் இருந்த ஸிம்ஹள நாதருக்கு ஒன்றும் தோன்ருது, கல்லினல் செதுக்கப்பெற்ற சிலையேபோல் காணப்பட்டார். கடைசியில் கல்லாய்ச் சமைந்து தோன்றியகாட்சி மாறுபட்டது. அவருடைய முகம் சிவந்தது. சிறிது உரத்தகுரலில், "அவளை மன்னிப்பதா? என்னல் கூடாத விஷயம்? விரும்பத்தகாத காரியம்! நியாயத்திற்கு விரோதமானது. நான் அவளைக் காப்பாற்ற எவ்வளவோ முயன்றும் முடியாமல்போயிற்று. சேறில் விழுந்த பங்கயத்தையாராவது எடுத்துக்கொள்வார்களா? நான் எவருக்கும் தீங்கிழைக்கும் சுபாவத்தை உடையவன் அல்லன். யாரையும் வெறுக்கும் தன்மை உடையவனும் அல்லன். ஆனல் என் முழுமனதோடும் அவளை வெறுக்கிறேன்! எனக்கு இழைத்த பெருத்த அவமானத்திற்காக நான் இனிமேல் அவளைக் காப்பாற்றமுடியாது," என்ருர். அவருடைய குரலில் கோபத்துளி மிகுந்திருந்தது.

"உம்மை வெறுப்பவர்களை நீர் நேசிக்கவேண்டும்."

ஸிம்ஹளநாதர் சிறிது சிரித்தார். அவருக்கு பகவத் கீதை, சுவிசேஷம் முதலிய புஸ்தகங்களின் விஷயங்கள் நன்கு தெரியும். ஆனால் கமலம் கூறிய வாக்கியம் இராஜீவி விஷயத்தில் உபயோகிக்கத் தகுந்ததாகயிருக்கவில்லை. என் றெண்ணினார்.

"நம்மை வெறுப்பவர்களை நாம் நேசத்துடன் நோக்க லாம். ஆனால் நாம் வெறுக்கும் மாந்தரை நேசிக்கமுடியாது. சரி—நான் போய் வருகிறேன்" என்று ஸிம்ஹளநாதர் கூறி விட்டுக் கமலத்திடம் விடைபெற்றுக்கொண்டு, ஏனையோர் இருந்த இடத்திற்குவந்து அவர்களிடமும் செலவுபெற்றுச் சென்றார்.

கமலமும் ஸிம்ஹளநாதரும் சம்பாஷித்துக்கொண்டி ருந்த அதே சமயத்தில் அம்மாளிகையின் மற்றொரு புறத் தில் சுந்தராங்கனும் கிருஷ்ணவேணியும் இன்பமே உருவெ டுத்து வந்ததுபோல் ஆனந்தத்தோடு ஜெமீன்தார், இரத்தின வளி, துரைசிங்கம் முதலியவர்களுடன் பேசிக்கொண்டிருந்த னர். ஆனால் சிறிது நேரமாயதும் அவ்விரு காதலர்களைத் தனியே விடுத்துச்சென்றனர் துரைசிங்கம், இரத்தினவளி, ஜெமீன்தார் முதலாயினோர்.

தாமிருவரும் தனித்துவிடப் பட்டதையறிந்துகொண்ட அக்காந்தரிருவரும் மனக்கண்ணில் முளைத்தெழுந்த சந்தோ ஷத்தை முகத்தில் அமோகமாக விளங்கும்படிசெய்து பரவச மெய்தியவர்களாய் ஒருவர் உருவத்தை மற்றவர் பார்க்கும் படி செய்தவர்களாய், தேனில் விழுந்து தத்தளிக்கும் ஈக் களைப்போல் கரைதெரியாது விழித்தவர்களாய் இருந்த அந்த மகா உன்னதம் பொருந்திய ரமணீகரமான காக்ஷி சிறந்து

காணப்பட்டது. மேலும் பிரிந்தவர் மனம் திருந்திச்சேருதல் மேன்மை பெற்றதன்றோ? அதிலும் முன்பு காதலர். பிறகு மாறுபட்ட மனத்தினர். கடைசியில் பக்குவமான நேசத்தைக்கொண்டவர். ஆகிய மூன்று பருவங்களையும் அநுபவித்த அம்மடமகளும் யௌவனப் புருஷனும் ஒன்று சேர்ந்து காணப்பட்ட தோற்றம் கிடைத்தற்கரிதும் காணப் பெறுததும் ஆனபெரும் பேறு அன்றோ!

கிருஷ்ணவேணி பூரண சுகமடைந்து பூர்ண சந்திரோதயம் போல் விளங்கும் தேஜோமயமான இன்ப ஊற்றில் ஜலம் பருகிக்கொண்டிருந்த சுந்தராங்கதன் தனது காதற் களஞ்சியமான ஆருயிர்த் தோகையை நோக்கி, "கிட்டி! நீ பூரண சுகமடைந்து காணப்படுவது எனக்கு மனோரம்மியத்தையளிக்கின்றது. நான் உன்னைக் காதலிப்பது பரிசுத்தமானதென்பது நீயே அறிவாய் அன்றோ?" என்றான்.

கிருஷ்ணவேணி அவனது வார்த்தைகளைக் கேட்டதே பரமானந்தம் அடைந்து, தனது கூரியகண்களால் அவனது அநங்கன் அழகுபெற்ற மேனியைப்பார்த்து, மனம் பூரித்து, உவகையைத் தனது வதனத்தில் வரச்செய்து சந்தோஷமே அவதாரம் செய்ததோ என்று சந்தேகிக்கும்படியாக விளங்கினாள். "அன்பரே! நான் முன்பு தெரியாமல் செய்த குற்றத்தைப் பொருட்படுத்தாதது தமது மேன்மைக் குணத்தை விளக்குகிறது. தாங்கள் இனிமேல் என்னை முன்புபோல் காதலித்து வருவதைக்கேட்டு மனம் பூரித்தேன். நாளை காலையில் தாங்கள் எனது பெற்றோர்களைக்கண்டு நமது காதலைப்பற்றித் தெரிவிக்கவேண்டும். அவர்கள் அங்கீகாரத்தைப் பெற்றதும் நாம் சதிபதிகளாவதற்கு யாதொரு தடங்கலுமில்லை," என்று கிளிபோல் சொன்னாள்.

சிறிது நேரமானதும், சுந்தராங்கன் தான் தங்கியிருக்கும் ஹோட்டலேயடைந்தான்.

ஹோட்டலேயடைந்ததும் சுந்தராங்கன் தனது மஞ்சத்தில் சென்று சயனிக்கும் வண்ணம் கண்களை மூடினான் ஆனால் துயில் வரவில்லை. அன்றிரவு முழுவதும் அவனுடைய மனது ஏதோ ஒரு பெருத்த சந்தோஷ சாகரத்தில் அகப்பட்டுத் தவித்தது. தன்னைப்பற்றி மறந்துபோனான். காற்றுக் கப்பலில் பறந்துபோவதாகத் தோன்றிய அவனுடைய மனது சொல்லொணுத விசையைப்பெற்று அங்கும் இங்குமாக ஊசலாடிக் கொண்டிருந்தது. மறுநாள் காலை சுந்தராங்கன் ஒரு அகண்டமான ஐஸ்வரியத்திற்கு அதிபதி ஆகப் போகிறான் என்று அது துள்ளிக்குதித்தது: ஓடியது: கிருஷ்ணவேணியின் உருவத்தை சிறை பிடித்தது: அதன் அழகை உற்று நோக்கியது: வியந்தது: சிறந்தது என்றது: அதைப்போல் வேறு எதையும் பார்த்திலது என்று உன்னியது: மறுபடியும் குதித்தது. இத்தகைய ஸ்திதியில் இருந்தவாறே அது சுந்தராங்கனுக்கு நித்திரையைக் கொடுக்காதொழிந்தது. பகலவன் கீழ்த்திசையில் தோன்றி மூன்று மணி நேரமான பிறகு அது அவனைக் கிருஷ்ணவேணியின் மாளிகைக்குச் செல்லும்படி கட்டளையிட்டது.

மனதின் கட்டளையைத்தட்டி நடக்கப்பிரியப்படாத சுந்தராங்கன் சிறந்த உடை அணிந்து, உல்லாஸமான பார்வையுடன் கிருஷ்ணவேணியும் அவளது பெற்றோர்களும் தங்கியிருந்த மாளிகைக்குச் சென்றான்.

சுந்தராங்கன் வருகையையறிந்திருந்த கிருஷ்ணவேணி தனது காதலனைக் கண்டதும் புத்துயிர் பெற்றவள்போல்

ஆனாள். அவளுடைய கண்ணில் ஒருவகையான ஜ்வலிப்பு உண்டாயிற்று. தனது காந்தனையடைந்து சந்தோஷ வதனத்தோடு சிறிது நேரம் பேசினாள். சுந்தராங்கன் அவளுடைய சிவந்த அதரங்களைத் தனது அதரங்களோடு ஒன்றுபடும்படி கிருஷ்ணவேணியைக் கட்டியணைத்து முத்தமிட்டு, தேவாமிருதம் உண்டவன் போல் ஆனான்

"என் தாயார் இங்கேவருவாள். அவளைக்கேட்டு விடுவோம்," என்றாள் கிருஷ்ணவேணி.

"நீ அவனை வெறுத்து என்னைக் காதலிக்கிறாய் என்பதை எண்ண எனக்கு ஆச்சரியமாகயிருக்கிறது," என்றான் சுந்தராங்கன் உவகையுடன்.

"அவனைப்பற்றிப் பேசவேண்டாம்—அவனைக் காதலராக நான் கொள்ள இஷ்டப்படவில்லை. தம்மைத்தான் மணாளனாக அடைய விருப்பம் கொண்டவளாகயிருக்கிறேன்," என்றாள் கிருஷ்ணவேணி.

அப்பொழுது இரத்தினவளி அங்கேதோன்றி, சுந்தராங்கரே! தாம் எனது புதல்வியைக் காதலிப்பது அறிந்து மிகுந்த சந்தோஷம். பிரிந்தோர் சேருதலின் அருமை அறிந்தோர் தெரிவர்," என்றாள்.

அப்பொழுது மற்றொரு புறத்திலிருந்து ஜெமீன்தார் வந்தார்: ஆனந்தக் கண்ணீர் விடுத்தார். "சுந்தரம்! உன்னைக் கிட்டி விவாகம் செய்து கொள்ள இப்பொழுது பிரியப்படுவதையும் உனது பெருந்தன்மையான குணத்தையும் கண்டு நான் அளவிலா ஆனந்தம் கொண்டேன்," என்று சொல்லிக் கொண்டே ஒரு ஆசனத்தில் உட்கார்ந்துக்கொண்டார்.

சிறிது நேரம் வரையில் கலியாண விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அதன் பிறகு ஜெமீன்தாரும் அவரது மனைவியும் அங்கு நின்றும் அகன்றனர். அவர்கள் போனபின்னர் காதலரிருவரும் அளவிலா உவகையோடு பேசிக்கொள்வதாயினர்.

"உம்மைத்தான் நான் மணாளனாகத் தெரிந்துவரிப்பேன் என்று எந்தை எப்பொழுதும் என்தாயாரிடம் கூறுவர். அதேமாதிரி ஆவதைக்கேட்டு எனக்கு மிகுந்த ஆனந்தம் பொங்குகிறது," என்றாள் கிருஷ்ணவேணி.

ஒரு வாரத்திற்குப் பிறகு கிருஷ்ணவேணிக்கும் சுந்தராங்கனுக்கும் விமரிசையாக விவாகம் நடந்தேறியது.

இராஜீவி

அல்லது

காதலால் விளைந்த கஷ்டம்.

மூன்றும் பாகம்.

அதிகாரம் 12

இரக்கம்.

ஆபீஸ் வேலை இல்லாத ஒரு நாள் சாயுங்காலம் மூன்று மணிக்கு இராஜா ஸிம்ஹளநாதர் தமது அழகிய பங்களாவிலே ஒரு அறையிலே ஒரு ஸோபாவிலே சாய்ந்துகொண்டு, மின்சார தீபங்கள் சூரிய வெளிச்சத்தில் பொலிவு இல்லாமல் இருப்பதைப் பார்த்தவண்ணம் இருக்கையில், கமலம் தம்மோடு செய்த சம்பாஷணையில் ஸாராம்ஸம் ஞாபகத்தில் வந்து, இராஜீவியின்மீது மட்டற்ற சினத்தை எழச்செய்தது, தமது நிலைமை இருந்தபடி இரக்க, மாறுதல் ஏதேனும் உண்டோ என்று யோசித்தார். தாம் இராஜீவியின் பொருட்டு மனம் இரங்குதல் சரியல்லவென்றெண்ணினர்.

அச்சமயம் சேவகன் ஒருவன் இரண்டு உறைக்கடிதங்களைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டுச் சென்றான். ஸிம்ஹளநாதர் அவைகளைப்படித்தார். ஒரு தந்தியானது அரசாங்க அலுவலைப்பற்றிப் பேசியது. மற்றொன்று தமது மனைவியிடமிருந்து வந்திருந்தது. நீலநிற எழுத்தில் இராஜம் என்று அதில் எழுதப்பட்டிருந்தது.

“நான் மரணத்தறுவாயில் இருக்கிறேன். தயவுசெய்து வரவேண்டும். தமது மன்னிப்பை நான் பெறுவேனேல் சந்தோஷமாக மரிப்பேன். இராஜம்,” என்று அத்தந்தியில் காணப்பட்டது.

அந்த வார்த்தைகளை அவர்வாசித்தார். தந்தியைக் கீழே எறிந்தார். “ஏதோ புதிய சூழ்ச்சி” என்று அவர் முதலில் நினைத்தார்.” அவள் கேவலமான செய்கை எதையும் செய்வதற்கு அஞ்சாள்! அவள் கர்ப்பிணியாக இருந்தாள்

அன்ருே !! ஐயோ ! ஏதோ கஷ்டம் உண்டாயிருக்கவேண்டும். ஆனல் அவளுடைய எண்ணம்யாது? எனது கோபத்தை நீக்க எண்ணுகிருளோ? கலியாண விடுதலை கூடாது என்று சொல்வாளோ?—தந்தியில் எழுதியிருக்கிறபடி அவள் மரணத்தருவாயில் இருப்பதாகத்தெரிகிறது. சே! நான் அவளை மரணம் அணுகுமுன் சென்று பார்க்க வேண்டும்: தனது பாபகரமான செய்கைக்கு அவள் என் மன்னிப்பை விழைந்து இறந்துபோக எண்ணுகிருள்! நான் அவளுக்கு இரக்கம் காட்டிவிட்டால் நான் கடவுளுக்குத் துரோகம் செய்பவன்போல் ஆவேன்!" என்று எண்ணமிட்டார்.

"முருகா!" வென்று அவர் தமது சேவகனைக் கூப்பிட்டு மோட்டாரைத் தயார்செய்து நிறுத்தும்படி சொல்லி தாம் சென்னைக்குச் செல்வதையும் கூறினர்.

இராஜீவியைத் தாம் போய் பார்ப்பதாகவும் அவள் வேண்டுமென்று பொய்யாக தந்தி கொடுத்திருந்தால் தாம் மறுரயிலில் திரும்பிவிடுவதாகவும் ஸிம்ஹளநாதர் முடிவுசெய்தார். மேலும் ராஜாங்க விஷயங்கள் எதுவும் அவ்வளவு சிறந்ததாகத் தோன்றவில்லை.

மறுநாள் காலை இராஜா ஸிம்ஹளநாதர் சென்னையை யடையுமுன் மறுபடியும் இராஜீவியைப்பற்றி யோசித்தார். அவள் இறந்துபோனல் தாம் நிம்மதியாக இருக்கலாம். ஒரு கஷ்டமும் உண்டாகாது. தாம் இராஜீவியின் வீட்டிற்குள் சென்று உண்மையை யறியவேண்டும். அவள் பொய்யாக மோசக்காருடன் சூதுசெய்ய எண்ணிணல் தாம் திரும்பி வந்து விடவேண்டும் என்று முடிவுசெய்தார்

ரயிலை விட்டிறங்கியதும் ஸிம்ஹளநாதர் ஒரு மோட்டார் வண்டியில் ஏறிக்கொண்டு சைதாப்பேட்டைக்குச் சென்றார். அங்கு இராஜீவியின் மாளிகையின் முன் புறத்தில் இரண்டு மோட்டார் வண்டிகள் நின்றிருப்பதையும் அதில் இருக்கும் இரண்டு மோட்டார் ஓட்டிகளும் தூக்கவெறியில் இருப்பதையும் கண்டார். தமது வண்டியை விட்டிறங்கி ஸிம்ஹளநாதர் மாளிகையினுள் புகுந்து, அங்கிருந்த வேலைக்காரனை நோக்கி, "எஜமானிக்கு உடம்பு எப்படி இருக்கிறது?" என்று கேட்டார்.

"பரவாயில்லை," என்றான் அச்சேவகன்.

ஸிம்ஹளநாதருடைய முகம் வெளுத்தது. அவர் இராஜீவியின் மரணத்தை எதிர்பார்த்திருந்தார்.

அப்பொழுது ரங்கன் என்னும் சேவகன் உள்ளிருந்து வெளியே வந்து எஜமானரைக்கண்டு வந்தனம் செய்தான். "எஜமானிக்கு அபாயகரமாகத் தான் இருக்கிறது," என்றான். "டாக்டரும் இருக்கிறார்" என்றான். ஸிம்ஹளநாதருக்குச் சந்தோஷம் உண்டாயிற்று. இராஜீவி சாவதற்குப் போதுமான காரணம் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டார்.

"யார் யார் உள்ளே இருக்கின்றனர்?" என்று ஸிம்ஹளநாதர் ரங்கனைக்கேட்க, "டாக்டரும் தாதி ஒருத்தியும் கமலசேகரப்பிரபுவும் இருக்கிறார்" என்றான்.

ஸிம்ஹளநாதர் நேராக விசாலமான ஹாலுக்குள் செல்ல, அங்கு, தாதி யொருத்தி கையில் சில மருந்து

சாமான்களை எடுத்துக்கொண்டு போய்க் கொண்டிருந்தாள். ஸிம்ஹளநாதரைக் கண்டதும் பயபக்தி விநயத்தோடு "அம்மாள் தங்களையே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்," என்றாள்.

"சீக்கிரம் பனிக்கட்டியைக் கொண்டுவா," என்று பிரசவ அறையிலிருந்தும் டாக்டர் குருராஜம் தாதிக்குச் சொல்வது ஸிம்ஹளநாதருக்குக் கேட்டது.

நோயாளியின் அறைக்கு அடுத்த அறையில் அழுது கொண்டிருந்த கமலசேகரன் டாக்டர் குருராஜத்தின் வார்த்தைகளைக்கேட்டு மனம் திடுக்கிட்டு, தனது கைகளை முகத்திலிருந்தும் அகற்றினான். அகற்றலும் அவனுடைய கண் ஸிம்ஹளநாதரைக்கண்டது. அவரைக்கண்டதும் கமலசேகரன் தான் எப்படியாவது அவ்விடத்தை விடுத்துச் சென்றால் போதும் என்றும் எண்ண, அவனது ஆவி சோர்வடைய, அவன் தளர்ந்து, உட்கார்ந்திருந்த ஸோபாவின்மேல் சாய்ந்துவிட்டான். ஆனால் சமாளித்துக்கொண்டு, "ஐயோ! அவள் சாகிறாள்! பிழைக்கமாட்டாள் என்று டாக்டர்கள் கூறுகின்றனர். நான் உமது அதிகாரத்தில் இப்பொழுது சிக்கியிருக்கிறேன். நான் இங்கே சிறிது நேரம் இருக்க அனுமதிகொடுங்கள்," என்று மெல்லிய குரலில் விசனத்தோடு கூறினான்.

ஸிம்ஹளநாதர் அவனுடைய கண்ணில் நீர்துளிகள் இருப்பதைக்கண்டு மனம் மாறினார். ஆனால் யாதும் பேசாமல் இராஜீவி இருக்கும் அறையின் கதவையடைந்தார்.

இராஜீவியின் குரல் அவருக்கு மிகுந்த தெளிவாகக் கேட்டது. ஸிம்ஹளநாதர் உள்ளே புகுந்தார். அவளுடைய படுக்கையருகே சென்றார். இராஜீவியின் முகம் அவரைப் பார்த்தவண்ணம் இருந்தது. அவளுடைய கன்னங்கள் பிரகாசித்துக் கொண்டிருந்தன. கண்களும் ஜ்வலிப்புடன் விளங்கின. தனது புருஷனை இராஜீவி பார்த்தாள்.

"ஸிம்ஹளநாதரே! ஸிம்ஹளரைப் பற்றித்தான் நான் பேசுகிறேன். ஐயோ! ஏன் என்னை அவர் அசட்டை செய்கிறார்? மன்னிப்பார் என்னை! ஏன் அவர்வரவில்லை? நல்லவர்: அவருக்கே அதுதெரியாது! ஆ! கடவுளே! என்ன கஷ்டம்! எனக்கு ஜலம் கொடுங்கள், சீக்கிரம்! ஆனால் வேண்டாம்! என் பெண் குழவிக்குச் சரியானதல்ல!—அவளைத் தாதியிடம் கொடுங்கள்! அவர் இக் குழந்தையைப் பார்க்கலாகாது! கொண்டுபோங்கள்," என்று மஞ்சத்தில் படுத்திருந்த பாவை சொல்லிக்கொண்டிருந்தாள்.

"அம்மா! உமது புருஷர் இங்கே நிற்கிறாரே!" என்றாள் தாதி.

உண்மையில் இராஜீவி ஸிம்ஹளநாதரை மனக்கண்ணில் காணவில்லை.

"என்ன சொல்கிறாய்? அச்சிறு குழந்தையை என்னிடம் கொடு. ஏன் அவர் வரவில்லை? உனக்குத்தெரியாது. அவர் என்னை மன்னிப்பார்!—ஒருவருக்கும் அவருடைய குணம் தெரியாது! எனக்குத்தெரியும்—நான் அவருடைய மனைவி! அவருடைய கண் சித்திராங்கதன் கண்ணைப்போல வேயிருக்கும்—சித்திராங்கதனுக்கு என்ன வயது?—அவனை

அவர் மறந்துவிடுவார். ஐயோ! மறக்கவேண்டாம்!” என்று பிதற்றிக்கொண்டிருந்தாள் இராஜீவி.

திடீரென்று அவள் மௌனமானாள். தனது கையை சிறிது உயரத்தூக்கி தனக்கு ஏதோ ஒருவர் கொடுக்கும் அடியைத் தடுப்பவள்போல் செய்தாள். உடனே ஸிம்ஹளநாதரைக் கண்டு தெரிந்துகொண்டாள்.

“இல்லை, இல்லை! உம்மைக்கண்டு நான் அஞ்சவில்லை. சாவதைக்குறித்துதான் அஞ்சுகிறேன். ஸிம்ஹளரே! வாரும்! நான் சிறிது நேரம் உயிரோடு இருப்பேன்! மறுபடியும் கொடிய ஜுரம் வரும். பிறகு நான் பிணமாகக் கிடப்பேன்,” என்றாள் இராஜீவி.

ஸிம்ஹளநாதருடைய முகம் சிறுத்தது: இரக்கமடைந்தார்: பேச எண்ணினார்: ஆனால் அவருடைய கீழ் உதடு துடித்து நடுங்கியது: ஆனால் ஒரு வார்த்தைகூடப் பேச முடியவில்லை. சாகும் நிலைமையில் காணப்பட்ட இராஜீவியைப் பார்க்கும் அவருடைய கண்கூட ஒளியையிழந்தது. அவர் அவளுடைய கையை எடுத்து, தமதுகையில் சிறிது நேரம் வைத்துக்கொண்டிருந்தார். அவள் தம்மையே நோக்குவதைக்கண்டார்.

“சற்று இரும், ஓ! இதைத்தான் நான் கூறயோசித்தது ஆச்சரியப்படவேண்டாம்: நான் முன் மாதிரி தான் இருக்கிறேன். எனக்குள் இருக்கும் ஒன்றைத்தான் நான் கண்டு பயப்படுகிறேன். “அவள்” தான் அவனைக் காதலித்தாள்; உம்மை “அவள்” தான் வெறுத்தாள். நான்

இப்பொழுது பழைய ஸ்திதியை யடைந்துள்ளேன் நான் இப்பொழுது "அவளை"க்கண்டு பயப்படுவதில்லை. நான் இனி சாகவேண்டும்: சாகும் நிலைமையில்தான் இருக்கிறேன்: டாக்டரைக்கேளும்: நான் சாகும் தறுவாயில்தான் இருக்கிறேன். பலவான பாரங்கள் என்மேல் இருக்கின்றன: இறந்ததும் அவைகள் போய்விடும். நான் மரிக்குமுன் என்னைத் தாங்கள் மன்னிக்கவேண்டும்! மன்னியும் என்னை! மன்னியும் மனப்பூர்வமாக! நான் ஒரு பெரிய பாபமூட்டையைக் கட்டிக்கொண்டிருக்கிறேன்! மன்னிப்பினால் மடவரலியான் மறந்து மகிழ்ச்சியோடு மரிப்பேன்! நான இறந்ததும் சித்திராங்கதையையும் எனது சிறிய பெண்மகவையும் என்னோடு கூட்டிச்செல்வேன்—ஐயோ! நீர் மன்னிக்கமாட்டீர்? போம், இவ்விடத்தை விட்டு! அசுத்தமான என்னிடம் தாம் இருப்பது தகாது!" என்றாள் இராஜீவி.

ஸிம்ஹளநாதருடைய மனம் பொறுக்கமுடியாத பொறுமையையடைந்து குளிர்ந்தது. இரக்கமேலீட்டால் அவருக்குத் தெரியாமலே ஒருவகையான உணர்ச்சி உண்டாயிற்று. தாம் ஒருவகையான இன்பத்தைக் கொள்வதாக எண்ணினர். அவ்வின்பம் அவர் படிப்பின் மிகுதியால் உண்டாகியது. நீதி கிரந்தங்களில் சொல்லியபடி விரோதிகளை மனப்பூர்வமாக மன்னித்து, அவர்களை ஸ்நேகம் மறுபடியும் செய்து கொள்ளுதல் நலம் எனத்தோன்றியது. அவருடைய உள்ளத்தில் இராஜீவியின்மீது அன்பு ஏற்பட்டதால் மன்னிக்கும் தன்மையும்கூட விருந்தது. ஆதலால் அவர் அவள் அருகிலே உட்கார்ந்துகொண்டு ஒரு குழந்தையைப்போல் அழுது, கண்ணீர் உகுத்தார்.

"சந்தோஷம்!—நான்போய் வருகிறேன்! வந்தனம் ஓ! அவர்கள் வருகின்றனர்! அவர்கள் போகமாட்டார்களோ?" என்றாள்.

அப்பொழுது டாக்டர் குருராஜம் தலையணையின்மீது தலையை வைக்கும்படி சொன்னார். அவள் தலையை வைத்துக் கொள்ளாதினால் தாமே அவளுடைய தலையை மெல்ல வைத்தார்.

"தமது மன்னிப்பைத்தான் நான் வேண்டினேன்: வேறு எதையும் வேண்டவில்லை என்பதாக நினையும். ஏன் 'அவர்' வரவில்லை?" என்று சொல்லிக்கொண்டே கதவை நோக்க, அங்கே கமலசேகரன் நின்றுகொண்டிருப்பதைக் கண்டு, "வாரும் இங்கே; தமது கரத்தை அவருக்குக் கொடுங்கள்," என்றாள் இராஜீவி.

கமலசேகரன் அவளுடைய படுக்கையருகே வந்து, இராஜீவியைக்கண்டு, தனது முகத்தைக்கைகளால் மூடிக்கொண்டான்.

"உமது கையை எடும்! இவரை நோக்கும்: இவர் ஒரு பெரிய உத்தமர்" குணவான் என்று கமலசேகரனைநோக்கிக்கூறிய இராஜீவி மறுமுறை, "ஸிம்ஹளநாதரே! இவருடைய முகத்தில் இருக்கும் கைகளை எடும். நான் இவரைப் பார்க்கவேண்டும்," என்றாள்.

ஸிம்ஹளநாதர் அங்ஙனமே செய்ய, நாணத்தையும் அச்சத்தையும் கமலசேகரன் கொண்டார்.

"தமது கையை இவருக்குக்கொடுத்து மன்னியுங்கள்," என்றாள் இராஜீவி.

தமது கண்களில் வந்துகொண்டிருந்த கண்ணீரைத் துடைத்துக்கொள்ளாமலே ஸிம்ஹளநாதர் கமலசேகரனுடைய கையை வாங்கிக்கொண்டார்.

"கடவுளை யான் வழுத்தவேண்டும்! இப்போது எல்லாம் சரியாகியது.—நான் என் கால்களை நீட்டிக்கொள்ளட்டுமா? என் தோட்டத்தில் இருக்கும் புஷ்பங்கள் அழகாகயில்லை," என்று சொன்னாள் இராஜீவி. பிறகு அவளுக்குச் சுரம் வந்ததால் பிதற்றுவதாயினாள்.

டாக்டர்களும் சுரத்தை நிறுத்த முடியாதென்று கை விட்டு விட்டார்கள். அவள் பிழைத்து மறுபடியும் இருப்பது புனர்ஜன்மம் என்று அவர்கள் சொல்லினர். இரண்டு தினங்களுக்குப் பிறகு நடுநிசியில் அவளுடைய நாடி மலினமடைந்துபோயது. மரணம் கிட்டும் சமயம் என்று டாக்டர்கள் சொல்லினர்.

மறுநாள் காலை கமலசேகரன் மறுபடியும் இராஜீவியின் மாளிகைக்கு வந்தான். ஸிம்ஹளநாதர் அவனை அவ்விடம் இருக்கச்சொன்னார். "இராஜம் உன்னைப் பார்க்கவேண்டுமென்று கூறலாகும்" என்றார்.

"ஸிம்ஹளநாதரே! என்னால் பேசமுடியவில்லை. தாங்கள் எவ்வளவு மனவேதனை கொண்டிருக்கிறீரோ அவ்வளவு மனவேதனை எனக்கும் இருக்கிறது. அதை எப்படிச் சொல்லமுடியும்?" என்றான் சோகத்துடன் கமலசேகரன்.

"நான் சொல்வதைக்கேளும், கமலசேகரரே! என் மன உணர்ச்சியைப்பற்றி உமக்குச் சிறிது சொல்லலாமெனில், மனவேதனை தடங்கலாக வழியில் நிற்கிறது. நான்

நேரான நெறியில் செல்பவன். சீக்கிரத்தில் கலியாண விடுதலை சட்டத்தை என் விஷயத்தில் உபயோகிக்கும்படி நியாயஸ்தலத்தாரை எனது வக்கீல் கேட்பார். ஐயோ! என் மனைவி முதலில் மானக்கேடாக நடந்து போனதைக்கேட்டதும் நான் பழிக்குப் பழிவாங்க நினைத்தேன்: என் மனம் மிகுந்து நொந்து கஷ்டப்பட்டது! நான் இராஜத்தின் தந்தியைக் கண்டதும் ஓடிவந்தேன்: எனது விரோதியின்மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ளவேண்டும் என்று இருந்தேன். இ ரா ஜ ம் இறந்துபோவாள் என்று எண்ணியிருந்தேன். ஆனால் அவளைப்பார்த்தேன்: மன்னித்தும் விட்டேன். அவளை மன்னித்ததினால் எனக்கு ஒரு வகையான சந்தோஷம் உண்டாயிற்று. ஒரு கன்னத்தின்மேல் அடிகொடுத்த எனது ஜன்ம விரோதிக்கு எனது இரண்டாவது கன்னத்தையும் காட்டினேன்! என்னைக் கொள்ளையடித்த திருடனுக்கு மிகுந்த உபசாரத்தோடு வேறு ஒரு வஸ்திரத்தையும் கொடுத்தேன்! நான் கடவுளை ஒரு விஷயத்தைமட்டும் கேட்கிறேன். அவளை மன்னித்ததினால் உண்டாகும் எனது மனச்சந்தோஷத்தினை ஒருவரும் கெடுக்காதவண்ணம் நிலைநிறுத்துமாறு கேட்கிறேன்," என்றார் ஸிம்ஹளநாதர்.

அவருடைய கண்ணில் நீர் ததும்பியது. கமலசேகரன் அவருடைய மேலான குணத்தைக்கண்டு மனதினுள் ஆச்சரியம் அடைந்தான்.

"இவைகள் எல்லாம் என்மன உணர்ச்சிகள். என்னை நீர் உலகம் சிரிக்கும்படி செய்யலாம்: என் பரிசுத்தமான பெயரை பழுதுபடுத்தலாம். ஆனால் இராஜத்தை இனிமேல் என்னிடம் இருந்து விட்டுவிடமாட்டேன். உம்மையும்

நான் தூஷிப்பதில்லை. எல்லாம் விதிவசத்தால் முதலில் நேர்ந்தது. இனி எனது கடமையை நான் செய்யவேண்டியவனாகயிருக்கிறேன். நான் இராஜத்தோடு சேர்ந்து இருக்க வேண்டும். தாங்கள் அவளைப்பார்க்க விரும்பினாலும் பார்க்க வேண்டாம். நாளை முதல் தாங்கள் வரவேண்டாம்,' என்றார் ஸிம்ஹளநாதர்.

ஸிம்ஹளநாதர் எழுந்தார். அவருடைய குரல் விசனத்தினால் கஷ்டமடைந்தது. கமலசேகரனும் எழுந்திருந்தான். வார்த்தை ஏதும் பேசவில்லை. ஸிம்ஹளநாதருடைய மனவுணர்ச்சிகளை அவன் அறிந்துகொள்ள முடியாது, உன்மத்தன்போல் காணப்பட்டான். தான் ஏதோ ஒரு பெரிய பரிசுத்தமான ஆலயத்தைக் கண்டதாகவும் அதன் அருகில் தான் இருப்பது பிசகு என்பதாகவும் எண்ணினான். ஸிம்ஹளநாதருக்கு வந்தனம் செய்துவிட்டு, படிக்கட்டுகளின் வழியாக இறங்கிச்செல்லுகையில், தான் இருக்குமிடம் யாது என்பதாகச் சந்தேகித்தான். தான் அவ்வளவு பெரிய இடத்தில் அவமானம் விளைத்ததைக்கண்டு, தனது அவமானத்தை எங்கு கழிப்பது என்று கருதினான். தான் அத்தனை நாட்களாக அவமான நெறியில் நடந்துபோனதற்கு மிகுந்த வருத்தமடைந்தான். ஏமாற்றப்பட்ட புருஷன் என்று அவன் ஸிம்ஹளநாதரை எண்ணியது பிசகு என்றும் அவர் இராஜீவியின் ஸ்திதியினால் உயர்ந்து காணப்படும் உத்தம புருஷரென்றும் அவன் நினைத்தான். மகா உன்னதமான நல்ல மனிதர் இவ்வுலகில் கிடைப்பது அரிது என்று உன்னினான். தனது இழிவான நடத்தையைக்கண்டு வெட்கமடைந்தான். ஆனால் சிறிது நேரத்திற்கெல்லாம் கமலசேகரன் இராஜீவியைப்பற்றி எண்ணினான், அவளைத்தான் இழக்க நேர்ந்ததே

என்று வருந்தினன். அவள்மீது தான் கொண்டிருந்த காதல் மும்முரமாக ஓங்கி எழுவதாயிற்று. "ஐயோ! இவளை நான் எப்படி இழக்கலாகும்? பால் பொங்கி வந்து பானையில் வழிந்துபோவதைப் போலாயிற்றே!— ஸிம்ஹளநாதர் ஏன் அவளை வைத்துக்கொள்ளவேண்டும்? எனக்கே அவள் சொந்தம்! எனக்கே அவள் சொந்தம்!" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். ஆனால் அவனது வெளித்தோற்றம் பைத்தியக்காரனுடைய தோற்றத்தைக் கொண்டிருந்தது.

தனது மாளிகையை யடைந்ததும், கமலசேகரன் சோகமேலீட்டால் ஒரு ஸோபாவில் சாய்ந்துகொண்டான். அவனது மனம் எனும் அரங்கத்தில் நடிகர்களாகிய பல நினைவுகள் தோன்றி நடித்துக்கொண்டிருக்கையில், கடலசேகரன் ஒருபோது சந்தோஷமும் ஒருபோது ஆக்ரோஷமும் கொண்டான். தான் ஒரு செங்குத்தான மலையின் உச்சியிலிருந்து கிடுகிடு பாதாளம் ஒன்றில் உருண்டு விழுவதாக எண்ணினான். ஸிம்ஹளநாதருடைய வார்த்தைகள் அவனை ஈட்டிபோல் குத்துவதையறிந்து மனம் நொந்தான். அவன் மனம் குழம்பி, சாம்பியது. அவன் நயன நீர் புண்ணீர் போல் தோன்றியது. இராஜீவி தனது முகத்தை முன்பு ஒரு நாள் பார்க்கவில்லையே என்று யோசித்தான் என்ன செய்வது என்று திகைத்தான். உலகத்தைப் பகைத்தான் மங்கையரை எண்ணி நகைத்தான்: மரணத்தை விழைந்தான்.

அன்றிரவு கமலசேகரன் படுக்கையில் சயனித்துக் கொண்டிருந்தபோது தான் ஏன் தற்கொலை செய்து கொள்ளக்கூடாது என்று மனதைக்கேட்டான். "ஏன் அதை நான் அங்ஙனம் செய்யலாகாது? இராஜ்யம் இல்லாமல் இவ்

வுலகில் இருப்பது இனிமேதா? இல்லை! இல்லை! -நான் அவள் பொருட்டு எல்லா விஷயங்களையும் மறந்திருந்தேன். இப்பொழுது நான் அவளைப்பிரிந்து இழந்து வாழ்வதோ? தற்கொலை நல்லது. உரோமாபுரியில் புருத்தஸ் என்பவர் ஜூலியஸ் ஸீஸரைக் கொன்றதினால், பிறகு தமது செய்கை பிசகென்பதை யுணர்ந்து தற்கொலை புரிந்துகொள்ளவில்லையா? சந்திரகுப்த மௌரியர் எனும் சக்கரவர்த்தி பட்டினியாகக் கிடந்து தற்கொலை செய்துகொள்ள வில்லையா? ஆம்! மானம் போனபின் வாழ்வு வேண்டப்படுவது அன்று," என்று சொல்லிக்கொண்டே அலமாரியில்இருந்த ரிவால்வரைத் தனது கையில் எடுத்துக்கொண்டு அதை உற்று நோக்கினான். உடனே அதைத்தனது மார்புக்கு நேராக வைத்துக்கொண்டு, ரிவால்வரில் புகைகக்கும் விசையை இழுத்தான். சப்தம் எதுவும் கேட்கவில்லை. ஆனால் ரிவால்வர் அவனுடைய இடதுபுறவயிற்றின் பக்கம் விசையோடு தாக்கியதால், கமல சேகரன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் நினைவுடன் மேஜை யைப் பிடித்துக்கொள்ள எண்ணினான். ரிவால்வரைக் கீழே போட்டான். போட்டதும் தானும் கீழே விழுந்ததைக் கண்டு வருத்தமடைந்தான். கண்கள் கிறுகிறுத்தன. எதை யும் அவன் பார்க்க முடியாது என்று உன்னினான். அவ னுக்கு அருகில் இரத்தம் மளமளவென்று ஓடுவதாயிற்று.

ரிவால்வரின் சப்தத்தைக்கேட்டு ஷண்பகவல்லிச் சீமா ட்டி ஓடிவந்தாள். வரலும், கோரமான காட்சியைக்கண்டு பயந்து நின்றாள். அவளுக்குப் பின்னால் வந்தசேவகன் டாக் டரை யழைத்துவர ஓடினான்.

அதிகாரம்—13.

தரும சங்கடம்.

ஸிம்ஹளநாதர் உதயமண்டலத்திற்குத் திரும்பிவந்து இரண்டு மாதங்களுக்கு மேலாயிற்று. அவர் இராஜீவியை மன்னித்துவிட்டதனால் மட்டற்ற மகிழ்ச்சியடைந்திருந்தார். அவளை மன்னித்தது மன்றி அவள்மீது இரக்கமும் கொண்டிருந்தார். அதே இரக்கம் அவர் கமலசேகரன் மாட்டும் காண்பித்தார். குழந்தை சித்திராங்கதன்மீது அதிகமான அன்பைக் காட்டுவதாயினர். ஆனால் இராஜீவிக்குப் பிறந்த பெண் குழந்தையின் மீது இரக்கம் காட்டவில்லை. அதற்குப் பதிலாக அமோகமான அன்பையும் வாத்ஸல்யத்தையும் வைப்பதாயினர். அச்சிறு குழந்தையின் அன்னை சுரத்தில் வருந்திக் கொண்டிருக்கையில், ஸிம்ஹளநாதர் அப்பெண் மகவைத் தன்னுடைய குழந்தையேபோல் எண்ணி நன்கு வளர்க்கும்படி அதனுடைய தாதிக்கு உத்தரவிட்டார். அடிக்கடி அவர் சென்னைக்குச் செல்வதையும் இராஜீவியின்மீது இரக்கம் காட்டுவதையும் கண்ட ஜனங்கள் இராஜீவிக்கும் கமலசேகரனுக்கும் பிறந்த பெண் சிசு தமக்கே பிறந்தது என்று எண்ணிக்கொள்ளும்படி சந்தேகமில்லாமல் நடந்துகொண்டார்.

ஒவ்வொருதடவை ஸிம்ஹளநாதர் சென்னைக்குச்சென்ற போதும் அழகிய அந்த சிசுவைத் தமது கண்களால் கண்டு வியந்து திரும்புவார். அக்குழந்தை தனது சிறிய அழகிய கைகளை எடுத்து வாயில்வைத்துக் கொள்வதைக்கண்டு அகம் மகிழ்வார்.

இராஜீவி இறவாமல் பிழைத்துக்கொண்டதும் தன் புருஷனைக்கண்டு அச்சமும் நாணமும் கொள்வதாயினாள். அவரைத் தனது அழகிய கண்களால் பார்ப்பதற்கே மனம் வெட்கினாள்.

மே மாதமும் வந்தது. ஒரு நாள் திடும்பிரவேசமாக இராஜத்தின் பெண் குழந்தை அன்னம் நோயுற்றது. டாக்டர்களும் வந்து குழந்தையைப்பார்த்து மருந்து கொடுத்தனர்.

பின்பு ஒரு நாள் சாயுங்காலம் ஷண்பகவல்லிச் சீமாட்டியின்சொந்தக்காரியும் இராஜீவியின் ஸ்நேகிதையும் ஆன பாக்கியவதி என்பவள் இராஜீவியின் மாளிகைக்குச்சென்று, அவளோடு பேசிக்கொண்டிருந்தாள். ஸிம்ஹளநாதரும் அன்றைய தினம் காலையில் உதகமண்டலத்தை விடுத்துச் சென்னைக்கு வந்திருந்தார். அவருக்குப் பாக்கியவதி அம்மாள் ஸ்நேகமாகயிருந்தாலும், எல்லாம் மேலுக்கு மட்டுந்தான். தமது மனைவியிடம் அவள் பேசிக்கொண்டிருப்பதையறிந்து, தாம் அவளோடு பேசாமல் இருப்பது பிசகென்றெண்ணி, இராஜீவியின் அறைக்குச்சென்றார். அவளுடைய அறைக்குச் செல்லுமுன் இராஜீவியும் பாக்கியவதியும் பேசிக்கெண்டிருப்பதைக்கேட்டு, சிறிதுநேரம் ஸ்தம்பித்துநின்றார்.

"ஐயோ! நான் வரமுடியாது," என்றாள் இராஜீவி.

"இராஜம்! உனக்குக் கருணை என்பது இல்லையா? உன்பொருட்டுத் தன்னைத்தானே சுட்டுக்கொண்டவனைப் பார்க்க வரமாட்டேன் என்று சொல்லுவது சரியா? மேலும், உன் புருஷர் தடைசொல்லமாட்டார்," என்றாள் பாக்கியவதி.

"நான் அவரைப் போய்ப்பார்க்க முடியாது," என்றாள் இராஜீவி மறுபடியும்.

அப்பொழுது ஸிம்ஹளநாதர் அறையினுள் புகுந்ததைக் கண்ட அந்த இரண்டு ஸ்திரீகளும் மரியாதையாக எழுந்து நின்றனர். அவர் அவர்களை உட்காரச் சொல்லிவிட்டுத் தாமும் சிறிது நேரம் உட்கார்ந்து கொண்டார்.

தனது புருஷனைக் கண்டதும் இராஜீவியின் வதனம் நிறத்தையிழந்தது.

"ஸிம்ஹளநாதரே! தம்மைக்கண்டு சந்தோஷமடைகிறேன்.—இந்த ஊருக்கு வந்தால் நம்மை எல்லாம் கண்டு பேசுவதில்லை. நாம் இருவரும் மிகுந்த நட்பினராயிற்றே!" என்று பாக்கியவதி சிரித்துக்கொண்டே கூறினாள்.

ஸிம்ஹளநாதர் இரண்டு வார்த்தைகளைச் சொல்லிவிட்டு இராஜீவியின் தேக சௌக்கியத்தைப்பற்றி விசாரித்தார்.

"இப்பொழுது பரவாயில்லை," என்று இராஜீவி தரையை நோக்கிக்கொண்டே கூறினாள்.

"முகம் வேறு மாதிரியாகயிருக்கிறதே!" என்றார் ஸிம்ஹளநாதர்.

"நான் இவள் களைத்துப் போகும்வரையில் பேசிவிட்டேன் என்று நினைக்கிறேன். நான் போய்வருகிறேன்," என்று சொல்லிக்கொண்டே ஆசனத்தை விட்டெழுந்திருந்தாள் பாக்கியவதி. இராஜீவி அவளை மறுபடியும் உட்காரச் செய்தாள்.

"பாக்கியம்! நான் என் புருஷரிடத்தில் எதையும் மறைக்கலாகாது. நான் சொல்லிவிடுகிறேன்," என்றாள் இராஜீவி.

"கமலசேகரர் சைனாவில் நடக்கும் யுத்தத்திற்குச்செல்கிறாராம். நானாவது அவராவது சந்தித்துப்பேசினால் நலம் என்றாராம். நான் இரண்டிற்கும் மறுத்துவிட்டேன். கமலசேகரரை நான் போய் கண்டுவரமுடியாது. அவரையும் நான் இங்கே வரும்படி செய்யமாட்டேன்," என்று இராஜீவி தன் புருஷனிடம் புகன்றாள்.

ஸிம்ஹளநாதர் சந்தோஷமடைந்து, இராஜீவியின் கரத்தை வாங்கிக்கொண்டு, "இராஜம்! உன் நம்பகம் நலமானது அதன் பொருட்டு உன்னை நான் வந்திக்கிறேன்" என்றார்.

பாக்கியவதி இருவரிடத்தும் விடைபெற்றுச்சென்றாள். ஸிம்ஹளநாதர் அவளுடன் வாசற்படிவரை சென்றார். அவள் அவரைநோக்கி "உம்முடைய பெருந்தன்மையான குணத்தை யார்தான் அறியார்? கமலசேகரன் சைனாவுக்குப்போகிறான். போவதன் முன்னர் இராஜீவியைப்பார்க்க விரும்புகிறான். நான் இராஜத்தை அவன் மாளிகைக்குப் போகும்படி கூறினேன். அல்லது கமலசேகரனை இங்கே பார்க்கும்படியாவது சம்மதிக்கும்படி கேட்டேன். மாட்டேன் என்று மறுக்கிறாள்," என்றாள்.

"நான் இராஜத்தின் பதிலை எங்ஙனம் கொடுக்கலாகும்? அவள் தான் சொல்லவேண்டும்" என்று ஸிம்ஹளநாதர் சொல்லிவிட்டு, பாக்கியவதியை அனுப்பிவிட்டார்.

பாக்கியவதியை அனுப்பிவிட்டதும், ஸிம்ஹளநாதர் தமது மனைவியின் அறையையடைந்து, இராஜீவியை நோக்க, அவள் அழுதுகொண்டிருந்ததாகத் தெரிந்துகொண்டார்.

"நீ என்மீது வைத்துள்ள நம்பிக்கையின் பொருட்டு மிகவும் சந்தோஷமடைகிறேன். கமலசேகரப்பிரபு சைனுவுக்குப் போகுமுன் உன்னை இங்கேயாவது அவரது மாளிகையிலாவது சந்திக்க விரும்பினதும் நீ அதற்கு மறுத்ததும் குறித்து சந்தோஷம் அடைகிறேன். நீ போகவேண்டிய பிரேமேயமில்லை," என்றார்.

"ஆம்! இனி அதைப்பற்றிப் பேசுவானேன்!" என்றாள் இராஜீவி.

"இராஜம்! முன்புபோல் உனக்குப் பூரண சுயாதீனம் கொடுத்திருக்கிறேன். உன்னிஷ்டப்படி நடக்கலாம்," என்றார் ஸிம்ஹளநாதர்.

"ஸிம்ஹளநாதரே! தாம் என்னைத் தனித்துவிட்டுச் சென்றால் நலம்," என்றாள் இராஜீவி.

ஸிம்ஹளநாதருக்கு மனம் வேதனையடைந்தது. தாம் என்ன செய்தாலும் இராஜீவி தம்மை அவமதிப்பதாக நினைத்தார். மேலும் காதலற்ற இருவர்சேர்ந்து வாழுவது சரியல்ல என்றெண்ணினார். என்ன செய்வது என்று சிந்தித்தார்.

மண்ணுலகும் மனைவியும் தம்மிடம் ஏதோபலாத்காரமாக சிலவற்றைப் பிடுங்கிக்கொள்ள முயலுவதாக எண்ணினார். அதனால் அவருக்கு அவைகளின்மேல் பகைமை உண்டாயிற்று. மனச்சாந்தி இல்லாமல் போயிற்று.

கமலசேகரனைக் கனவிலும் கருதக்கூடாதென்று லிம்ஹளநாதர் நினைத்திருந்தார். ஆனால் இராஜீவியின் முகம் ஏன் விசனத்தைக் கொண்டிருந்தது? அவள் கமலசேகரனைச் சந்திக்கவேண்டும் என்றெண்ணியிருக்கிறாள். அதற்கு தாம் விடைகொடுக்க இயலுமா என்பதாக அவள் சந்தேகித்ததாக அவர் முடிவுசெய்தார். தமது இரண்டு குழந்தைகளும் தாமும் உலகில் அவமானம் அடையாமல் இருந்தால், இராஜீவி தன்னிஷ்டப்படி நடக்கலாம் என்று யோசித்தார்.

இரண்டு மணி நேரமாயது. திவான்பகதூர் துரைசிங்கம் பிரபு தமது சகோதரியை வழக்கம்போல் பார்த்துப்போக வந்தார். ஆனால் பாக்கியவதி அவருக்கு ஸ்நேகமாதலின் அவள் மூலியமாக அவர் இராஜீவியின் நிலைமையைத் தெரிந்துகொண்டார்.

தன் தமையனைக் கண்டதும், "அண்ணா! வாரும்! இப்படி உட்காரும்! எனக்கு இனி பூலோகமே வேண்டியதில்லை." என்று இராஜீவி கூறிவிட்டுக் கண்ணீர் சிந்தினாள்.

"இராஜம்! கண்களை மூடிக்கொண்டு நீ பேசுகிறாய்! தைரியம் கொண்டிரு! என்னசெய்வது? உன் விதியின்படி மதி இருக்கிறது! சரி—தேற்றிக்கொள்—அன்று நீ எல்லா விஷயங்களையும் எனக்குக் கூறிவிட்டு என் மன்னிப்பை யடைந்தாய்," என்றார் துரைசிங்கம்.

"தம்மை விரோதிகளாக கொண்டிருக்கும் சில ஸ்திரீகள் தமது புருஷர்களைக் காதலிக்கிறார்களாம். ஆனால் நான் என் புருஷனை மனமாரவெறுக்கிறேன். நான் அவருடன் சேர்ந்திருக்கமுடியாது. அவரைக் காணுதற்கே வெட்கமாக

யிருக்கிறது. நான் என்னசெய்வேன்? நான் முன்பு சந்தோஷத்தோடு இருக்கவில்லை. இப்போதும் அப்படியே! அவருடைய மகா மேலான குணத்தையும் எனது கேவலமான நடத்தையும் அடிக்கடி எனக்கு கோபத்தையும் பயத்தையும் கொடுப்பதால், என் மனம் திண்டாடுகிறது. நான் என்றாவது ஒரு நாள் தற்கொலைசெய்து கொள்ளவேண்டும்," என்றாள் இராஜீவி.

"மனம் வேறுபட்டிருப்பதால் நீ இப்படிக் கூறுகிறாய்! ஏன் பயப்படுகிறாய்?" என்று இனிமையாக மொழிந்தார். அவருடைய வார்த்தைகள் பாதாமி அல்வாவைப்போல் இனிமை கொடுத்தபடியால் இராஜீவி தன்னைத் தேற்றிக் கொண்டு, "அண்ணா! நான் கதி அற்றவள்! என் முடிவு இன்னும் வரவில்லை. ஐயோ! அதுவந்தால் மிக்க கோரமாக யிருக்கும்," என்றாள்.

"வேண்டாம் அக்கோரமானசாவு!— உனக்கு கலியாண விடுதலை கிடைத்தால் போதுமானது. அது உனது கஷ்டங்களைப் போக்கும் அல்லவா?—சரி, ஸிம்ஹளநாதர் வாசக அறையில் இருக்கிறார் எனக் கேள்விப்பட்டேன். அவரைப்போய் பார்க்கிறேன்," என்று சொல்லி எழுந்தார்.

வாசக அறைக்குச்சென்ற திவான்பகதூர் துரைசிங்கம் ஸிம்ஹளநாதருக்கு வந்தனம் செய்தார். அவரும் பதில் வந்தனம் செய்து துரைசிங்கத்தை உட்காரும்படி செய்தார்.

"நான் எனது சகோதரியைப்பற்றிப் பேசவிரும்புகிறேன்," என்றார் துரைசிங்கம்.

ஸிம்ஹளநாதர் மேஜைமீது பாதி விஷயம் வரையப்பட்டிருந்த ஒரு கடிதத்தை எடுத்து, போலீஸ் கமிஷனரிடம் கொடுக்க, அவர் அதை வாசித்தார்.

"எனது மாளிகையில் நான் உன்னோடு இருப்பது உனக்குப் பிடிக்கவில்லையென்று தெரிகிறது. அதைக்கண்டு எனக்கும் வேதனை உண்டாகிறது. உன்னைக் குறைகூறுவதில் பயனில்லை. நான் உனக்கு அபாயம் நேரிட்ட காலத்தில் உதவிசெய்து, நீதிநெறி பிறழ்ந்து போனதையும் மறந்து மறுபடியும் புதிதாக வாழ்க்கையை ஆரம்பிக்கலாம் என்றெண்ணியிருந்தேன். அந்த முடிவுக்கு நான் வந்ததுபற்றிச் சந்தோஷமே கொண்டிருந்தேன். உன் விமோசனத்தை நாடியே நான் இப்படிச்செய்தேன்! ஆனால் நான் உன் ஆன்மாவை நல்வழிப்படுத்த முடியவில்லை. உனக்கு சுகத்தையும் தரத்தக்க நெறிகளைக்கூறினால் நலம்," என்று அதில் எழுதியிருந்தது.

துரைசிங்கம் அக்கடிதத்தை மேல் வைத்துவிட்டு சோகமுற்றுத் தமது மைத்துனரை யுற்றுநோக்கினார்.

"நான் அவள் விருப்பப்படி நடக்க முயலுகிறேன்," என்றார் ஸிம்ஹளநாதர்.

"ஆம், உமது விருப்பத்தை நான் அறிந்துகொண்டேன்," என்று துக்கத்தோடு துரைசிங்கம் கூறினார்.

"அவள் விருப்பத்தை நான் தெரிந்துகொள்ளவேண்டும்," என்றார் ஸிம்ஹளநாதர்.

"தன் நிலைமையை அவளை இன்னும் தெரிந்துகொள்ள வில்லை. ஐயோ! அவள் மனவேதனைசொல்ல ஒண்ணது. தமது சதித்தைக்கண்டால், அவள் துக்கத்திலாழ்வாள்," என்றார் துரைசிங்கம்.

"ஆம், என்னசெய்வது! கருத்து என்னவோ?" என்றார் ஸிம்ஹளநாதர்.

"தாம் முதலில் நினைத்த கலியாண விடுதலை—" என்று துரைசிங்கம் கூறுகையில், ஸிம்ஹளநாதர், "அதை எப்படிச் செய்கிறது? என் பெயரும் குழந்தைகளின் பெயரும் கெடாதபடி நான் பார்த்துக்கொள்ளவேண்டாமா" என்றார்.

கலியாண விடுதலையைப்பெற்றால் இராஜீவி கமலசேகரனைக் கலியாணம் செய்துகொண்டால், குழந்தைகளின் கதி என்னகும்? தமது மானத்திற்குப் பங்கம் ஏற்படும் அல்லவா? கலியாண விடுதலையைப்பெற்றால் இராஜீவியின் ஆன்மாவுக்கு விமோசனம் ஏது? தாம் அவளை கிடுகிடு பாதாளத்தில் தள்ளிவிடுவதல்லாமல், ஊரில் எல்லாரும் சிரிப்பார்களே என்று யோசித்தார். கமலசேகரன் அவளைக் கலியாணம் செய்து கொள்ளாமல் சில வருஷங்கள் அவளுடன் கூடிச் சுகித்திருந்து பின்னர் அவளை மறுத்தால் என்னகும் இராஜீவியின்கதி? என்று யோசித்தார். தம்மைத் தான் உலகம் நிந்திக்கும் என்று உன்னினார். கடைசியில் கலியாண விடுதலைச் சட்டம் மிகவும் கெட்டது என்று தெளிந்தார்.

"ஐயோ, கடவுளே! நான் என்ன செய்வது?" என்று ஸிம்ஹளநாதர் தமக்குள் பிரலாபித்துக் கொண்டார்.

துரைசிங்கமும் என்ன செய்வது என்று யோசித்தார். "கஷ்டகாலம்," என்று சொல்லிக்கொண்டார்.

கமலசேகரன் ரிவால்வரால் தற்கொலை செய்து கொள்ளப் பிரயத்தனம் செய்ததை நேயர்கள் அறிவார்கள். நல்ல வேளையாக அவனுக்கு இருதயத்தில் மரணகாயம் ஏற்படவில்லை. இரண்டு மாதகாலம் வரையில் ரணத்தினால் கஷ்டப்பட்டான். அதற்குப் பிறகு பதினைந்து நாட்களில் பூரண சுகம் பெற்றுவிட்டான். அவன் நோயாளியாக யிருக்கையில் ஷண்பகவல்லிச் சீமாட்டியே மிகுந்த ஜாக்கிரதையோடும் அன்போடும் பார்த்துக்கொண்டிருந்தாள்.

பூரண சுகமடைந்ததும் இந்தியா கவர்ன்மெண்டார் சைனாவுக்கு இந்திய சேனையில் ஒரு பகுதியை அனுப்புவதாகவும் கமலசேகரன் ஒரு காப்டெனாகப் போவதானால் மிக்க நல்லதென்றும் கவர்ன்மெண்டார் கேட்டுக்கொண்டபடியால் அவன் போவதற்கு உடன்பட்டான். ஷண்பகவல்லிச் சீமாட்டி வேண்டாம் என்று எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. தான் இனிமேல் இராஜீவியை விரும்பலாகாது என்று தீர்மானமும் செய்து கொண்டான்.

ஆனால் கப்பலில் ஏறிச் செல்லவேண்டிய நாள் நெருங்க நெருங்க, கமலசேகரனுக்கு இராஜீவியின் மீது இருந்த காதல் அதிகமாயிற்று. எங்ஙனம் அவளை விட்டுத் தனித்திருப்பது என்று யோசித்தான். இருந்தாலும் இராஜீவி தன் மாளிகைக்கு வந்து கடைசி தடவை ஏன் பார்த்துச் செல்லலாகாது? அல்லது தான் ஏன் கடைசி தடவையாக அவள் வீட்டிற்குச் செல்லலாகாது? பிறகு தான் சைனா தேசம் சென்று யுத்தகளத்தில் விழிப்பில்லாத நித்திரையை யடையலாம் என்று யோசித்தான்.

அப்பொழுது தனது சொந்தக்காரியான பாக்கியவதி என்பவளை இராஜீவியிடம் போய் வருமாறு அனுப்பினான்.

அந்தப் பெண்மணி மறுநாட்காலையில் கமலசேகரனிடம் ஸிம்ஹளநாதர் இராஜீவியை மனைவி பதவியிலிருந்தும் சட்டப்படி தள்ள முடிவு செய்திருப்பதாக துரை சிங்கம் தனக்குக் கூறியதைக்கேட்டு, அதை அவனிடம் உரைத்து, கமலசேகரன் இராஜீவியைப் பார்த்து வருவதில் ஒரு கெடுதலுமில்லை என்றாள்.

அன்று அவன் அடைந்த அளவு அற்ற ஆனந்தம் அமோகம் ஆக இருந்தது. ஆதலின் தன் மோட்டாரில் ஏறிக்கொண்டு, சிறிதும் யோசியாமல் இராஜீவியின் மாளிகைக்குச் சென்றான். அங்கு ஸிம்ஹளநாதர் இருந்தால் என்ன சொல்லுவார் என்பதை அவன் யோசிக்கவில்லை.

நேராக அவன் படிக்கட்டுகளின் மீதேறி இராஜீவியின் அறையை யடைந்து, அன்போடு அவளை ஆலிங்கனம் செய்து கொண்டு முத்தம் பல கொடுத்து, ஆனந்த பரவசமானான்.

இராஜீவி அவனைப் பார்க்கவேண்டும் எனும் எண்ணத்தைக் கொண்டிருந்தாள். ஆனால் கமலசேகரன் தன்னை இறுக கட்டியணைத்து முத்தமிட்டுக்கொண்டிருந்ததில் தன் மனதை லயப்படுத்தினாள்: ஆதலின் அவளுக்கு என்ன பேசுகிறது என்று தெரியவில்லை.

“கடைசியில் நீர் என்னை ஜயித்து விட்டீர்! நான் உமக்கே சொந்தம்!” என்றாள்:

" ஆமாம்! நாம் இருவரும் உயிரோடு இருக்கும் வரையில் சொந்தம்!" என்றான்.

"ஐயோ! உம்மைக் கடவுளே தான் காப்பாற்றினர்!"

" இராஜம்! நான் பூரணசுகம் பெற்றுவிட்டேன். நான் சைனாவுக்குப் போகவேண்டும். ஆனால் அதற்குப் போக வேண்டியதில்லை. நாம் இருவரும் இலங்கை செல்லலாம். அங்கே ரம்மியமான காட்சி பல உள."

" நாம் இருவரும் விவாகம் செய்துகொள்ளாமல் சதிபதிகள் போல் இருக்க முடியுமோ?"

" முடியாமல் என்ன"

" எனது அண்ணா சொல்லியதை நோக்கினால் ஸிம்ஹள நாதர் நான் சொல்வதற்கு ஒன்றிற்கும் ஆட்சேபனை சொல்ல மாட்டார் எனத் தெரிகிறது. எனக்கும் கலியாண விடுதலையின்மீது பிரியமில்லை. சித்திராங்கதனை நான் வைத்துக் கொள்ள அநுமதி கொடுப்பாரா!"

கமலசேகரனுக்கு சித்திராங்கதன் எனும் குழந்தையைக்கண்டால் பிரியமே கிடையாது. அதைப்பற்றித் தன்னிடம் கூறவேண்டாம் என்று சொல்லியும் இராஜீவி தான் பிடித்த பிடிவாதத்தையே சாதிப்பதாயினாள்.

"நான் ஏன் இறந்து போயிருக்கலாகாது? அது நலமாக இருந்திருக்குமே!" என்று கூறிக்கண்ணீர் விட்டாள்.

ஒரு மாதம் ஆயிற்று.

ஒருநாள் சாயுங்காலம் இராஜீவி சித்திராங்கதனைத் தன் கணவனிடமே இருத்திவிட்டு, கமலசேகரனுடன் இலங்கை ஸிங்கப்பூர், ஜாவா, சுமத்திரா முதலிய தீவுகளுக்குப் பிரயாணம் ரகசியமாகச் செய்தாள். கலியாண விடுதலைக்கு அவள் சம்மதியும் கொடுக்கவில்லை.

அதிகாரம்—14.

அன்னையின் அன்பு அளத்தற்கு அரிது.

ஸிங்கப்பூர் முதலிய தீவுகளுக்குப் பிரயாணம் செய்த கமலசேகரனுடைய காதற்கிழத்தி இராஜீவி அகத்தில் சந்தோஷம் மிக்கவளாய், அதை முகத்தில் தோற்றுவித்தாள். தான் பிரிந்து வந்ததால் ஸிம்ஹளநாதருக்கு மனச் சாந்தியே கிடைக்காமல் போகுமே என்பதை அவள் அறவே மறந்தாள். அல்லது அதைக்கவனியா தொழிந்தாள் என்றே சொல்லவேண்டும். தான் சகல தொந்திரவுகளில் இருந்தும் தப்பித்துவந்த கிளி என்று எண்ணிக்கொண்டு மனம் பூரித்தாள். தான் சென்னையில் கமலசேகரனோடு இருந்ததையும் ஏனைய பல விஷயங்களையும் அவள் நினைவில் கொண்டுவராமையினால் அமோகமான ஆனந்த சுகத்தையடைந்தாள். அயல் நாட்டுப் பயணம் அவளுக்கு ஆறுதலை அளித்தது. ஒவ்வொரு நாள் அவள் தனது பழைய வாழ்வை நினைத்த பொழுது, தான் செய்தது பிழைதான் என்று தெரிந்து கொண்டபோதிலும், அதை வீணாக உன்னி என்ன பிரயோ

ஜனம் என்றுயோசித்தாள். தனது ஆண்மகனைப்பற்றி அவள் அக்கரை எடுத்துக்கொள்ளவில்லை. தனக்கு ஒரு தாயார் இருந்ததையே அவன் நம்பாதிருக்கும்படி செய்து விட்டதால் அதுவே போதுமானது என்று நினைத்தாள். தனது பெண் குழந்தையை மட்டும் சீராட்டிப் பாராட்டி வளர்ப்பதில் கண்ணுங்கருத்துமாகயிருந்தாள்.

கமலசேகரன் தன்பொருட்டு காப்டன் வேலையை ராஜீநாமா செய்து விட்டதையும் தன்னையே காதலிக்கும் தொழிலில் மனதை ஈடுபடுத்தியிருப்பதையும் பார்த்த இராஜீவி மனமுவந்து தனது காதலனை மேன் மேலும் அதிகமாக நேசிக்கத்தலைப்பட்டாள். அவனுக்குத்தான் அடிமையாக இருந்து அவனுடைய பேசும் நயத்தை உன்னிக் கொண்டிருத்தலே உத்தமமானது என்று கொண்டாள். அவளுடைய பிரசன்னம் சதா சந்தோஷத்தை அள்ளி அவனுக்குக் கொடுத்தபடியால் இராஜீவி வேறு எந்த வஸ்துவையும் விரும்பவில்லை.

சில மாதங்களுக்குப்பிறகு கமலசேகரனுக்குச் சிற்றின்பத்தில் சிந்தை லயித்துக்கிடந்திருந்தாலும், 'ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள்' என்றபடி அவனுடைய இருதயத்தில் ஒரு வகையான எண்ணம் தோன்றித் தோன்றி அவனை வருத்துவதாயிற்று. ஒரு நாளில் பதினறு மணிகளை இராஜீவியின் முன் பேசிக்கொண்டே கழிப்பது கஷ்டமாகத் தோன்றியது. இருந்தாலும் என்ன செய்வது? இராஜீவி இன்பக்களஞ்சியம் அன்றோ?

ஸிங்கப்பூரில் பிரதம சித்திரப்படம் எழுதும் ஆபீசில் இருந்த பிரபலமான ஒருவரைக்கொண்டு இராஜீவியின் உரு

வத்தைப் படத்தில் எழுதிக்கொடுக்குமாறு கமலசேகரன் செய்தான். கமலசேகரன் அச்சித்திரக்காரன் தீட்டிய படத்தைச் சிறிது நாள் வியந்து பேசிக் காலத்தைக்கழித்தான்.

கடைசியில் அவ்விருவருக்கும் சென்னைராஜதானிக்குச் செல்லவேண்டும் எனும் அவாபிறந்தது. கமலசேகரன் தன் அன்னையைப்பார்க்க விரும்பினன். இராஜீவி சித்திராங்கதனைப் பார்க்க விழைந்தாள். கடைசியில் கணவனைக் கைவிட்ட காதலற்ற இராஜீவியும் கமலசேகரனும் சென்னைக்கு வந்தனர். கமலசேகரன் தனது காதலியைத் தனது மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பிரியப்படாதவனுய் ஒரு தனி ஹோட்டலில் அவளைத்தங்கும்படி செய்தான். தானும் அவளுடன் கூடவே இருந்தான்.

சில தினங்களுக்குப் பிறகு இராஜீவியின் பழைய தாதி ஒருத்தி அவளையடைந்து ஸிம்ஹளநாதருடைய வீட்டு சமாசாரங்களையெல்லாம் விசதமாகவுரைத்தாள். மதன கல்யாணி எனும் மூதாட்டி ஸிம்ஹளநாதருடைய மாளிகையில் பத்மா முதலிய தோழிகளுடன் இருப்பதாக்வும் சித்திராங்கதன் எட்டு வருஷமான பையனுக விளங்குகிருன் என்பதாகவும் ஸிம்ஹளநாதர் தமது சட்ட மந்திரி உத்தியோகம் கூடிய சீக்கிரத்தில் முடிவுக்கு வருமாதலால் சென்னையிலே சைதாப்பேட்டை மாளிகையிலே காலங்கழிக்க விரும்புவதாகவும், தான் வேறு ஒரு இடத்தில் உபாத்தியாயினியாகக் காலம் கடத்தி வருவதாகவும் சொல்லிவிட்டு, இராஜீவி தனக்குக்கொடுத்த இருபது ரூபாய்களைப் பரிசு பெற்றுக்கொண்டு சென்றுள்.

அவள் போனதும் இராஜீவி சித்திராங்கதனைப் பார்க்க விரும்பி தனக்கு முன்பு பழக்கமாகயிருந்த மதனகல்யாணி அம்மாளுக்குப் பின்வருமாறு லிகிதம் வரைந்து, தபாலில் அனுப்பினாள்.

"நான் தம்மை முன்பே நன்கு அறிந்து இருப்பினும் இப்பொழுது நம்மிருவருக்கும் ஏற்பட்டுள்ள தாரதம்மியத்தைக் கண்டு இதை அன்போடு எழுதலானேன். தாங்கள் இப்பொழுது என் குழந்தை சித்திராங்கதனைப் பார்த்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. நான் இவ்வூரை விட்டுச் செல்லுமுன் ஒருதரமாவது சித்திராங்கதனைப் பார்த்துச் செல்லவேண்டுமென்று ஆசையிருப்பதால், மகனைப் பார்க்க அனுமதி அளிக்கவேண்டும். ஸிம்ஹளநாதருக்கு என் வருகையே தெரியக்கூடாது. ஆதலின் உமக்கு எழுதுகிறேன். தமக்கு எந்த நேரம் சரியாக இருக்கும்? அல்லது வேறெந்த விடத்திலாவது சித்திராங்கதனை அழைத்து வருகிறீர்களா? அன்னையின் அன்பு எத்தகையது என்பதை நீர் அறிவீர்! தங்களுக்கு என் மனமார்ந்த வந்தனம், இராஜம்."

மேற்கூறிய கடிதத்தைப் படித்ததும் சைதாப்பேட்டையில் இருக்கும் மதனகல்யாணி அம்மாளின் முகம் கோபமடைந்தது. அச்சமயம் ஸிம்ஹளநாதர் அங்கே வந்தார். அவரிடம் கடிதத்தைக்கொடுத்தாள். அவர் அதை வாசித்து விட்டு, "நான் ஏன் வேண்டாம் என்று சொல்லவேண்டும்? எனக்கும் அவளுக்கும் பிறந்தவன் அன்றோ சித்திராங்கதன்?" என்றார்.

"ஸிம்ஹளநாதரே! நீர் இதனால் வரும் தீமையை எண்ணவில்லையே," என்று மதனகல்யாணி அம்மாள் கூறி

ளுள். அவளுக்கு இராஜீவியின் மீது இருந்த அன்பு, விசுவாசம் எல்லாம் தற்போது இல்லை.

"ஆனால் எங்குதான் தீமையில்லை? மேலும் சித்திராங்கதன் அன்னை அன்றோ அவள்?" என்றார் ஸிம்ஸிளநாதர்.

"நன்றாய்க்கூறுகிறீர்! விபசாரியின் முகத்தை குழந்தை ஏன் பார்க்கவேண்டும்? ஊரெல்லாம் சிரிக்கிறது இராஜத்தைப்பற்றி!" என்றாள் மதனகல்யாணி.

"ஐயோ! அவள் தான் சீரழிந்துபோனாள்! அவளுடைய குழந்தையை அவளை பார்க்கலாகாது என்று சொல்லுவது நீதியாகுமா?"

"அவளுக்கு குழந்தைமீது அன்பு இருந்தால் தம்மை இக்கதிக்கு ஆளாக்குவாளோ?— அவள் சித்திராங்கதனைப் பார்த்தல் சரிதான்.—ஆனால் எட்டுவயதான சித்திராங்கன் தனது அன்னை இறந்துபோய் இரண்டு வருஷங்களுக்கு மேலாகின்றதென்று எண்ணிக்கொண்டிருக்கிறான். இப்பொழுது அவன் தாயாரைப்பார்ப்பது சரியல்ல."

"நான் அதைச்சிந்திக்கவேயில்லை. நீங்கள் கூறியதால் அறிகிறேன்."

"நானே பதில் எழுதிவிடுகிறேன்," என்றாள். ஸிம்ஹளநாதருக்கு கண்ணீர்வரவே அவர் அவ்விடத்தை விடுத்து வேறிடம் சென்றார்.

மதனகல்யாணி பின்வருமாறு கடிதம் எழுதி தபாற்பெட்டியில் போடும்படி செய்தாள்:—

"மாதே! நீ உன் மகனைப்பார்க்க வேண்டுமென்னும் எதிர்பாராத ஆசையானது சித்திராங்கதனுடைய மனதில் ஏதாவது கஷ்டத்தைக்கொடுக்கும்: ஆதலின், குழந்தையை நீ பார்க்கக்கூடாது என்று ஸிம்ஹளநாதர் அபிப்பிராயப்படுகிறார். கடவுள் உன்னைக் காப்பாற்றுவாராகுக! மதனகல்யாணி."

மதனகல்யாணியின் கடிதம் இராஜீவிக்குக் கிடைத்தும் அவள் அதை ஆத்திரத்தோடு பிரித்துப்படித்து விசனமடைந்தாள். "ஐயோ! கல்யாணி! உன்மதி இருந்தவாறென்னே! என் குழந்தையை நான் பார்க்கக்கூடாதா?—பத்து மாதம் வருந்திச் சுமந்துபெற்ற என் குழந்தையை தாயாகிய நான் பார்க்கலாகாதோ?—மலடியாகிய உனக்கு என்ன தெரியும் புத்திரவாத்ஸல்யம்? குங்குமப்பூவின் அருமைதெரியுமா அதை சுமந்துவரும் கழுதைக்கு? நீ என்னைவிட மிகவும் கொடியபாதகியே" என்று அவள் சொல்லிக்கொண்டே கண்ணீர்விட்டாள். "எனக்கு முன்பு ஸ்நேகமாயிருந்த சீமாட்டிகள்கூட என்னைப்பார்க்க வரமாட்டேன் என்று எழுதிவிட்டார்கள். சிலருக்கு மங்கையர் இருப்பதால் அவர்களுடன் என்னைப்பார்ப்பது பிசகாம்.—சரி.—நாளை அதிகாலையில் நான் எழுந்திருந்து மோட்டாரில் போய் சித்திராங்கதனைப் பார்க்கிறேன். நான் என் குழந்தையைப் பாராமல் இருப்பேனோ?—இன்றிரவு சில உயர்ந்த பிஸ்கோத்துகளையும் இரண்டு விளையாட்டுச் சாமான்களையும் சித்திராங்கனுக்குக் கொடுக்கவேண்டும்" என்று எண்ணினாள்.

மறுநாள் காலை ஐந்தரை மணிக்கு இராஜீவி வாடகை மோட்டார் வண்டியில் ஏறிக்கொண்டு தான் முன்பு எஜமா

ணியாகி விளங்கிய மாளிகையின் எதிரில் போய் நின்றாள். மாளிகையைச்சுற்றிலும் போடப்பட்டிருந்த சுவர்களை நோக்கினாள். கண்ணில் நீர் வடிந்தது. அதைத் துடைத்துக் கொண்டு, வெளிக்கதவில் இருந்த மணியையடித்தாள்.

அம்மாளிகையில் பலகாலம் சேவகஞ்செய்து வரும் குமரன் என்பவன் வேறொரு வேலைக்காரனைப்போய் கதவைத் திறந்து பார்க்கும்படி சொன்னான். அவனும் அப்படியே செய்தான். அவன் கதவைத்திறந்ததும் இராஜீவி அவனிடம் ஒரு பத்து ரூபாய் நோட்டு ஒன்றைக்கொடுத்து உள்ளே செல்ல, அக்காவலாள் அவளை நிற்கும்படிசெய்து, "அம்மா! தாங்கள் யாரைப்பார்க்கவேண்டும்? அதிகாலையில் வருகிறீரே!" என்றான்.

இராஜீவி மறுமொழி கொடுக்காமல் உள்ளேசென்றாள். ஆங்கு குமரப்பன் தனது மேனிமுழுவதையும் மறைத்துக் கொண்டிருந்த கரிய அங்கியைத்தரித்த இராஜீவியை யார் என்று கேட்டான்.

"யாரைப் பார்க்கவேண்டும்?"

"நான் அவசரகாரியமாக குழந்தை சித்திராங்கதனைப் பார்க்கவேண்டும்," என்று கீழான குரலில் கூறினாள்.

"குழந்தையா? சின்ன எஜமான் இன்னும் எழுந்திருக்கவில்லையே?" என்றான் குமரப்பன். முகமூடியால் வதனத்தை மறைத்துக்கொண்டிருந்த இராஜீவியை உற்றுநோக்கினான்.

தான் முன்பு வசித்தவீட்டில் தனது குழந்தையைப் பார்க்க சுயாதீனம் இல்லையா என்று அவள் மனவருத்தமுற்ருள். பழைய ஞாபகம் மேலிட்டது. தான் முன்பு எஜமானியாகி விளங்கிய காலத்தை அவள் அகக்கண்ணில் எண்ணுகையில் அவளுக்கு ஒருவகையான பரிதாபம், துக்கம் முதலியன உண்டாயின. அவள் கண்ணில் நீர் வடிந்தது. அதைத் துடைத்துக்கொண்டு, அவள் தனது முகமூடியை விலக்கினுள். குமரப்பன் அவளை அறிவானுதலின் "எஜமானியம்மாள்! என்று ஆச்சரியத்தோடு கூறினன்.

இராஜீவி சரேலென்று அங்கு நின்றும் அகன்று, படிக்கட்டுகளின் வழியாக ஏறி முன்பு குழந்தை சித்திராங்கதன் துயிலும் அறையையடைந்தாள். உடனே கதவைத்திறந்தாள்: அங்கு நின்றும் உள்ளே செல்லுகையில் சித்திராங்கதன் படுக்கையின் மீது கண்களைத் திறந்தவண்ணம் படுத்திருப்பதைக்கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்து, அவனையணைத்துக் கட்டிக்கொண்டு பல முத்தம் கொடுத்தாள்.

சித்திராங்கதனுக்கு எட்டு ஆண்டுகளுக்கு மேலிருக்கலாகும். சிரித்த முகம் தரித்த அழகு இராஜீவிக்குச்சொல்ல முடியாத இன்பத்தையளித்தது.

"சித்ராங்கா" என்று இராஜீவி அக்குழந்தையின் காதில் கூறினுள்.

சித்திராங்கதன் தனது அன்னையை மிக்க சூட்சுமத்தோடு உற்று நோக்கிவிட்டு, சிறிது நேரம் வாளாவிருந்தான். கடைசியில் அம்மா! அம்மா! என்று சொல்லிக்கொண்டு இராஜீவியை அணைத்துக்கொண்டான்.

"என்னருமைச் செல்வமே! கண்ணே! முத்தே! நீ என் செல்வமல்ல!" என்று அன்பினால் கூறிக்கொண்டே இராஜம் கண்ணீர் இரு கன்னங்களிலும் வழியவிட்டவளாய் தனது அருமருந்தன்ன சித்திராங்கனது தலையையும் முகத்தையும் தடவிக்கொடுத்துக் கொண்டிருந்தாள்.

"அம்மா! அம்மா! எங்கே இத்தனை நாளாய்க் காணோம்?—நீ வருவாய் என்று எனக்குத்தெரியும்! நீ சாகவில்லை. அவர்கள் சொன்னது பொய்," என்று தன் தாயாரை இறுகப் பிடித்துக்கொண்டிருந்த சித்திராங்கதன் வாத்ஸல்ய மேலீட்டால் உரைத்தான்.

இராஜீவி கண்ணில் நீர்வடித்ததைக்கண்டு அந்த ஆண் மகன் தனது தாயார் ஏன் அழுகிறாள் என்று அவளைக்கேட்டான்.

"செல்வமே! என் சித்திராங்கா! இது ஆனந்தக் கண்ணீர்!" என்று சொல்லிக்கொண்டே மறுபடியும் இராஜீவி அவனை முத்தமிட்டாள். "நான் இல்லாமல் உனக்கு எப்படியோ இருக்குமே!—உன்னை யார் பார்த்துக்கொள்கின்றார்கள்?"

"மதனம் எனும் ஒரு கிழவி இருக்கிறாள்.—என்னை வெளியில் அழைத்துச்செல்ல பத்மா வருவாள்! எனக்குச் சொக்காய் போடுவதற்கென்று ஒருவன் இருக்கிறான். அதோ வருகிறான். அவன் பெயர் முருகன்.—அம்மா! நீ என் அங்கிமேல் உட்கார்ந்திருக்கிறாய்," என்று அச்சிறிய ஆண் மகன் கூறிச்சிரித்தான். அவளும் சிரித்தாள்.

"ஆருக்காய்! உன்னைப் பெற்றெடுத்தவள் நான்!" என்று கூறியதும் இராஜீவியின் கண்களில் நீர் மளமள வென்று பெருகியது.

அச்சமயத்தில் குமாரப்பனிடம் இருந்து இராஜீவியின் சரிதையை சுருக்கமாகத் தெரிந்துகொண்ட முருகன் என்பவன் இராஜீவி மாளிகையிலுள் இருப்பதை இராஜா விம்ஸாமாகருக்குத் தெரிவிப்பதா என்று யோசித்தான். சரியாய் மணி ஆறு ஆனதால் தன் வழக்கப்பிரகாரம் சித்திராங்கதனுக்கு சொக்காய் முதலியவற்றைப்போட்டு, அங்கு நின்று போய்விடலாம் என்று யோசித்தான். ஆனால் தாயும் மகளும் அப்போது கொஞ்சிக் குலாவிக்கொண்டிருப்பதைத் தடுக்க மனம் இல்லாதவனாய், அங்கு நின்றும் கதவை சாற்றி விட்டுச் சென்றான். "நான் இன்னும் பத்து நிமிஷங்கள் இங்கு இருக்கிறேன்," என்று சொல்லிக்கொண்டான். அவனுடைய நேத்திரங்களிலிருந்தும் நீர்த்துளிகள் வந்தன!!

அம்மாளிகையின் வேலைக்காரருள் ஒரு குழப்பம் உண்டாயது. மஹாராணி அம்மாள் இராஜீவி வந்துவிட்டாள் என்பதை அறிந்துகொண்டு சந்தோஷமும் பரிதாபமுங்கொண்டனர். ஆனால் அநேகருக்குச் சரியாய் விளங்காதது தமது எஜமான் அறைக்குச் சென்று சித்திராங்கதனைப் பார்க்கும் வழக்கத்தை மேற் கொண்டிருந்தமையால், அவர் தமது விபசாரியான மனைவியைப் பார்த்திட்டால் தம்மை எல்லாம் வேலையினின்று தள்ளிவிடலாகும் என்று பயமடைந்தார்கள். ஆகலின் மனைவியும் புருஷனும் ஒருவரை யொருவர் சந்திக்காதபடி செய்யவேண்டும் என்றெண்ணினார்.

இதுநிற்க; சித்திராங்கதன் அறையினுள் இருந்த இராஜீவி தனது அருங்கனியான மகனோடு கூடிக்குலாவியிருக்கையில், அந்த அறையின் வேறுவழியாக உள்ளேவந்த பத்மா எனும் தோழி தனது எஜமானியைக்கண்டு ஆனந்தமேலீட்டால் அவளையடைந்து கட்டிக்கொண்டாள். அவளுடைய விழிகளில் நீர்த்துளிகள் இருந்தன!! இராஜீவிக்கும் மனக்கலக்கமும் ஆனந்தமும்சேர்ந்து ஏற்பட்டமையினால் அவளும் கல்லாய்ச் சமைந்து உட்கார்ந்திருந்தாள்.

இருபது நிமிஷங்களும் ஆயின.

இராஜீவி சரேலென்று எழுந்திருந்து, "சித்திராங்கா! நான் போய்வருகிறேன்! உன் தந்தையை நீ நேசிப்பாய்! இதுதான் கடைசிதடவை"—என்று இராஜீவி சொல்லிக்கொண்டே தவித்தாள். கடைசியில் முத்தம் பல கொடுத்துவிட்டு, பத்மாவிடம் விடைபெற்றுச்சென்று, தனது மோட்டாரில் ஏறிக்கொண்டு தான் தங்கியிருக்கும் ஹோட்டலையடைந்தாள்.

ஹோட்டலை அடைந்ததும் தான் ஏன் அங்குதிரும்பி வரவேண்டும் என்று எண்ணினாள். ஐயோ! நான் தான் நாசநெறியை அடைந்துவிட்டேன்! இனி போனதைப்பற்றி ஏன் சிந்திக்கவேண்டும்?" என்றாள். பிறகு சிறிது நேரம் கண்களை மூடிக்கொண்டிருந்தாள்.

அச்சமயத்தில் இராஜீவிக்கு திடுப்பிரவேசமாக ஒரு வருத்தமான எண்ணம் உண்டாயிற்று. "ஐயோ! பிஸ்கோத்துகளையும் விளையாட்டுச் சாமான்களையும் எனது கண்மணி சித்திராங்கனுக்குக் கொடுக்கவில்லையே! ஐயோ! மறந்து போனேனே!"

அன்றையதினம் காலை பத்து மணிக்கு அன்னம் எனும் சிறு பெண் குழந்தையை அதன் தாதி இராஜீவியிடம் கொண்டுவந்து கொடுத்தாள். இராஜீவி அதன்மீது கொண்டிருந்த பிரியம் சிறிது குறைந்தே காணப்பட்டது. சித்திராங்கதனை அவள் மிக்க நேசித்திருந்தாள். அவன் தனது அன்பிற்குப் பாத்திரமானவன் என்று முன்னமே முடிவு செய்திருந்தாள். குழந்தையை மறுபடியும் தாதியிடம் கொடுத்தனுப்பியதும் இராஜீவி தனது பெட்டியைத்திறந்து இரண்டு படங்களை எடுத்துப்பார்த்தாள். ஒரு படத்தில் குழந்தை சித்திராங்கதன் இருந்தான். மற்றொன்றில் கமலசேகரனுடைய உருவம் இருந்தது. மூதற் படத்தைக்கண்டதும் அவளுக்குச் சந்தோஷம் இருந்தது. இரண்டாவதைப் பார்த்ததும் அது மறைந்தது.

கமலசேகரன் தான் தனது கஷ்டங்களுக்கெல்லாம் காரணம் என்று அவள்கருதி, சிறிது சினமடைந்தாள். ஆனால் கமலசேகரன் மீது அளவற்ற ஆசை உடனே உண்டாயிற்று.

"ஐயோ! அவர் எங்கே போயிருக்கிறார்? ஏன் இன்னும் வரவில்லை? — ஒரு கால் என்னை வெறுக்கிறாரோ? அல்லது வேறு கன்னிகையைக்கண்டு காதல் கொண்டாரோ? ஷண்பகவல்லியையும் வேறு சில ஸ்நேகிதர்களையும் பார்த்துவிட்டுத் திரும்புவரோ? ஐயோ! — ஜனசமூகத்தில் ஆண் பெண் ஆகிய இருவகையினரும் என்னை தூஷிக்கின்றனரே! என்னை விபசாரி என்கின்றனரே! — நான் ஏன் அவனியில் அணங்காகப்பிறந்தேன்? — நான் அன்னம் பிறந்தபோது மாண்டு போயிருக்கலாகாதா? — எல்லோரும் என்னை வெறுக்கின்றனரே!" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு மனம் நொந்தாள்.

அன்றுசாயுங்காலம் கமலசேகரன் ஹோட்டலையடைந்து தனது இன்பக் களஞ்சியமான இராஜீவியை அன்போடு கண்டு பேசிக்கொண்டிருந்துவிட்டு, "இராஜம்! நாம் இன்றைக்கு நாடகத்திற்குப் போகலாமா? கன்னையா கம்பெனியார் 'சரசபூஷணன்' எனும் நாடகத்தை நடிக்கப்போகின்றனர்," என்றான்.

"சரி—போகலாம்," என்றாள் இராஜீவி.

அதிகாரம்—15

காதலால் விளைந்த கஷ்டம்.

மேற்கூறிய சம்பவங்கள் நடந்து இரண்டு வாரங்களுக்கு மேலிருக்கலாம். ஒரு நாள் மத்தியானம் கமலசேகரனும் இராஜீவியும் சென்னையில் வந்திருப்பதைக் கேள்வியுற்ற திவான்பகதூர் துரைசிங்கத்தின் அருமை மனையாட்டி கமலம் தனது புருஷனின் சகோதரியை எங்ஙனமாவது சந்தித்துப் பேசவேண்டும் என்று எண்ணியவளாய்த்தனது புருஷனை அனுமதிகேட்க, "நீ போய்வா.—நான் நாளைகாலையில் அவளைக்கண்டு பேசுகிறேன்" என்றார்.

இராஜீவியிருக்கும் ஹோட்டலின் விலாசத்தையறிந்த கமலம் தன் மோட்டார் வண்டியில் ஏறிக்கொண்டு, ஹோட்டலையடைந்து, இராஜீவியின் அறைச்குச்சென்றாள். அப்பொழுது இராஜீவியின் குழந்தை அன்னம் அழுது கொண்டி

ருந்தபடியால், அதனுடைய தாதி அதை வெளியே எடுத்துச்சென்று சமாதானம் செய்துகொண்டிருந்தாள். அக்குழந்தையின் முகத்தைக்கண்டு வியந்தபடியே கமலம் அறைக்குள் நுழைந்தாள். கமலம் வருவதையறியாத இராஜீவி மிகுந்த சந்தோஷத்தோடு கமலம் போன்ற கமலத்தை வருக என்றுசொல்லி உட்காரும்படிசெய்து, தானும் உட்கார்ந்தாள்.

"இராஜம்! ஜனசமூகம் உன்னை வெறுத்திட்டாலும் நான் உன்னைப்பார்த்துப்போக வேண்டுமென்றேவந்தேன்.—உன்னைக்கண்டு சந்தோஷம்," என்றாள்.

"கமலம், உன்னுடைய தைரியத்திற்கு மெச்சினேன்! எனக்கு முன்பு பழக்கமானவர்களுள் முக்கியமானவர்கள் பலர் என்னைப்பார்த்தால் அவர்களுக்கு விபசாரிப்பட்டம் வந்துவிடும் என்று அஞ்சி என்னைக்காணவரவில்லை. நீ வந்தது பற்றி எனக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாகிறது," என்றாள் இராஜீவி.

"இராஜம்! உனது சகோதரர் உன்னை நாளை காலையில் வந்து பார்க்கப்போகிறாராம்.—உன் வசீகரமான முகத்தைப் பார்த்தால் எனக்குச்சந்தோஷம் உண்டாகிறது," என்றாள்.

"ஐயோ! நான் சந்தோஷமாக வெளியில் காணப்பட்டாலும் உள்ளில் அப்படி இல்லை. நான் அவமானம் எனும் பள்ளத்தினுள் இறங்கியிருந்தாலும் என்னை ஒரு மனுஷி என எண்ணி, என்னையடைந்தது மிகவும் சந்தோஷத்தைதருகிறது."

"இராஜம்! ஏதோ தெரியாத்தனமாக நல்நெறியினின்றும் நீ தவறிப்போனால் அதனால் என்ன? சரி—இது கிடக்கட்டும். நீ இங்கிருப்பதைப்பற்றி எனக்கு ஏன் எழுதவில்லை?"

"என் அண்ணாவுக்கும் எழுதவில்லை. என் நிலைமை அப்படிப்பட்டது."

"என்னைப்பற்றி என்ன நினைக்கிறாய்?—இதை நான் ஏன் பேசவேண்டும்?—கிட்டி, சுந்தராங்கனை மணம்புரிந்து கொண்டதாக நான் தினசரிகளில் படித்தேன். அவள் என்னை மன்னித்துவிட்டாளா?"

"இராஜம்! அவள் தன் முழுமனதுடனும் உன்னை மன்னித்துவிட்டாள் — அவளுக்கு இப்போது ஒரு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது."

"சந்தோஷம்.—அவளும் அவளது கணவனும் சூலூரிலேயே இருக்கின்றனர்?"

"ஆம்:—சுந்தராங்கன் சதா சார்வதா இப்புவியில் அவனைப்போன்ற மனிதர்களுக்கு வேலை என்ன என்பதாக சிந்தித்து வருகிறான். தத்துவ ஞானிபோல் காணப்படுகிறான்."

அன்றிரவு இராஜீவியுடனே பேசியவண்ணம் கமலம் போஜன முட்கொண்டாள். பின்னர் விடைபெற்றுக்கொண்டு தன் மாளிகைக்குச் சென்றாள்.

மறு நாட்காலை இராஜீவி சீக்கிரமாக எழுந்திருந்து தனதுகாலைக் கடன்களை முடித்துக்கொண்டு தனது சகோதரன் வருகையை எதிர்பார்த்திருந்தாள்.

திவான்பகதூர் துரைசிங்கம் பிரபு தமது மோட்டாரி னின்றும் இறங்குவதைக்கண்ட இராஜீவி மிகுந்த சந்தோஷத் தோடு அவரோடுபேசினள். பிறகு தனது துயரங்களையும் கஷ்டங்களையும் எடுத்துக்கூறி "எனக்கு கலியாண விடுதலைச் சட்டத்தை உபயோகித்தால் எனது கஷ்டங்கள் நீங்கும், நீர் ஏன் ஸிம்ஹளநாதரை இன்று பார்க்கலாகாது?" என்றுகேட் டாள்.

"ஐயோ! நான் போய்க் கேட்டுப்பார்க்கிறேன். கலி யாண சம்பந்தத்திலிருந்தும் விடுதலை என்று பேசினல் அவர் தம்மை மறந்து கோபம் கொள்கிறார். எதற்கும் இதுவே கடைசிதரமாக நினைத்துக்கேட்கிறேன்," என்று சொல்லி விட்டு, துரைசிங்கம் தமது தங்கையுடன் காபியும் உப்புமா வும் உட்கொண்டார். பிறகு அவர் அங்கு நின்றும் அகன் றார்.

தமது மைத்துனர் மாளிகையையடைந்து, வாசக அறைக்குச்சென்று பின்வருமாறு ஸிம்ஹளநாதரோடு உட் கார்ந்து பேசினர்.

"ஸிம்ஹளரே! நான் தம்மோடு முக்கியமான விஷய மொன்றைப் பேசவிரும்புகிறேன். இராஜத்தைப் பற்றித் தான்," என்றார் திவான்பகதூர்.

ஸிம்ஹளநாதருடைய முகம் மாறியது. "என்னிடம் இருந்து தமக்கு என்ன ஆகவேண்டும்?"

"நீர் அவள்மீது பரிதாபம் கொள்ளவேண்டும்."

"எங்ஙனம் முடியும்?"

"பரிதாபம் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. அவள் அவதியான நிலையில் நிற்கிறாள்."

"என்ன செய்வது?"

"ஸிம்ஹளரே! நான் மன்றாடிக்கேட்கிறேன்.— தாம் அவளை ஏன் மனைவிபதவியிலிருந்தும் தள்ளிவிடலாகாது? சட்டம் இருக்கிறதே."

"நான் சித்திராங்கதனை என்னிடமே வைத்துக்கொண்டால் அவள் கலியாண விடுதலைவேண்டியது இல்லை என்று முன்பு சொல்லியிருக்கிறாள். முன்பே இதை நாம் தீர்மானித்துவிட்டோமே."

"கோபம் வேண்டாம். அவள் தமது பரிதாபத்திற்குப் பாத்திரமானவள்."

"எனக்கு பரிதாபம் ஒன்றும் இல்லை. அவள் துரோகம் செய்துவிட்டாள்!"

"தாம் மனம் வைத்தால் அவள் மனசுக்கு சந்தோஷம் கொடுக்கலாகும்."

"துரைசிங்கப் பிரபுவே! சதியும்பதியும் விவாகத்தில் ஒன்றுபட்டால், அவர்களில் ஒருவர் இறந்தாலொழிய அக் கலியாணத்தின் சுகம் கெடாது.—நாம் இதைப்பற்றிப்பேசி என்னசெய்கிறது? நான் இராஜீவியின் விஷயத்தில் கருணை காட்ட முடியாது."

உடனே இருவரும் பிரிந்தனர்.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு கமலசேகரனும் இராஜீவியும் அன்னம் எனும் குழந்தையோடும் தாதி ஒருத்தியோடும் சென்னையை விட்டுச் தஞ்சாவூர் முதலிய இடங்களுக்குச் சென்று வந்தார்கள். சிறிது நாட்கள் ஆனதும் அவர்கள் கோயமுத்தூருக்குச்சென்று ஒரு பெரிய பங்களாவிலே வசித்து வந்தனர்.

இராஜீவியின் மனவருத்தத்தை நீக்கும்படி கமலசேகரன் சில சமயங்களில் உதகமண்டலத்திற்கும், பொன்னூத்திற்கும் மருதமலைக்கும் மோட்டாரில் போய் விட்டுத்திரும்புவது வழக்கம்.

ஒரு நாள்காலை கமலசேகரன் தன் தாயார் ஷண்பகவல்லிச் சீமாட்டி சென்னையிலே காயலாவாகப் படுத்திருப்பதாக ஒரு தந்தி வந்தமையினால், அவன் இராஜீவியைநோக்கி "இராஜம்! நான் சென்னைசென்று தாயாரைப் பார்க்கவேண்டும்," என்றான்.

"நீங்கள் போனால் நான்—" என்று இராஜீவிகேட்க, இராஜம்! நான் வருவதற்குப் பத்து தினங்களானாலும் ஆகலாம். நாளைய தினம் வந்தாலும் வரலாம். நான் உன்னை விட்டுப் பிரிந்திருக்கவேண்டுமே என்று விசனிக்கிறேன்," என்றான்.

"காதலரே! என்னை இத்தனை நாட்களும் பிரிந்திருக்கவில்லை.—நானும் கூடவே வருகிறேன்."

"ஐயோ! நீ எங்கே தங்குவது?—விபசாரி என்றல்லவோ எல்லோரும் உன்னை இகழுகின்றனர்."

"ஐயோ! பிராணப்பிரியா! உமது வாயினின்றும் இக்கடுஞ் சொல்லைக் கேட்கவேண்டுமோ? நான் இனி ஏன் இப்புவியில் வசிக்கவேண்டும்?"

"இராஜம்! நான் உன் மனத்தினைப் புண்ணுக்கும் பொருட்டு இதைக்கூறவில்லை, மன்னிப்பாய்.— நீ சென்னைக்கு வந்தால் கஷ்டமாகும்."

"நீர் போய் வாரும்."

அன்றிரவு நீலகிரி எக்ஸ்பிரஸில் கமலசேகரன் சென்னைக்குப்பிரயாணம் செய்தான்.

மறுநாட் சாயுங்காலம் பங்களாவில் தனித்து உட்கார்ந்திருந்த இராஜீவி கண்ணீர் விட்டு வாய்விட்டாக தனது தலைவிதியை நொந்துகொண்டாள். கமலசேகரனுக்கு தன்மீது மிதமற்ற காதல் இருந்திருந்தால் தன்னையும் சென்னைக்கு அழைத்துச் சென்றிருப்பான் என்று அவள் எண்ணினுள். தன்மீது சலித்துப்போன காதலைக்கொண்டிருக்கிறனே? வேறு அழகிய கன்னிகையைக் காதலிப்பதில் கவனத்தை செலுத்துகிறனே? என்று ஐயமுற்றுள். தான் புவியில் பிறந்து மனவேதனைக்கும் கஷ்டத்திற்கும் காரணமாயிருந்த கல்வியறிவில்லாத பெண்ணே என்று யோஜித்தாள். தான் மடிந்திருந்தால் நாடோடித்திரியும் வழக்கம் இல்லாமல் இருந்திருக்குமே என்று கொண்டாள். ஆனல் புவியில் பிறந்த பிறகு விபஹளநாதனோடு சேர்ந்திருந்தால் அத்தகைய கஷ்டங்களும் நிஷ்டூரங்களும் உண்டாகாது என்று எண்ணினுள். ஆனல் தான் கமலசேகரன்மீது மனதை விடுத்த பிறகு எப்படி விபஹளநாதனின்மீது காதலைக்கொட்

டிச் சுகமாக இருக்கலாம் என்று வினவினள். தனக்கு இரண்டு புருஷர்கள் இப்புவியில் இருக்கநேர்ந்த காரணத்தை ஆராய்ந்தாள். இப்படியே சில தினங்களும் கழிந்தன.

கமலசேகரனும் சென்னையிலிருந்து திரும்பிவந்து இராஜீவியிடம் தனது தயார் சௌக்கியமாக யிருப்பதாகச் சொல்லி இன்பம் பயக்கும் வார்த்தைகளைச் சொல்லிப் பொழுதைப்போக்கினன்.

இரண்டு வாரங்களுக்குப்பிறகு கமலசேகரனுடைய நண்பன் ஒருவன் தான் சென்னை சட்டசபைக்கு ஒரு மெம்பராக நிற்பதாகவும் ஆதலால் கமலசேகரனுடைய பேசும் உதவி அவசியம் என்றும் எழுதினமையினால், இராஜீவியின் காதலன் மறுக்க முடியவில்லை. மேலும் அந்த நண்பன கமலனுக்கு மிகவும் பிராணப்பிரியன். கமலசேகரன் எழுவயது பையனாகயிருக்கையில் ஒரு குளத்தில் விழுந்து இறக்கும் தறுவாயை அடையவேண்டிய சமயத்தில் தெய்வாதீனமாக அந்த நண்பன் அவனது உயிரைக் காப்பாற்றும் பொருட்டு, குளத்தில் குதித்து கமலனைக் காப்பாற்றினன். ஆதலின் அந்த வீரச்செய்கைக்கு எப்பொழுதாவது கைம்மாறு செய்ய வேண்டும் என்று கமலன் நினைத்திருந்தான். ஆனால் வீரசிங்கம் எனும் அந்த நண்பன் பூலோகத்தைச் சுற்றிப் பிரயாணம் செய்ய முற்பட்டமையால் கமலசேகரன் ஒன்றும் செய்ய இயலாமல் போயிற்று. ஆனால் வீரசிங்கன் சட்டசபைக்கு அபேக்ஷகனாக நிற்பதினால், கமலன் வரவேண்டும் என்று எழுதியிருப்பதைக்கண்டு, எப்படியாவது போய்த் தீரவேண்டும் என்று யோசித்தான்.

இராஜீவி முதலில் மறுத்தாள். ஆனால் என்ன செய்வாள்? போய்வரும்படி சொல்லிவிட்டாள். கமலசேகரனும் மிகவும் கிலேசத்தோடு ரயில் ஸ்டேஷனுக்குச் சென்றான்.

“கமலசேகரர் தன்னிச்சைப்படி எங்கு வேண்டுமானாலும் போய் விடுகிறார்! வர வர என்மீது அவருக்கு காதல் இல்லை என்றே சொல்லும்படியாக யிருக்கிறது! அன்புள்ள புருஷனானாலும் ஆடவரை நம்பலாகாது! நான் தொலைந்து போனால் போகட்டும் என்பது அவருடைய எண்ணமோ? சகல உரிமைகளும் சுயாதீனங்களும் அவருக்குள: எனக்கில. அவர் இப்படிச் செய்வதுதகாது! நான் தனியாகக் கஷ்டப்படுகிறேன் என்பதை அவர் சிந்திக்கவே இல்லை. அன்பு இருந்தால் அன்றோ முடியும்? வீரசிங்கராம்! திரிச்சிராப்பள்ளியாம்! அவர் என்னை கைவிட்டால் என்கதி என்னாகும்! அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட ஸ்திரீயின் கதியாகும்! மண்குதிரையை மெய்க்குதிரை யென்று நம்பி ஆற்றில் இறங்கினவள் நிலைமை என்னாகும்! ஸிம்ஹளநாதரோ கலியாணவிடுதலைக்கு இசையவில்லை. அவருக்கு என்மீது கிஞ்சித்தேனும் அன்பு இல்லை. அவர்மீது குறைநான் கூறக்கூடாது! அவர் பரிசுத்தமான அக்னி! அவருக்கு நான் அபராதம் இழைத்துவிட்டேன்.—சித்திராங்கதனை விடுத்து தெருவில் அலைகிறேனே!— ஸ்திரீகளுக்குச் சுயாதீனம் பூராவும் அளித்தால் எனக்கு வந்த கதியே உண்டாகும்! மேனாட்டார் சம்பிரதாயப்படி சுயாதீனம் பெற்ற பெண்மக்கள் எவ்வளவு பேர் கெட்டுப்போகவில்லை?— நம் நாட்டு ஸ்திரீகளுக்கு சில சுயாதீனங்கள் கொடுக்கவேண்டியது அவசியமே! அவர்களை சில வருஷங்களுக்கு முன்பு வேலைக்காரிகள் போல அன்றோ நம் நாட்டு

னர் நடாத்தினர்? ஆனால் ஸ்திரீகளுக்குத் தமது நிலைமை தெரியவாரம்பித்ததும் படிக்க ஆரம்பித்தார்கள். இப்பொழுது அவர்கள் அகில இந்திய ஸ்திரீசங்கத்தையும் மகாண ஸ்திரீசங்கங்களையும் ஸ்தாபித்து தங்களை முன்னேற்றத்திற்குக் கொண்டுவர முயற்சிக்கின்றனர். அதைக்கண்டு ஆடவர்கள் சந்தோஷப்படவேண்டும்— ஐயோ! நான் எதையோ சிந்திக்கப்போய் எதையோ சிந்திக்கிறேனே! இதனால் மனத்தைகுரங்கு என்றனர் ஆன்றோர்-- நான் ஏன் மனதை வாட்டவேண்டும்?— ஐயோ! அன்னம் அழும்குரல் கேட்கிறதே!" என்று இராஜீவி தனது எண்ணங்களை மறந்தவளாய்க் குழந்தை அன்னத்தை எடுத்துப் பாராட்டச் சென்றாள்.

இரண்டு தினங்களுக்குப்பிறகு சென்னையிலிருந்து ஒரு தந்தி வந்தது:—

"நாம் சில குடும்ப விஷயங்களைப் பேசவேண்டும். பெரிய பெரிய நிலம் சிலவற்றை விற்று, கடனை ஒழிக்கவேண்டும். நீ திருச்சினாப்பள்ளிபோய்த் திரும்பியதும் புறப்படு ஷண்பகவல்லி."

இராஜீவி அதைப் படித்துவிட்டு மிகுந்த வருத்தத்தையடைந்தாள். கமலசேகரனைத் தனியே போகும்படி விடுத்து தான் தனியாக இருப்பதா என்று யோசித்தாள். அவன் தன்னைத் தனியளாக விடுத்துச் செல்லக்கூடாது என்று எண்ணினாள்.

ஒரு வாரம் ஆயிற்று. கமலசேகரன் திரும்பி வந்து தனது நண்பனுடைய விருப்பத்தின்படி சில கிராமங்களில்

தான் தமிழில் எலக்ஷணைப்பற்றிப் பேசியதையும் வீரசிங்கன் ஜயமடைந்ததையும் கூறிவிட்டு இராஜீவி கொடுத்த தந்தியைப்படித்தான்.

"நாம் என்று போகலாம்?" என்று தந்திரமாகக் கேட்டாள் இராஜீவி.

"நாளைக்கு அடுத்தநாள் ஞாயிறு அல்லவா?— நான் குடும்பவிஷயங்களைப்பற்றி எப்படியும் பேசித்தீரவேண்டும்?— நீயும் வரவேண்டுமா?— உன்னை எங்கே தங்கச் செய்வது?" என்றான் மனக்கிலேசத்தோடு.

"ஐயோ! நான் இங்கே தனிமையில் எவ்வளவு மனக் கஷ்டங்களைக் கொள்ளுகிறேன் என்பது உமக்குத்தெரியாதா?— நான் இப்போது வாழும் வாழ்வில் துக்கம் குடிகொண்டிருக்கிறது" என்று சொல்லி நீர் தாரை தாரையாக விடுத்தாள் இராஜீவி.

"கண்ணே! அழாதே!"

"ஐயோ! தாம் என்னைக் காதலிப்பதே இல்லை."

"இராஜம்! நீ கூறுவது விந்தையாக இருக்கிறதே!"

"விந்தையா?—"

"நீயும் வரவேண்டுமா?— சென்னை எல்லாம் சிரிக்கும்!"

"சிரித்தாலென்ன?— தாங்கள்தானே எனது கஷ்டங்களுக்கு எல்லாம் காரணம்!" என்று இராஜீவி மனம் நொந்து, கண்ணீர் சொரிந்து, மனம்பதற தனது அறைக்குள் திடும்பிரவேசமாகச் சென்றாள். போனதும் ஒரு நாற்காலி

யில் சாய்ந்துகொண்டு, "எல்லாம் தீர்ந்தது! அவர் என்னை நேசிக்கவேண்டும்! ஆனல் நேசமே போய்விட்டது? நான் இக்காதலால் விளைந்த கஷ்டங்களை எங்ஙனமாவது நிவர்த்தி செய்யவேண்டும்!— எங்ஙனம்?— என்மனம் சாம்பியிருப்பதால் எதையோ யோசிக்க வேண்டியிருக்கிறதே!— நான் ஓடிப்போனல் என்ன? என் சகோதரரிடம் சென்ருல் அவர் என்னை விபசாரி என்று துரத்திவிடமாட்டார். தனியாகத் திரிந்தால் என்? ஸிம்ஹளநாதர் என்ன நினைப்பார்? சென்னையில் எனது ஸ்நேகிதர் என்ன நினைப்பார்கள்?— நான் ஏன் இறந்து போகலாகாது?— மரணம்! மாரகம்! சாவு! அது தான் சரியானது— மரணத்தை மாதுயான் மேற்கொண்டால் கமலசேகரன், ஸிம்ஹளநாதர், சித்திராங்கதன் எனது அவமான விஷயங்களைப்பற்றிப்பிறகு பேச மாட்டார்கள்.— நானும் பரலோகத்தில் நிம்மதியாக இருக்கலாகும்! ஸிம்ஹளநாதரும் சித்திராங்கதனும் என்னைப்பற்றி வருந்துவார்கள்! குறை கூறுவார்கள்! மதியிழந்து மரணத்தை மேற்கொண்டாள் என்பர். என் பொருட்டு அழுவர்!— ஹா! அவர் வருகிருர் போல் இருக்கிறது.— நான் ஏதோ யோசிப்பது போல் இருக்கிறேன்." என்றெண்ணிய இராஜீவி கீழே தரையைப்பார்த்துக்கொண்டிருந்தாள்.

கமலசேகரன் உள்ளே வந்தான்:— அவளுடைய கையை அன்போடு எடுத்துக்கொண்டு, "இராஜம்! உன்னிஷ்டப்படியே நாம் இருவரும் ஞாயிற்றுக்கிழமை சென்னைக்குச் செல்லலாம். நீ எதைச் சொன்னுலும் நான் கேட்பதற்கு தயார்," என்ருன்.

இராஜீவி பதில் பேசவில்லை.

"இராஜம்! என்ன சொல்லுகிருய்?"

"உமக்கே தெரியுமே!" என்று கூறி அழுதாள்.

"நாளைக்கே நான் போய்விடுகிறேன்! நான் யார் ஒரு பஞதி! விபசாரி! உம்மைத் தொந்திரவு செய்வதில்லை! நீர் சுகமாக வாழும்! நீர் என்னைக்காதலிக்க வில்லை! யாரையோ காதலிக்கிகீறீர் போலும்!" என்றுகூறி, அவள் தனது கண்ணீரைத்துடைத்துக்கொண்டாள்.

கமலசேகரன் தன்னுல் இயன்றமட்டும் அவளை சமாதானப்படுத்தினுன். தான் வேறு எந்த வனிதையையும் காதலிக்கவில்லை யென்று உண்மையை உரைத்து உவகையை அவளுக்கு வரும்படி செய்தான். அவள் கரத்திற்கும் சிரத்திற்கும் முத்தம் பல கொடுத்தான்.

அதிகாரம்—16.

இராஜீவியின் மரணம்.

கோபத்தை மறந்த இராஜீவி மறுபடியும் கமலசேகரன் மீது மட்டற்ற காதல்கொண்டு, மனம் சந்தோஷமடைந்தாள். ஞாயிற்றுக்கிழமை சென்னைக்குப்போவதாக கமலசேகரன் சொன்னபடியினுல், பிரயாணத்தின் பொருட்டுத்தனக்கு வேண்டிய சாமான்களை ஒழுங்கு படுத்தி பெட்டிகளில் வைக்கும்படி தனது தாதிகளுக்கு உத்திரவு பிறப்பித்தாள்.

தனது காதலன் சாயுங்காலம் சிற்றுண்டியும் காபியும் எடுத்துக்கொண்டிருக்கையில் இராஜீவி ஷண்பகவல்லிச் சீமா

ட்டியைப்பற்றி ஏதோ சொல்லுகையில் கமலசேகரன் சிறிது சினமடைந்து, "இராஜம்! என் தாயாரை அப்படிக் கூறாதே; அவள் மிகவும் சாமர்த்தியசாலி," என்றான்

"நான் பார்த்த வரையில் அப்படிக்காணோம்" என்று காபியை சப்பிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் சொன்னாள்.

கமலசேகரனுக்கு யாராவது அவனது தாயாரைப் பற்றி இகழ்ச்சியாகக்கூறினால் கோபம் வருவது சகஜம் ஆதலால் இராஜீவியின் மீது சினமடைந்தான்.

"இராஜம்! ஷண்பகவல்லியை அப்படிக்கூறாதே! உன்னைக் கேட்டுக்கொள்ளுகிறேன்," என்றான்.

"உண்மையைச் சொன்னேன்."

"சொல்லக்கூடாது."

இராஜீவி பேசவில்லை. கமலசேகரனுடைய சிவந்த முகத்தை உற்று நோக்கினாள். ஜிவ்வென்று தன்னுடைய அறைக்குச்சென்றாள். தனக்கு தலை வலி இருப்பதால் யாரையும் பார்க்க விரும்பவில்லை என்பதாக கமலனிடம் சொல்லும்படி தாதிக்கு கட்டளையிட்டாள்.

படுக்கையில் படுத்த வண்ணம் பின்வருமாறு யோசித்தாள்:—

"ஐயோ! கமலசேகரனுக்கு என்மீது விருப்பமே இல்லை. நான் இருந்தாலென்ன? இறந்தாலென்ன? நான் இனிமேல் அவரை மன்னிக்கமுடியாது.—ஆனால் நேற்று என்னைக்காதலிப்பதாகச் சொல்லவில்லையா? கண்ணியம்

உடையவரல்லவா அவர்? தாம் சொன்ன வார்த்தையை மறக்கமாட்டார். நான் அடிக்கடி அவர்மீது ஏன் சந்தேகம் கொள்ளவேண்டும்? பெண் புத்தி பேதமை உடையது என்பது உண்மையே—சரி—அவர் என்னை வந்து கண்டால் காதலிப்பதாக நினைத்துக்கொள்கிறேன். இல்லாவிட்டால் அவர் என்னை மறந்து விட்டார் என்றே கொள்ளவேண்டும்.—ஐயோ! நான் மடியலாகாது? தற்கொலை சரியான வழி! நான் அதைக் கையாடினால் எனது துன்பங்களும் துயரங்களும் ஒழிந்துபோகும்.—நான் மடிந்து விட்டால் அவர் எங்ஙனம் வருத்தப்படுவார்? 'ஐயோ! இராஜம்! அன்பான இராஜம்! பங்கஜம் போன்ற இராஜம்! நீ போனால் நான் வாழேன்! என்று கதறுவார்.— (சிறிது யோசித்து) ஐயோ! நான் ஏன் அத்தகைய மரணத்தை மேற்கொள்ள வேண்டும்? நான் அவரை நேசிப்பேன்! அவரும் என்னை நேசிப்பார்! நீர்க்குமிழி போன்ற குடும்ப சண்டை சடுதியிலே நீங்கும்."

அன்றிரவு இராஜீவி தனது அறையில் படுத்துக் கண் வளருகையில் திடீரென்று எழுந்திருந்து கமலசேகரன் அறைக்குச் சென்றாள்.

கமலசேகரன் நிம்மதியுடன் நித்திரை செய்வதைக் கண்டாள்: அவன் அருகே சென்றாள்:

தனது கையில் தயாராக வைத்துக்கொண்டிருந்த மெழுகுவத்தி தீபவொளியால் கமலசேகரனுடைய முகத்தைக் கூர்ந்துநோக்கினாள்: அவன் நிம்மதியோடு தூங்குவதால் தன்னைக் காதலிக்கிறான் இன்னும் என்று முடிவு செய்தாள். தான் தெரியாத்தனமாக அவன்மீது கோப

மடைந்ததைக் கருதி வருத்தம் கொண்டாள். பிறகு தனது அறைக்குச் சென்று மஞ்சத்தில் சயனித்தாள்.

அதிகாலையில் தாடியைக்கொண்ட ஒரு குடியானவன் தன்னை நோக்கி ஏதோ சொல்வதாகவும் ஒரு பையில் எதை யோ தேடுவதாகவும் ஒரு கனவு கண்டு, கண்விழித்து பயமடைந்தாள்.

அன்று காலையில் கமலசேகரன், தலைவலி எப்படியிருக் கிறதென்று இராஜீவியைக்கேட்டான்.

அவள் பதில் கொடுக்காமல் துயரத்தோடு காணப்பட் டாள். கமலசேகரனும் பேசாமல் அவளை நோக்கினான். அப்போது அவள் அவ்வறையை விடுத்துச் செல்வதைக் கண்டு, மனமுடைந்து, "நாம் இன்றிரவு சென்னைக்குப் புறப்படவேண்டும்," என்றான்.

"நான் வரவில்லை நீர் போகலாம்."

"இராஜம்! நீ இம்மாதிரி பிடிவாதம் செய்வது அழ கோ? நம் வாழ்க்கை இனி தீரலாம்."

"சரி— இதற்குத் தாம் பிறகு வருந்துவீர்," என்று இராஜீவி சொல்லி விட்டு தனது அறைக்குச் சென்றாள்.

அவள் கடைசியில் செப்பிய வாக்கியத்தின் கருத்தை நன்குணராது பயமடைந்தான். சோகரஸம் பொருந்திய சொற்களை அவள் ஏன் உரைக்கவேண்டும் என்று உன்னி னான். அவளுடைய அறைக்குச்செல்லலாமா என்று முத லில் நினைத்தான். பிறகு வேண்டாம் என்று எண்ணி தனது அறையிலே உட்கார்ந்து கொண்டான். "இராஜம் என்னை பயமுறுத்துகிறாள். என்மீது அவளுக்கு எப்

பொழுதும் சந்தேகம். அவளை கவனியாதது போல் இருந்தால் சரியாவாள். நான் சென்னை சென்று, அன்னையைக் கண்டு திரும்பி வருகிறேன்,'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அன்று சாயுங்காலம் கமலசேகரன் சில பெட்டிகளை வண்டியில் வைக்கும்படி வேலைக்காரனுக்கு சொன்னது இராஜீவியின் செவியில் விழுந்தது. அவள் தன் மாடியில் உள்ள சாளரத்தின் வழியாகத்தனது காதலனை நோக்கினாள். அவன் வேலைக்காரனிடம் குழந்தையையும் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளும்படி சொல்லுவதையும் அவன் சரி என்று மரியாதையோடு சொன்னதையும் கேட்டாள். பிறகு கமலசேகரன் மோட்டாரில்வேறொரு சேவகனோடு ஏறி, தனது பார்வையினின்றும் மறைவதைக்கண்டாள்.

"அவர் போய் விட்டார்! எல்லாம் தீர்ந்து விட்டது! ஐயோ! அந்தப் பாழுங்குடியானவன்!" என்று தனது கனவை நினைத்துக்கொண்டு வருந்தினாள். அங்கு இருப்பதற்கே அவள் மிகவும் பயமும் திகிலும்கொண்டாள். உடனே தனது அறையின் மேஜையிலிருந்த மணியை அடித்தாள். அடிக்க, சேவகன் ஒருவன் தோன்றினான். "நீ ஓட்டமாக ஓடிச்சென்று நான் எழுதிக்கொடுக்கும் கடிதத்துண்டை எஜமானரிடம் கொடுக்கவேண்டும்" என்றாள்.

உடனே ஒரு துண்டுகாகிதத்தில், "என்னைத்தான் நொந்துகொள்ளவேண்டும். சீக்கிரம்திரும்பிவாரும். நாம் மறுபடியும் சமாதானமாவோம். எனக்கு மிக்க பயமாகயிருக்கிறது. இராஜம்,'' என்று எழுதி அதை அவனிடம் கொடுத்தனுப்பினாள்.

கடிதத்தை ஆளிடம் கொடுத்தனுப்பியதும் அவள் தனது சிறு பெண்குழந்தையாகிய அன்னத்தைப் பார்க்கச் சென்றாள். பிறகு தனது அறைக்குச் சென்றாள்.

முன்போல் அவர் காணப்படுவதில்லை. எல்லாம் தீர்ந்து விட்டது! அவர் எப்படியும் திரும்பிவருவார். அவர் வரா விட்டால் அதை நான் செய்தே தீரவேண்டும்.— நான் ஏன் இம்மண்ணில் வந்தேன்! பிரயோஜனம் என்ன இருக்கிறது! இருகாதல்! இரண்டு நாயகர்! இருகுழந்தைகள்! இவைகளைப்பற்றி நான் ஏன் சிந்திக்கவேண்டும்?— உலகம் என்னை ஒரு பெரிய விபசாரி என்று விளம்புகிறதே? இதை எப்படிப்போக்குவது? என் ஹிருதயம் என்னசொல்லுகிறதோ அதைத்தான் நான் செய்யவேண்டும்?'' என்று அவள் எண்ணமிடுகையில் கமலசேகரனை நாடிச்சென்ற வேலைக்காரன் ஓடோடியும் வந்து கடிதமொன்றைக்கொடுக்க, இராஜீவி அதை வாசித்தாள்.

"நான் திரும்பி வரமுடியாது, கமலன்.'' என்று எழுதியிருந்தது.

"நான் ஏன் அவர்மீது பழிதீர்த்துக் கொள்ளக் கூடாது? ஐயோ! அவர் சகித்து வாழ்வாரோ பிறகு; நான் சீக்கிரம் போகவேண்டும். நீலகிரி எக்ஸ்பிரஸ் இப்போது போயிருக்கும்?— போத்தனூருக்குச் சென்று மெங்களூர் மெயிலில் சென்று, எனது விஷயத்தை நிறைவேற்ற வேண்டும்.'' என்று அவள் முடிவுசெய்து, வெளியிற்சென்று, கோச்வண்டியைத்தயார் செய்யும்படி கட்டளையிட்டாள். தானும் சென்னைக்குப் போவதாக வீட்டிலுள்ளவர்களுக்குக் கூறினாள்.

ஒரு சிறு பெட்டியுடன் வண்டியினுள் உட்கார்ந்து கொண்ட இராஜீவி மறுபடியும் மனவெழுச்சிகளால் தாக்கப் பட்டாள். சிறிது நேரமானதும் கோவை நகரைப்பார்க் கும்பொருட்டு நடந்து சென்றுகொண்டிருக்கும் சிலஉல்லாச மனிதர்களைக்கண்டாள். தனக்குள், "நீங்கள் உல்லாசமாகச் செல்கின்றீர்! இப்புவியில் சந்தோஷமே யில்லை," என்று சொல்லிக்கொண்டாள். பிறகு, "கமலசேகரர் என்னிடம் எதை முதலில் விரும்பினர்? காதலும் களிப்பும் விரும்பினர்! எல்லாம் வீண்டம்பம்!—ஆனால் நானும் அவரைக்காதலித் தேன்! இப்போது என்னைக்கண்டால் கசப்பாகயிருக்கிறது. அமிருதமும் நஞ்சாகிறது. என்னிடம் சுகம் பெறும் வரை மட்டற்ற மகிழ்ச்சி காட்டினர். ஆனால் தற்பொழுது நான் எக்கேடு கெட்டால் என்ன என்று இருக்கிறார்.— நான் இனியும் உயிருடன் இருந்தால் அவருக்கு உபயோக மில்லை. நான் அவரை விடுத்துச்சென்றால், மனங்குளிர்வார்.

"என்னுடைய காதல் அதிகமாக வளருந்தன்மையைக் கொண்டிருக்கிறது. அவருடைய காதலோ குறையுந்தன்மை யைக்கொண்டிருக்கிறது. அதனால் நாம் இருவரும் ஒருமித்த மனம் கொள்ள முடியவில்லை. அவரே எனக்கு பெரிய நிதி: ஆனால் அவர் என்னை விரும்புகிறார் இல்லை. நாம் இனி மேல் சேரலாகாது.— நான் சந்தேகம் கொள்கிறேன் எப் பொழுதும்: பிரிந்திருக்க விரும்புவதில்லை என்றார் முன்பு. அதற்கு நான் என்ன செய்வது?—என்காதலில் வெறுப்பு உண்டானால் நான் ஏன் பகைக்கலாகாது? அவர் சில தினங்க ளாக என்னை அன்போடு நோக்குவதில்லை. காதல் இல்லாமல் போனால் வெறுப்பு உண்டாகிறது.—ஆனால் இந்த உலகில் மாந்தர் நம்மைப்போலவோ இருக்கின்றனர்?

"சரி—நான் செய்யவேண்டிய தென்ன? எனக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும்படியான செய்கை ஏதாவது ஒன்றைச் செய்யவேண்டும்.—ஸிம்ஹளநாதர் ஒருகால் கலியாணவிடுதலைக்கு ஒப்பினால், சித்திராங்கன் என்னை யடைவான். நான் கமலசேகரைக் கலியாணம் செய்துகொள்ளலாம்," என்று எண்ணுகையில், அவளுடைய கண்ணில் ஒருவகையான பிரகாசம் உண்டாயிற்று. மனக்கண்ணில் ஸிம்ஹளநாதருடைய உருவம் புலப்பட்டது. அதைக் கண்டு பயமடைந்தாள்? ஏன்? காதல் இல்லாமையே காரணம்.

"ஒருவேளை நான் கமலசேகரரைக் கலியாணம் செய்துகொண்டால் கிட்டி என்னைப்பார்த்து சிரிக்கமாட்டாளா? சித்திராங்கன் ஆச்சரியத்தோடு எனக்கு ஏன் இரண்டு புருஷர்கள் இருக்கிறார்கள் என்று கேட்கமாட்டானா? (சிறிது யோசித்து) ஐயோ! புத்தியில்லாமல் யோசிக்கிறேனே! கமலரும் நானும் எப்படி இனிமேல் சேர்ந்து வாழலாகும்?— ஹா! அங்கே சிறு பையன்கள் விளையாடிக்கொண்டிருக்கின்றனர்!—அவர்களைப்பார்த்தால் என்னுடைய சித்திராங்கன் நினைவுக்கு வருகிறான். எனது புத்தி மோகத்துறையில் இறங்கியபொழுது அவனை நான் கைவிட்டுச்சென்றேன். என்னைப்போல் கொடியபாதகி யார் இந்த உலகத்தில் இருக்கலாகும்," என்று எண்ணுகையில் வண்டிபோத்தனூரில் வந்து நின்றது.

வண்டிக்காரன் கீழே வந்து கதவைத்திறந்து, "அம்மணி! நான் சென்னைக்கு டிகட்டு வாங்கிக்கொண்டு வருகிறேன்," என்று சொல்ல, இராஜீவி தனது பணப்பையி

லிருந்தும் ஐந்து பத்து ரூபாய் நோட்டுகளைக்கொடுத்து, “முதல் வகுப்பு டிக்கட்டு வாங்கி பாக்கியிருக்கும் பணத்தை நீயே எடுத்துக்கொள்” என்றாள். சிறிது நேரமானதே அவன் டிக்கட்டு ஒன்றை வாங்கிக்கொடுக்க, இராஜீவி அதைப் பெற்றுக்கொண்டு, தோல் பெட்டியை அவன் எடுத்துப் பின்வர ஸ்டேஷனை அடைந்தாள். அடைதலும் நேராகச் சென்று விளக்கு வெளிச்சம் தன்மீது விழாதபடி ஓரிடத்தில் உட்கார்ந்து திரள் திரளாகஜனங்கள் அங்கும் இங்கும் போவதைப்பார்த்து, ஆச்சரியமடைந்தாள். அவர்கள் எல்லோரும் சந்தோஷம் கொண்டிருக்க, தான் மட்டும் ஏன் துயரங்களில் மூழ்கியிருக்க வேண்டும் என்றெண்ணினாள். தான் ஏன் கோயமுத்தூருக்குத் திரும்பிச் செல்லலாகாது! ஆனால் விருப்பமும் வெறுப்பும் சேர்ந்துள்ள மனதுடன் வாழமுடியாதே என்று தவித்தாள்.

மெங்களூர் மெயிலும் வந்தது. இராஜமும் அதில் ஏறிக்கொண்டாள். அவள் ஏறிய வண்டியில் சேவகர்களுக்கு என்று சிறிது இடம் இருந்தது. அதில் தாடியையுடைய ஒரு குடியானவன் உட்கார்ந்துகொண்டு ஏதோ முணுமுணுத்துக்கொண்டிருக்க, அவனது வலதுகை அவன் பையினுள் எதையோ எடுக்கவேண்டி உள்ளிருக்க, இராஜீவி அவனை நோக்கினாள். ஐயோ! மிகுந்த பயம்கொண்டு அங்கேயிருந்தும் தனது பார்வையை எடுத்தாள். அவள் தான் முன்பு கண்ட கனவு உண்மையாக இருக்குமோ என்றெண்ணி மிகுந்த கலக்கம் அடைந்தாள். அதே தாடி! அதே கிழவன்! அதே பை! அதே கை! அவள், தான் இருப்பது பாதாளம் என்று நினைத்து மனம் வாடினாள்.

சிறிது நேரமானதும் ரெயில் வண்டி விசையோடு ஓடவாரம்பித்தது.

"நான் எதையோ நினைத்துக் கொண்டிருந்தேன்! நான் துயரத்திற்கும் துக்கத்திற்கும் எப்பொழுதும் இடை விடாமல் ஆளாகக்கூடாது. நாம் எல்லோரும் துன்பத்தில் உழன்று கஷ்டப்படுகிறோம். அதை அறியாமல் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்கிறோம்! பூலோகம் சுவர்க்கம் என்று எண்ணிக்கொள்கிறோம். நம் மதி இருந்தவாறு என்னே!

"புத்தி என்பது மனிதனுக்கு ஏன் கடவுளால் கொடுக் கப்பட்டது? குற்றங்களை ஒதுக்கி நல்லவைகளைக் கொள்ளும் படி அன்றோ எம்பெருமானால் கொடுக்கப்பட்டது! எனக்கு இப்போது சாந்திவேண்டும்: இந்த கஷ்ட காலத்தை ஒழிக்க வேண்டும். நான் ஏன் எனது ஆன்மா எனும் தீபவொளியை அவித்து விடலாகாது? பூலோகத்தில் மனிதர் ஏன் இருக் கின்றனர்? அவர்கள் இன்ப துன்பங்களை ஏன் அநுபவிக் கின்றனர்? நாகரிகம் என்பது பொய்! அது மாந்தரின் வாழ்வை மங்கச்செய்கிறது. அது இல்லாமல் மனிதன் பல ஆயிரம் வருஷங்களுக்கு முன் காடுகளிலும் வனங் களிலும் முன்போல் தன்னிச்சைப்படி வாழ்வானாயின் எவ் வளவு சந்தோஷமாகயிருக்கும்?

"கடவுளே! கடவுளே! நான் இனி இந்த மாயமான உலகில் வாழேன்! இப்பிரபஞ்சமே பொய்! நீர் ஒருவர்தாம் ஆதியும் அந்தமும் இல்லாதவர்!" என்று சொல்லிக்கொண் டாள்.

பல மணி நேரமும் கழிந்தது. சேலமும் வந்தது. அங்கு மெங்களூர் மெயில் பத்து நிமிஷங்கள் நிற்பது வழக்கம்.

இராஜீவி ரயில் வண்டியை விட்டிறங்கி, ஸ்டேஷனை நோக்கினாள். அன்று மின்சாரத்தை உற்பத்திசெய்யும் யந்திரம் கெட்டுப்போயிருந்தமையால் ஸ்டேஷனில் மின் சார தீபங்கள் எரியவில்லை. மண்ணெண்ணெ விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. அது தனக்கு அநுகூலம் செய் வதாக இராஜீவி கருதினாள். விர் விர் என்று நடந்து இஞ்சின் இருக்கும் இடத்தை யடைந்து யாவர் கண்ணுக் கும் மறைந்து நின்றாள். பத்து நிமிஷங்கள் ஆனதும் மெயில் வண்டியும் புறப்பட்டது.

வண்டிகளின் சக்கரங்கள் சுழலுவதைக்கண்டாள். ஒரு நாள் ஸெண்ட்ரல் ஸ்டேஷனில் ஒரு கூலியாள் சக்கரங் களுக்கு அடியில் விழுந்து நசுங்கி மடிந்ததை எண்ணினாள். உடனே பிளாட்பாரத்தை விட்டு தண்ணீர்க்குழாய் இருக் கும் இடத்தையும் கடந்து இருப்புப்பாதைக்கு அருகில் நின்றாள். அவள் நிற்பதை ஒருவரும் கவனிக்கவில்லை. அவள் உட்கார்ந்திருந்த வண்டியும் சென்றது. திடும்பிர வேசமாக யோசித்தாள். இன்னும் இரண்டு வண்டிகள் தான் பாக்கி: அவைகளும் அவளைக்கடந்துசென்றால் தனக்கு அவமானம் விளையும் என்றெண்ணினாள்.

"நான் பூதவுடம்மை விடுத்து புனித உடம்பை எடுத் துக்கொள்வேன்," என்றாள்.

கடைசி வண்டிக்கு முன்னால் இருக்கும் வண்டியின் முன் சக்கரங்கள் போய் விடுவதைக் கண்டாள். தாமதிப்

பது தகாது என்று எண்ணி பின் சக்கரங்கள் வருமுன்னர் சமேலென்று அந்த வண்டியின் அடியில் விழுந்தாள். வாழ்க்கையின் மாயா இன்பங்கள் அவளுக்கு முன்பு தோன்றினாலும், இராஜீவி அவைகளை சட்டை பண்ணவில்லை. தண்டவாளத்தின்மீது விழுந்ததும் "ஐயோ! நான் எங்கே இருக்கிறேன்? என்ன செய்கிறேன்? ஏன் தப்பித்துக்கொள்ளலாகாது? கடவுளே! மன்னியும்!" என்று ஒரு விநாடிக்குள் எண்ணினாள். அவள் கண்களுக்கு தாடியைக்கொண்ட ஒரு குடியானவன் நிற்பதாகத் தெரிந்தது. உடனே அந்த வண்டியின் சக்கரங்கள் அவள் கழுத்தின் மீது ஏறிச்சென்றுவிட்டன. அவளுடைய ஆன்மா அப்பொழுது உடலைவிடுத்துச்சென்றது.

அதிகாரம்—17.

கமலசேகரன்—சுந்தராங்கன்.

நான்கு மாதங்கள் கழிந்தன.

ஒரு நாள் சென்னை ஸென்ட்ரல் ஸ்டேஷனில் சாயுங்காலம் ஏழு மணி சமயத்தில் போர் வீரர்கள் தமது மனைவி மக்கள் முதலிய சுற்றத்தார்களுடன் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருக்கையில் மங்களூர் மெயில் வண்டி பிளாட்பாரத்தில் வந்து நின்றது. போர் வீரர்கள் எல்லோரும் வண்டிகளில் ஏறிக்கொண்டு தமது நண்பர்களோடு பேசுவதாயினார்.

"சங்கலிங்! நீர் வருவதற்கு இன்னும் இரண்டு மாதம் ஆகுமா? மலையாளதேசத்தில் கலகம் நடப்பதால் நீர் அங்கு போகிறீர். இல்லாவிட்டால் போவது ஏது?" என்றார் சங்கலிங் எனும் போர் வீரனுடைய ஸ்நேகிதர்.

"ராஜா! நமது போர்த்திறமையை யுத்தமுனையில் காட்டவேண்டும். அரசாங்கத்தார் நம்மை எங்கு போகச் சொல்கின்றனரோ அங்கு நாம் போய்த்தீரவேண்டும்.— அதோ பாரும், கமலசேகரப் பிரபு தமது தாயாருடனும் பாரோ நண்பர் ஒருவருடனும் வருகிறார். அவரும் யுத்தம் புரிய விருப்ப மிருப்பதாகத் தெரிவித்தமையினால், போர் வீரராகச்செல்கிறார்," என்றான்.

"ஐயோ! பாவம்! அவர் தமது அரிய காதலியை யிழந்து போனதினால் உலகத்தின்மீது ஆசையே வைக்க வில்லை."

அப்பொழுது கமலசேகரன் போர் வீரன் உடையைத் தரித்தவனாய் ஷண்பகவல்லிச் சீமாட்டியும் அவளுடைய நண்பர் ஜபலிங்கரும் பின்வர நடந்து வந்தான். அவனுடைய முகத்தில் பிரகாசமே இல்லாமலிருந்தது: துக்கம் வழிந்தது. வந்தவன் யாருடனும் பேசாமல் தனிமையானயிடத்தில் போய்நின்றான். மெயில்புறப்பட இரண்டு நிமிஷங்கள் இருக்கையில் வண்டியில் ஏறிக்கொண்டான். அவனுடைய தாயாரும் ஜபலிங்கரும் ஏறிக்கொண்டனர். ரயிலும் புறப்பட்டது.

கமலசேகரன் தனது ஆசனத்தில் படுத்து நித்திரை செய்பவன் போல் காணப்பட, ஜபலிங்கரும் ஷண்பக வல்லியும் சம்பாஷிக்கலாயினர்.

"கமலசேகரனுக்குத் துணையாகத்தாங்களும் மலையாளம் போவதைக்கேட்டு சந்தோஷமாயிற்று." என்றாள் ஷண்பக வல்லிச்சிமாட்டி.

"அம்மா! நான் கமலசேகரனை மிகுந்த ஜாக்கிரதை யாகப் போரில் பார்த்துக்கொள்ளுகிறேன்."

"தாம் பார்த்துக் கொள்ளாவிட்டால் போரில் வேண்டு மென்றே உயிரை விட்டு விடுவான். நான் வேண்டாம் என்று எவ்வளவு தடுத்துச் சொல்லியும் கேட்காமல் போர் வீரனாகப் போகத்தீர்மானித்துப் புறப்பட்டுவிட்டான்."

"அதனால் என்ன? வேண்டுமென்று தற்கொலை செய்து கொள்ளக்கூடாது."

"தாம் தற்கொலை என்றால் எனக்கு இராஜத்தின் ஞாபகம் உண்டாகிறது. அதை நான் உமக்கு விஸ்தார மாகச் சொல்லவில்லை."

"மெதுவாகவே சொல்லும். அதைப்பற்றி நான் அதிக மாகக்கேட்டதில்லை."

"ஐயோ! இராஜம் ரயில் அடியில் விழுந்து மரணம் மேற்கொண்ட தினத்திலிருந்து நான்கு வாரங்கள் வரைக் கும் இவன் என்னுடன்கூட ஒரு வார்த்தையும் பேச வில்லை. நான் கேட்டுக்கொண்டபடியால் தான் சிறிது உணவு உட்கொண்டான். நானும் எனது ஏவலாட்களும் ஒரு விநாடிகூட இவனை விட்டுப்பிரியவில்லை. இவன் தற் கொலை செய்து கொண்டுவிட்டால் என்ன செய்கிறது எனும் பயமே மிகுந்த ஜாக்கிரதையைக்கொடுத்தது. முன்பு

ஒரு தரம் இவன் துப்பாக்கியால் தன்னை சுட்டுக்கொண்டான். நல்லவேளையில் தெய்வம் காப்பாற்றியது. அந்த மனுஷியினால் தான் இவ்வளவும் நேர்ந்தது. அவளுடைய மரணம் அவளுடைய அவமானத்திற்கு தக்கபடி தான் இருந்தது."

"நாம் அவளைப்பற்றி ஏன் பேசவேண்டும்? கடவுள் அவளுடைய ஆன்மாவிற்குச் சாந்தியளிக்கட்டும். தாம் கூறுகிறபடி நான் சங்கதிகளைக்கேட்கவில்லை."

"இராஜம் மெங்களூர் மெயிலில் வந்து சேலம் ஜங்கிஷனில் ரயில் அடியில் விழுந்து பிராணனை விட்டாள். அவளுடைய பிரேதம் ஒரு தனி வண்டியில் போடப்பட்டு சென்னைக்கு கொண்டுவரப்பட்டது. ஸிம்ஹளநாதருக்கும் துரைசிங்கத்திற்கும் இவனுக்கும் சங்கதி தெரிவிக்கப்பட்டது. இவன் ஸ்டேஷனுக்குச் போகாத வண்ணம் செய்தும் முடியவில்லை. ஸ்டேஷனுக்குச்சென்று கதறினான். நாம் கஷ்டத்துடன் இவனை வீட்டுக்கு அழைத்து வந்தோம். அறையில் பைத்தியக்காரனைப்போல் கோபத்தோடு இருந்தான். பார்ப்பதற்கே மிகவும் பயங்கரமாகயிருந்தது. டாக்டர் வந்து பார்த்தார். மூளை கெட்டுவிட்டது என்றார். ஐயோ! இரண்டு மாதம் நான்பட்ட கஷ்டம் சொல்லி முடியாது. பின்பு சௌக்கியமடைந்தான். இப்பொழுது மலையாளத்தில் நடக்கும் கலகத்தை அடக்குவதற்கு தம்முடன் இவன் ஒரு போர்வீரனாகப்போகிறானே!" என்று கூறி வருத்தப்பட்டாள்.

"அழவேண்டாம், அவளுடைய புருஷன் என்ன செய்தார்?"

"அவர் அவளுடைய பெண்குழந்தையைத் தாமே வளர்ப்பதாக எடுத்துக்கொண்டிருக்கிறார். அன்னம் எனும் பெயருடைய அக்குழந்தையை அவரிடம் கொடுத்து விட்டதைக்குறித்து இவன் இப்பொழுது வருத்தமடைகிறான்.—லிம்ஹளநாதருக்கு அவள் இறந்தது நிம்மதியைக்கொடுத்தது.—அவள் பொருட்டு என்மகன் உத்தியோகம், தாயார், கௌரதை முதலியவைகளைத் துறந்தான்.—ஆனால் அம்மாது சந்தோஷமடையவில்லை. அவள் செய்ததை யோசிக்குங்கால் எனக்கு அவள்மீது மிக்க கோபம் உண்டாகிறது. அவளை தூஷித்தாலும் சரியே."

அப்பொழுது கமலசேகரன் எழுந்து உட்கார்ந்துகொண்டு கண்ணில் வரும் நீரைத் துடைத்துக்கொண்டான்.

"அம்மா! எனக்கு இனிமேல் உயிரின்மேல் ஆசையில்லை. மலையாளத்திலாவது போரில் மடியலாம் என்பதே என்கருத்து," என்றான் கமலசேகரன் மனமுடைந்து.

"அங்ஙனம் சொல்லாதே," என்றாள் ஷண்பகவல்லிச்சீமாட்டி. * * * * * *

சுந்தராங்கன் சுகமாக சூலூரிலே தனக்குப்பிறந்த குழந்தையுடனும் அருமை மனைவியுடனும் வசித்து வந்தான். ஆயினும் இராஜீவியின் இறப்பையும் தன் குழந்தையின் பிறப்பையும் பற்றி யோசித்து, மாந்தர்களுக்கு இந்த உலகில் என்ன வேலை என்று ஆலோசிப்பான்.

குழந்தைப் பருவத்திலிருந்தே அவனுக்கு ஒருவகையான உணர்ச்சி இருந்துவருவதையறிந்த அவனது பெற்றோர்களும் மாந்தர்கள் உலகத்தில் சில செய்கைகளைச்

செய்யவே பிறக்கின்றனர் என்று கூறுவர். எட்மண்டு பர்க் எனும்மேதாவி மனிதர் இப்புவியில் பிறந்த பொழு திலிருந்தே சில கடமைகளைச் செய்ய முற்பட்டவர்களாக வேண்டும் என்றும் கூறுவர். ஆனால் என்ன சொன்னாலும் சரி, சுந்தராங்கனுக்கு அடிக்கடி வாழ்வைப்பற்றியும் ஏனைய விஷயங்களைப்பற்றியும் கலக்கம் உண்டாகி, சந்தேகம் அதி கரிக்கும். கிருஷ்ணவேணியை மணம் செய்து கொண்ட பொழுதும் அவனுக்கு ஒரு பெரிய சந்தேகம் உண்டா யிற்று. குழந்தை பிறந்தபொழுதும் அப்படியே. இராஜீவி யின் மரணத்தை கேட்டபோதும் அப்படியே. வாழ்க் கையின் ஆரம்பம், அதனுடைய கருத்து, அதன் காரணம், அதன் தன்மை முதலியவைகளைப்பற்றி அவனுக்கு மட்டி லடங்கா ஐயம் ஏற்பட்டு ஆச்சரியமும் மௌனமும் ஏற்படும். தான் பிறந்ததின் பயன்யாது என்பதை நன்குணராமல் தவிப்பது வழக்கம். தனது உணராமைக்கு அவன் வருந் தப்படுவான். அடிக்கடி அவன் தனது உறுதியான கொள் கைகள் அறிவின்மையால் உண்டான தென்றுகொண்டு, மனம் வெட்கப்படுவான்.

தன்னைப்போன்ற மனிதர் மதத்திற்குப்பதிலாக சாஸ் திரம் என்பதைப்பெரிதாக எடுத்துக்கொண்டு அதையே அநுஷ்டித்து வருவதை சுந்தராங்கன் பல புத்தகங்கள் மூலியமாகப் படித்து, மறுபடியும் சந்தேகமடைந்தான். சமயத்தை (Religion) கைவிடுத்து சாஸ்திரத்தை (Science) எடுத்துக்கொள்ளும் மாந்தர் ஸாதுத்தன்மையை யிழந்தவர் களாகக் காணப்படுவதில்லையே என்று ஆச்சரியமடைந் தான். அவர்கள் சமாதானமும் நல்லொழுக்கமும் பெற்ற வர்களாகவே இருக்கின்றனரே! பல கஷ்டமான வாழ்க்கை

கேள்விகளுக்கு சாஸ்திரம் சரியான விளக்கம் கொடுக்கிறதா?

பல புஸ்தகங்களைப் படித்ததன் காரணமாக அவனுக்கு சர்வகலாசாலை ஸ்நேகிதர்கள் கூறிய பெரிய விஷயம் பொய்யென்று தெரிந்தது. மதம் என்பது இறந்து போய்விட்டது என்று அவர்கள் கூறியது சரியல்ல என்று தெரிந்தது. எட்மண்டு பர்க் என்பவர் மாந்தர் மதத்தை (Religion) யுடைய பிராணிகள் என்று கூறியது தெளிவாகத் தெரிந்தது.

பௌதிகவாதக்காரர் (Materialists) கூறும் விஷயமும் பொய் யென்று விளங்கியது. அவர்கள் மதத்தைப்பற்றி அக்கரையெடுத்துக் கொள்ளவில்லை. அவர்கள் வாதமெல்லாம் வாழ்க்கை என்பதற்கு அநுசரணையாக இல்லையென்று கொண்டான்.

இத்தகைய எண்ணங்கள் அவனுக்கு கவலையைக் கொடுத்தமையால், அவன் சிறிது நேரம் ஆழ்ந்து யோசனை செய்யும் வழக்கத்தைக்கொண்டான். பௌதிகவாதம் சமயத்தை அலட்சியம் செய்வதைப்பற்றி பிளேடோ, ஸ்பினோஸா, கேண்ட், ஷெல்லிங், ஹிஜெல், ஷாபனுயர் முதலியவர்கள் எழுதிய புஸ்தகங்களைப்படித்தான். அவைகளில் மனம் லயப்பட்டிருக்கும் பொழுது லோகாயமதம் தவறான கொள்கையைக்கொண்டிருக்கிறது என்றெண்ணுவான். ஆனால் சில சந்தேகமான எண்ணங்களுக்கு அவன் தான் வாசித்த தத்துவ சாஸ்திரிகளின் சாராம்சத்தை ஒப்பிட்டுப் பார்க்கையில், "மனம்," "இச்சா சக்தி," "விடுதலை," ,'வஸ்து" எனும் சொற்கள் தகுந்த அருத்தம்கொடுத்தன.

"கலியாண விடுதலைவேண்டாம், எனக்குத் தெரிந்த மட்டில் இராஜம் மிகுந்த நல்லகுணம் உடையவள் ஆயிற்றே," என்றார் துரைசிங்கர்.

"என்ன செய்வது?" என்றார் ஸிம்ஹளநாதர்.

"நான் ஒன்று கேட்கிறேன். நான் பார்த்தமட்டில், தாம் நினைக்கும் காரியத்தை முடிக்கும் ஆற்றலைக்கொண்டவர்.—உமக்கும் இராஜத்திற்கும் ஏதோ மனஸ்தாபம் உண்டாயிருக்கிறது."

"மனஸ்தாபமாக இருந்தால் பரவாயில்லையே!"

"எதற்கும் தாம் தீரயோசித்துச் செய்யவேண்டும். ஆத்திரம் வேண்டாம்."

"எல்லா வற்றையும் நான் தீர ஆலோசித்தே தான் செய்கிறேன். ஆனால் இவ் விஷயத்தில் நான் என்மனவிருப்பத்தின்படி நடக்கிறேன்."

"ஐயோ! தாங்கள் என் மனைவி கமலத்தோடு பேசிவிட்டு ஒரு தீர்மானத்திற்கு வரவேண்டும். கமலமும் இராஜீவியும் மிக்க ஸ்நேகிதர்கள். தாங்கள் கமலத்திடம் இதைப் பற்றிப் பேசவேண்டும்," என்று திவான்பகதூர் துரைசிங்கம் கேட்டுக்கொண்டார்.

ஸிம்ஹளநாதர் சும்மாவிருந்தார்.

"தாம் கமலம் கொடுக்கும் விருந்திற்கு வரவேண்டும். அவளிடம் நாம் இவ் விஷயத்தைப்பற்றிப் பேசலாம்," என்றார் துரைசிங்கம்.

"சரி, வருகிறேன்," என்று ஸிம்ஹளநாதர் கூறிவிட்டு, வேறு விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்.

சிறிது நேரம் ஆனதும் திவான்பகதூர் துரைசிங்கம் தமது நண்பரிடம் விடை பெற்றுச்சென்றார்.

திவான்பகதூர் துரைசிங்கம் பிரபுவின் மனைவி கமலம் கொடுக்கும் விருந்திற்கு கருமபுரி ஜெமீன்தார், இரத்தின வலி, ஸிம்ஹளநாதர், பண்டிதர் ராமரங்கம், கிருஷ்ணவேணி, துரைசிங்கம், சுந்தராங்கன் முதலாயினோர் வந்திருந்தனர். நமது கதைக்குச் சம்பந்தப்படாத சில பிரபுக்களும் சீமாட்டிகளும் வந்திருந்தனர்.

சுந்தராங்கனும் ஸிம்ஹளநாதரும் ஒருவரை யொருவர் அறிந்துகொள்ளுமாறு துரைசிங்கம் அறிமுகம் செய்வித்தார்.

கிருஷ்ணவேணியைக் கண்டதும் சுந்தராங்கனுக்கு ஒரு வகையான மனவெழுச்சி உண்டாயிற்று. அவனுக்கு என்ன செய்வது என்று முதலில் ஒன்றும் தோன்றவில்லை. அவனுடைய மனக் குழப்பத்தைக் கமலமும் துரைசிங்கமும் தெரிந்து கொண்டனர்.

எல்லோரிடமும் பேசிக்கொண்டே கிருஷ்ணவேணியை யடைந்த சுந்தராங்கன் அவள் நீட்டிய அழகிய கையைக் குலுக்கிவிட்டு "தேகம் சௌக்கியமானது கேட்டு மிகவும் சந்தோஷம்," என்றான். அவளும் அதற்குத் தக்க பதில் கொடுத்தாள்.

சிறிது நேரம் கழித்து எல்லாரும் விருந்து உணவை உட்கொண்டனர். அப்பொழுது யாவர் முகத்திலும் சந்தோஷமும் களிப்பும் காணப்பட்ட அக்காட்சி மிகவும் ரம்மியமாக இருந்தது.

"அது தான் வெளிச்சம்போல இருக்குதா.—கடவுளின்படி அல்லது உண்மையின்படி நடந்தால் ஆத்துமா திருப்தி அடையும். மனுஷனுக்கு வேறு எதுவும் வேண்டாம்," என்றான் முனியன்.

சுந்தராங்கனுக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று. உலகில் கடவுளுக்கும் உண்மைக்கும் பயந்து நடந்து, மாந்தருக்கு நன்மையைச் செய்துகொண்டிருந்தால் அதுவேமேலானது. ஆன்மாவை திருப்திசெய்விப்பது என்றுஎண்ணினான்.

"மமதையோடு எனக்கு என்று வாழ்க்கையைக் கொள்ளலாகாது.— கடவுளுக்காக என்று எண்ணவேண்டும்! கடவுள் என்பது என்ன? பரிசுத்தம். பரிசுத்தமான வாழ்க்கையை நாம் கையாடினால் அதுவே இகத்திற்கும் பரத்திற்கும் சாதனமாகும்.—நாம் வயிற்றுப் பிழைப்பின் பொருட்டு வாழலாகாது. கடவுளுக்காகவும் உண்மைக்காகவும் வாழவேண்டும்! "நலத்தை"க்கோரி நாம் வாழ்தல் நலம் என்று ஆதிமுதல் இன்று வரையில் எல்லோரும் சொல்லுகின்றனர்.

நான் இன்னும் யோசிக்கவேண்டும், "என்று சொல்லிக்கொண்டே சுந்தராங்கன் தன் மாளிகையையடைந்தான்." எனது ஆசைகளின்படி நான் வாழலாகாது. கடவுளுக்கும் உண்மைக்கும் என்று வாழ்ந்தால் நலம். நாம் உலகில் சில நல்ல காரியங்களைச் செய்யவோ அல்லது செய்பவர்களுக்கு அநுகூலமாக இருக்கவோ பிறந்திருக்கிறோம். கடவுள் இருப்பது உண்மை. அவர் மனோபீஷ்டப்படி நாம் நல்ல காரியங்களைச்செய்து, மாந்தர்க்கு நன்மையைக் கொடுக்கவேண்டும். இது தான் நமக்கு ஆத்மதிருப்தியையும் சந்தோஷத்தையும் தரும்," என்று முடிவான தீர்மானத்தைக் கொண்டான் சுந்தராங்கன்.

கதையின் முடிவு.

இராஜீவி இறந்தபின்னர் ஸிம்ஹளநாதர் சித்திராங்க தனையும் அன்னத்தையும் அன்போடு வளர்த்துவந்தார். தமது மனைவி மாண்டுபோன விஷயம் அவருக்கு மனவருத் தத்தைக் கொடுத்திட்டாலும் "அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது" என்றபடி அவளுடைய மரணம் உண்டாயிற்று என்றெண்ணுவர்.

திவான்பகதூர் துரைசிங்கம் தமது சகோதரியின் மரண கத்தை உன்னி உன்னி மிகுந்த வருத்தமுற்றார். கடைசி யில் அதை மறந்தார். கமலம் மட்டும் இராஜீவியின் குணங் களைப் பலரிடத்திலுங்கூறி கண்ணீர் சொரிவாள்.

மலையாளத்தில் நடந்த கலகத்தில் கமலசேகரன் ஒரு கலகக்காரனால் கொல்லப்பட்டான் என்றும் கமலசேகரன் அக்காதகனுடன் எதிர்த்து சண்டைசெய்து தன்னுயிரைக் காத்துக் கொள்ளவில்லையென்றும் சென்னையில் வெளியான தினசரி சொல்லின. மகன் இறந்தமையால் ஷண்பகவல்லிச் சீமாட்டி மிகுந்த துக்கமடைந்து காபியில் விஷம் போட்டு அதைக்குடித்து மரணமடைந்தாள் என்று நமக்குத்தெரி கிறது.

சுந்தராங்கனும் கிருஷ்ணவேணியும் ஜெமீன்தார், ஜெமீன்தாரிணி மகிழும் வண்ணம் சுகமாக வாழ்ந்து வந்தார் கள்.

(முற்றும்.)